# குடி இயலும் அரசியலும்

முதலாம் பாகம்



ஏ.ஜே.வில்சன்

# குடி இயலும் அரசியலும்

---

இலங்கைப் பல்கலைக் கழகத்து
அரசியற் சாத்திர விரிவுரையாளர்
கலாநிதி ஏ. ஜே. வில்சன் அவர்கள்
இயற்றியது

---

முதலாம் பாகம்

முன்னைநாள் வேல்ஸ் சர்வகலாசாலை உபவேந்தரும் ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலைப் பரிபாலனத்தின் கௌரவ அங்கத்தவரும், இலங்கை அரசியற் சீர் திருத்தம்பற்றி யமைக்கப்பட்ட சோல்பரிக் குழுவின் அங்கத்தவருமான

சேர் பிரடறிக் ரீஸ்,
எம். ஏ., எம். கொம்., எல். எல். டி.
அவர்களின் முகவுரை கொண்டது.

## வித்தியாபதியின் அங்கீகாரம்

### குடியியலும் அரசியலும்

1952 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 29 ஆந் திகதி வெளிவந்துள்ள 'இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை' யில், உதவி நன்கொடை பெறும் தன் மொழிப் பாடசாலைகளுக்கும், இரு பாஷைப் பாடசாலைகளுக்கும், ஆங்கில பாடசாலைகளுக்குமான ஒழுங்குச் சட்டத்தின் 19 (A)ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதிற்கமைய இப் புத்தகம் குடி இயல் படிப்பித்தற்கு

ஒரு பாடப்புத்தகமாக க. பொ. த. வகுப்பில்

1967 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை உபயோகிப்பதற்கு வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பீ. ஜெயசூரியா,
செயலாளர்,
பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை.

பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை
மாலாய் வீதி,
கொழும்பு-2
5-9-1962.

யாழ்ப்பாணம், 32, கண்டிவீதியிலுள்ள,
ஆசீர்வாதம் அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

# முகவுரை

மேல் வகுப்புகளில் குடியியலும் அரசியலும் படிக்கும் மாண வர்களினதும், படிப்பிக்கும் ஆசிரியர்களினதும் தேவையைப் பூர்த்தி செய்வதையே முதல் நோக்கமாகக் கொண்டு எழுதப் பட்டது இந்நூல். அத்தோடு, மேலே தொடர்ந்து படித்து இலங் கைப் பல்கலைக் கழகம் நடத்தும் பூர்வாங்க பரீட்சைகளுக்கும், குடியியலை ஒரு பாடமாகப் படிக்க எண்ணுவோருக்கும் இந்நூல் உதவியாயிருக்கும் என்னும் நோக்கத்துடனேயே இது எழுதப் பட்டது. இவை தவிர, சாதாரண பொது வாசகர், தமது குடியியல் வாழ்க்கையை முறைப்படி நடத்தவும், அர சாட்சியின் உள் நிர்வாக நடைமுறைகளைச் சரிவரத் தெரிந்து கொள்ளவும், இது ஒரு கைநூலாக அவருக்கு உதவக்கூடியது.

சிரேட்ட தராதரப்பத்திர வகுப்பு, ஜீ. ஸி. ஈ. வகுப்புகளின் குடியியல் மாணவருக்கு பலதரப்பட்ட விடயங்களையும் அவர் களது பாடத் திட்டத்துக்கமைய ஒருவகைப்படுத்திக் கொடுப் பது இலகுவான காரியமன்று. இருந்தாலும் முடிந்தமட்டில் அங்கங்கு விடயத்தின் முழு அம்சங்களையுமே திரட்டித் தருவ தற்கு நூலாசிரியர் எடுத்துக்கொண்ட முயற்சி பெரிது. இதிலே குறிப்பிட்ட விடயம் பழைமை வாய்ந்தது. ஒரே மனப்பான்மை யற்ற மில்ரன், வோல்டயர், மில்ஸ் என்போர் பூர்வகாலந் தொட்டு, வாசகர்களுக்கு இடித்துரைத்த விடயமும் இதுவே. அதாவது மனிதனுக்கு உரிய மதிப்பளித்து, பொது அபிப்பிரா யத்துக்குச் செவிசாய்ப்பதே ஆட்சியாளரின் கடமை. சனநாயக மென்னும் குடியாட்சியை அளக்கும் கோலும் அதுவே. இவ்வுண் மையை நூலாசிரியர், வாசகர்களுக்கு நன்கு புலப்படுத்தியிருக் கிருரென்ருல், தனது இலட்சியத்தை அடைந்துவிட்டார் என்று அவர் களிகொள்வார்.

சில விடயங்களில் தீர்க்கமான முடிவுக்குவர இந்நூலாசிரி யர் அநேக அரசாங்க நிர்வாக அறிக்கைகளையும், தவணைக்கால பிரசுரங்களையும், மற்றும் சரித்திரம், அரசாட்சி, அரசியல் பற்றிய நூல்கள் பலவற்றையும் ஆதாரமாகக் கொள்ள வேண்டியிருந்த படியால் அவற்றின் எழுத்தாளர்களுக்கெல்லாம் நன்றி தெரிவிக் கப்படுகிறது. இந்நூலில் ஏதும் தவறு காணப்படின் அதன் பொறுப்பு முற்றிலும் நூலாசிரியரையே சாரும். 'இலங்கையின் வருடாந்த அறிக்கை' என்ற பிரசுரத்துக்கு இந்நூலாசிரியர் முதலில் எழுதியிருந்ததை, 'அரசியல் சட்டமும் ஆட்சியும்' என்ற அத்தியாயத்தின் ஒரு பகுதியாக இங்கு சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்ததற்கு குடிசன மதிப்பெடுப்பு புள்ளிவிபர இலாக் காவுக்கும் நன்றி தெரிவிக்கப்படுகிறது.

— ஏ. ஜே. வி. டபிள்யூ

இலங்கைப் பல்கலைச் கழகம், பேராதனை.

# முன்னுரை

மனிதன் ஒரு சமூகமிருகம் என்றார் அரிஸ்டோட்டில் என்ற ஞானி. எந்த ஒரு சமூகத்தையும் சேராத ஒருவன் ஒன்றில் மனிதனுக்குக் கீழ்ப்பட்டவனாகவோ அல்லது மிகவும் மேம்பட்ட ஆதி மனிதனாகவோ தான் இருக்கமுடியும் என்றார். மனிதனுக்குக் கீழ்ப்பட்டவனிடமிருந்து எதிர்பார்ப்பதற்கு அநேகமாய் ஒன்றுமேயில்லை. ஆதி மனிதனிடம் பயப்படுவதற்குரிய காரியங்கள், மிகுதியாகவுள்ளன. மனிதர் மத்தியில் வாழும் சமூகப் பூச்சிகளான எறும்பு, தேனீ என்பனபோல சமூகப் பிராணியான மனிதன் ஒழுகுவதில்லை. அவனை அறியாமல் ஏதோ ஒரு இயற்கை உணர்வு அவனது வாழ்வைக் கட்டுப் படுத்துவதில்லை. அடிப்படையில் இயற்கை நியதியின் ஆணைக்குட்பட்டதாயினும் மனிதனது சமூக வாழ்வைப் பழக்க வழக்கம், பரஸ்பர நம்பிக்கை, சமரசம் என்பனவே ஆளுகின்றன. காலத்துக்குக்காலம் சூழ்நிலைகளின் மாறுதல்களினாலும், மாறுபட்ட கருத்துக்களினாலும் அது பாதிக்கப்படுகிறது. கொந்தளித்து எழும் மனிதனது செயல்களையும், உணர்ச்சிகளையும், எண்ணங்களையும் கட்டுப்படுத்தி வைக்கும் ஒரு தாபனமாக அமைகிறது ஓர் அரசாங்கம்.

சமூகத்திலுள்ள, வயது வந்த ஒவ்வொருவரும் தனது சமூகம் எந்த நோக்கங்களைக் கொண்டு நிலை பெற்றிருக்கிறதென்பதை உணர்ந்து மதிக்க வேண்டும். குடியாட்சி நடைபெறும் தற்காலத்தில் ஒரு நாட்டின் விவகாரங்கள் எப்படி நடத்தப்பட வேண்டுமென்பது பற்றி, அவர்களது தீர்ப்பு, காலத்துக்குக்காலம் கோரப்படுகிறது. அவர்களுக்கு இது ஒரு மேலான பொறுப்பு. அந்தப் பொறுப்பை அவர்கள் எவ்வளவு விவேகமாகவும் நேர்மையாகவும் பற்றுதலின்றியும் நிறைவேற்றுகிறார்கள் என்பதைப் பொறுத்தே சமூகத்தின் உயர்வு நலன் அமைகிறது. எனவேதான், கல்வியில் குடியுரிமை பற்றிய படிப்பும் இடம்பெற வேண்டுமெனக் கருதப்பட்டது. ஆனால் அதைப் புகுத்துவது இலகுவானதல்ல. மனித சமூகத்தின் பிரச்சினைகள் சிக்குப்பட்டிருப்பதால் இவ்விடயமும் இலகுவானதல்ல. அது பற்றிய படிப்பு புள்ளி விபரங்களைக் கொண்ட வெறும் வரட்டுப் போதனையாகிவிடும் என்னும் தொல்லைவேறு இருக்கிறது. அதற்கு வியாக்கியானம் சேர்க்கப் போனால்விடயம் கவர்ச்சி இழந்து ஒரு சித்தாந்த உரையாக மாறிவிடவும் கூடும்.

குடியுரிமை, குடியியல் தத்துவம், அரசியல் என்பன பற்றிக் கற்றுக்கொடுப்பதென்பது உண்மையில் ஆசிரியருக்கு ஒரு சோதனை யென்றே சொல்லலாம். அரசியல் விடயமாக அவருக்கென்று சொந்தமான ஒரு கொள்கையோ அபிப்பிராயமோ இருக்கலாம். ஆனால் அதை அவர் மாணவரிடம் புகுத்த எத்தனிப்பது தனது தொழிலின் தூய்மைக்கு ஊறு செய்வதாகும். இந்தச்சங்கடத்தை உத்தேசித்துத்தான் அதனைத் தனி ஒரு பாடமாகப் படிப்பிக்க வேண்டியது அவசியமா எனவும் இலக்கியம், சரித்திரம், பூகோளம் ஆகிய பாடங்கள் மூலம் குடியியல் அரசியல் விழிப்பை அவர்கள் ஏற்படுத்த முடியாதா எனவும் கல்விமான்கள் பலர் சந்தேக வினா எழுப்புகின்றனர். பிரிட்டனில் உண்மையாக இந்த முறையே கைக்கொள்ளப்படுகிறது. எனது அபிப்பிராயமும் அதற்குச் சார்பானதாகவே உள்ளதென்றாலும், நான் மேலே கணக்கிட்ட தீமைகளை மனதில் பதித்துக்கொண்டால், பள்ளிக்கூடப் பாடத் திட்டத்தில் குடியியல் அரசியல் படிப்பை ஒரு பாடமாகச் சேர்த்துக் கொள்ளலாமென்றே சொல்வேன்.

பிரிட்டனுக்குள்ள நீண்டகால அரசியல்அனுபவம் இலங்கைக்குக் கிடையாது. 20 வருடங்களுக்கு முன்புதான் சர்வசன வாக்குரிமையின் அடிப்படையில் இங்கு பொதுத் தேர்தல்கள் நடைபெறத் தொடங்கின. அரசியல் கட்சிகள் இன்னமும் உருவாகி வரும் நிலையிலேயேஇருக்கின்றன. இன்றைய அரசியல் திட்டத்தின் கீழ் பாராளுமன்ற ஆட்சி, வெஸ்ட் மினிஸ்டர் மாதிரியில் ஒரு பரீட்சார்த்த நிலையிலேயே இருந்து வருகிறது. மக்களின் அரசியல் உணர்வை அந்த வழியில் உருவாக்குவதற்கு சில காலம் ஆகும். எப்படியும் முற்றிலும் அது மாதிரியே கொண்டு வந்து விடலாமென்பது அநேகமாய் என்றைக்கும் சாத்தியமாகக் கூடியதல்ல. ஆனால், வகுப்பு நலன்களின் திரிபினாலும், சொந்த அபிலாஷைகளினாலும், பலவகை அரசியல் சித்தாந்தங்களினாலும் முடிவில் உறுதியான சனநாயக முறை ஒன்று ஏற்பட்டேயாக வேண்டும். அதற்கு இலங்கை படிப்படியாகக் குடியேற்ற அந்தஸ்துக்கு வந்த வரலாறு, அந்த வாய்ப்பின் உள்ளாந்தரம், நமது நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் என்பன போன்ற விடயங்களை ஒவ்வொரு பிரசையும் தெரிந்துகொள்வது அவசியம்; அது அவரது கடமை. காஞ்சென்ற முன்னாள் தேச முதல்வர் திரு. டி. எஸ். சேனநாயகா 1948-ம் ஆண்டு, மாசி மாதத்தில் தேச மக்களுக்கு விடுத்த ஒரு வானொலிச்செய்தியில் இதனைத்தெளிவாகக் கூறினார்.

"நமது நாட்டின் சரித்திரத்தில் மிக முக்கியமான இத்தினத்தில் நமது நீண்டகால இலட்சியமாகிய சுதந்திரம் கைகூடியதால் இத்தேச ஆண், பெண் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டிருக்கும் புதிய நிலையின் தன்மையை உணர்ந்துகொள்ளவேண்டியது அவசிய மென்று கருதுகிறேன். நாம் மகிழ்ச்சி அடைவது பலவகையில் நியாய மானதுதான்—அதில் சந்தேகமில்லை. நாம் விடுதலை அடைந்து விட்டோம் என்று குதூகலிப்பதற்கு மட்டுமல்ல, விடுதலை நமக்குக் கொண்டுவந்திருக்கும் கடுமையான புதிய பொறுப்புகளையும் சோதனை களையும் உணருவதற்குமே காலம் வந்துவிட்டது".

திரு. ஏ. ஜே. வில்சனின் 'குடியியலும் அரசியலும்' என்ற நூலை ஆசிரியருக்கும், மாணவருக்கும், பொதுவாசகர்களுக்கும் கூடத் தான், சிபாரிசு செய்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அது உயர் மதிப்புள்ள ஒன்றாக விளங்கவேண்டும். பொருட் குவியல் என்று பல விடயங்களையும் கவனமாகப் பரிசீலனை செய்து, பட்ச பாதமின்றி இந்நூலில் திரட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கஷ்டமான வேலை திறமையாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

— ஜே. எப். ரீஸ்

இலங்கைப் பல்கலைக்கழகம்,
பேராதனை,
2-2-1954.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இலங்கை மக்கள் ... ... ... ... | 1 |
| 2. | இலங்கைச் சமூகம்—அதன் வளர்ச்சியும் செறிவும் | 12 |
| 3. | கூட்டு வாழ்க்கை ... ... ... ... | 26 |
| 4. | சட்டமும் ஒழுங்கும் ... ... ... ... | 37 |
| 5. | சனசமூகத்தின் தேவைகள் ... ... ... | 64 |
| 6. | கூட்டுறவு ... ... ... ... | 94 |
| 7. | இலங்கையின் அரசியல் வளர்ச்சி ... | 125 |
| 8. | பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் ... ... | 170 |
| 9. | குடியேற்ற நாட்டந்தஸ்து என்பதன் பொருள் ... | 191 |
| 10. | பொதுநல அரசுகள் ... ... ... | 202 |

# குடி இயலும் அரசியலும்

## முதலாம் அத்தியாயம்

## இலங்கை மக்கள்

**வேடர் :** இலங்கையின் ஆதிக்குடிகள் வேடரென அழைக்கப்படுவர். இவர்களுடைய பூர்வீக வரலாற்றைப்பற்றி நிச்சயமாக ஒன்றுங் கூற முடியாது. இவர்கள் குகைகளிலும் குகைகளைச் சார்ந்த இடங்களிலும் கூட்டங் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். காட்டு மிருகங்களை வேட்டையாடிச் சீவனம் நடத்தி வந்தனர். குகைகளில் தனித்து வாழாது கூட்டமாகச் சேர்ந்து சீவித்தபடியால் இவர்கள் இன உணர்ச்சி உடையவராய் இருந்தனர். இனத்தின் மிகச் சிறிய அமிசம் குடும்பம். இதனால் குடும்பத்தில் ஒருவர் செய்த குற்றத்துக்கு அக்குடும்பத்தைச் சேர்ந்த மற்றவர்களெல்லாரும் பொறுப்புடையவர்களானார்கள். எனவே தனிப்பட்டவர்கள் மற்றவர்களோடு ஒருமித்தே கருமங்களை நடத்தினர். குடும்பத்தின் நன்மையை முன்னிட்டுச் சொந்த நன்மையைக் கைவிட்டனர். இவ்வாறு, கூட்டுறவு உணர்ச்சி எனச் சொல்லக்கூடிய இன இயல்பூக்கத்தை விருத்தி செய்தனர். இலங்கையின் வளர்ச்சிக்கு வேடர் உதவிய பங்கு அவ்வளவு குறிப்பிடத்தக்கதன்று. சிங்கள இனம் உருவாதற்கு இவர்களும் ஓரளவு காரணராயிருந்தனர். மலைநாட்டுச் சிங்களவரில் வேடரின் கலப்பு அதிகமென்றே கூறலாம். இந்நாட்டின் அபிவிருத்திக்கு இவர்கள் உதவிய பங்கு இதுவே. இன்று இச்சாதியார் இலங்கையில் மறையுந் தறுவாயிலிருக்கிறார்கள். நாட்டின் தென்கிழக்குப் பிரதேசத்தில் உள்ள சில காடுகளில் இவர்களை இன்றுங் காணலாம்.

**ஆரியர் :** வேடரின் பின் ஆரியர் தோன்றினார்கள். இவர்களிடத்துச் சுத்தமான ஆரிய இரத்தமுண்டென்று சொல்வது சந்தேகத்துக்குரிய விடயமாகும். ஆனால், இவர்கள் பேசிய மொழியோ உலகின் வேறு பாகங்களில் பேசிய ஆரிய மொழியோடு நெருங்கிய தொடர்புடையதாகக் காணப்பட்டது. எனவே, வேடரின் பின் இலங்கைக்கு வந்து குடியேறிய சாதியார் ஆரிய சாதியிலிருந்து தோற்றியிராவிட்டால் ஆரிய மொழியிலிருந்து தோன்றிய ஒரு மொழியை அவர்கள்

பேசினர்கள் என்றுவது சொல்ல வேண்டும். இவ்வாறு வந்து குடியேறியவர்கள் ஆற்றோரங்களைத் தமது வாசத்தானமாகக் கொண்டனர். முதலில் அவர்கள் வட பகுதியிலுள்ள மல்வத்தை ஆற்றின் கரைகளில் குடியேறினர். பின்னர் வளவை கங்கை, கிரிண்டி ஓயா, மாணிக்க கங்கை, குமுக்கன் ஓயா என்ற ஆறுகளின் கரைகளில் குடியேறினர்கள். மூன்றுவதாக மேற் பகுதிகளிலுள்ள களனி ஆற்றங்கரையில் வந்து குடியேறியிருக்க வேண்டும். ஆனல் இப் பகுதியில் குடியேற்றம் எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்ததென்பதைக் காட்டப் போதிய சான்றுகள் கிடையா. இங்கே கூறப்பட்ட மூன்று பகுதிகளிலும் சனங்கள் ஒரே காலத்தில் குடியேறினர்களா அன்றி வெவ்வேறு காலத்தில் குடியேறினர்களா என்பது ஐயத்துக்குரியது. ஆனல் ஒன்று மாத்திரம் தெளிவாகத் தெரிகிறது. உலகின் பல பழைய நாகரிகங்களைப் போலவே இலங்கையின் நாகரிகமும் நதிக்கரையிலேயே ஆரம்பமானது.

இந்த ஆரியச் சாதியார் முதலில் மந்தைகளை மேய்த்துச் சீவனம் நடத்தினர். பின்னர் விவசாயத்தில் சிரத்தைகொண்டார்கள். காலகதியில் இவர்கள் உள்நாட்டில் பரவத் தொடங்கினர்கள். வடக்கேயுள்ள அனுராதபுரம் இவர்களுடைய முயற்சிகளுக்கு முக்கிய தானமாயமைந்தது. இந்நகர் நாளடைவில் புராதன இலங்கையின் பெரியதொரு நகரமாக வளர்ச்சியடைந்தது. தென்கிழக்கிலே மாகமம் என்ற நகரமும் இவ்வாறே வளர்ச்சியடைந்தது. இந்த இரு பகுதிகளுக்குமிடையில் போக்குவரத்துச் செய்வதற்கும் ஒரு ஆறுதான் உதவியாயிருந்தது. அந்த ஆற்றின் பெயர் மகாவலி கங்கை.

ஆரிய நாகரிக அமிசங்கள் பல இன்றும் நமது நாகரிகத்திற் கலந்திருக்கின்றன. இக்காலத்திற்கேற்ற சில மாற்றங்களுடன் அக்காலத்தில் வழங்கிய அரசியல் அமைப்புகள் பல இன்றும் காணப்படுகின்றன. வேடரைப் போலவே ஆரியரும் கூட்டு வாழ்க்கையில் விருப்புடையவர்கள். இரத்தத் தொடர்பினுலும் ஒன்ருேடொன்று செவ்விதாகத் தொடர்புறுத்தப்பட்ட குடும்பத் தொடர்பினுலும் இவர்கள் ஓர் இனமாக ஒற்றுமைப்பட்டிருந்தனர். ஆற்றங்கரையோரங்களில் குடியேறிய ஆரியக் குடியிருப்புக்கள் நாளடைவில் கிராமங்களாக விருத்தியடைந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் வயல் நிலங்களும் பழத் தோட்டங்களும் இருந்தன. இவற்றையடுத்து காட்டு நிலமும் காணப்படும். இக்காட்டு நிலத்தைக் கிராமவாசிகள் புன்செய் நிலமாக மாற்றுவார்கள். குறித்த ஒரு சாதியைச் சேர்ந்த குடும்

பங்களே ஒவ்வொரு கிராமத்திலும் மிகுதியாகக் காணப்படுவர். குளங்களுக்கும் நதிக் கரைகளுக்கும் சமீபத்தில் விவசாயிகள் வசித்தனர். அவர்களுடைய குடிமக்களாக விளங்கும் வண்ணர், தச்சர், குயவர் முதலியோர் வெவ்வேறு கிராமங்களில் வசித்தார்கள். ஒவ்வொரு சாதியும் இவ்வாறு தனித்தனி கிராமங்களில் இருந்தது என்று ஒரேயடியாகக் கூறிவிட முடியாது. ஓரளவுக்குக் கலப்புமிருந்தே வந்தது. ஒரு பெரிய கிராமத்திலே மிகப் பழைய குடிகளின் வழித்தோன்றல்கள் என்று தங்களைக் கூறிக் கொண்டு சிலர் இருப்பார்கள். அவர்களுக்குச் சற்றுக் குறைந்த அந்தஸ்து உடையவர்களாக மற்றொரு இனத்தவர் காணப்படலாம். அவர்களின் குடிமக்களாயுள்ளவர்களும் அதே கிராமத்தில் வேறு பகுதியில் வசிக்கக்கூடும்.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியதொரு விடயம் ஒவ்வொருவரும் தத்தமக்குப் பரம்பரையாக வந்த தொழிலையே செய்து கொண்டிருந்தனர் என்பதாம். அதாவது கமக்காரர் கமத்தொழிலையும், வண்ணர் வண்ணரத் தொழிலையும், குயவர் குயத்தொழிலையுமே செய்துகொண்டு இருந்தார்கள். இவ்வாறு ஒவ்வொரு இனத்தவரும் தத்தமக்குரிய தொழில்களைக் கைவிடாதபடியினுல் தான் பின்னுல் சாதிக் கட்டுப்பாடென ஒரு முறை இலங்கைச் சமூகத்தில் நிலைத்தது.

**திராவிடர் :** ஆரியருக்குப் பின் திராவிடர் இலங்கையிற் குடியேறினர். இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்தார்கள். இவர்களுடைய வருகையினுல் இலங்கையில் சில சமயங்களில் குழப்பங்களுண்டாயின. இந்தியாவிலிருந்து இவர்கள் அடிக்கடி இலங்கைக்குப் படையெடுத்து வந்தார்கள். முதலில் பாண்டியரும், பின்னர் சோழ அரசர்களும் இலங்கைமீது படையெடுத்தனர். நாளடைவில் தமிழர் இலங்கையின் வடபகுதியிலும் கிழக்குப் பகுதியிலும் குடியேறினர். இவர்கள் இலங்கைச் சரித்திரத்துக்கும் நாகரிகத்துக்கும் உதவியவை : சைவ சமயமும், தமிழ் மொழியும், சாதிப் பாகுபாடுமேயாகும்.

**அரசியல் முறை :** புராதன இலங்கையில் அரசியல் நிருவாகத்தின் மிகச் சிறிய அமிசமாகக் கிராமம் அமைந்தது. வயது முதிர்ந்த ஒரு பெரியவர் கிராமத்தின் தலைவராக ஆட்சி நடத்தினுர். இவருக்கு கிராமணி என்று பெயர். இவ்வாறு அனுராதபுரத்தில் ஆட்சி நடத்திய கிராமணியும், மாகமத்தில் ஆட்சி நடத்திய கிராமணியும் நாளடைவில் அரச அதிகாரத்தைச் செலுத்தினுர்கள். காலஞ் செல்லச் செல்ல பல கிராமத்துக் கிராமணிகளும், நிருவாக அதிகாரமும், நீதி பரிபாலனஞ் செய்

யும் அதிகாரமுமுள்ள ஒரு ஆலோசனைச் சபையை ஏற்படுத்தினார்கள். இதுவே சிங்களத்தில் 'கன்சபா' என வழங்கப்படும் கிராம சபையாகும். பிணக்குகளையும் கடன் விவகாரங்களையும் தீர்ப்பதற்காகவும், சில்லறைக் குற்றங்களை விசாரணை செய்வதற்காகவும் அடிக்கடி இந்தக் கிராமசபை கூட்டப்படும். இக்கிராம சபையிலே கிராமப் பெரியார்களும் அனுபவம் வாய்ந்தவர்களும் அங்கத்துவம் வகித்தனர். காலகதியில் கிராமத் தலைமைக்காரர் இந்தக் கிராமச் சங்கங்களில் அங்கத்துவம் வகிக்கத் துவங்கியதும் குற்றவாளிகளுக்கு அபராதம் விதிக்கும் அதிகாரமும் அச்சபைக்கு வழங்கப்பட்டது. கிராமங்கள் பல கொண்ட பிரிவு ஒரு கூற்றுகக் கொள்ளப்பட்டது. இக்கூற்று செயற்பட ஆலோசனை சொல்லும் சபை' தேச சபையெனப் பொருள்படும் 'ரட்டசபா' என வழங்கப்பட்டது. கிராமசபையின் பெரிய தோற்றமே ரட்ட சபையாகும். இத்தேச சபையில் குடும்பங்களின் தலைவர்கள் அங்கத்துவம் வகித்தார்கள். கிராம சபையின் கடமைகளைப் போலவே இருந்தாலும் தேசசபையின் கடமைகள் விரிவும் விசாலமுமுடையனவாயிருந்தன. இவ்விரு சங்கங்களும் விவசாயிகளின் நலவுரிமைகளைப் பாதுகாக்கவே பயன்பட்டன.

புராதன இலங்கையில் சமூகம் கூட்டு வாழ்க்கை நடத்திக் கொண்டேயிருந்தது. விவசாயப் பொருள்களே நாட்டின் பெருஞ் செல்வமாயிருந்தன. நிலத்திலிருந்தே சனங்கள் பிரதானமான விளைபொருள்களைப் பெறக்கூடியதாயிருந்ததால் நிலத்தையே பெருஞ் செல்வமாகக் கருதினர். ஆட்சியின் அடிப்படை கிராம சபையாகவேயிருந்தது. அனுராதபுரத்திலும் மாகமத்திலும் உள்ள கிராமணிகள் தம்மை அரசர்களாகத் தாபித்துக் கொண்டதும், அவர்கள் கிராமசபைகளையும் கிராமங்களையும் மேற்பார்வை செய்துவந்தார்கள். விரைவான போக்குவரத்துச் சாதனங்களுள்ள இக்காலத்தைப்போல ஒரு இடத்திலிருந்து செவ்வனே மேற்பார்வை செய்வது அக்காலத்தில் முடியாத காரியமாகும். அவ்வப்போது அனுப்பவேண்டிய கட்டளைகளை இக்காலத்தில் தந்தி மூலமாகவும், ரெலிபோன் மூலமாகவும் உடனே அனுப்பிவிடலாம். ஆனால் அக்காலத்தில் அவ்வாறு செய்ய முடியாதிருந்தது. எனவே, அரசன் தனது கடமைகளை ''கமராளை'' ''கம்லத்த'' என்பவர்கள் போன்ற கிராம அதிகாரிகளிடமும், ''ரட்டலத்த'' போன்ற தலைமைக்காரரிடமும் ஒப்படைத்தான். நாட்டின் செல்வத்துக்கு முக்கிய காரணமாயிருந்த நிலமானது அரசனுக்குச் சொந்தமானதாகவே கருதப்பட்டு வந்தது. எனவே அரசனின் நிலத்தில்குடியிருக்கும் பிரசைகள் அரசனின் குடிவாரக்காரராவர். குடியிருக்கும் நிலங்களை அவர்

கள் செய்கைபண்ணி அதில் வரும் விளைவில் ஒரு பகுதியைக் குடிக்கூலியாக அரசனுக்குக் கொடுத்தனர். அல்லது அரசனின் பிரதிநிதியான கிராமத் தலைவருக்குக் கொடுத்தனர். விளைவில் ஒரு பகுதியைக் கொடாவிட்டால் அதற்குப் பதிலாக அரச னுக்கோ அதிகாரிகளுக்கோ சேவை செய்தனர். இச்சேவை யைப் பயன்படுத்தியே அரசர் பெரிய குளங்களையும் நீர்ப்பாசன வசதிகளையும் அமைத்தார்கள். இவ்வாறு அரசர்கள் சனங்க ளின் நன்மதிப்பையும் பெற்று நாட்டின் செல்வத்தையும் பெருக் கினார்கள். அக்காலத்து அரசர் சர்வ அதிகாரமுடையவர்களாக இருந்தார்கள். சட்டபூர்வமாகவோ அவர்களுடைய அதிகாரம் எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தப்படவில்லை. இக்காலத்து அர சரோ பலவிதமான கடமைகளைச் செய்கிறார்கள். புராதன அர சர் இத்துணைப் பெருங் கடமைகளைச் செய்யவில்லை. அவர்கள் நாட்டிலே ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவதுடன் சனங்களின் விவசாய முயற்சிகளுக்கு வேண்டிய உதவிகளையும் செய்தனர். இக்காலத்தைப்போல நல்ல போக்குவரத்துச் சாதன மில்லாதபடியால் அக்கால அரசர் தமது கடமைகளைக் கிராம அதிகாரிகளிடமும் ஏனைய தலைமைக்காரரிடமும் ஒப்படைத் தார்கள். இத் தலைமை அதிகாரிகளுக்கு அரசன் நிலங்களை மானி யமாகக் கொடுத்தான். போர் வீரர்களும் வேறு தொழில்களில் ஈடுபட்டோரும் இவ்வாறே அரசனிடம் நிலத்தை மானியமாகப் பெற்றுத் தமது வாழ்க்கையை நடத்தினார்கள். அரசர் சர்வ அதிகாரமும் படைத்தவர்களாயிருந்தாலும் தாம் நினைத்தபடி யெல்லாம் செய்ய முடியாதவராயிருந்தனர். சனங்களைத் திருப் திப்படுத்துவதும் நீதியைப் பரிபாலிப்பதும் அவர்களுடைய கடமையாயிருந்தது. இதனால் பண்டுதொட்டுவந்த பழக்கங்களை யும் சம்பிரதாயங்களையும் அவர்கள் அனுசரிக்க வேண்டி யிருந்தது. தேச வழமையே அரச நீதியாக இருந்து வந்தது. குடும்பங்களும் சாதிகளும் தொன்றுதொட்டு அனு சரித்து வந்த வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் அரசன் மாற்ற முடியாது. புதிய முறைகளைப் புகுத்துவது ஆபத்துக் கேதுவானதால் அரசன் அவ்வாறு செய்ய முற்படவில்லை. தன் னுடைய அதிகாரத்தைச் செலுத்தும் விடயத்திலும் அவன் தான் விரும்பியவாறு செய்யாமல் வழக்கத்தையே பின்பற்றினான்.

நல்ல போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாத அக்காலத்தில் ஒரு விடயத்தைச் செய்து முடிப்பதானால் ஒருவன் தனது குடும் பத்தையே நம்பியிருக்க வேண்டியதாயிற்று. மத்திய அரசாங்கத் தின் துணையை அவன் இலேசாகப் பெற முடியாதிருந்ததால் தன் குடும்பத்தின் உதவியை எதிர்பார்த்தான். குடும்பத்தார்

கிராமத்தின் உதவியை எதிர்பார்த்தார்கள். எனவே, தனிமனிதன் தன் இனத்தையே தனக்கு ஆதாரமாகக் கொண்டான். தொன்று தொட்டு வந்த பழக்கவழக்கங்களும் சம்பிரதாயங்களும் அவனுக்குப் பிரமாணமாயிருந்தன. கூட்டுவாழ்க்கை என்ற சக்கரத்தில் அவன் கழி போல அமைந்தான். அவனுல் சொந்தத்தில் ஒரு விடயத்தைத் தொடங்க முடியாதிருந்தது. புதிய வழியில் புதிய முயற்சிகளைத் தொடங்க ஒருவன் முற்பட்டால் சனங்கள் அவனை எதிர்ப்பார்கள். போட்டி மனப்பான்மையே அக்காலத்தில் கிடையாது. கூட்டு முயற்சியே நன்மையையும் சிறப்பையும் கொண்டு வரும் எனக் கருதித் தொழில் புரிந்தனர். அக்காலச் சமூக அமைப்பில் தனி மனிதன் ஒரு அங்கமாக விளங்கினுன். தனி மனிதன் ஒருவன் மீது கிராமச்சங்கம் ஒரு குற்றம் கண்டு அபராதம் விதிக்குமாஞல் அந்த அபராதத்தை அக்கிராமம் முழுவதுமே சேர்ந்து கொடுக்கவேண்டியிருந்தது. அக்காலக் கூட்டு வாழ்க்கை எவ்வளவு திட்பமாயமைந்திருந்தது என்பதற்கு இது ஒன்றே நல்ல சான்றுகும். கிராமவாசி ஒருவன் குற்றஞ் செய்தால் அதற்கு அக்கிராமம் முழுவதுமே அரசனுக்குத் தண்டஞ் செலுத்தவேண்டியிருந்தது.

இலங்கையில் முடியாட்சி எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பதைப்பற்றி இத்தருணத்தில் ஆராய்ச்சி செய்வது பொருத்தமுடையதாகும். அனுராதபுரத்திலும் மாகமத்திலும் கிராமணிகள் என்ற முறையில்தான் முதலில் முடியாட்சி ஆரம்பமாயிற்று. இவ்வாறு வந்த அரசமுறை பராக்கிரமபாகு போன்ற பெரிய அரசர்களைத் தோன்றச் செய்தது. இந்தக் கிராமணிகள் சாதாரணமான மனிதர். காலதேச சந்தர்ப்பங்களால் அவர்கள் தம்மைத்தாமே அரசராக நியமித்துக்கொண்டார்கள். இவர்களிடத்து விசேட தெய்வத்தன்மை எதுவும் இருக்கவில்லை. அரசர் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்வார்களாஞல் நாட்டில் ஒழுங்காக மழைபெய்வதுடன் செல்வமும் பெருகுமென்று சனங்கள் நம்பினுர்கள். ஆத்மீகத் துறையில் பரிசுத்தமான வாழ்வு நடத்துவோர் எவரும் இத்தகைய தெய்வீகத் தன்மையை அடையலாமென்று சனங்கள் கருதியிருந்தார்கள். அதனுல் இராச அதிகாரம் சிலரின் ஏகபோக உரிமையென்ற எண்ணம் சனங்களிடமிருந்ததில்லை. ஒரு அரசன் இறந்தால் அவனுடைய சகோதரர்களே அரசுகட்டிலேறும் உரிமையைப் பெற்றனர். அவர்கள் ஆட்சி நடத்திய பின்னர் அரசுரிமை மூத்த சகோதரனின் மூத்த மகனுக்கு வழங்கப்பட்டது. அவன் தனக்குப்பின் தன் சகோதரருக்கு அரசுரிமையைக் கொடுத்தான். பட்டத்திளவரசர் யுவராசன் என வழங்கப்பட்டான். வைபவங்களில் யுவராசனுக்கு அடுத்ததாக

உருகுணை இளவரசனும் மலைநாட்டு இளவரசனும் இடம் பெற்றனர். அரசர்கள் பகுதித் தலைமை அதிகாரிகளின் உதவியுடன் அரசாட்சியை நடத்தினர்கள். நாட்டின் பெரும் பிரிவானது 'பஸ்' என வழங்கப்பட்டது. அதன் அதிகாரி 'பஸ் லதன்' என அழைக்கப்பட்டார். சிறிய பகுதிகள் 'ரட்டலதன்' என்ற அதிகாரியால் ஆளப்பட்டன. கிராமங்கள் 'கமலதன்' என அழைக்கப்படும் கிராம அதிகாரிகளால் ஆளப்பட்டன. மத்திய அரசாங்கத்தின் அரசனுக்கு ஆலோசனை கூற நாட்டின் பிரதானிகளையும் அதிகாரிகளையும் கொண்ட ஒரு சபை இருந்தது. பெரிய பராக்கிரமபாகு இச்சபையைத் திருத்தி அமைத்தான். பட்டத்திளவரசி, இளவரசர், சேனுதிபதி, பகுதி அதிகாரிகள் வியாபாரத் துறையில் பெருமையடைந்தவர்கள் ஆகியோர்கள் இச்சபையில் இடம்பெற்றனர். சேனையின் தலைவரான சேனுபதிக்கு இச்சபையில் எப்பொழுதும் முக்கியமான இடம் அளிக்கப்பட்டது. இப்பதவி மிகுந்த அதிகாரமுடையது. சனங்களால் விரும்பப்படாத ஒரு அரசனைச் சேனுதிபதி பதவியிலிருந்து நீக்கவும் செல்வாக்குடையவராயிருந்தபடியால் வெகு சாவதானமாகவே இப்பதவிக்கு உத்தியோகத்தர் தெரியப்பட்டனர். அரசரும் தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் பெருக்கினுர்கள். மத்தியகால ஆரம்பத்தில் சனங்கள் அரசர்களைப் போற்றுதற்குரிய போதிசத்துவர்கள் என்று கொண்டாடினுர்கள். அரசரும் தாம் சூரிய குலத்துதித்தவர்களென்று சொல்லிக்கொண்டார்கள். பெரிய பராக்கிரமபாகுவினுட்சியில் தாய்வழி உரிமை அனுசரிக்கப்பட்டுவந்தது. அரசர் தாய்வழி வமிசத்தைப் பாராட்டினுர்கள். சிங்கள அரச குடும்பத்தில் தாய்வழி உரிமை போன்ற மரபுகள் புகுந்துகொள்ளத் தலைப்பட்டன.

புராதன கால முறையிலிருந்து தற்கால முறைக்கு மாறுதல்: மேல்நாட்டவரின் வருகையால் நமது சமூகத்தின் பழக்க வழக்கங்களில் பெரிய மாறுதல்கள் உண்டாயின. பதினுரும் நூற்றுண்டின் ஆரம்பத்தில் ஐபீரியக் குடாநாட்டில் ஒரு சிறு பகுதியாயிருந்த போர்த்துக்கல் தேசத்துப் பிரயாணிகள் சிலர் எதிர்பாராதவிதமாக காலித் துறைமுகத்தை அடையவேண்டி நேரிட்டது. இவ்வாறு வந்த போர்த்துக்கேயர் இலங்கையின் மேற்குக் கரையில் சில குடியேற்றங்களை உண்டாக்கினர். கரையோர மாகாணங்களில் மாத்திரமே அவர்களுடைய செல்வாக்குச் செல்லக்கூடியதாயிருந்தது. உள்நாடாகிய மலைநாட்டைப் பிடிப்பதற்காக அவர்கள் பலமுறை முயன்றும் வெற்றிபெறவில்லை.

மிளகு, கறுவா, ஏலம் என்னும் வாசனைப் பொருள்களில் வியாபாரம் நடத்துவதே அவர்களுடைய முக்கிய நோக்கமா

யிருந்தது. கறுவா, மிளகு, பாக்கு என்னும் பொருள்களில் அவர்களுக்கு ஏகபோக உரிமை கொடுக்கப்பட்டது. தமது வியாபாரத்துக்கும் செல்வவிருத்திக்கும் ஏற்ற முறையில் உள்ளூரில் நிலவிவந்த ஆட்சி முறையையும் நில உரிமைத் திட்டத்தையும் அனுசரித்தார்கள். தமது சமயமாகிய உரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதற்கு மிகுந்த பிரயாசைப்பட்டனர். அதன் விளைவாக ஈழநாட்டவர் பலர் அந்தச் சமயத்தைத் தழுவினர். இவர்களின் வழித்தோன்றல்களாயுள்ளோர் இன்றும் கரையோரப் பகுதிகளில் செறிந்திருப்பதைக் காணலாம். இவ்வாறு போர்த்துக்கேயர் மூலமாகவும், பின்னர் ஒல்லாந்தர் மூலமாகவும், ஆங்கிலேயர் மூலமாகவும் பரவிய கிறிஸ்து சமயங்காரணமாக இலங்கையில் நிலவிவந்த சாதிக் கட்டுப்பாடு ஒருவாறு நெகிழ்ந்தது. அதனுல் பல்வேறு சமூகத்தவரும் சாதியாரும் பரஸ்பரம் தொடர்புண்டனர். இதுவே மேல்நாட்டுத் தொடர்பினுல் இலங்கையடைந்த மிக முக்கியமான பயனுகும், போர்த்துக்கேயரின் வழித்தோன்றல்களாயுள்ளோர் பறங்கியர் என்ற சமூகத்தை உருவாக்கப் பெரிதும் துணையாயிருந்தனர்.

போர்த்துக்கேயருக்குப்பின் டச்சுக்காரர் இலங்கையை அடைந்தார்கள். இவர்களும் இலங்கையின் வியாபாரத்தில் சிரத்தை கொண்டனர் இவர்களும் கரையோரங்களிலேயே தமது முயற்சிகளை நடத்தினுர்கள். கண்டி இராச்சியத்தைப் பிடிக்க இவர்களும் அடிக்கடி முயன்றபோதிலும் வெற்றிபெற முடியவில்லை. போர்த்துக்கேயரைப் போலவே டச்சுக்காரரும் தமக்கேற்ற முறையில் சில மாற்றங்களுடன் உள்ளூர் ஆட்சி முறையை ஏற்றுக்கொண்டனர். டச்சுக்காரர் நல்லதொரு சட்டமுறையை அமைத்தார்கள். புரொட்டஸ்தாந்திய கிறிஸ்தவ மதத்தைப் பரப்பப்பல பாடசாலைகளை ஏற்படுத்தினர். பிரித்தானியர் ஆட்சியில் அரசாங்க நிர்வாகத்தைப் பழுதற நடத்துவதற்குத் தகுதிவாய்ந்த ஒரு பறங்கிச் சமூகத்தையும் அவர்கள் உருவாக்கிவிட்டுச் சென்றனர்.

பிரித்தானியரின் வருகையோடு இலங்கையானது மேல்நாட்டு ஆட்சி முறையை முற்றுகக் கைக்கொள்ளக்கூடியதாயிற்று. பிரித்தானியார் இலங்கையை 1796-ல் கைப்பற்றினர். 1815-ல் உள்ளூர் அதிகாரிகளின் உதவியோடு கண்டி இராச்சியத்தை அரசாண்ட நாயக்க அரசைக் கலைத்துவிட்டு இலங்கை முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தனர். இலங்கை முழுவதும் ஒரு ஐரோப்பிய அரசின் கீழ் அடங்கியது இதுவே முதல் முறையாகும். ஆங்கிலேயர் முதலில் உள்ளூர் ஆட்சி முறையை நீக்கிவிட்டு இலங்கைக்கு ஒவ்வாத அன்னிய ஆட்சி முறையொன்றைப் புகுத்தி

ஞர்கள். இந்த முறையை நிர்வகிப்பதற்கு சென்னையிலிருந்து ஒழுங்கற்ற சில உத்தியோகத்தர்களைக் கொண்டு வந்தார்கள். அவர்கள், நிர்வாகமென்ற பேரில் நாட்டைக் கொள்ளையடிக்க, உள்ளூரில் கலகமுண்டாயிற்று. இதனைக் கண்ட பிரித்தானியர் உள்ளூர் ஆட்சி முறையைப் பின்பற்றினுர்கள். உள்ளூர் அதிகாரிகளை அழைத்து அவர்களுக்குப் பழைய அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்கினர்.

பின்னர் படிப்படியாக உள்ளூர் நிர்வாக அமைப்புகளை மாற்றி ஐரோப்பிய அமைப்புகளைப் புகுதினர். தற்கால அரசியல் ஆட்சி செவ்வனே நடைபெற வேண்டுமானுல் நிலதானிய அடிப்படையில் அவற்றை தாபிக்கக்கூடாது. சிவில் சேவிஸ் உத்தியோகத்தர்களும், நீதிபரிபாலன உத்தியோகத்தர்களும் நீதி தவருது நடுநிலைமை வகிக்க வேண்டியவராவர். இவர்களை நிலமானிய முறைப்படி நியமிப்பதனுல் அது பொருத்தமுடையதாகாது. நிலமானிய முறையானது சாதிப் பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டது. உள்ளூர்த் தலைமைக்காரர்களினுலும் அவர்களுடைய தாசர்களினுலும் நிர்வகிக்கப்படுவது. இத்தகைய நிலமானிய முறையைக் கொண்டு மிகப்பொறுப்பு வாய்ந்த பதவிகளை நிர்வகிப்பது பொருத்தமற்றதாகும். பணத்தைச் சம்பளமாகக் கொடுத்தே இம்மாதிரியான உத்தியோகத்தரை எடுக்கவேண்டுமென்ற கொள்கை 1832-ல் அனுசரிக்கப்பட்டது. இதற்கு முதற்படியாக கண்டி இராச்சியமானது கடற்கரை மாகாணங்களோடு சேர்க்கப்பட்டது. இவ்விரு பகுதிகளும் ஒரு நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்டன. கோல்புறூக் அரசியல் சீர்திருத்தங்களும் இவ்வருடத்தில் புகுத்தப்பட்டன. நாட்டில் பல பாகங்களையும் இணைக்கக் கூடியவிதமாக வீதிகளமைக்கப்பட்டன. அவ்வாறே சில புகையிரத வீதிகளும் போடப்பட்டன. இம்முயற்சிக்கு மூலகாரணமாயிருந்தவர்கள் நன்முயற்சியும் தூரதிருஷ்டியுமுள்ள பிரித்தானிய தேசாதிபதிகளாவர். இதனுல் மலைநாட்டுச் சிங்களவருக்கும் தாழ்பூமிச் சிங்களவருக்குமிடையில் நெருங்கிய தொடர்பு உண்டானது. கரைநாடுகளிலுள்ள சிங்களவர் மலைநாட்டுக்குச் சென்று வியாபாரம் நடத்திஞர்கள். மேல்நாட்டு நாகரிகம் மலைநாடுகளில் பரவவே பழைய நிலமானிய அதிகார ஆட்சி அங்கே வலுக்குன்றியது. அதிகாரிகள் புரட்சி நடத்திப் பார்த்தார்கள். அதுவும் பலிக்கவில்லை. இராசகாரிய முறை என்ற நிலமானிய முறை, கடைசியில் நீக்கப்படவே சாதிக் கட்டுப்பாட்டினுல் ஒதுங்கியிருந்த கிராமவாசிகளுக்கு விடுதலை கிடைத்தது. கல்வியின் பயனுகவும் அவர்கள் மற்ருெரு வகையில் விடுதலை

பெற்ருர்கள். கல்வியானது ஆரம்பத்தில் கிறிஸ்தவ மதச்சார்பு டையதாயிருந்தபோதிலும், அரசாங்க அலுவல்களை நடத்துவ தற்குத்தேவையான இலிகிதர்களை உருவாக்குவதே அதன் முக்கிய நோக்கமாயிருந்தது. சாதிவித்தியாசங்களை உடைத்தெறிவதற்கு இக்கல்வியும் உதவிற்று. இதனுல் பல்வேறு சாதியினரும் சமஅந் தஸ்தோடு பழகவும், அரசாங்க உத்தியோகங்களுக்குப் போட்டி யிடவும் வசதியுண்டானது.

உள்ளூர் நீதிமுறையானது, சாதிச்சார்புடையதாயிருந்தது. சாதியை அடிப்படையாகக் கொண்ட அரசியற் கருத்துக்களையும் சமூக வழக்கங்களையுமே ஆதாரமாகக் கொண்டிருந்தது. ஆனுல் பிரித்தானியர் புகுத்திய நீதியோ ஒருவனின் சாதி சமயம் என்பன வற்றை அடிப்படையாகக்கொள்ளாமல் அவனுடைய தனிச் சுதந் திரத்தையே ஆதாரமாகக் கொண்டது. நாளடைவில் பிரித்தானிய நீதிமுறை கொஞ்சம் கொஞ்சமாக நாடெங்கும் நடைமுறைக்கு வந்தது. மலைநாட்டிலே தேயிலைத் தோட்டங்களும் கோப்பித் தோட்டங்களும் திறக்கப்பட்டதும் பரம்பரையாகக் கைக்கொள் ளப்பட்டுவந்த நீதிமுறையும் அரசாங்க ஆட்சிமுறையும் நிர்வாக மும் முற்ருக மாற்றமடைந்தன.

நாட்டின் போக்குவரத்துச் சாதானங்கள் விருத்தியடைந்த காரணத்தினுல் மத்திய அரசாங்கம் நாட்டின் எல்லாப் பகுதிக ளிலும் தனது அதிகாரத்தை நேரடியாகச் செலுத்தக் கூடியதா யிற்று. அதனுல் கிராம அதிகாரிகளின் செல்வாக்குப் பெரிதும் குறைந்து போயிற்று. புரட்சி செய்வதற்கோ, குழப்பமுண்டாக்கு வதற்கோ வசதியில்லாமலிருந்தது இதுகாறும் தம் கமத்தை விட்டகலாது ஒதுங்கியிருந்த கிராமவாசி, இப்பொழுது அதை விட்டுவிட்டு வேறு தொழில் புரிவதற்கு வெளியே செல்ல வசதி ஏற்பட்டது. கல்வி விருத்தியடைந்ததால் புதிய தொழில் முறைகளில் ஈடுபடவழிபிறந்தது. பத்தொன்பதாம் நூற்ருண்டின் மத்தியிலும் இறுதியிலும் இலங்கையர் பலர் வியாபாரம் முதலிய தொழில் முறைகளில் ஈடுபட்டனர். பல இடங்களில் பட்டினங்கள் விருத்தியடைந்தன. ஆங்கிலம் பயின்ற ஒரு நடுத்தர வகுப்பினர் அரசியல், ஆட்சிமுறை, அரசியல் சீர்திருத்தம், கல்வி என்னும் விடயங்களில் பெரிதும் சிரத்தையெடுத்தார்கள். மற்றும் பலர் பிரித்தானிய சர்வகலாசாலைகளுக்குக் கல்வி கற்கச் சென்ருர்கள். அரசியல், அரசாங்க நிர்வாகம் என்னும் விடயங்களில் புதிய புதிய கருத்துடையவர்களாய் இவர்கள் தாய்நாடு திரும்பினர். அதனுல் அரசியலில் சீர்திருத்தம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்

யத் தலைப்பட்டனர். சாதி வித்தியாசங்களைக் கைவிட்டனர். கல்வியும் செல்வமும் இப்பழைய வித்தியாசங்களை மறக்கச் செய்தன. எனவே இலங்கை மேல்நாட்டு வல்லரசொன்றின் ஆதிக்கத்தின் கீழ் ஒன்றுபட்டது. போக்குவரத்துச் சாதனங்கள் விருத்தியடைந்தன. மேல்நாட்டுக் கல்வி பரவிற்று. தேயிலைத் தோட்டங்களும் இரப்பர்த் தோட்டங்களும் தேசத்துப் பொருளாதாரத்தில் மாற்றங்களை உண்டாக்கின. கிராமங்கள் நகரங்களாக மாறின. இவை காரணமாக முயற்சியும், அரசியல் உணர்ச்சியும் ஆங்கிலக் கல்வியறிவுமுள்ள ஒரு மத்திய வகுப்பினர் உருவாகி வந்தனர். இவ்வேதுக்களால் இராச காரிய ஆட்சி முறையில் விளங்கிய இலங்கை மெதுவாகத் தற்கால முறையிலமைந்த அரசியல் நிர்வாகத்தைக் கைக்கொண்டது. பிற்போக்கான சில கிராமங்களிலே பழைய இராச காரிய முறை இன்றும் நிலவியே வருகிறது. கிராம அதிகாரிகள் இன்றும் அங்கு தங்கள் அதிகாரத்தைச் செலுத்தியே வருகிறார்கள். இவையும் தற்கால முறையில் அபிவிருத்தியடைய ஒரு சமூகப் புரட்சி வரவேண்டும். அது எப்பொழுதோ ஒரு நாள் வந்தே தீரும்.

## இரண்டாம் அத்தியாயம்

# இலங்கைச் சமூகம்

## அதன் வளர்ச்சியும் செறிவும்

### ஒற்றுமைக்கு ஏதுவான காரணங்கள் :

இலங்கைச் சமூகமானது பல சாதியாரைத் தன்னகத்துக் கொண்டிருக்கிறது. சிங்களவர், இலங்கைத் தமிழர், இந்தியர், முஸ்லீம்கள், பறங்கியர், ஐரோப்பியர் என்னும் பல சமூகத்தவரின் சேர்க்கையே இலங்கைச் சமூகம். இப்பல்வேறு சமூகத்தவரிடையில் சில பொது அமிசங்களுண்டு. வேறு சில அமிசங்கள் அவர்களுடைய வேற்றுமைகளை எடுத்துக் காட்டுவதுடன் சாதிப் பாகுபாட்டையும் பிரித்துக் காட்டுகின்றன. இலங்கையர் என்ற ஒருமைப்பாடு இன்னும் வலுப்பெறவில்லை. சிங்களவர், தமிழர், சோனகர் என்ற இன உணர்ச்சி பெரிதும் காணப்படுகிறது. அத்துடன் இப்போது நடைமுறையிலிருந்து வரும் கல்வி முறையானது இவ்வினவுணர்ச்சியை வளர்த்து வருகிறது. ஆங்கிலக் கல்வி பெற்ற மத்திய வகுப்பினரிடையே ஓரளவுக்குத் தொடர்பை உண்டாக்கி வந்த ஆங்கில மொழி இப்பொழுது முன்னையைப் போல் முக்கியமான இடத்தைப் பெருதபடியால் சாதியொற்றுமைக்கேதுவாயிருந்த ஒரு சாதனமும் நீங்கி விட்டது எனலாம். இருந்தும் ஒரு நூற்றுண்டுக்கதிகமாகவே நிலவி வந்த பிரித்தானிய ஆட்சியின் பயனுகப் பல்வேறு வகைப்பட்ட சாதியினரிடையில் ஒற்றுமை உணர்ச்சி உண்டானது. இலங்கைச் சமூகம் ஒரு இன மக்களைக் கொண்ட சமூகமன்று, பிரித்தானியர். பிரான்சியர். ஜெர்மனியர், இத்தாலியர் போல நாமும் ஒரு இன மக்களன்று. நமது சாதியார், எல்லாருக்கும் பொதுவான ஐதீகங்களும், பொதுவான மொழியும், பொதுவான சமயமும், பொதுவான பண்பாடும் கொண்டவரல்லர், சிங்களவர், சிங்கள மொழியைப் பேசுகிருர்கள். அவர்களில் பெரும்பான்மையோர், பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள், இலங்கைத் தமிழர் தமிழ் பேசும் மக்கள். அவர்களிற் பெரும்பான்மையோர் சைவ சமயத்தைச் சேர்ந்தவர்கள். ஐரோப்பியரும் பறங்கியரும் ஆங்கில மொழியைப் பேசுகிருர்கள். அவர்களுடைய சமயம் கிறிஸ்து சமயம். முஸ்லீம்கள் தமிழைப் பேசுகிருர்கள். அவர்களுடைய சமயம் இஸ்லாம். மொழியைப் பொறுத்தவரையிலோ சமயத்தைப்பொறுத்தவரையிலோபண்பாட்டைப் பொறுத்தவரையிலோ இச்சமூகத்தவரிடை

யில் ஒருமைப்பாடுகிடையாது. இருந்தாலும் நாம் ஒரு தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்ச்சியும் பொதுவான அரசியல்நோக்கும் காணப்படுகின்றன. இலங்கையிலுள்ள தமிழர் தமது நலவுரிமைக ளைக்காப்பாற்றத் தென்னிந்தியாவை எதிர் நோக்கியிருக்கவில்லை. அவ்வாறே பறங்கியர் ஒல்லாந்தையும் முஸ்லீம்கள் அராபியாவை யும் நோக்கியிருக்கவில்லை. நாமெல்லாம் இலங்கையர், எமது தாய் நாடு இலங்கை என்ற உணர்ச்சி எம்முள்ளத்தில் வேரூன்றி வரு கிறது. இக்காரணத்தினுலேயே அவர்கள் ''நாம் இலங்கையர்'' என்ற ஒரு உணர்ச்சியுடையவராயும், அதற்கேற்ப ஒரு எண்ணப் பாங்கையுடையவராயும் காணப்படுகின்றனர்.

ஒவ்வொரு இனத்தவரும் அந்தந்த இனத்தை எடுத்துக் காட்டும் சில விசேட அமிசங்களைக் கொண்டிருக்கிறுர்கள். இந்த அமிசங்களைப்பற்றி ஆராய்வதற்கு முன் எல்லா இனத்தாருக்கும் பொதுவான சில அமிசங்களை ஆராய்வதுடன் அவை இலங்கை யர் என்ற எண்ணப் பாங்கை வளர்ப்பதற்கு எத்துணைப் பயன் படுகின்றன என்பதையும் நோக்குவோம். சமயம், கல்வி, போக்குவரத்துச் சாதனங்களில் அபிவிருத்தி என்பன இலங்கையர் என்ற பொது நோக்கைப் பல சமூகத்தவரிடையிலும் உண்டாக் கின. அன்றியும் பல நூற்றுண்டுகளாக அன்னிய ஆட்சியின் கீழ் அடிமைகளாயிருந்து சுதந்திரம் பெற்றதனுல் உண்டான தேசீய உணர்ச்சியும், வகுப்புச்சார்பின்றிப் பொது நலத்தை முன்னிட்டு ஏற்பட்ட அரசியற் கட்சிகளும் நாம் இலங்கையர், ஒரு தனிச்சாதியர் என்ற பொது நோக்கத்தைப் பெரிதும் வளரச் செய்தன. வேறுபட்ட பல சாதிகளிடையிலும் சமயங் களிடையிலும் மொழிகளிடையிலும் இலங்கையர் என்ற இந்த ஒற்றுமை உணர்ச்சி உண்டானது.

**சமயமும் கல்வியும் :** சமயத்துறையில் கிறிஸ்து சமய மானது ஒரு சமூகத்தவருக்குள்ளேயே காணப்பட்ட சாதிவேற் றுமைகளை அகற்றச் செய்தது. அன்றியும் வேறு மொழியும், வேறு இனமும் கொண்டவர்களை ஒன்றுபடுத்தியது. கிறிஸ்தவர் கள் பள்ளிக்கூடங்கள் மூலமாகத் தமது சமயத்தைப் பரப்பினுர் கள். முன்னரெல்லாம் தொழிலையோ பிறப்பையோ கொண்டு உயர்வு தாழ்வு பாராட்டினுர்கள். கிறிஸ்து சமயம் அது தவறெ னப் போதித்தது. உயர்ந்த சாதி இந்துக்கள், தாழ்ந்த சாதி இந்துக்களோடு பந்திபோசனமோ கொண்டாட்டமோ வைத்துக் கொள்ளாதிருந்தனர். ஆனுல் கிறிஸ்தவர்கள் உயர்வு தாழ்வைக் கைவிட்டுத் தாழ்ந்தசாதிக் கிறிஸ்தவரோடு கலந்து கொண்டாடத் துவங்கினர். இவ்வாறு கிறிஸ்து சமயம் சாதிக்கட்டுப்பாட்டை

உடைத்துப் பல சாதியாருங் கலந்து பழகச் செய்தது. பாட சாலைகளிலும் திருச்சபைகளிலும், விளையாட்டு மைதானங்களிலும் தேவாலயங்களிலும் பல சாதியினரும் ஒன்றுகூடி அந்நியோன்னிய மாகப் பழகினர்கள். கிறிஸ்து சமயமும் ஆங்கிலக்கல்வியும் பரவியதால் ஒருவன் உயர்ந்த சாதியில் பிறந்ததனல் அவன் சிறப்புடையவன் என்ற எண்ணம் அகன்றது. கிறிஸ்தவ மிஷனரிச் சங்கங்கள் ஏற்படுத்திய கல்லூரிகளில் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் படித்து முன்னேறினர்கள். பலர் அரசாங்க சேவையில் உயர்ந்த உத்தியோகங்களை வகித்தனர். வியாபார உலகிலும் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் நல்ல நிலைமையை அடைந்தார்கள். விரைவில் நூதனமான நிலைமை உண்டானது. அதாவது தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த கல்வியறிவு பெற்ற ஒரு கூட்டத்தினர் உயர்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்களெனச் சொல்லி வந்தவர்களுக்குக் கட்டளையிட அவர்கள் அதை நிறைவேற்ற வேண்டியவர்களானர்கள். வடமாகாணத்திலும் கிறிஸ்தவ கல்லூரிகளிலும் ஆங்கிலம் பயின்று தேறியதமிழினத்தவர் கொழும்புக்கு வந்து அரசாங்க சேவையில் பல உத்தியோகங்களை வகிக்கக் கூடிய நிலைமையை அடைந்தனர். வட மாகாணத்தில் ஒதுங்கியிருந்த நிலைமையை இவ்வாறு நீக்கிக் கொண்டார்கள். இலங்கையின் தெற்குப்பாகங்களுக்கு யாழ்ப்பாண மக்கள் வந்து சிங்களவருடன் சேர்ந்து பழக வசதியுண்டானது. இவ்வாறு, ஆங்கிலமும் கிறிஸ்தவசமயமும் சனங்கள் ஒன்றுகூடி ஒற்றுமைப்படச் சாதனமாயமைந்தன. சமயம், சாதி, மொழி, பண்பாடு என்பனவற்ருல் வேறுபட்ட சனங்களை ஒன்ருகச் சேர்ப்பதற்கு இச்சாதனங்கள் ஏதுவாயின.

இலங்கையின் பல்வேறு இனத்தவரிடையிலும் ஒற்றுமையை உண்டாக்குவதற்கு சைவசமயமும், பௌத்தசமயமும் துணைபுரிந்தன. தங்கள் சமயங்களே குற்றமற்ற மேலான சமயங்களென்றும், விடுதலை பெறுவதற்கு வேறு மார்க்கங்களில்லையென்றும், இச்சமயங்கள் நினைப்பதில்லை. இவ்விருசமயங்களும்சமாதானத்தை விரும்பும் சமயங்கள். வாளினுலும் இம்சையினுலும் மற்றவர்களைத் தங்கள் சமயத்தில் சேர்த்துக் கொள்ள இவை எக்காலத்திலாவது முயன்றதில்லை. மற்றவர்களுடைய மதக்கோட்பாடுகளை இச்சமயங்கள் மதித்தன. இதனுல் இவை பரஸ்பரம் நட்பாக விருந்ததுமல்லாமல் தமது சொந்தச் சமயத்துள் பல புதிய வேறுபட்ட கொள்கைகளையுடையவர்களையும் ஏற்றுக் கொண்டன. இதனுல் பௌத்த சைத்தியங்களையடுத்து கோவில்கள் காணப்படுவதும் பௌத்த ஆலயங்களில் இந்துத் தெய்வங்களை வைத்து வழிபடுவதும் நூதனமான காட்சியன்று. இந்தியா

வில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்குமிருந்த பகையும், வைரமும் இலங்கையில் இருக்கவில்லை. சிங்களவரும் தமிழரும்ஒருவரோடோருவர் ஐக்கியமாகவும் சமாதானமாகவும் வாழ்ந்து வந்தனர். இது பொதுத் தேசீய நோக்கை வளர்ப்பதற்குப் பெரிதும் துணை புரிந்தது.

**போக்கு வரத்து:** இலங்கையரென்ற பொது நோக்கைச் சமயமும் கல்வியும் வளர்த்தது போலவே போக்குவரத்துச் சாதனங்களும் வளர்ந்தன. விஞ்ஞான வளர்ச்சியின் பயனாக மனிதர் ஆற்றின் மேற் பாலம் போடவும், மலைகளைக் குடைந்து இரயில் ஓட்டவும் தெரிந்து கொண்டனர். நீண்டு அகன்று கிடக்கும் பகுதிகளையெல்லாம் இரயில் பாதைகளும் வீதிகளும் இணைக்கின்றன. ஆறுகள் மீது பாலங்கள் போடப்படுகின்றன. மலைகளுக்கூடாகச் சுரங்கப் பாதைகள் ஓடுகின்றன. யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இரயில் பாதை போடப்பட்டதால் யாழ்ப்பாண மக்கள் தென்னிலங்கைக்கு வந்து அரசாங்கத்தில் உத்தியோகம் பார்க்கக்கூடியதாயிற்று. புகையிலை வியாபாரத்தை விருத்தி செய்ய முடிந்தது. வியாபாரத்துறையில் ஈடுபட்டுப் பொருள் சம்பாதிக்கக் கூடியதாயிற்று. இவ்வாறே கண்டிப் பகுதிகளும் மற்றப் பகுதிகளுடன் கலக்க வழியுண்டாயிற்று. தாழ்பூமிச் சிங்களவர் கண்டி இராச்சியத்துக்குச் சென்று வியாபாரம் நடத்தத் துவங்கினர். தேயிலைத் தோட்டங்களும் இரப்பர்த் தோட்டங்களும் திறக்கப்பட்டன. பட்டினங்கள் உண்டாயின. கிராம அபிமானம் மறைந்தது. பல இனத்தவரும் ஒருவரோடொருவர் அந்நியோன்னியமாகக் கலந்தனர். இலங்கையர் என்றதொரு தேசீயப் பொதுநோக்கு உண்டாயிற்று. இரயில் பாதையும் வீதியும் அமைத்ததால் இடங்கள் அணுக்கமாயின. நல்ல அயலார் தன்மை உண்டானது. சனங்கள் ஒருவரோடொருவர் அந்நியோன்னியமாகக் கலந்துகொள்ளவும் வசதியுண்டாயிற்று.

**அந்நியர் ஆட்சி:** அந்நியர் ஆட்சியும் இலங்கையர் என்ற ஒரு பொது நோக்கை வளர்க்கத் துணை புரிந்தது. பல நூற்றுண்டாக அடிமை வாழ்வு வாழ்ந்ததை உணர்ந்து பல சாதியினரும் அன்னியர் ஆட்சியை ஒழிக்க ஒன்றுசேர்ந்தனர். சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் என்ற எல்லாச் சமூகத்தவரும் ஒன்று சேர்ந்து சுய ஆட்சி வேண்டுமென்று கிளர்ச்சி செய்தனர். சுய ஆட்சியை எவ்வாறு நிர்வகிப்பதென்றவிஷயத்தில் இச் சமூகத்தவர் தம்முள் பிணங்கினுலும், அந்நியராட்சியிலுண்டான வெறுப்பும், சுதந்திரம் வேண்டுமென்ற விருப்பமும், வகுப்புவாத நோக்கத்தை மறக்கச் செய்து தேசீய நோக்கத்தை உரு

வாக்கின. ''பங்கைப் பிரித்துவிட்டு பிரிட்டனே வெளியே போ'' என இந்தியாவில் நிலவிய கூக்குரல் இலங்கையில் உண்டாக வில்லை. இங்குள்ள சகல சமூகத்தவருக்கும் திருப்திகரமான ஒரு அரசியலமைப்பில் பூரண சுயாட்சியைப் பிரிட்டன் இலங்கைக்கு வழங்கவேண்டுமென்ற கோரிக்கையே இங்கு காணப்பட்டது.

*அரசியற் கட்சிகள் :* அரசியற் கட்சிகள் இலங்கைச் சமூதாயத்தை எவ்வாறு பாதித்தன என்பதை நிச்சயிப்பதற்கு இன்னுங் காலம் வேண்டும். அரசியல் கட்சிகள் சமீபத்தில் உண்டானவை. ஆனால் இவற்றில் பல தேசீய அடிப்படையில் ஸ்தாபிக்கப்பட்டன என்பதும் இவற்றில் பல சமூகத்தவரும் சேர்ந்திருக்கிறார்களென்பதும் கவனிக்கத்தக்க விடயங்களாகும். பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த அரசியற் றலைவர்கள் காட்டும் விரிந்த மனப்பான்மையிலும் அரசியற் சாதுரியத்திலும் இலங்கையின் முன்னேற்றம் தங்கியிருக்கிறது. சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழர், இந்தியர், பறங்கியர், முஸ்லீம்கள் என்பவர் பெரும்பான்மைச் சமூகத்தவர் தம்மிடத்தில் நம்பிக்கை கொண்டு பயமின்றி வாழச் செய்வார்களானல், உண்மையான ஒரு தேசீய உணர்ச்சியை உண்டாக்கியவர்களாவர். சாதியபிமானமும், சமயாபிமானமும் கொண்டு பட்சபாதங் காட்டுவார்களானல் ஒரு தேசம் என்ற உணர்ச்சியை வளர்க்கமுடியாதவர்களாவர்.

*சனச் செறிவு :* இலங்கையின் பெரும்பான்மைச் சமூகத்தவர் சிங்களவராவர். அவர்கள் ஆரிய வமிசத்தைச் சேர்ந்தவர்கள். கி. மு. ஐந்தாவது நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து வந்து இலங்கையில் குடியேறினர்களென்பதில் ஐயமில்லை. அவர்களைத் தாழ் பூமிச் சிங்களவர், கண்டிச் சிங்களவர் என இரு வகையாகப் பிரிக்கலாம்.

*தாழ் பூமிச் சிங்களவர் :* இவர்கள் இலங்கையின் மேற்குப் பகுதியையும், தெற்குப் பகுதியையுமடுத்த கரையோர மாகாணங்களிற் காணப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பான்மையும் மேல் மாகாணப் பகுதிகளிலும், தென் மாகாணப் பகுதிகளிலும், சிலாபப் பகுதியிலும், புத்தளத்தின் மேற்குப் பகுதியிலும் வசிக்கிறார்கள். 1953-ம் ஆண்டுக் குடிமதிப்பின்படி இவர்கள் இலங்கையின் மொத்தச் சனத் தொகையில் 42·7 வீதத்தினராகவும் 3,464,126 தொகையினராகவும் மதிப்பிடப்பட்டனர். மலைநாட்டுச் சிங்களவரிலும் பார்க்க இவர்கள் பொதுவாக முன்னேற்றமுடையவர்கள். அந்நிய நாட்டினர் இலங்கை மீது படையெடுத்தபொழுது முதலில் எதிர்த்து நின்று சண்டையிட்டவர்கள்

இவர்களே. மேல்நாட்டு நாகரிகத்தை முதலில் கைக்கொண்டவர்களும் இவர்களே. இவர்களிற் பலர் கிறிஸ்தவராயினர். பெரும்பான்மையோர் இன்றும் பௌத்தர்களாகவே இருக்கிருர்கள். கிறிஸ்தவருள் பலர் சிலாபம், புத்தளம், கொழும்பு ஆகிய கரைப் பட்டினங்களிலேயே காணப்படுகின்றனர்.

கல்வித்துறையிலும், மலைநாட்டுச் சிங்களவரிலும் பார்க்க இவர்கள் முன்னேற்றமடைந்திருக்கின்றனர். அவர்களிலும் பார்க்க இவர்களுக்கு அரசியலுணர்ச்சியும் அதிகமுண்டு. சிங்கள அரசியற் தலைவர்களிற் பலர் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களே. அரசியற் சீர்திருத்த இயக்கத்திலும் இவர்களே முன்னணியில் நின்ருர்கள். மேல்நாட்டு நாகரிகச் சேர்க்கையினுல் இவர்களுடைய பழக்க வழக்கங்களும் நோக்கும் பெரிதும் மாறிவிட்டன. ஆனுல் கண்டிச் சிங்களவர் அவ்வளவு தூரம் மாற்றமடையவில்லை. இவ்வாறு பல துறையிலும் முன்னேற்றமடைந்த இவர்களிற் பலர் பெரிய வியாபாரிகளாகவும், தோட்ட முதலாளிகளாகவும் விளங்குகிருர்கள். மலைநாட்டிலும் பலர் இவ்வாறு உயர் நிலையை அடைந்திருக்கிருர்கள்,

**கண்டிச் சிங்களவர் :** மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம், சப்பிரகமூவா மாகாணம் என்னும் மாகாணங்களிலும் குருணுகல் பகுதியிலும், புத்தளப் பகுதியின் ஒரு பிரிவிலும், மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா ஆகிய பகுதிகளின் சிங்களப் பிரிவுகளிலுமே இவர்கள் வசிக்கிருர்கள்.

கண்டிச் சிங்களவர் பொதுவாக பிற்போக்கான சமூகத்தினராக இருந்தனர். சிங்களவர் சுதந்திரத்தை இழக்க நேர்ந்த காலத்தில் ஆயுதந் தாங்கிய மேல்நாட்டுப் படையினருடன் எதிர்த்துப் போராடியவர்கள் இவர்களேயாவர். கண்டி இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின் அம்மலைநாட்டுப் பிரதேசங்களில் வசித்தோர் மேலும் மிக்க இன்னல்களுக்குள்ளாயினர். தோட்ட முதலாளிகள் வந்ததும், இவர்களுக்குச் சட்டபூர்வமாக உரித்தான காணிகளை அவர்கள் அபகரித்தனர். முதலாவதாகக் கோப்பியிலிருந்தும் பின்னர் தேயிலை, இரப்பர் ஆகியவற்றிலிருந்தும் இவர்களுக்குக் கிடைத்திருக்கக்கூடிய ஆதாயம் இந்தியாவின் தென் பாகங்களிலிருந்து தொழிலாளிகள் வந்ததன் விளைவாக இவர்களுக்குக் கிடைக்கவில்லை. இவர்களில் அநேகர் இன்றும் தங்கள் பரம்பரைச் சொத்துக்களைக் கைவிடவில்லை. இவர்கள் பலமற்ற வறிய விவசாயிகளாவர். இவர்களிற் பெரும்பான்மையோரின் நிலைமை சற்று

மோசமானதாகும். இவர்களை நல்ல நிலைமைக்குக் கொண்டுவருவது அரசாங்கத்தின் கடமைகளிலொன்று. கல்வித் துறையிலும் இவர்கள் பிற்போக்குடையவராகக் காணப்படுகின்றனர். குடிமக்களின் கடமைகள், உரிமைகள் என்பவற்றைப்பற்றித் தாழ்பூமிச் சிங்களவருக்கு உள்ள அரசியலுணர்ச்சி கண்டியரிடத்திற் குறைவு. மலைநாட்டுக் கிராமவாசிகள் பழங்காலத்து "இராசகாரிய" முறையைப் பின்பற்றிப் பெருநிலக்கிழாரின் சொல்லுக்கடங்கி அவர்களுக்குச் சேவை புரிந்து வருகிறார்கள்.

1953-ம் ஆண்டின் குடிசன மதிப்பின்படி இலங்கையின் மொத்தச் சனத் தொகையில் கண்டிச் சிங்களவர் 26·6 வீதத்தினராகக் காணப்பட்டனர். அதாவது, இவர்களின் தொகை 2,157,206 ஆகும். இவர்களிற் பெரும் பகுதியினர் புத்த சமயிகள். குருணைகல், கண்டி, நுவரெலியா ஆகிய பகுதிகளில் கிள்ளித் தெளித்தாற்போல ஆங்காங்கு ஒருசில கிறிஸ்தவர்கள் காணப்படுகின்றனர்.

பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள் என்பவற்றில் தாழ் பூமிச் சிங்களவருக்கும், கண்டிச்சிங்களவருக்கும் பல வித்தியாசங்களுண்டு. கண்டி விவாகச் சட்டங்களும், தாய் முறைகளும் இதற்குச் சான்று பகரும். இவர்களுடைய விவாக முறை இரண்டு வகைப்படும். ஒன்று, விவாகமான பெண், பிறந்த அகத்தை விட்டுப் புக்ககம் சென்று கணவனோடு வாழ்வது "திக" மண முறையாகும். பிறந்த அகத்திலேயே கணவனோடு சீவிப்பது "பின்ன" மண முறை எனப்படும். "திக" மண முறைப்படி விவாகமான ஒரு பெண் தனது பிறந்த அகத்தைவிட்டு, கணவனோடு புக்ககம் சென்றால், அவளுக்குப் பெற்றோரின் சொத்துக்கள் எதற்கும் உரிமை கிடையாது. சிறுபான்மை இதற்குப் புற நடையுமுண்டு.

**உரொடியர் இனம் :** சிங்களச் சமூகத்திற் காணப்படும் தாழ்ந்த சாதியார் உரொடியர் என வழங்கப்படுவர். இவர்கள் பிச்சையெடுத்தும் புற்கயிறு, கடகம், கூடை, பாய் என்பவற்றை விற்றும் சீவனம் நடத்துவர். இவர்களுக்கெனத் தனிக் குடியிருப்புகளுண்டு. இரத்தினபுரி, குருணைகல் என்ற பகுதிகளிலும் பதுளைப் பகுதியிலுள்ள யட்டிக்கிந்த என்னும் பிரிவிலும் மிகுதியும் காணப்படுகின்றனர். இவர்கள் இருக்கும் குடியிருப்புகள் "குப்பாயம்" என வழங்கப்படும். தலைமைக்காரர் "குலாவலி" எனப் பெயர் பெறுவர்.

**இலங்கைத் தமிழர் :** இலங்கைச் சமூகத்தில் இரண்டாவது பெரியசாதியார் இலங்கைத்தமிழர். பதின்மூன்ருவது நூற்றுண்டின் ஆரம்பத்தில் வட இலங்கையில் நிரந்த்ரமான ஒரு தமிழ் இராச்சியம் விளங்கிற்று. அதன் பின்னர், இலங்கையின் மற்றப் பகுதிகளிலும் இவ்விராச்சியத்தின் செல்வாக்குப் பரவி வந்தது. 1837-ம் ஆண்டு தொடக்கம் இலங்கைத் தோட்டங்களிலே வேலை செய்வதற்கு வந்த தென்னிந்தியத் தொழிலாளர் இந்தியத் தமிழராவர். இலங்கைத்தமிழர் இவர்களில் வேருன ஒரு தனிச் சமூகமென்றே கூற வேண்டும். இவர்கள் வடமாகாணம், மட்டக்களப்பு, திரிகோணமலை ஆகிய பிரதேசங்களில் பெரிதும் காணப்படுகின்றனர். கொழும்பு நகரிலும் 1953-ம் ஆண்டு குடிசன மதிப்பின்படி அந்நகரத்துக் குடிசனத் தொகையில் 13·02 வீதத்தினர் காணப்பட்டனர். இதே குடிசன மதிப்பின்படி யாழ்ப்பாணப் பகுதியில் 469,559 பேரும், மட்டக்களப்புப் பகுதியில் 129,940 பேரும் வசிப்பதாகக் கணக்கிடப்பட்டது. எல்லாமாக மொத்தம் 908,705 இலங்கைத் தமிழர் வசிக்கிருர்கள். இது இத்தீவின் சனத்தொகையில் 11·2 வீதமாகும்.

இவர்களிற் பெரும்பான்மையோர் சைவ சமயத்தவர். பலர் கிறிஸ்து சமயத்தையும் அனுசரிக்கிருர்கள். கிறிஸ்தவர்களில் உரோமன் கத்தோலிக்கரும், புரட்டெஸ்தாந்தியரும் உளர். யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் சைவசமயத்தவர் மிகுதியும் காணப்படுகின்றனர். 1953-ம் ஆண்டுக் குடிசன மதிப்பின்படி இந்நாலு பகுதிகளிலும் 594,048 சைவசமயிகள் வசிக்கிருர்கள். மன்னுர்ப் பகுதியில் கிறிஸ்தவர் தொகை அதிகம். இங்குள்ளவர்களில் நூற்றுக்கு 40 வீதத்தினர் கிறிஸ்தவர். யாழ்ப்பாணப் பகுதியிலும், வவுனியா, திருகோணமலை ஆகிய பகுதிகளிலும் பத்து வீதத்தினர் கிறிஸ்தவராவர். யாழ்ப்பாணக் குடாநாட்டில் கிறிஸ்தவ பாதிரிமார் பல பாடசாலைகளை ஆரம்பித்து யாழ்ப்பாணத்தில் கல்வியைப் பரப்பினுர்கள். அதன் பயனுக யாழ்ப்பாணத் தமிழர் பலர் அரசாங்கத்தில் நல்ல பதவிகளை வகித்தனர்.

விடா முயற்சியுள்ள யாழ்ப்பாண வாசிகளுக்கு இயற்கை அனுகூலமாயில்லாததால் உண்மையான உழைப்பினுலும் கள்ளமில்லாத முயற்சியினுலும் அவர்கள் வெறுந்தரையாய்க் கிடக்கும் பூமியில் பயிர் உண்டாக்கி விளைவு பெறுகிருர்கள். யாழ்ப்பாணத்தவரில் பெரும்பான்மையினர் விவசாயிகளாவர். நிலத்தை நம்பியே அவர்கள் சீவியம் நடத்துகின்றனர். ஆனுல் அங்கே தேவைக்குப் போதுமான நிலம் கிடையாது. அதனுல் பலர் வேறு

துறைகளில் முயன்ருர்கள். அதன்பயனுக ஒருசிலர் சிங்கப்பூர்,மலாயா முதலிய இடங்களில் நல்ல உத்தியோகங்களில் அமர்ந்தனர். வேறு சிலர் அரசாங்கத்தில் உத்தியோகம் வகித்தனர். அரசாங்க உத்தியோகமே படித்த யாழ்ப்பாணத்தவரின் முக்கியமான தொழிலாயிற்று. இலங்கைக்கு குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்கப்படுவதற்கு சிறிது முன்னர், தமிழர் தமக்குக் கூடுதலான பிரதிநிதித்துவம் வேண்டுமெனக் கோரியதற்கு ஒரு காரணம் அரசாங்க சேவையில் தமக்கு முன்னிருந்த செல்வாக்குக் குறைந்துவிடுமென்ற பயமேயாகும். வைத்தியத்துறையிலும், சட்ட நூற்றுறையிலும், கல்வித்துறையிலும், பல யாழ்ப்பாணத் தமிழர் உயர்ந்த பதவிகளில் விளங்குகின்ருர்கள். அரசியற் சீர்திருத்த இயக்கத்திலும், 1918-ம் ஆண்டு தொடக்கம் 1931-ம் ஆண்டு வரை அவர்கள் பிரதானமான பங்கெடுத்து வந்தார்கள்.

கிழக்கு மாகாணத் தமிழர் வடக்கு மாகாணத் தமிழரைப் போல அவ்வளவு முற்போக்குடையவர்களல்லர். இதற்கு முக்கிய காரணம் இப்பகுதிகளில் சிறந்த கல்வி நிலையங்களில்லாமையே. மேலும், கிழக்கு மாகாணத்தில் போக்குவரத்துச் சாதனங்களும் குறைவு. வடமாகாணத்தோடு கிழக்கு மாகாணத்தவர் போக்குவரத்துச் செய்வதும் இலகுவான காரியமன்று. கிழக்கு மாகாணப் பட்டினங்கள் ஒன்றேடொன்று போக்குவரத்துச் செய்வதும் இலகுவன்று. கண்டிச் சிங்களவர் போல கிழக்கு மாகாணத் தமிழரும் அரசாங்கத்துக்கு ஒரு பிரச்சினையாகவே விளங்குகிருர்கள். இவர்கள் முன்னுக்கு வர உதவி செய்வது அரசாங்கத்தின் கடமையாகும்.

**இந்தியர் :** இந்தியத் தமிழர் தோட்டங்களிற் காணப்படுவர். இலங்கைத் தமிழர் போல இலங்கைமீது படையெடுத்துப் போர் புரிந்து தமக்கென ஒரு இராச்சியத்தை இவர்களும் ஸ்தாபிக்கவில்லை. மலைநாட்டில் வெள்ளைக்காரர் தோட்டங்களைத் திறந்த பொழுது அங்கே கூலிக்கு வேலை செய்யவந்த கூட்டத்தினரே இந்தியத் தொழிலாளர். இவர்கள் 1837-ம் ஆண்டு துவக்கமே இலங்கைக்கு வரத் துவங்கினர். இவர்களின் வரவு காலகதியில் பெருகிக் கொண்டே வந்தது. நாளடைவில் மலைநாட்டுச் சிங்களவரின் சீவியத்துக்கே இவர்கள் வரவு பெரிய ஆபத்தை உண்டாக்கிற்று. கண்டிவாசிகள் வறுமையடைந்ததற்குக் காரணம் இந்தியத்தொழிலாளரின் வருகையே யெனவும் கூறப்பட்டது. இவ்விந்தியத் தெரழிலாளருக்கு இலங்கையில் நிரந்தரமான பற்றுக் கிடையாதென்ற காரணத்தால் வாக்குரிமை மறுக்கப்பட்டது. இப்பொ

ழுது மறுபடியும் அந்த வாக்குரிமை பெறுவதானுல், ஒவ்வொரு இந்தியனும் தனது பிறப்பு, இலங்கையில் வசித்த காலம் என்பன பற்றிப் பல தகவல்களைக் கொடுத்து பிரசா உரிமையைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்தியரில் பெரும்பான்மையோர் தோட்டத் தொழிலாளர். சிலர் வர்த்தகக் கந்தோர்களில் இலிகிதராகக் கடமையாற்றுகின்றனர். வேறு சிலர் சில்லறை வியாபாரிகளாக இருக்கின்றனர். ஒரு சிலர் புடைவை, பல சரக்கு முதலிய வியாபாரங்களில் ஈடுபட்டிருக்கின்றனர். சிலர் வட்டிக்கடை வைத்திருக்கிருர்கள். இந்தியரில் பெரும்பான்மையோர் இந்துக்கள். கிறிஸ்தவர்களுமுண்டு. கண்டி, நுவரெலியா, பதுளையாகிய பகுதிகளிற்ருன் இவர்கள் பெரும்பாலும் காணப்படுகின்றனர். கொழும்பு நகரிலும் ஏராளமான இந்தியர் வசிக்கிருர்கள். அனுராதபுரி, பதுளை, மாத்தளையாகிய பகுதிகளிலும் அதிகம் காணப்படுகின்றனர்.

இவர்கள் இந்நாட்டின் தற்காலிக வாசிகளா அல்லது நிரந்தர வாசிகளா என்பதை நமது பாராளுமன்றமே நிச்சயிக்கவேண்டும். இவர்கள் இந்நாட்டின் செல்வச் சிறப்புக்குப் பெரிதும் முயன்ருர்கள். பிரித்தானிய அரசாங்கம், இராசகாரிய முறையை நீக்கிய பொழுது உள்ளூர்க் கிராமவாசிகள் தோட்டங்களில் தொழிலாளராகச் சேர்ந்து விடுவார்களென எண்ணிற்று. ஆனுல் அதன் எண்ணம்போல் நடக்கவில்லை. எனவே, இந்தியாவிலிருந்து தொழிலாளரை வரவழைக்க வேண்டியதாயிற்று. இந்தியாவில் கஷ்டசீவியம் நடத்திய இந்தியக் கிராமவாசிகள் இலங்கைக்கு விரும்பி வந்தார்கள். வந்து இலங்கையின் சுபீட்சத்திற்காகப் பெரும் பாடுபட்டு உழைத்தனர். இன்று இலங்கை இந்தியர் பிரச்சினை இலங்கை அரசாங்கத்துக்குப் பெரிய தலையிடியைக் கொடுத்து வருகிறது. இந்தியர் கள்ளத்தோணியில் இலங்கை வந்து சேர்வதை அரசாங்கம் தடுத்து வருகிறது. ஆனுல் கள்ளக் குடியேற்றம் நின்றபாடில்லை. இதைச் சட்டப்படி நிறுத்தாவிட்டால் இலங்கையில் தொற்று வியாதிகள் பரவக்கூடிய அபாயமுண்டு.

*முஸ்லீம்கள் :* இலங்கைச் சோனகர் இந்நாட்டின் நிரந்தர வாசிகளாவர். இந்தியச் சோனகர் தற்காலிக வாசிகளே. இலங்கைச் சோனகர் கி. பி. 1024 துவக்கம் இங்கு குடியேறி வந்திருக்கிருர்கள். முதன் முதல் இவர்கள் களுத்துறையிலுள்ள வேருவலையில் வந்து குடியேறினர். அந்தக்காலந் துவங்கிக் கரையோரப் பாகங்களில் சமாதானமாகவே சென்று குடியேறினர் இவர்களுடைய நோக்கம் வியாபாரமேயன்றிச் சண்டைசெய்து நாடு கைப்பற்றுவதன்று. வியாபார நோக்கமாக இவர்கள் இலங்கையின் மூலை முடுக்கெல்லாம் சென்று குடியேறினுர்கள். 1946-ம் ஆண்டுக்

குடிசன மதிப்பின்படி இவர்கள் இலங்கையில் ஒவ்வொரு பகுதியிலும் நூற்றுக்கொரு வீதமாவது காணப்பட்டனரெனக் கணக்கிடப்பட்டது. இவர்கள் வியாபாரத்தில் நாட்டமுடையவர்களானபடியால் படிப்பில் அதிகம் கவனமெடுக்கவில்லை. இதனுல் கல்வித்துறையில் இவர்கள் பிற்போக்கானவராகவே யிருக்கிறுர்கள். அரசாங்க சேவையிலோ, மற்ற உயர்தர உத்தியோகத்துறைகளிலோ சோனகர் குறைவாகவே யிருக்கிறுர்கள். இக்குறையை நிவிர்த்தி செய்ய அரசாங்கம் முஸ்லீம் பிரதேசங்களில் கல்லூரிகளை நிறுவி வருகிறது. 1953-ல் இலங்கைச் சோனகரின் தொகை 468,146 ஆகும். இவர்கள் முகமது நபி காட்டிய மார்க்கத்தைப் பின்பற்றுகிறுர்கள். விவாக விஷயத்தில் இவர்கள் மற்றச் சாதியாரோடு கலப்பு விவாகமுஞ் செய்கிறுர்கள். இவர்கள் சாதி வித்தியாசம் பாராட்டுவதில்லை. இவர்கள் தாய் மொழி தமிழ். ஆனுல் இவர்களுடைய வேதமாகிய பரிசுத்த குர் ஆனை ஓதுவதற்காக அரபு மொழியையும் பயில்கிறுர்கள். சமீப காலத்தில் சில சோனகர் சிங்களத்தைப் பயிலவும் முற்பட்டிருக்கின்றனர். மட்டக்களப்பில்தான் சோனகர் தொகை அதிகம். இங்கே 105,272 சோனகர் வசிக்கிறுர்கள். இது 38 விகிதமாகும். புத்தளம், திருகோணமலை, மன்னுர் ஆகிய பகுதிகளில் தொகை 25 சத விகிதமாகும். இவர்கள் பெரும்பாலும் பட்டினங்களிலேயே காணப்படுகிறுர்கள். இவர்கள் வியாபாரத்திலேயே பெரிதும் ஈடுபட்டிருப்பர். 1953-ம் ஆண்டுக் குடிசன மதிப்பின்படி கொழும்பில் 58,807 சோனகர் காணப்பட்டனர். பழங்காலந்தொட்டு இவர்கள் குடியேறியுள்ள புத்தளம், வேருவலை, ஆகிய பகுதிகளில் இவர்களே பெரும்பான்மைச் சமூகத்தவராவர். கண்டி, யாழ்ப்பாணம், களுத்துறை, கம்பளை, மாத்தளை நீர்கொழும்பு ஆகிய இடங்களிலும் சோனகர் பலர் வசிக்கிறுர்கள்.

1943-ம் ஆண்டுக் குடிசன மதிப்பின்படி 35,624 இந்திய முஸ்லீம்கள் இந்நாட்டில் வசித்தனர். 1953-ம் ஆண்டுக் குடிசன மதிப்பு இந்திய முஸ்லீம்களைப் புறம்பாகப் பாகுபடுத்தவில்லை. இவர்கள் பெரும்பாலும் கொழும்பிலும் கண்டியிலுமே காணப்பட்டனர். இந்திய முஸ்லீம்கள் 'கரைச் சோனகர்'' எனவும் வழங்கப்படுவர். இவர்கள் நிலையாக வசிக்காமல் அடிக்கடி இடம் பெயர்ந்து கொள்வதால் இப்பெயர் இவர்களுக்கு வழங்கப்படும். இவர்கள் வியாபாரத்தின் பொருட்டு இலங்கைக்கு வந்தவர்கள். தொழில் முடிந்து இலாபமும் பெற்ற பின்னர் இவர்கள் மறுபடியும் இந்தியக் கரைக்குச் சென்று விடுவர். இலங்கைச் சோனகர் இலங்கையையே தம் தாயகமாகக் கொண்ட

வர்கள். இவர்களிற் பெரும்பாலோர் வியாபாரிகளானாலும் கிழக்கு மாகாணச் சோனகரில் பெரும்பாலோர் விவசாயிகளாக வும், மந்தை வளர்ப்போராகவும் காணப்படுகின்றனர். இலங்கையில் வசிக்கும் மலாயரும் இஸ்லாம் சமயத்தைச் சேர்ந்த வர்களே. இவர்கள் ஆதியில் ஜாவா தேசத்திலிருந்து இங்கு வந்து குடியேறியவர்கள். இவர்களிடத்துக் காணப்படும் மொங்கோலியப் பண்புகளைக் கொண்டு இவர்களை மற்றவர்களிலிருந்து வேறுபடுத்திக் காணலாம். இவர்கள் இலங்கைக்குப் போர் வீரராகக் கொண்டு வரப்பட்டார்கள். பின்னர் சிங்களவர், தமிழர், முஸ்லீம்களாகிய வரோடு விவாக சம்பந்தஞ் செய்து கொண்டு இவர்கள் இலங் கைச் சமூகத்தவரோடு கலந்து விட்டனர். 1953-ம் ஆண்டுக் குடி சன மதிப்பின்படி இவர்கள் 28,736 தொகையினரெனக் காணப்பட்டது. இவரில் பெரும்பாலோர் கொழும்பு நகரிலேயே வசிக்கிறார்கள்.

***பறங்கியர் :*** பறங்கியர் சிறுபான்மையின ராலும் மிகுந்த செல்வாக்குடையவர்கள். இவர்கள் பல சாதிக் கலப் புடையவர்கள். சிலர் இலங்கையிலிருந்த இடச்சுக்காரரின் வழி யில் தோன்றினோர். இவர்கள் தம்மை 'இடச்சுப் பேர்கர்கள்' என வழங்குவர். சிலர் போர்த்துக்கீச வழியில் வந்தவர்கள். வேறு சிலர் ''துப்பாசிகள்'', ''மெஸ்டிக்கோக்கள்'' என்ற போர்த்துக்கீச இனத்தவரின் வழியில் வந்தவர்கள். மற்றுஞ் சிலர் ஐரோப்பிய ருக்கும் சிங்களவர், தமிழர் முதலிய சுதேச வாசிகளுக்கும் பிறந் தவர்கள். இவர்கள் யூரேசியர் எனவும் ''ஐரோப்பிய—இலங்கை'' கலப்புச் சாதியாரெனவும் வழங்கப்படுவர். 1953-ம் ஆண்டுச் சன சங்கியையின்படி இவர்கள் தொகை 43,916. இவ்வினத்த வர் பெரும்பாலும் நகரங்களிலேயே வசிக்கிறார்கள். கொழும்புப் பகுதியில் இவர்களில் 68 வீதத்தினர் வசிக்கிறார்கள்.

போர்த்துக்கீசப் பறங்கியர் மற்றப் பெரும்பான்மைச் சமூ கத்தில் கலந்து தம் தனிப் பண்பை இழந்து விட்டார்கள். இவர் கள் இடச்சுப் பறங்கியரிலும் பார்க்க கறுப்பான தோற்றமுடைய வர்கள். வாழ்க்கை நிலையிலும் அவர்களைவிட வறியவர்களா கவே காணப்படுகின்றனர். பெரும்பாலோர் தேர்ச்சி பெற்ற தொழிலாளராகவும், சப்பாத்துத் தொழில் தெரிந்தவர்களாக வும், இயந்திரத் தொழிலை அறிந்தவர்களாகவும் இருக்கிறார்கள். யூரேசியரும் ஐரோப்பிய—இலங்கைக் கலப்புச் சாதியினரும் பெரும்பாலும் தோட்டப்பகுதிகளில் தொழில் செய்கிறார்கள். சிலர் அரசாங்கத்திலும் வர்த்தக இஸ்தாபனங்களிலும் இலிகிதர் களாகவும் உத்தியோகம் வகிக்கிறார்கள். இடச்சுப் பறங்கியர்

வழியில் தோன்றிய பறங்கியரே இச்சமூகத்தின் ஒரு முக்கிய மான பகுதியினராவர். இலங்கையில் பிரித்தானிய நிர்வாகம் ஆரம்ப தசையில் இருந்தபொழுதும், நடுப்பிராயத்தை அடைந்த பொழுதும் இவர்களே அதற்குத் தூண்போல துணையாயிருந்த னர். இன்று இவர்களுடைய முக்கியத்துவம் குறைந்துவிட்டது. ஆனல் தனிப்பண்பு மறைந்துவிடவில்லை: அரசாங்கசேவையி லும் வர்த்தக இஸ்தாபனங்களிலும் இவர்கள் இன்றும் நல்ல சேவை செய்து வருகிறார்கள். இடச்சுப் பறங்கியர் புரட்டஸ்தாந் தியக் கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தவர்கள். ஆனல். போர்த் துக்கீசப் பறங்கியர் உரோமன் கத்தோலிக்கராவர். பறங்கியரின் தாய் மொழி ஆங்கிலம். ஆனல், சுதேச மொழிகள் அரசாங்கத் தின் ஆதரவைப் பெற்று வருகின்ற படியால், இவர்களும் தமது கல்வியை சுதேச மொழி மூலமே கற்றுக்கொள்ளவேண்டிய அவ சிய மேற்படலாம்.

**ஐரோப்பியர் :** இலங்கையிலுள்ள சாதியாருள் ஐரோப்பி யர் மிகச் சிறிய தொகையினராவர். 1953-ம் ஆண்டுச்சனசங்கியை யில் இவர்களுடைய தொகை புறம்பாகக் கொடுக்கப்படவில்லை. 1946-ம் ஆண்டுச் சங்கியையின்படி இலங்கையில் 5418 பேர் காணப்பட்டார்கள். இதற்கு முந்திய வருடங்களில் இவர்க ளுடைய தொகை அதிகரித்திருந்தது. ஆனல் நாளடைவில் இத்தொகை மிகவும் குறைந்து விட்டது. இவர்களிற் பெரும் பாலோருக்கு இலங்கையில் நிரந்தரமான பற்றுக் கிடையாது. ஐரோப்பியரிற் பெரும்பாலோர் கொழும்புப் பகுதிகளிலேயே வசிக்கிறார்கள். இவர்களுடைய தொழில் பெரும்பாலும் அரசாங்க உத்தியோகமாகும். தொகையிற் சிறியவர்களானலும் செல்வத் தினலும் பொருளாதாரப் பலத்தினலும் அரசியலில் இவர்களுக்கு அதிக செல்வாக்குண்டு.

**வேடர் :** இலங்கையில் வேட்டுவச்சாதி நாளுக்கு நாள் மறைந்து வருகிறது. இவர்கள் நாகரிகமுள்ள ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்களென்று எவ்வகையிலும் கூறமுடியாது. மட்டக் களப்புப் பகுதியே இவர்களின் முக்கியமான இருப்பிடமாகும். 1946-ம் ஆண்டுச் சன சங்கியையின்படி இவர்கள் தொகை 2361 ஆகும்.

**இலங்கையரென்ற தேசீய உணர்ச்சி :** இதுகாறும் கூறியவற்றால் நம் நாட்டில் நாமெல்லாம் இலங்கையரென்ற ஒரு தனி இனத்தைச் சேர்ந்தவர்களென்னும் தேசீய உணர்ச்சி இன்னும் உருவாகவில்லையென்பதை அறிந்து கொள்ளலாம்.

இலங்கையில் பல்வேறு சமூகங்கள் இருப்பது மாத்திரமன்றி ஒவ்வொரு சமூகத்திலும் சாதி, பிரதேசம் என்பவற்றைக் கொண்ட பலவேறு பிரிவுகளுமிருக்கின்றன. ஆனுல் ஒற்றுமைக் கேதுவான ஒரு விஷயம் என்னவெனில், நாமெல்லாம் ஒரே தேசத்தைச் சேர்ந்தவர்களென்னும் உணர்ச்சியே. கல்வியும் போக்குவரத்துச் சாதனங்களும் பல சமூகத்தவரிடையிலும் ஒற்றுமையை உண்டாக்கியிருக்கின்றன. அத்துடன், ஒருவரை யொருவர் நன்கு அறிந்து பழகவும் வசதியளித்திருக்கின்றன. அரசியற் பயனைக் கருதியாவது இப் பல்வேறு சமூகங்களையும் ஒன்று கூட்ட வேண்டியதவசியமாகும். அதற்கு வகுப்புப் பற்றில் லாத தேசீய உணர்ச்சி கொண்ட ஒரு கட்சி செவ்வனே நிறுவப் படவேண்டும். மேலும் ஒவ்வொரு சமூகத்திலும் காணப்படும் சாதி வேற்றுமைகளையும், வ்குப்பு வேற்றுமைகளையும் அகற்றுவ தற்குச் சமூகச் சீர்திருத்தத்திற்கான சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். பிரெஞ்சுக்காரர் பிரெஞ்சுச் சாதியென்றும், ஜெர்மனியர் ஜெர்மன் சாதியென்றும், பிரித்தானியர் பிரித்தானியச் சாதியென் றும் சொல்வதுபோல இலங்கையிலுள்ளவர்களும் இலங்கைச் சாதி யென்று சொல்லக்கூடிய ஒரு நிலைமை இன்னும் உண்டாகவில்லை. ஆனுல், இலங்கையரென்ற சாதியை உருவாக்கும் பல்வேறு சமூகத்தவரும், இலங்கையின் நன்மையைக் கருதி ஒரு பொது நோக்கத்தை மனதிற் கொண்டிருக்கிறுர்களென்பது குறிப்பிடத் தக்கது. ஒரு சாதியாரென்ற ஒற்றுமைக்குப் பிரதிகூலமான விஷ யங்களுங் காணப்படுகின்றன. ஒற்றுமைக்கேதுவான விஷயங்களு முண்டு. ஒவ்வொரு சமூகத்தவரும் தத்தம் தனிப் பண்பை வளர்க்க விரும்புகிறுர்கள். அத்துடன், இலங்கையின் பொதுநல விருத்திக் காகத் தியாகங்கள் செய்யவும் தயாராயிருக்கின்றுர்கள். இத் தேசம் வலிமையும் செல்வாக்குமுள்ள ஓர் அரசாக முன்னேறு வதற்கு இந்த மனேபாவம் பெருந்துணை புரியும். சுவிட்ஸர்லாந்து மக்கள் பல்வேறு சாதியினராகவிருந்த போதிலும் உலகிற்கு ஓர் ஐக்கிய முன்னணியுடையவராக விருக்கின்றனர். எனவே இலங்கை மக்களும் சுவிட்ஸர்லாந்து மக்களைப் பின்பற்றி, தத்தம் பண்புகளை இழக்காது தனித் தனிச் சமூகங்களாக விருக்க விரும்பினும் ஒரே சாதியாக ஒருமித்து வாழ்வது சாத்தியமாகும்.

# மூன்றாம் அத்தியாயம்

# கூட்டு வாழ்க்கை

*சமூகம் :*

மனிதன் இயற்கையில் ஒருமித்து வாழும்தன்மையுடையவன் பிறருதவியின்றி எதையும் சாதிப்பது கஷ்டமாகையால் அவன் தனித்து வாழமுடியாது. குகைகளில் வசித்துவந்த ஆதி மனிதன் கூடத் தன் தினசரி வாழ்க்கையை நடத்துவதற்கு ஒரு பெண்ணை வாழ்க்கைத் துணையாகக் கொண்டான். மற்றவர்களுடன் சேர்ந்து வாழ்வது மனிதரின் இயல்பு. இதனால் அவனிடத்து இன நோக்குண்டானது பழக்க வழக்கங்கள் விருத்தியடைந்தன. ஒரு தலைவனுக்கு அமையவும் முதியோரின் புத்திமதியைக் கேட்கவும் பழகிக்கொண்டான். உணவுக்காகக் காட்டு மிருகங்களை வேட்டையாட வேண்டியிருந்ததால் அவன் இடத்துக்கிடம் மாறி மாறிச் செல்ல வேண்டியதாயிற்று. பின்னர், மிருகங்களை வளர்த்து வாழ்க்கை நடத்தினான். நீர்வளமுள்ள ஆற்றோரங்களிலும் குளக் கரைகளிலும் உணவுப் பயிர்களை உண்டாக்கி நிரந்தரமான வீடமைத்து வாழ்ந்து வந்தான். இவ்வாறு அவனுடைய நாடோடிச் சீவியம் நீங்கி நிலைபெறான கிராம வாழ்க்கை துவங்கிற்று. உலகின் பெரிய நாகரிகங்கள் நதிக்கரைகளிலேதான் தோன்றினவென்பதையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். வேளாண்மையின் பயனாக நிரந்தரமாக வீடமைத்து வாழும் கூட்டுச் சமூக வாழ்க்கை உண்டானது. குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் ஒவ்வொரு தொழிலையுடைய பல்வேறு சமூகங்கள் தோன்றலாயின. கமக்காரர் வயல்களைப் பண்படுத்தி வேளாண்மை செய்தனர். இடையர் மந்தைகளை வளர்த்தார்கள். தச்சரும் கம்மாளரும் தேவையான கலப்பை முதலிய ஆயுதங்களைச் செய்து வந்தனர். குயவர் சட்டி பானை வனைந்தனர். இவ்வாறே ஒவ்வொரு பிரிவினரும் ஒவ்வொரு தொழிலைச் செய்தார்கள். இவர்களுள் வலிமையும் மிகுந்த செல்வாக்குமுள்ள ஒருவர் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டார். இவர் செலுத்திய அதிகாரம் சனங்களின் பழக்க வழக்கங்களுக்கு அனுகூலமாயிருந்தது உதாரணமாக, ஒருவர் ஒரு தொழிலைப் பரம்பரையாகச் செய்துவந்தால் அதை அவர் தொடர்ந்து செய்ய வேண்டுமென்பது தற்காலத்து வழக்கம். ஒரு தொழிலில் ஈடுபட்டவர்கள் தமது நிலைமையை உயர்த்திக்கொள்வதற்காக வேறு தொழிலில் ஈடுபடக்கூடாது. இவ்வாறு வளர்ந்து வந்ததே சாதிக் கட்டுப்பாடாகும். செய்கின்ற தொழில் பற்றியே சாதிக் கட்டுப்பாடு ஏற்பட்டது. சமூகத்திற் பரவிவந்த இந்தப் பழக்கத்துக்கெதி

ராகச் சனங்கள் செல்ல விரும்பாதபடியால் சமூகத் தலைவர் அக் கட்டுப்பாட்டைப் பாதுகாக்க வேண்டியதாயிற்று. சாதிக் கட்டுப் பாட்டினால் உண்டான தீமைகளை அவர்கள் அக்காலத்தில் அறிந்திருக்கவில்லைப்போலும்.

எல்லாருக்கும் பொதுவான ஆசார ஒழுக்க வழக்கங்களை அனு சரித்து ஒரு பிரதேசத்தில் ஒன்றாகக் கூடி வாழும் வாழ்க்கை ஒரு வகையான சமூகஉணர்ச்சியை உண்டாக்கிற்று. இவ்வாறு வாழ்ந் தோர் தமது வீடு, தமது குடும்பம், தமக்கு உணவும் ஒதுக்கிட மும் கொடுக்கும் ஊர்என்றெல்லாம் அபிமானமும், பற்றும் கொள் ளத் துவங்கினர். இந்த உணர்ச்சிதான் தேசாபிமானம் என்ற பற்றுக்கு அத்திவாரம். தனது ஊர், தனது கிராமம் மற்ற ஊர் களிலும் கிராமங்களிலும் பார்க்க விசேஷமானதென்று எண்ணும் எண்ணமே சமூக உணர்ச்சியாகும். இதுதான் நாளடைவில் நாக ரிகம் முதிர முதிர, கிராமாபிமானமாகவும் நகராபிமானமாக வும் தேசாபிமானமாகவும் வளர்ச்சியடைகிறது. மனிதன் தனது சகாக்களோடு ஒத்துழைக்கப் பழகிக் கொண்டான். "ஒன்று பட்டாலுண்டு வாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கின் அனைவர்க்குந் தாழ்வே" என்ற உண்மையை உணர்ந்தான். அயலார்க்கு இத மாகவும் எல்லாரோடும் ஒற்றுமையாகவும் பரஸ்பரம் சகிப்புத் தன்மையுடன் வாழ்வதுதான் நல்வாழ்வென்பதை அனுபவ வாயி லாக அறிந்தான். தனி மரம் தோப்பாகாது.

குறித்த ஒரு பிரதேசத்தில் சமூகமாக வாழ்வதன் பயனாக அங்குள்ள மக்கள் சில பொதுத் தன்மைகளை விருத்தி செய்கிறார் கள். சில பழக்க வழக்கங்களையும், பேச்சு முறைகளையும், நடை, உடை பாவனைகளையும், உணவு முறைகளையும் கைக்கொள்கிறார் கள். இவை நாளடைவில் அவர்களுக்கே விசேஷமானதாகிவிடு கின்றன. ஓரினமாகச் சேர்ந்து வாழ்ந்து பழகுவதால்தான் இந் தப் பயனுண்டாகிறது. இதுவே சமூக வாழ்க்கையாகும். கூட்டு வாழ்வு எங்கே உண்டோ அங்கே சமூகம் உண்டெனலாம். கூட்டு வாழ்க்கை ஒருகிராமத்திலிருக்கலாம், ஒருபட்டினத்திலிருக்கலாம், ஒரு நகரத்திலிருக்கலாம், அல்லது ஒரு தேசத்திலிருக்கலாம். இச் சமூக வாழ்க்கையில் சில பிரத்தியேகமான தன்மைகளைக் காண லாம். அவை வேறெச் சமூக வாழ்க்கையிலும் இல்லாதவை. இவ் வாறு ஒருசமூகம் பெரியதொரு சமூகத்தின் பகுதியாயமையலாம். உதாரணமாக இலங்கைச்சமூகத்தின் ஒருபகுதியே தமிழ்ச்சமூகமா கும். சிங்களச் சாதியில் கொய்கமச் சமூகம் ஒருபகுதியாகும். சமூ கங்களெல்லாம் இப்படியே, ஒன்றைப்பார்க்க மற்றது விசாலமா னதாயிருக்கும். சிறிது பெரியதில் அடங்கியிருக்கும். ஒரு கிராம

மும் ஒரு சமூகமே; அவ்வாறு பல கிராமங்கள் சேர்ந்த சமூகம் ஒரு தேசமென்னும் சமூகமாகும். அப்படிப் பல தேசங்கள் சேர்ந்த சமூகமே உலகமென்ற சமூகமாம்.

*சங்கங்கள் :*

மனிதன் ஒரு சமூகத்தின் அவயவம் ஆவான். அவனுல் தனித்து வாழ முடியாது. சில பொது நன்மைக்கான விஷயங்களை ஒன்றுகூடியே செய்ய வேண்டும். தற்பாதுகாப்புக்காகவோ பொது அபிவிருத்திக்காகவோ மனிதர் தொகுதிகளாகச் சேர்கிருர்கள். ஒன்றுகூடி வாழ வேண்டும். அல்லது ஒருசேர தாழ்வு உண்டு. ஒரு சமூகத்தில் பலவகையான நலவுரிமைகளுக்கிடையே முரண்பாடு உண்டாவது சகசம்; ஏனெனில் அச்சமூகத்தில் தொழிலாளிகள், முதலாளிகள் எனப் பல வகுப்பினர் இருப்பார்கள். ஒவ்வொரு சமூகத்திலும் இம்மாதிரிப்பலவகுப்புகள் உண்டு. தமது நலவுரிமைகளைப் பெறுவதற்குத் தொழிலாளர் சங்கமென ஒரு தாபனம் வேண்டுமென்று, தொழிலாளர் எண்ணலாம். சம்பள உயர்வு வேண்டும் அல்லது தொழில் செய்யும் நேரத்தைக் குறைக்க வேண்டும், தொழிலாளருக்கு இன்சூரன்ஸ் வசதி வேண்டும் என்றின்னோன்ன நோக்கங்களை நிறைவேற்ற விரும்பினுல் ஒரு சங்கத்தை உண்டாக்குகிருர்கள். இச்சங்கத்தில் தொழிலாளரே இடம் பெறுவர். இதற்குத் தொழிலாளர் சங்கமெனப் பெயர் வழங்கப்படும். இவ்வாறே மற்றத் தொழில்களில் ஈடுபடுபவர்களும் தத்தம் தொழில்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தொழிற் சங்கங்களை உண்டாக்குகிருர்கள். முற்காலத்திலிருந்த சாதிப்பாகுபாட்டுக்குப் பதிலாக இக்காலத்திற் தொழிற் பாகுபாடு ஏற்பட்டு விட்டது. முன்னர் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தபடியால், அதற்கேற்ப சாதிப்பாகுபாடுகள் உண்டாகின. இப்பொழுது பல கைத்தொழில் முயற்சிகளுள் உண்டானபடியினுலும் கிராமங்கள் நகரங்களாக மாறி வருகின்றபடியினுலும் இவற்றிற்கேற்ப பல தொழில் வகுப்புகள் உண்டாகி வருகின்றன. எனவே, சனங்கள் தாம் எந்த வகுப்பைச் சேர்ந்திருக்கிருர்களோ அந்த வகுப்பின் நலவுரிமையிலேயே கருத்துடையவர்களாயிருக்கிருர்கள். இவ்வாறு அவர்கள் வகுப்புணர்ச்சியுடையவர்களாய் விளங்குகிருர்கள். இவ்வுணர்ச்சி இன இயல்பூக்கத்திலிருந்தே பிறந்தது அதாவது, ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் சில இன்னல்களை ஒருசேர அனுபவிப்பது போலவே சில சலுகைகளையும் ஒன்ருக அனுபவிப்பார்கள் என்பதே இந்த இன உணர்ச்சியின் அடிப்படையாகும். எனவே, முதலாளிகள் தமது நலவுரிமைகளைப் பாதுகாக்க ஒன்று சேருவார்கள். தொழிலாளிகளும் தொழிலாளர் சங்கமென்ற தாப

னத்தின் கீழ் ஒன்று சேருவர். இவ்வாறு சமூகமாகக் கூடியிருப்போர் தங்கள் தங்கள் இனத்தின் தன்மையைக் கருதிச் சங்கமாகவும் கழகமாகவும் சேர்வார்கள். சேர்ந்து ஒருவர்க்கொருவர் உதவி புரிந்து சமூகமாக வாழ்வர். அப்பொழுது சமூகத்தின் நன்மைக்காகத் தமது சொந்த நலன்களை விட்டுக்கொடுப்பர். ஏனெனில் பொதுநலங் கருதிய சங்கங்களில் சேர்ந்தால்தான் சமூகத்தின் பொது நோக்கம் நிறைவேறும்,

## *சமூகத்துக்கும் சங்கத்துக்குமுள்ள வித்தியாசம் :*

குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தில் பொதுவான பழக்க வழக்கங்களையனுசரித்துப் பொது வாழ்வு வாழும் தனிப்பட்டவர்களின் கூட்டுறவே ஒரு சமூகமாகும். ஒரு சமூகம் அதில் வாழ்வு நடத்தும் எல்லாருடைய சீவியத்தையும் உள்ளடக்கியதாயிருக்கும். அதுவே சமுதாய வாழ்க்கைக்குச் சீவநாடிபோன்றது. சமூகத்தின் இலட்சியம் விரிவானது. ஆனல், சங்கமோ குறுகிய ஒரு இலட்சியத்தை நோக்கமாகக்கொண்டது. சங்கமானது சமூகத்தின் முழு வாழ்க்கையையும் உள்ளடக்கியதன்று. அது தற்காலிகமானதாய் அல்லது நிரந்தரமானதாய் இருக்கலாம். என்ன நோக்கத்தைக் கொண்டு சங்கம் ஏற்பட்டதோ அந்த நோக்கத்தை நிறைவேற்ற அதன் அங்கத்தவர்கள் உழைப்பார்கள். இந்த உழைப்பில் அங்கத்தவர் எல்லாரும் பங்குபற்றக்கூடும். அல்லது சிலர் பங்குபற்றக் கூடும். ஒரு சமூகத்துக்கு உயிர் கொடுப்பதும் அதற்கு உற்சாகமூட்டுவதும் இவ்வாறன சங்கங்களே. அரசியல், பொருளாதாரம், சமயம், கல்வி, தொழில் முறைகள் என்ற இன்னேரன்ன விஷயங்கள் சம்பந்தமான பல சங்கங்கள் ஒரு சமூகத்திலிருக்கலாம். உதாரணமாக, பிரித்தானியாவிலுள்ள தொழிற் கட்சியின் நோக்கம் பொது நல இராச்சியத்தை உருவாக்குவதே. இலங்கை வர்த்தகர் சங்கம் போன்ற ஒரு பொருளாதார சங்கத்தின் நோக்கம் இலங்கை வர்த்தகர்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதே. நியாயதுரந்தரர் சங்கம் நியாயதுரந்தரரின் நன்மை கருதி உழைப்பதேயாகும். இச் சங்கங்களில் அங்கத்தவர்கள் தாமாகவே சேர்வார்கள். இதுவே இச்சங்கங்களிலுள்ள ஒரு பொது அம்சமாகும். இச்சங்கங்கள் தமது நிர்வாகத்துக்கான சட்டங்களையும் விதிகளையும் உடையன. சட்டங்களை மீறும் ஒரு அங்கத்தவருக்குக் கிடைக்கக்கூடிய மிகக் கூடுதலான தண்டனை சங்கந்திலிருந்து நீக்கப்படுதலாகும். இச் சங்கங்களிற் சில ஒரு சமுதாயத்துக்குப் பலன் தரக்கூடிய வேலைகளில் ஈடுபட்டால் அரசாங்கம் பொருளுதவி செய்து அவற்றை உற்சாகப்படுத்துவதுமுண்டு. சில சமயம் அவ்விதமான சங்கங்களை அரசாங்கம் தானகவே எடுத்து நடத்துவதுமுண்டு. இதனல் அச்

சங்கங்கள் நிரந்தரமாகவும் திறமையாகவும் சேவை செய்யக்கூடியதாயிருக்கும். ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களின் தனிப் பண்புகளை வளர்க்கவும் அச்சமுதாயத்தின் நலத்தை அபிவிருத்தி செய்யவும் ஏற்பட்ட சாதனங்களே சங்கங்களாகும்.

ஒரு சமுதாய வாழ்வின் நோக்கங்களை விளக்குவன இச்சங்கங்களாகும். குறித்த ஒரு பிரதேசத்திற்குட்பட்ட சமூக வாழ்வின் முழு அம்சங்களையும் அடக்கியிருப்பதால் ஒரு சமுதாயமானது எல்லா அம்சங்களையும் உள்ளடக்கிய முழுத் தன்மையுடையதாகும். ஆனால், ஒரு சங்கமோ குறிப்பிட்ட சில குறுகிய நோக்கங்களையும் நலன்களையும் அடைந்துகொள்வதற்காகவே ஏற்பட்ட ஒருதலையான தாபனமாகும். எனவே முதல்தோன்றியது சமுதாயம். அச்சமுதாயத்தில் தோன்றியதே சங்கமெனலாம். ஒரு சமுதாயம் குறிப்பிட்ட ஒரு தேசத்தில் வாழும் மக்களையே குறிக்கும். ஒரு சங்கத்திற்கு இத்தகைய எல்லை அல்லது கட்டுப்பாடு கிடையாது. சங்கங்கள் பல சமூகங்களிலுமுள்ளவர்களை அங்கத்தவர்களாகக் கொள்ளலாம். மேலும், அவை ஒரு தேசத்திற்குட்பட வேண்டிய அவசியமுமில்லை. பல தேசத்தவர்களும் ஒரு சங்கத்தின் அங்கத்தவர்களாகலாம். ஒரு சங்கத்தின் அங்கத்தவர்கள் எந்தத் தேசத்தைச் சேர்ந்தவர்களாகவுமிருக்கலாம். அவர்கள் எந்தச் சமூகத்தவராகவுமிருக்கலாம். உலகின் பல தேசத்து மக்களையும் அங்கத்தவராகக் கொண்ட ஒரு சங்கத்துக்குச் சிறந்த உதாரணமாயமைந்துள்ளது கத்தோலிக்க திருச்சபையாகும். இச்சங்கத்தின் தலைமைக் காரியாலயம் உரோமாபுரியில் உண்டு. இதன் கிளைத் தாபனங்கள் உலகின் பல தேசங்களிலும் காணப்படுகின்றன. இச்சங்கத்தில் பல சமூகத்தைச் சேர்ந்தவர்களும் அங்கத்தவராயிருக்கிறார்கள். உரோமாபுரியில் இதன் காரியாலயமிருப்பதால் இச்சங்கத்தில் இத்தாலியர் மாத்திரமே அங்கத்தவராயிருக்கலாமென எண்ணக்கூடாது.

### சங்கங்களின் வேலை :

சங்கங்களிற் சேர விரும்புவோர் தங்களிஷ்டப்படியே சேரலாம். எவராவது ஒருவரை நிர்ப்பந்தப் படுத்துவது கிடையாது. ஒரு சமூகத்திலுள்ளவர்களை நிர்ப்பந்தப்படுத்தி எவரும் ஒரு சங்கத்தில் சேர்த்துக்கொள்வதில்லை. ஒரு சங்கத்தின் நோக்கங்கள் உயர்ந்தனவாகவும் கவர்ச்சியுள்ளனவாகவுமிருந்தால் அதில் சேர்வது நன்மையெனக் கருதுவோர் அவ்வாறு சேரலாம். சேர்ந்தால் அச்சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கமைந்து அதன் நோக்கங்களை வளர்க்கத் துணைபுரிவது அங்கத்தவர் கடமையாகும். சங்கத்தில் சேர்வதால் ஒருவன் அதன் நியமங்கட்குட்பட்டு ஒழுகும் பயிற்சியுண்டாகிறது. ஒருவரும் நிர்ப்பந்தப்படுத்தாமல்

தானுகவே சங்கத்தின் விதிகளுக்கமைந்து நடக்க முயல்கிருன். தன் சொந்த ஆராய்ச்சியின் பயனுக அவன் இவ்விதிகளை மனப் பூர்வமாக ஏற்றுக்கொள்கிருன். சங்கம் தனது நோக்கங்களை நிறைவேற்றவில்லையெனக் கண்டால் உடனே அதினின்றும் விலகுவதற்கு அவனுக்கு உரிமையுண்டு. அல்லாவிட்டால் சங்கஉத்தியோகத்தர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து பல அங்கத்தவரின் ஆதரவைப்பெற்று அதை நிறைவேற்றி விடலாம். அவ்வாறு தீவிரமான ஒரு நடவடிக்கையை எடுக்க விரும்பாவிட்டால், சங்கத்தில் கருமங்கள் நடைபெறும் முறை சரியில்லையென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றலாம். அதற்கென ஒரு விசேட கூட்டத்தைக் கூட்டுமாறு செயலாளியைக் கேட்கலாம். அக்கூட்டத்தில் தனது கொள்கைகளைத் தாராளமாக மனந்திறந்து பேசலாம். அதற்குச் சார்பாயுள்ள ஏனையோரும் ஒருவித தடையுமின்றித் தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்கலாம். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் தமது அபிப்பிராயங்களை முறைப்படி தெரிவிக்கலாம். சங்க உத்தியோகத்தர்கள் தமது நியாயங்களை எடுத்துக் காட்டித் தாம் நடந்துகொண்ட முறை சரியென்பதை நிரூபிக்கலாம். விரும்பினேர் தமது கருத்தை எடுத்துக் கூறியபின் விஷயம் வாக்குக்கு விடப்படும். வாக்கெடுப்பு வெளி வெளியாகவும் நடத்தலாம். இரகசியமாகவும் நடத்தலாம். வாக்கெடுப்பில் எந்தக் கட்சிக்கு அதிகமான வாக்குக் கிடைத்ததோ அந்தக் கட்சியின் நியாயமே வெற்றி பெற்றதாகக் கருதப்படும். உத்தியோகத்தருக்கு எதிராகத் தீர்ப்புக் கொடுக்கப்பட்டால் அவர்கள் ஒன்றில் தமது பதவிகளைவிட்டு விலகிவிட வேண்டும். அல்லது பெரும்பான்மையோர் விரும்பிய பிரகாரம் கருமங்களை மாற்றிக் கொள்ள வேண்டும். உத்தியோகத்தர் தாம் செய்தது சரியென நினைப்பார்களேயானுல் தமது பதவியை விட்டு விலக வேண்டும். அவர்களுக்குப் பதிலாக வேறு உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படுவார்கள். இவர்கள் பெரும்பான்மையோரின் தீர்ப்புக்கு ஏற்றவாறு கருமங்களைச் செய்வார்கள். ஆனுல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த அங்கத்தவருக்குப் பெரும்பான்மையான ஆதரவு கிடையாவிட்டால் அவருடைய பிரேரணை தோல்வியடையும். உடனே இவர் ஒன்றில் சங்கத்திலிருந்து விலகிக் கொள்ளலாம்; அல்லது தனக்குப் பெரும்பான்மையோர் ஆதரவு கிடைக்கும்வரையும் அங்கத்தவராகவிருக்கலாம். இவர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் பயனுக சங்க உத்தியோகத்தர்கள் தாம் செய்யும் கருமங்களில் மிகவும் கவனமாயிருக்க முற்படுவார்கள். சங்கம் தமக்கு ஆதரவாயிருக்கும் அங்கத்தவர்களைப் பகைக்காமலும் எதிர்க்கட்சியிலுள்ளவர்களின் மனதைப் புண்படுத்தாமலும் பார்த்துக்கொள்ளும். சங்கஅங்கத்தவர்களின் நல்லெண்ணத்தைப்

பெறுவதற்காக அதன் நோக்கங்களை நிறைவேற்றிவைக்கும். தோல்வியுற்ற சிறுபான்மைக் கட்சியினர் மனம் மடிந்து போவார்களானல் அச்சங்கத்தை விட்டு வெளியேறி வேறு சங்கத்தைத் தாபிக்கவும் முயலக்கூடும். இதனுல் பெரும்பான்மைக் கட்சியினர் சிறுபான்மைக் கட்சியாரோடு ஒத்துழைத்து அவர்களுடைய நல்லெண்ணத்தைப் பெறவும் முயலுவர். இதற்காக எல்லா விஷயங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசித்துக்கொள்வர்.

குடிசனங்களாயுள்ளவர்கள் எவ்வாறு ஒழுகவேண்டுமென்பதைப்பற்றி நல்ல தேர்ச்சியை அங்கத்தவர்களுக்குக் கொடுப்பன இச்சங்கங்களேயாம். சங்க அங்கத்தவர்கள் சில இயம நியமங்களைக் கைக்கொள்ள வேண்டும். சங்கத்தின் சட்ட திட்டங்களை அனுசரித்தால்தான், அவர்கள் அங்கத்தவர்களாயிருக்க முடியும். சங்க நோக்கங்களை நிறைவேற்ற மற்ற அங்கத்தவர்களோடு அவர்கள் ஒத்துழைக்கவேண்டும். அபிப்பிராய பேதமிருந்தால் ஒன்றில் சங்கத்தை விட்டு நீங்கலாம். அல்லது மற்ற அங்கத்தவர்களையும் தங்கள் கொள்கைகளுக்கு இசையச் செய்யலாம். இவையெல்லாம் ஒழுங்கு முறைப்படி நடைபெறவேண்டும். மற்றவர்களைப் பயமுறுத்தியோ பலாத்காரத்தைப்பிரயோகித்தோ ஆதரவு தேடிக்கொள்ளக்கூடாது. குறை நிறைகளை விவாதிப்பதற்கு ஒழுங்கு செய்யப்படும் கூட்டத்தில் விஷயங்கள் சச்சரவின்றி விவாதிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படவேண்டும். பெரும்பான்மையோர் ஒரு தீர்மானத்துக்கு ஆதரவளித்தால் நிருவாக உத்தியோகத்தர்கள் அத்தீர்மானத்தை ஒன்றில் நிறைவேற்ற வேண்டும். அல்லது தாம் பதவியிலிருந்து நீங்கவேண்டும். நயமாகப் பேசி இசையச் செய்தல், விவாதித்தல், சட்டபூர்வமாகக் கருமங்களை நடத்துதல், பெரும்பான்மையோர் முடிவுக்கு அடங்கி நடத்தல், சிறுபான்மையோர் பேச்சுக்குச் செவிசாய்த்தல், சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் எல்லாரோடும் எப்பொழுதும் ஒத்துழைத்தல் இவைதாம் சங்கங்கள் ஒருசமூகத்திலுள்ள மக்களுக்குக் கற்பிக்கும் சனநாயக முறையில் அமைந்த அரசியல் ஒழுக்கங்களாகும். இவையே ஒரு சமூகத்திலுள்ள ஒரு சங்கத்தினுல் உண்டாகும் முக்கியமான பயன்களாகும்.

### அரசாங்கம் என்னும் சங்கம் :

ஒரு சமூகத்திற் பல சங்கங்கள் இருக்கலாம். அவை ஒன்ருேடொன்று முரண்படலாம். கொள்கையிலும் நோக்கங்களிலும் வித்தியாசப்படலாம். ஒரு சங்கத்துக்கு மாருக இன்னெரு சங்கம் நிறுவப்படலாம். இத்தகைய முரண்பாட்டினுல் நாட்டிற் குழப்ப

மேற்பட்டு சண்டையுண்டாகலாம். சில சங்கங்கள் சமூகத்துக் கொவ்வாத சில கருமங்களில் ஈடுபடலாம். அரசாங்கத்தால் தடுக்கப்பட்ட அபின், கஞ்சா முதலிய பொருள்களைச் சில கள்ள வியாபாரிகள் சமூகத்தின் சுகாதாரத்தைத் துச்சமென மதித்து வியாபாரஞ் செய்து பெரும் பொருள் சேகரிப்பார்கள். இதைத் தடுப்பதற்கு ஒரு சாதனம் வேண்டும். முரண்பட்ட சங்கங்கள் ஒன்றோடொன்று சண்டை புரியாமற் தடுத்து சமூகத்திற் சமாதானத்தை நிலவச் செய்வதற்கும் அதிகாரமுள்ள, ஒரு சாதனம் வேண்டும். எனவே, சமூகத்தில் ஒழுங்கை நிலைநாட்டவும் சங்கங்களுக்கிடையே நல்ல தொடர்பு உண்டாக்கவும் சங்கங்கள் எல்லாவற்றுக்கும் மேலானதொரு சங்கம் வேண்டும். அரசாங்கமென்பது இவ்வாறான ஒரு சங்கமே. எல்லாருக்கும் பொதுவான குறித்த ஒரு நோக்கத்தை நிறைவேற்றக் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்திலுள்ள ஒரு சமூகத்தைச் சேர்ந்த மக்களால் உண்டாக்கப்பட்ட ஒரு சங்கமே அரசாங்கம். சமூகத்தில் காணப்படும் பலவேறு சங்கங்களின் முயற்சிகளையும் தொடர்புபடுத்துவதே குறித்த நோக்கமாகும். எனவே, அரசாங்கம் சமூகத்தின் பல்வேறு அமிசங்களையும் பரிபாலிக்கும் காரியாதிகாரியாகும். ஒரு சமூகத்தில் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலவச் செய்ய வேண்டுமென்று நினைக்கும் அச்சமுதாயத்தின் திடசங்கற்பமே அரசாங்கமென்ற சாதனம். அரசாங்கம் சமூகத்தின் சிரேட்ட மேற்பார்வையாளரெனலாம்.

எனவே, அரசாங்கம் ஒரு சமூகத்தின் ஒப்பற்ற சங்கம். அச்சமூகத்திலுள்ள மற்றெல்லாச் சங்கங்களினது முயற்சிகளையுந் தொடர்பு படுத்துவது அரசாங்கமே. சங்கங்களுக்கு நோக்கங்களிருப்பது போலவே அரசாங்கத்துக்கும் நோக்கங்களுண்டு. எல்லார்க்கும் நீதி வழங்குவதும் சமூகத்தில் ஒழுங்கையும், சட்டத்தையும் நிலைநாட்டுவதும் இதன் நோக்கங்களாகும். சங்கங்களில் அங்கத்தவர் இருப்பது போல அரசாங்கமென்னும் சங்கத்திலும் அங்கத்தவரிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் தாம் விரும்பியபடி அங்கத்துவம் வகியாது கட்டாயத்தின் பேரிலேயே அங்கத்துவம் வகிக்கிறார்கள். ஒரு சமூகத்திலுள்ள குடிகளெல்லாரும் அந்த அரசாங்கத்தின் பிரசைகளாவர். ஒரு சங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு அங்கத்தவரமைந்து நடக்காவிட்டால் அவர் அச்சங்கத்திலிருந்து வெளியேற்றப்படுவார். ஆனால் அரசாங்கத்தின் சட்ட திட்டங்களுக்கு அமையாவிட்டால் தண்டனைகள் விதிக்கப்படும். ஒருவர் பல சங்கங்களில் அங்கத்தவராகச் சேரலாம். ஆனால் ஒரு அரசாங்கத்தின் பிரசையாகவே யிருக்க வேண்டும். சங்கங்களில் நிருவாகச் சாதனங்களிருப்பது போலவே அரசாங்கத்திலும் சட்டமியற்றவும் அவற்றைநடைமுறையிற் கொண்டுவரவும்

நிர்வாகம் நடத்தவும் பல அரசாங்க தாபனங்களும் நிர்வாக இயந்திரங்களும் உண்டு. பாராளுமன்றம், நீதிமன்றம், அரசாங்க சேவைகள் என்பன இத்தகைய சாதனங்களாகும். இவையே அரசாங்கத்தின் உயிராகும்.

தனது சட்ட திட்டங்களுக்கு அமைந்து நடக்குமாறு சமூகத்தவர்களை நிர்ப்பந்தப்படுத்தும் சட்டபூர்வமான உரிமை அரசாங்கத்துக்கே பிரத்தியேகமாக இருப்பதால், அது மற்றச் சங்கங்களைப் போலன்றி மூலாதாரமான சங்கமாகும். சுயேச்சைச் சங்கங்களின் சட்டங்களை மீறுவோர்க்கு விதிக்கப்படும் மிகக் கூடுதலான தண்டனை சங்கத்திலிருந்து நீக்கப்படுதலே. ஆனல் அரசாங்கம் என்ற சங்கம் அதன் சட்டங்களை மீறுவோர்க்கு அபராதம், சிறை முதலிய தண்டனைகளை விதிக்க உரிமை பெற்றிருக்கிறது. இவ்வுரிமை அரசாங்கத்துக்கு எவ்வாறு உண்டானது? சங்கங்களின் பிணக்குகளைத் தீர்க்கும் நடுவராக இருப்பதனல், அரசாங்கத்துக்கு அந்த உரிமையுண்டு. இவ்வுரிமையைச் சமூகம் அதற்கு வழங்கியிருக்கிறது. சமூகத்தின் அதிமேற்பார்வையாளரென்ற முறையில் மக்களைக் கட்டாயப்படுத்தும் அதிகாரம் அரசாங்கத்திற்கு அவசியம். இக்காரணத்தினல் தான் அரசாங்கமென்பது ஒரு குறித்த பிரதேசத்தைத் தன் ஆணைக்குள் அடக்கியிருக்கிறது. அதில் வாழும் மக்களும் அந்த அரசாங்கத்துக்கு மாத்திரமே கட்டுப்பட்டவர்களாக இருக்கிருர்கள். இவ்வாறு சட்டபூர்வமான அதிகாரத்தைக் கைக்கொண்டு பிரசைகளை நிர்ப்பந்தப்படுத்தித் தண்டம் வழங்குவது மாத்திரமே ஒரு அரசாங்கத்தின் முக்கிய கடமையென்று எண்ணிவிடக்கூடாது. அரசாங்கமானது வேறு சங்கங்களை உண்டாக்கவோ நடைமுறையிலிருந்து வரும் சங்கங்களின் நிர்வாகத்தில் தலையிடவோ, அவற்றின் நோக்கங்களையும் இலட்சியங்களையும் உருவாக்கவோ தனது அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது. ஆனல், சனங்களின் நல்லொழுக்கத்தைக் கெடுக்கவும், குற்றச்செயல்களைத் தூண்டவும் துணையாயுள்ள சங்கங்களைக் கலைக்கவும் தடுக்கவும் அரசாங்கத்துக்கு அதிகாரமுண்டு. சமூகங்களிடையே சமாதானத்தை நிலைநாட்டவும், சனங்களுக்கு நீதி வழங்கவும் தனது அதிகாரத்தை அரசாங்கம் பயன்படுத்தலாமேயொழிய அதற்குமேல் எவ்வாற்ருலும் அவ்வதிகாரத்தைப் பிரயோகிக்கக்கூடாது. ஒரு சமூகத்தில் வாழும் மக்களின் நல்லுறவை நிலைநாட்டுவதே அரசாங்கத்தின் கடமையாதலால் சாதாரண சங்கங்களுக்கும் அரசாங்கத்துக்குமுள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ளலாம். சமூகமென்ற கோபுரத்தின் முடி அரசாங்கம் என்று வெகு அழகாகக் கூறப்பட்டிருக்கிறது. இக்காரணத்தால் அரசாங்

கத்துக்குச் சில பிரத்தியேகமான அதிகாரங்கள் இருந்த போதிலும் அவற்றைப் பிரயோகிக்கும் விஷயத்தில் அதன் கடமைகளை முன்னிட்டு அவை கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன.

## தாபனங்கள் :

ஒரு சமூகமென்பது பல சங்கங்களைக் கொண்டது. இவற்றை ஒன்றோடொன்று தொடர்பு படுத்தி ஒழுங்காக்க, மேற்பார்வை செய்ய அமைந்ததே அரசாங்கமென்னும் சங்கம். ஒரு சங்கமானது சில நோக்கங்களை நிறைவேற்ற ஏற்பட்டதென மேலே கூறினோம். இதற்குச் சட்ட திட்டங்களும் நிர்வாக சாதனமும் வேண்டும். இவை ஒரு சங்கத்திற்கு உயிரெனலாம். உதாரணமாக, ஒரு சமய சங்கமான ஆங்கிலத் திருச்சபையை எடுத்துக் கொள்ளுவோம். இதைச் சேர்ந்த பல திருச்சபைகள் நாட்டின் பல பாகங்களிலும் உண்டு. அங்கே அதன் அங்கத்தவர்கள் பிரார்த்தனை செய்யவோ கலந்து உரையாடவோ வந்து கூடுவார்கள். இவ்வாறே அரசாங்கமும் பாராளுமன்றம், நீதிமன்றம், நிர்வாகப் பகுதிகள் எனப் பல தாபனங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒரு தாபனம் நீண்ட காலம் நிலவவேண்டுமானால், இரண்டு பண்புகளைக் கொண்டிருக்கவேண்டும். ஒன்று சமூகத்தைச் சேர்ந்த மக்கள் அந்தத் தாபனம் பயனுடையதெனவும் அதனைப் பரிபாலிப்பது அவசியமெனவும் ஒப்புக்கொள்ளவேண்டும். மற்றது, அது ஓரளவுக்கு நிரந்தரமானதாயுமிருக்கவேண்டும். சமூகத்துக்கு நன்மை பயப்பதாகவிருந்தால் அதுவே அந்தத் தாபனம் அழியாதிருப்பதற்கு ஒரு காரணமாகும். ஒரு சமூகத்திலே வறுமை குடிகொண்டிருப்பதானால் அது சமூகத்தின் ஒரு தாபனமென்று கூறுவது தவறு. ஏனெனில் அவ்வறுமையை சமூகத்தவர் வேண்டுமென்று பரிபாலித்துப்பெறவில்லை. தாபனங்கள் சமூகத்தின் இயந்திரங்களென்று கூறலாம். அவற்றின்வாழ்வு சமூகத்தினாலேயே நிச்சயிக்கப்படுகிறது. ஒரு தாபனம் அவசியமென்று சமூகம் கருதினால் அத்தாபனம் நீண்டகாலம் நிலைத்திருக்கும். அவசியமில்லையென்றுகருதினால் அதுஅழிந்துவிடும். நிரந்தரமாக ஒரு தாபனமும் நிலை நிற்க முடியாது. சிலதாபனங்களினால் பயனில்லையென்று கண்டதும் சமூகம் அல்லது சங்கம் அவற்றை ஒன்றில் நிலைமைக்கேற்றவாறு திருத்தியமைக்கும். அல்லது முற்றாக ஒழித்துவிட்டு அவற்றுக்குப் பதிலாக வேறுபுதிய தாபனங்களை அமைக்கும். உதாரணமாகப் பழங்காலத்தில் நிலங்களை மனிதர் சொந்தமாக்கி அவற்றைப் பண்படுத்தி வேளாண்மை செய்து தமக்கும் தமது குடும்பத்தவர்க்கும் பயனுண்டாக்கி வாழ்ந்தார்கள் அதனால் செல்வத்தையும் உண்டாக்கினார்கள். ஆனால், இக்காலத்தில் தனிமனிதனுக்குப் பெருவாரியான நிலம் சொந்தமாக வந்தபடியால் அவன் வீட்டிலே

இருந்து கொண்டு தனது நிலங்களைக் குத்தகைக்குக் கொடுத்து குத்தகைக்காரரிடம் மிதமிஞ்சிய பணத்தைப் பெறுகிறுன். இந்த முறை பொருத்த மற்றதாகச் சமூகங் கண்டபடியால், நிலச் சொந்தக்காரரின் உரிமைகளை அரசாங்கத்தின் மூலம் கட்டுப் படுத்திற்று. தாபனங்கள் எவ்வளவுக்குச் சமூகத்துக்குப் பயனு டையனவோ அவ்வளவுக்கு அவை நிலை நிற்கும். இல்லாவிட் டால் எந்தச் சமூகம் அவற்றை உருவாக்கி நிலைபெறச் செய் ததோ அதே சமூகம் அவற்றை ஒன்றில் திருத்தியமைக்கும், அல் லது ஒழித்துவிடும். அரசாங்கமும் குடிகளின் நன்மையைக் கரு திச் சில தாபனங்களைப் பரிபாலனம் செய்துவருகிறது. சட் டத்துக்கு மாருக நடப்போரையும் சமூகத்தின் சமாதானத்தைக் குலைப்போரையும் கண்டிப்பதற்கும் சமூகத்தில் ஒழுங்கையும் சமா தானத்தையும் நிலை நிறுத்தவும் நீதிபரிபாலனத்தை நீதிமன்றங் கள் மூலம் நடத்துகிறது. இவ்வாறு தண்டிக்கப்படுபவர்களைத் திருத்தி அவர்களை நல்ல பிரசைகளாகச் செய்வதற்குச் சிறைச் சாலைகளையமைத்திருக்கிறது. குற்றங்களைத் தடுக்கவும் கலகங்களை நிறுத்தவும் சமாதானத்தை நிலைநாட்டவும் பொலிஸ் தாப னத்தை நிறுவியிருக்கிறது. மேலும், பொது நன்மை யைக் கருதிப் பல அரசாங்கப்பகுதிகள் வேலை செய்கின்றன. சமூக சேவைப் பகுதியார் தேசத்து மக்களின் கஷ்டங்களை நீக் கத் துணைபுரிகின்றனர். வைத்திய, சுகாதாரப்பகுதியார் தொற்று நோய்கள் பரவாது தடுக்கவும், குடிகளின் சுகாதாரத்தைக் கவ னிக்கவும் முயன்று வருகிருர்கள். கல்விப் பகுதியார் கல்வியைப் பரப்பி வருகிருர்கள் கூட்டுறவுப் பகுதியார் நாட்டின் பொரு ளாதார வாழ்க்கையில் கூட்டுறவு எவ்வளவு அவசிய மென்ப தைப் பிரசாரம் செய்துவருகிருர்கள். உணவு உற்பத்தி விஷயத் தில் சமூகத்தவர் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருட் களைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய முறையில் விவசாயப் பகுதியார் முயன்றுவருகிருர்கள். மேல் வரும் அத்தி யாயங்களில் இத்தாபனங்களைப்பற்றி விரிவாக ஆராய்வாம்.

## நான்காம் அத்தியாயம்

# சட்டமும் ஒழுங்கும்

### கீழ்ப்படிதலுக்குக் காரணங்கள் :

ஒரு குறித்த சமுதாயத்தில் சங்கங்கள், தாபனங்கள் ஆகியவற்றின் சட்டத்தை (சட்டக் கட்டை) சீரான நிலைமையில் வைத்திருக்கும் சாதனம் அரசாங்கமென்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்காக அரசாங்கம் பல தாபனங்களைப் பரிபாலித்து வருகிறது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நிறுத்துதல் சம்பந்தமானவை ஒருசில ; மக்கள் சிறந்த முறையில் வாழ்க்கை நடத்துவதற்கு அத்தியாவசியமான உணவு, பாதுகாப்பு, மற்றும் வசதிகள் ஆகியவற்றை அளிப்பதில் ஈடுபடுவன மற்றுஞ் சில.

பொலிஸ்படை, நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் என்னும் சாதனங்கள் மூலமே சட்டத்தையும் ஒழுங்கையும் அரசாங்கம் நிலை நாட்டுகின்றது. சுயநலங்கருதியோ சமுதாயத்தின் நலனுக்குகந்ததென உண்மையாக உணர்ந்தோ ஒரு குறித்த சமுதாயத்தைச் சேர்ந்த தனிப்பட்டவர்களில் ஒருசிறு தொகையினர் எப்பொழுதாயினும் சட்டத்தைப் பொருட்படுத்தாமல் அல்லது வழக்கங்களை மீறி நடக்க முற்படுவார்களாயின் அவர்களைக் கட்டுப்படுத்துவதே இத்தாபனங்களின் கடமையாகும். குற்றம் புரியுந்தன்மையுடையவர்களே முதலாவது வகுப்பைச் சேர்ந்தவர்களாவர். சமூக சீர்திருத்த வாதிகள், கலகக்காரர் அல்லது புரட்சிக்காரர் இரண்டாவது வகுப்பில் இடம் பெறுவர். இவர்கள் தங்கள் கருத்திற்கேற்ப சமுதாயத்தைச் சீர்திருத்தும் நோக்கத்துடன் சமூகத் தரங்களை மாற்ற விரும்பலாம்.

ஆயினும். ஒரு குறித்த சமுதாயத்தில் பெரும்பான்மையோர் தங்கள் நாளாந்தக் கடமையை அமைதியாகவும் ஒழுங்காகவும் கவனிப்பர். சட்டம் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி இவர்களுக்குக் கவலையே கிடையாது. ஆனல், சமூக சீர்திருத்தவாதி அல்லது கலகக்காரன் சட்டமிருக்கிறதென்பதை உணருகிறுன். மிக்க சீர்திருத்தமுள்ள சமூகங்களிற் கூட சிறுபான்மையான குற்றவாளிகளையும் சிறைவாசத்தை அடிக்கடி நாடுவோரையும் எப்பொழுதும் காணலாம். இவர்களிடம் காணப்படும் சட்ட மறுப்பு மனப்பான்மை மேற்கூறிய பெரும்பான்மையினரிடம் கிடையாது. அவர்கள் கீழ்ப்படிவதற்குக் காரணம் தாம் தண்டனைக்காளாக நேரிடுமென்னும் அச்சம் மட்டுமல்ல, மற்றும் பலசமூக அமிசங்களே

அவர்களை நல்வழிப்படுத்துகின்றன. ஒரு சமுதாயத்தில் பெரும் பான்மையினரைக் கீழ்ப்படியச் செய்யும் அமிசங்கள் என்ன வென்று ஆராய்வது ஆர்வமூட்டும் விஷயமாகும்.

பெரும்பான்மையான பொதுசனங்கள் சட்டத்திற்குக் கீழ்ப் படிவது அடக்கம், தண்டனைக்குப் பயப்படுவதாலல்லவென்றும், அவர்கள் அவ்விதம் நடத்தற்குக் காரணமான பல்வேறு சமூக அமிசங்கள் உண்டென்றும் முந்திய பந்தியிற் கூறப்பட்டுள்ளது. சில சட்டங்களை மீறுவதால் தமக்கோ சமுதாயத்தைச் சேர்ந்த மற்றெவருக்குமோ பாதக மேற்படப்போவதில்லையென்று ஒரு வர் உணருவாராயின் அவர் அத்தகைய சட்டங்களுக்கமைந்தொழு காதிருக்கக்கூடுமென்பது உண்மையே. உதாரணமாகச் சட்டத்தை விழிப்புடன் அமுல்நடத்தாத பட்சத்தில் ஒருவர் இரவில் வீதி வழியே துவிச்சக்கர வண்டியிற் சவாரி செய்யும்பொழுது ஒரு விளக்குடன் செல்ல வேண்டுமென்னும் விதியை அனுசரிக்காதிருக் கக்கூடும். குதிரைப் பந்தயம் நடைபெறும் நாட்களில் பாதை யோரத்திலுள்ள பந்தயக் கடைக்கும் அவர் போகக்கூடும். ஏனெ னில், சட்டத்திற்கு முரண்பாடாகப் பணயம் வைத்தல் சட்ட விரோதமாயிருந்தபோதிலும், அதனால் சமூகத்துக்கு ஒருவித தீமை யும் உண்டாகமாட்டாதென அவர் எண்ணக்கூடும். சட்டத்தைக் குடிமக்கள் அனுசரிக்கும் விஷயத்தில் அரசாங்கம் வலுக்கட்டாயம் பண்ணும் தன்மையுண்டு. இங்கே கூறப்பட்ட இரண்டு உதாரணங் களிலும் அந்த வலுக்கட்டாயத்தின் பிரகாரமே மக்கள் சட் டத்தை அனுசரிக்கிறார்களென்பது எடுத்துக் காட்டப்பட்டது. குற்றவாளிகள்கூடச் சட்டத்தை அனுசரிப்பது அரச கட்டளைக்குப் பயந்தே என்பது தெளிவாகும்.

ஆனால் சமூகத்திலுள்ள பெரும்பாலார் தண்டனைக்குப் பயந்து தான் சட்டத்துக்கடங்கி நடக்கிறார்களென்று சொல்வதற்கில்லை சமூகத்திலுள்ள மற்றவர்களின் நன்மையைக் கருதியும், பொதுசன அபிப்பிராயத்துக்கு அஞ்சியுமே அவர்கள் சட்டத்திற்குட்பட்டு நடக்கின்றனர். சிறைக்குச் சென்று திரும்புவதிலும் பார்க்க இவன் களவாடி அடிக்கடி சிறைசென்று வரும் சிறைப்பெருச்சாளி என்று சனங்கள் சொல்லுவதையே பெரிய அவமானமாக ஒருவன் கருது வான். அன்றியும், சட்டம் நியாயமானது. அது உயர்ந்தவர்களால் செய்யப்பட்டது. அதற்கு நாம் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று நினைத்துச்சட்டத்திற்கு அடங்கிநடப்பவர்களுமுண்டு. வேறு சிலர் பழக்கத்தினால் சட்டத்துக்கடங்கி நடக்கிறார்கள். நமது முன் னோர்கள் அனுசரித்து வந்த சட்டம், நமது அயலிலுள்ளவர்கள் அனுசரிக்கும் சட்டம். அதற்கு நாமும் அடங்கி நடக்க வேண்டும்

என்று எண்ணி அவர்கள் அதற்கு அடங்கி நடக்கின்றனர். சட்டம் சரியோ பிழையோ என்பதை அவர்கள் ஆராய்ச்சி செய்வதில்லை. சில சட்டங்கள் மக்களுக்கு நன்மையை வழங்குவதற்காகவேயன்றி தண்டனை வழங்குவதற்காக இயற்றப்படவில்லை. உதாரணமாக, ஒரு குழந்தையைக் குறித்த ஒரு வயதில் பாடசாலைக்கு அனுப்ப வேண்டுமென்ற சட்டம் அத்தகையது. தொற்றுநோய் முதலிய தீமைகளிலிருந்து சனங்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காகப் பால் கட்டிக்கொள்ளவேண்டும். உடம்பில் ஊசியால் மருந்தேற்றிக்கொள்ளவேண்டும் என்பன போன்ற சட்டங்கள் சனங்களின் நன்மையை உத்தேசித்தே செய்யப்பட்டன. தங்கள் நன்மையைக் கருதியே அச்சட்டங்கள் செய்யப்பட்டன என்பதனால்தான் சனங்கள் அவற்றை அனுசரிக்கிறார்களே தவிர தண்டனைக்குப் பயந்து அவற்றை அனுசரிக்கவில்லை. சமூக வாழ்வு பலதிறப்பட்ட அமிசங்களையடக்கியிருப்பதால் சட்டத்துக்கு அமையவேண்டியது அவசியமாகிறது. அரசின் கட்டளையென்றோ அது நிர்ப்பந்தப்படுத்துமென்றோ எண்ணிச் சனங்கள் சட்டத்தை அனுசரிப்பதில்லையென்பது இதுவரை கூறியவற்றாற் புலனாகும். மேலும், சட்டத்துக்கு அடங்கி நடப்பதற்குரிய காரணங்களுள் தண்டனைக்குப் பயந்து அடங்கி நடத்தல் ஒரு காரணமாகும். சட்டம் பொது. பலராலும் நியாயமானதென ஒத்துக்கொள்ளப்படும் சமூக ஒழுக்கத்துக்கு உகந்த பிரமாணம் என்ற காரணத்தினாலேதான் பெரும்பாலோர் அதை அனுசரிக்கின்றனர். அரசாங்கம் வலுக்கட்டாயமாக அமுல் நடத்தத் துணிந்திருப்பதால் ஒரு சட்டம் சட்டமாவதில்லை. சமூகம் அதை ஏற்றுக்கொள்வதனால் தான் அது சட்டமாகிறது. சட்டத்துக்கு விஷயமாயுள்ளவை சமூகத்தினாலும், அரசியல் வாழ்வில் ஈடுபடும் தாபனங்களினாலும் எடுத்துக்காட்டப்பட்டவையேயாகும். சட்டம் சர்வ வல்லமையுடையதும் எதிர்ப்பில்லாததுமான ஒரு தாபனத்தின் கட்டளை என்று கொள்ளமுடியாது. சமூகத்துக்கு அவசியமானதாகக் கருதப்பட்ட ஒழுக்க நியதிகள் ஆதிகாலந் துவங்கியே இருந்து வருகின்றன. அவை பெரும்பாலும் கடவுளாற் தோற்றுவிக்கப்பட்டனவென்றோ நாட்டின் வழக்கமாயிருந்தனவென்றோ கருதிச் சனங்களால் அனுசரிக்கப்பட்டன. அரசாங்கம் அத்தகைய சட்டங்களை அமுல்நடத்தியது கிடையாது. உலக வழக்கே சனங்களின் அரசன் என்று கூறப்பட்டுவந்தது. அக்காலத்தில் நாட்டு வழக்கத்தை அரசன் அமுல்நடத்தி நீதி செலுத்தினானேயன்றிச் சட்டத்தைச் செய்தது கிடையாது. சட்டத்தை அமுல்நடத்துவதும் அதை விளக்கிக்காட்டுவதுமே அரசனுடைய கடமையாயிருந்தது. மத்திய காலத்திலும் சேவை மானிய முறை நிகழ்ந்துவந்த காலத்திலும் சட்டம் அரச கட்டளையென்ற எண்ணம் இருந்ததில்லை. ஆனால்,

தேசங்கள் தனித்தனியாகப் பிரிந்து வல்லரசுகளாக மாறுங்காலத்தில்தான் சட்டம் அரச கட்டளையெனக் கொள்ளப்பட்டது. சேவை மானிய முறை சிதைவுற்று அழியும் சமயத்தில் நாட்டிற் குழப்பமுண்டானபோது வலிமை மிக்க ஒரு அரசன் அடக்கி ஆள வேண்டிய நிலைமையுண்டாயிற்று. பின்னர், நாட்டில் ஒழுங்கு ஏற்பட்டதும் சர்வாதிகாரமுள்ள அரசன் தனது அதிகாரங்களைச் சனப் பிரதிநிதிகளிடம் கொடுத்துவிட நேர்ந்தது. எதேச்சாதிகாரமுள்ள அரசனுடைய அதிகாரம் உண்டாயிற்று.

ஒரு காலத்திலுள்ள சமூக அபிப்பிராயத்துக்குச் சட்டங்கள் பொருத்தமுடையனவாயிருந்தால்தான் அவற்றைச் சனங்கள் அனுசரிப்பார்கள். பொதுசன அபிப்பிராயத்துக்கு மாறுகப் பாராளுமன்றம் சட்டமியற்ற முற்படுமானல் அதற்கு நாட்டில் எதிர்ப்பு ஏற்படுவதோடு அச்சட்டங்களுக்கடங்கி நடக்க மக்கள் விரும்பவும் மாட்டார்கள். அவ்வித சட்டங்களை எதிர்ப்பதில் சனங்களுக்கு உற்சாகங்கூட உண்டாகும். உதாரணமாக ஐக்கிய அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் வந்தபொழுது இவ்வாறே சனங்கள் எதிர்த்தனர். மக்களிற் பெரும்பாலோர் இச்சட்டத்தை விரும்பவில்லை. எனவே, அதை எதிர்த்து நின்றவர்களைப் பொது மக்கள் பாராட்டினர். இக்காரணத்தினுல்தான் வழிபாட்டு முறைகள் சம்பந்தமாகவோ, மதம் சம்பந்தமாகவோ, குடிசனங்களை நிர்ப்பந்தப்படுத்தி அரசாங்கம் சட்டமியற்றுவதில்லை. மத சம்பந்தமாக மக்களைத் துன்புறுத்துவதால் அவர்கள் அரசாங்கத்துக்கடங்கி நடக்க மாட்டார்களென்பது சரித்திரம் கண்ட உண்மையாகும். மக்களின் சொந்த வாழ்க்கை சம்பந்தமான விஷயங்களில் அரசாங்கம் தலையிடுவது தவறு. குடியானவன், வீட்டில் எவ்வாறு நடக்கவேண்டும்; சமூகத்தில் எவ்வாறு புழங்கவேண்டும், என்ன உண்ணவேண்டும், குடிக்கவேண்டும் என்பவற்றைப் பற்றி அரசாங்கம் தலையிட்டு விதி செய்வது முறையன்று. அவ்வாறு செய்தால் சனங்கள் எதிர்ப்பார்கள். சமூகத்தில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு ஏற்பட்ட தாபனங்கள் தமது கடமைகளைச் சரியாகச் செய்யமுடியாத நிலைமை ஏற்படும். எனவே, கடைசியாகப் பார்க்குமிடத்து ஒழுங்கை நிலைநாட்டப் பொலீஸாருக்குத் துணைபுரிவதும் நீதியைப் பரிபாலிக்க நீதி மன்றங்களுக்குத் துணை புரிவதும் குற்றவாளிகளைச் சீர்திருத்த ஏற்பட்ட சிறைச்சாலைகளுக்கு உதவி புரிவதும் பொதுசன அபிப்பிராயமென்றே கூற வேண்டும்.

## பொலீஸ் சேவை :

பொலீஸ் படையின் கடமைகளைப்பற்றி பிளாக்ஸ்டோன் என்பவர் பின்வருமாறு அழகாகக் கூறியிருக்கிறார் :— "நாட்டில் அமைதியை நிலவச்செய்யச் சட்டபூர்வமாக நியமிக்கப்பட்ட காவலர் இவர்களே. ஊரில் காவல்செய்து சனங்களுக்கும் பாதுகாப்பளித்து, குற்றம்புரிவோருக்குத் தண்டனை வழங்கச் செய்வது அவர்களது கடமை". 1865-ம் ஆண்டின் 16-ம் இல. சட்டப்படி இலங்கைப் பொலிஸ்படை இந்நோக்கத்தோடு நிறுவப்பட்டது. அக்காலத்தில் கிராமத் தலைமைக்காரர் இலங்கையில் பெரியதொண்டு செய்தார்கள். குற்றங்களைக் கண்டு பிடிக்கவும், குற்றஞ் செய்தோரைத் தேடிக் காணவும் அவர்களை நீதிமன்றத்தில் விசாரணைசெய்து தண்டம் வழங்கவும் பெரிதுந் துணைபுரிந்தனர். இன்னும் கிராமாந்தரங்களில் குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் பெரிதும் துணைசெய்கிறார்கள். ஆனால், பொலீஸ் நிலையங்கள் ஆங்காங்கு நிறுவப்பட்டு வருவதால் அவர்களுடைய கடமைகள் குறைந்து வருகின்றன.

இலங்கைப் பொலீஸ்படை ஆதியில் இராணுவத் தொடர்புடையதாகவிருந்தது. சேர், ஹேர்பேட் டௌபிகின் பொலீஸ் தலைவராகவிருந்த காலத்தில் இலங்கைப் பொலீஸ் படையை இராணுவ அமைப்பிலிருந்து மாற்றுவதற்குப் பெரிதும் முயன்றார். ஆனால், 1915-ம் ஆண்டில் உண்டான உள்நாட்டுக் கலகத்தின் பயனாக இம்முயற்சி தடைப்பட்டது. அதனால் டௌபிகின் மறுபடியும் இராணுவ மரபையே பின்பற்றி வந்தார். அவருக்குப்பின் பொலீஸ் தலைவராகவந்த பாங்ஸ் என்பவரும் அக்கொள்கையையே பின்பற்றி வந்தார். அக்காலத்தில் பொலீஸ் படையினரிடையே மிக்க அதிருப்தி நிலவியது. ஒழுக்கமும் குன்றி வந்தது. மேலும், அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வந்த பிரேஸ்கேடில் என்னும் சமதர்மவாதி சம்பந்தமாக உண்டான அரசியற் பிணக்கில் பாங்ஸ் ஈடுபட்டபடியால் பொலீஸ் படையின் நிலைமையை அபிவிருத்தி செய்ய அவருக்கு வாய்ப்புவரவில்லை. பாங்ஸுக்குப் பின்னர் கேணல் பி. எச். என். ஹலன்ட் என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டார். கேணல் ஹலன்ட் பொலீஸ் படையைத் திருத்தியமைப்பாரென எதிர்பார்க்கப்பட்டது. பொதுசனக் கண்டனத்தைக் குறைக்கும் முறையில் அவர் சில முயற்சிகள் செய்தார். ஆனால், 1946-ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட பொலீஸ் விசாரணைச் சபையினர் ஹலன்ட் பொலீஸ் தலைவராயிருப்பதற்கு அவருடைய இயல்பு ஏற்றதல்லவென அபிப்பிராயப்பட்டனர். பொலீஸ் பகுதியிலுள்ள அதிகாரிகள் பலரின் பகையை அவர் தேடிக் கொண்டார். வேலையிற் பலகாலம் தொழில் புரிந்த மேல் அதி

காரிகளைக் கவனியாது ஐரோப்பிய அதிகாரிகளுக்குச் சலுகைகள் காட்டினர். அவர் பதவியை விட்டு விலகிய காலத்தில் பொலீஸ் படையின் திறமை விரைவில் குன்றிக்கொண்டு வந்தது. பின்னர் லெப்டினன்ட் கேணல் ஆர். எம். எம். பேக்கன் என்பவர் பொலீஸ் தலைவராக நியமிக்கப்பட்டபொழுது பொலீஸ் படையின் திறமை பெரிதும் குன்றிவிட்டது. இதைத் திருத்துவதற்குப் பேக்கனல் முடியவில்லை. 1946-ம் ஆண்டில் நியமிக்கப்பட்ட பொலீஸ் விசாரணைச் சபை பொலீஸிலுள்ள அதிருப்தியைப் பற்றியும் திறமையின்மையைப்பற்றியும் எடுத்துக் காட்டிற்று. பொலீஸ் அதிகாரியின் நிலைமையை விருத்தி செய்வதற்கும் பொது சனங்களின் நம்பிக்கையைக் கூட்டுவதற்கும் சில முக்கியமான சிபாரிசுகளை இச்சபை செய்தது. இச்சிபாரிசுகளிற் சிலஇப்போது நடைமுறையிற் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. பொலீஸ் படையினர் சனங்களின் சத்துராதிகளாயிராமல் நண்பரிகளாயிருக்கும் வகையில் சில முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

பொலீஸின் கடமைகளைப் பின்வருமாறு சுருக்கமாய்க் கூறலாம்.

(1) குற்றங்களைத் தடுத்தல்.

(2) செய்த குற்றங்களை ஆராய்தல்.

(3) குற்றவாளிகளைக் கண்டுபிடித்தல்.

இந்நாட்டில் செய்யப்படும் குற்றங்கள் பெரும்பாலும் ஆத்திரத்தினல் உண்டாவன. அவற்றைத் தடுப்பதானல் சனங்களின் பொருளாதார நிலைமையையும் சமூக நிலையையும் கல்வி நிலைமையையும் சீர்திருத்த வேண்டியதவசியமாகும். ஆனல். கொலை, கொள்ளை, வழிப்பறி முதலிய குற்றங்களைக் குறைப்பதானல் பொலீஸார் மேலும் கவனஞ் செலுத்தவேண்டியதவசியம். இது பொலீஸ் அமைப்பையும் பொலீஸுக்கும் பொதுசனங்களுக்குமுள்ள தொடர்பையும் பொறுத்த விஷயமாகும். பொலீஸார் பொது சனங்களிடம் அன்பாகப் பழகி அவர்கள் கொண்டுவரும் முறைப்பாடுகள் எவ்வளவு சிறியனவாயிருந்தாலும் அவற்றை விசாரணை செய்துவந்தால் பொது சனங்களுக்கும் அவர்களுக்குமுள்ள ஒற்றுமை அதிகரிக்கும். பொலீஸ்படை ஊர்காவற்படையாகும். அது குடிமக்களைக் கொண்டதொரு படை. ஊரில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்குத் தேவையான திறமை பொதுசனங்களின் கூட்டுறவினுலும் நல்லெண்ணத்தினுலுமே உண்டாகவேண்

டும். இவ்வொற்றுமையையும் நல்லெண்ணத்தையும் அன்பினுல் பெற்றுக்கொள்ளவேண்டுமேயன்றி கட்டளை செய்து பெற்றுக் கொள்ள முடியாது.

பொலீஸ் படை தனது கடமைகளைத்திறமையாகச் செய்வதற்காக அது பொலீஸ் தலைவர், மூன்று உதவித் தலைவர்கள் ஆகியோரைக்கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. பொலீஸ் படையில் 6000க்கு மேற்பட்ட பொலீஸ்காரரும் சார்ஜன்ட்மாரும், பொலீஸ் பரிசோதகர்களும், மேற்பார்வையாளரும், உதவி மேற்பார்வையாளரும் இருக்கிறுர்கள். இலங்கையில் இருநூற்றுக்கு மேற்பட்ட பொலீஸ் நிலையங்களுண்டு. 1132 குடிசனங்களுக்கு ஒரு பொலீஸ் அதிகாரி வீதம் கடமையாற்றுகிறுர்கள். வசதியான பொழுதெல்லாம் இவ்வதிகாரிகளுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. புதிதாகச் சேர்க்கப்பட்ட பொலீஸ்காரருக்கும் அதிகாரிகளுக்கும் பயிற்சி யளிப்பதற்காகக் கட்டுக்குருந்தையில் பொலீஸ் பயிற்சிக் கலாசாலையொன்றுண்டு. சிறுவரிடையே குற்றங்கள் மலிவதைத் தடுப்பதற்குப் பலசிறுவர் கழகங்கள் உண்டு. இத்தகைய சமூகங்களை அமைப்பதில் பொலீஸார் பெருந் துணைபுரிந்து வருகின்றனர். குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலும் தடுப்பதிலும் கிராமாபிவிருத்திச் சங்கங்கள் பெரிதும் முயற்சியெடுத்து வருகின்றன. அவற்றிற்கு ஆலோசனை கூறுவதிலும் உயர்தரப் பொலீஸ் அதிகாரிகள் துணைபுரிந்து வருகின்றனர். பொலீஸ் பகுதியில் பல கிளைகளுண்டு. ஒவ்வொரு கிளையும் குறித்த ஒரு விசேஷ முயற்சியிலீடுபட்டிருக்கும். துப்பறியும்பகுதி இவ்வாறு ஒரு கிளையாகும். இது உயர்தர மேற்பார்வையாளர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது. இவருக்குப் பல உதவி மேற்பார்வையாளர் துணைபுரிவர். இதில் பின் வருமாறு பல கிளைகளுண்டு.

(1) குற்றப்பிரிவு. இதனேடு பாய்ச்சற் படையொன்றுண்டு.
(2) விசேஷ பிரிவு.
(3) தொழில் நுட்பப் பிரிவு. இதில் விரற்பதிவு ஆராய்ச்சிப் பகுதியும், குற்றசாசன அலுவலகமும், படம் பிடிக்கும் பகுதியும் சேர்ந்திருக்கின்றன.

குற்றப்பகுதியின் முக்கியமான கடமை பெரிய குற்றங்களையும் மோசடி, கள்ளக்கையொப்பம் என்பவற்றையும் ஆராய்ச்சி செய்வதாகும். மேலும் சிக்கலான குற்றங்கள் விஷயத்தில் மாகாணப் பொலீஸுக்கும் பகுதிப் பொலீஸுக்கும் உதவி செய்வதுமாகும்

விசேஷப் பிரிவினர் இலங்கையிலுள்ள அந்நியரைப்பற்றிய விஷயங்களை ஆராய்ச்சி செய்வர்.

தொழில் நுட்பப் பிரிவில் விரற்பதிவுப் பகுதி முதற் குற்றஞ் செய்தவர்களின் விரல் அடையாளங்களைப் பதிவு செய்யும். சமுசய மானவர்களை அழைத்து அடையாளங்கண்டு பிடிக்கும் பலமுறை சிறைசென்ற குற்றவாளிகளைப் பற்றிய குறிப்புக்களைப் பதிந்து வைத்திருக்கும். குற்றப்பதிவுக் சந்தோரில் குற்றஞ் செய்தவர்களின் விவரங்களும் பலமுறைசிறை சென்றவர்களின் விவரங்களும் பதிந்து வைக்கப்படும் படம் பிடிக்கும் பிரிவினர் குற்றஞ் செய்யப்பட்ட இடங்களுச்குச் சென்று படம் பிடிப்பார்கள். அப் படங்கள் பின்னர் குற்ற விசாரணையிற் பயன்படும்.

## சட்ட முறை:

சட்டங்களைப் பாராளுமன்றம் இயற்றும். பொலீஸாருக்கிருக்கும் பல கடமைகளிலொன்று குற்றஞ் செய்வோருக்கு அக்குற்றத்திற்குரிய தண்டனையை வழங்கச் செய்வது. பாராளுமன்றம் நிறைவேற்றும் சட்டங்களை விளக்கி அமுல் நடத்தி நீதி வழங்குவது நீதிமன்றங்களின் கடமையாகும். இதில் சிலவேளை தவறுகளேற்படுவதுமுண்டு. இதைத் தவிர்ப்பதற்காகச் சிறிய நீதிமன்றங்களின் தீர்ப்புக்கு மாருக மேல் மன்றங்களுக்கு மனுச் செய்ய வசதியளிக்கப்பட்டிருக்கிறது. அவற்றிலும் நீதி வழங்கப் படாவிட்டால் மகா தேசாதிபதிக்கு விண்ணப்பஞ் செய்யலாம். மேலும், பாராளுமன்றம்கூடத் தலையிட்டுச் சட்டத்தில் குறைகளிருந்தால் திருத்தவோ, நீதிமன்றங்கள் அச்சட்டங்களுக்குச் செய்த வியாக்கியானங்கள் பிழையாய் இருந்தால் திருத்தவோ, உரிமையுண்டு. நீதி வழங்கப்பட வேண்டும். அத்துடன், பட்சபாதமின்றி அது வழங்கப்பட்டதாகத் தெரியவும் வேண்டும். என்வே, நீதிபதிகள் வழக்கு விசாரணை செய்யும்போது பக்கம் சாராது நடுநின்று கடமையாற்ற வேண்டும். இக்காரணத்தினுற்ருன் நீதிபதிகள் அரசியற் கட்சி வாதங்களில் பங்குபற்றக் கூடாதென விதிக்கப்பட்டிருக்கிறது. இக்காரணங் கருதியே நமது அரசியற் சட்டத்திலும் நீதிபதிகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் விதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உயர்தர நீதிமன்றத்து நீதியரசர்களை அவர்களுடைய ஒழுக்கக்குறைவு காரணமாக அன்றி, வேறு எக்காரணத்தைக் கொண்டும் பதவி நீக்கம் செய்ய முடியாது. அவர்கள் கடமைசெய்யும் வரை அவர்களுடைய சம்பளத்தையும் குறைக்க முடியாது. நீதிப்பகுதியைச் சேர்ந்த இதர அதிகாரிகள் நீதி பரிபாலனச் சபை என்ற தனிப்பட்ட

ஒரு தாபனத்தின் மேற்பார்வையில் அமைந்திருக்கிறார்கள். நீதிபதிகள் பயமின்றியும் மற்றவர்களுடைய தயவை எதிர்பாராமலும் தம்து கடமைகளைச் செய்வதற்காகவே இவ்வித பாதுகாப்புகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. நீதிபரிபாலனம் செய்யும் அதிகாரிகள் சுதந்திரமுடையவர்களாக இருப்பதற்காகவே இவ்வொழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன எனலாம்.

இந்நாட்டில் நிலவிவரும் நீதிபரிபாலன முறையின் தன்மையையும் அதன் அமைப்பையும் ஆராய்வதற்கு முன்னர் இங்கு வழங்கிவரும் சட்டங்களைப்பற்றிச் சிறிது அறிந்திருப்பது பயனுடையதாகும்.

இலங்கையில் நிலவும் சட்டம் உரோம டச்சுச் சட்டமாகும். ஒரு சட்டப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு விசேஷமான சட்டமோ சாசனமோ இல்லாத இடத்தில் உரோமன்-டச்சுச் சட்டத்தையே நீதிமன்றங்கள் அனுசரிக்கின்றன. இந்நாட்டுக்குச் சொந்தமான சில சட்டங்களுமுண்டு. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தமிழ் மக்களிடையே தேசவழமை என்ற சட்டம் நிலவுகிறது. இங்குள்ள சோனகர், முஸ்லீம்கள் ஆகியோர் இஸ்லாமிய சட்டத்தை அனுசரிப்பர். கண்டிப் பகுதியில் வசிப்போருக்குக் கண்டிச்சட்டம் உண்டு. இவற்றை விட சிங்களவருக்குச் சொந்தமான வேறு சில சட்டங்களுமுண்டு. இவையெல்லாம் உரோமன் டச்சுச் சட்டங்களை வெகுதூரம் மாற்றியிருக்கின்றன. நாட்டுக்கேற்ற வகையில் மாற்றப்பட்ட ஆங்கிலச் சட்டமும் வழக்கத்திலிருக்கிறது. கிழக்கு மாகாணத்தில் வழங்கிவந்த முக்குவச் சட்டம் இப்பொழுது வழக்கத்திலில்லை. தேச வழமை முதலிய சமூகச் சட்டங்கள் பெரும்பாலும் நபர்கள் சம்பந்தமாகவும், பரம்பரைச் சொத்து சம்பந்தமாகவும், விவாக உரிமை சம்பந்தமாகவும், சொத்துரிமை சம்பந்தமாகவுமே அனுசரிக்கப்பட்டன. மற்ற விஷயங்களைப் பொறுத்தவரையில் பாராளுமன்றம் இயற்றிய சட்டங்களே வழக்கத்துக்கு வந்துவிட்டன. அவசியமான சந்தர்ப்பங்களில் ஆங்கிலச் சட்டமும் உரோமன்-டச்சுச் சட்டமும் அனுசரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் பெரும்படியாகப் பார்க்குமிடத்து இந்நாட்டுச் சட்ட அமைப்பு முழுவதும் ஆங்கிலச் சட்டத்தையே பின்பற்றி வருகிறது.

உயர்தர நீதிமன்றங்களில் இன்றும் ஆங்கிலத்திலேதான் விசாரணை நடக்கிறது. ஆங்கிலத்திலேதான் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. சட்ட அறிக்கைகளும் ஆங்கிலத்திலேதான் வெளியிடப்படுகின்றன. இலங்கை நீதிமன்றங்களில் உத்தியோக

மொழியாக சிங்களத்தையும் தமிழையும் வழங்கவேண்டு மென்பதை ஆராய்வதற்காக 1951-ல் அரசாங்கம் மொழி விசாரணைச் சபையொன்றை ஏற்படுத்திற்று. இந்நாட்டில் வழக்கத்திலிருக்கும் குற்றச் சட்டமும் அதன் விசாரணை முறையும் சிவில் சட்ட முறையும் வர்த்தகச் சட்டமும் ஆங்கிலச் சட்டத்தைப் பின்பற்றினவையாகும். சிவில் வழக்குச் சம்பந்தமான விஷயங்களில் நம்பிக்கைச் சொத்து சம்பந்தமான ஆங்கிலச் சட்டத்தைப் பின்பற்றியே நம்பிக்கைச் சொத்துச் சட்டமென ஒரு சட்டம் இலங்கையில் இயற்றப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் இதற்கு இதுதான் சட்டமெனக் கொள்ளமுடியாத சந்தர்ப்பங்களில் ஆங்கிலச் சட்டமே பயன்படுத்தப்படுகிறது. மேலும், கப்பற் போக்குவரத்து, வர்த்தகம் முதலிய எல்லா விஷயங்களிலும் யுத்தம் சம்பந்தமான விஷயங்களிலும் 1852-ம் ஆண்டு தொடக்கம் 1866-ம் ஆண்டுவரை ஆங்கிலச்சட்டமே கையாளப்பட்டு வந்தது. இச்சட்டங்களெல்லாம் இப்பொழுது சிவில் சட்டம் என்ற நூலில் ஒன்று சேர்க்கப்பட்டன. (அத். 66). ஆங்கிலப் பொருள்கள் விற்பனைச் சட்டம் 1896-ம் ஆண்டில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. (அத். 70). ஆங்கில உண்டியற் சட்டம் 1928-ல் கொண்டுவரப்பட்டது (அத் 68) ஆங்கிலக் கொம்பனிச் சட்டம் 1938-ம் ஆண்டில் கொண்டுவரப்பட்டது. எனவே, உள்ளூர் நிலைமைக்குத் தேவையான மாற்றங்களோடு ஆங்கிலச் சட்டமே இலங்கையில் வழங்கிவருகிறதென்பது தெளிவு, உரோமன்-டச்சுச் சட்டம், உள்ளூர் வழமைச் சட்டங்கள் என்ற அடிப்படையில் இந்நாட்டுக்குத் தேவையான மாற்றங்களோடு ஆங்கிலச் சட்டம் அமைக்கப்பட்டது.

## நீதிபரிபாலனம்—உயர்தர நீதிமன்றம்

### உயர்தர நீதிமன்றம்:

உயர்தர நீதிமன்றம் பிரதம நீதிபதியையும் 8 கீழ்த்தர நீதிபதிகளையும் பல தற்காலிக நீதிபதிகளையும் கொண்டதாகும். இவர்களனைவரும் மகாதேசாதிபதியினுல் நியமிக்கப்படுவர். உயர்தர நீதிமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் சில குற்ற வழக்குகளை விசாரணை செய்வதற்கு மகா தேசாதிபதியினுல் நியமிக்கப்படும் நீதிபதிகளே பதில் நீதிபதிகளாவர். உயர்தர நீதிமன்றத்து நீதிபதிகளின் வேலை நெருக்கடியைத் தீர்ப்பதற்காகவே இவர்கள் நியமிக்கப்படுவர். உயர்தர நீதிமன்றத்து நீதிபதிகள் 62 வயதுவரை கடமையாற்றலாம். அதன் பின்னர் மகா தேசாதிபதியின் விருப்பப்படி மேலும் ஒரு வருடம் கடமையாற்ற அவர்களுக்கு வசதியளிக்கப்படும்.

உயர்தர நீதிமன்றத்து நீதிபதிகளின் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்காக அரசியற் சட்டத்தில் பின்வரும் பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

(1) நன்னடத்தையிருக்கும் வரை நீதிபதிகள் பதவி வகிக்கலாம். மேல் (செனேற்) சபையும் பிரதிநிதிகள் சபையுமாகச் சேர்ந்து மகா தேசாதிபதியைக் கேட்டுக்கொண்டால் அவர் அந் நீதிபதிகளை வேலையிலிருந்து நீக்கலாம். அவ்வாறன்றி வேறெவரும் அவர்களுடைய பதிவியை இரத்துச்செய்ய முடியாது. கைக்கூலி முதலிய கெட்ட வழக்கங்கள் இருப்பதாகக்குற்றஞ்சாட்டப்பட்டாலன்றி வேறு காரணங்களால் அவர்கள் பதவியை நீக்கமுடியாது சுகவீனம் காரணமாகத் தமது கடமையைச் செய்யமுடியாத நிலைமையிலிருப்பவர்களைப் பதவியிலிருந்து நீக்கலாம்.

(2) நீதிபதிகள் சம்பளம் பாராளுமன்றத்தால் நிர்ணயிக்கப்படும். அது அரசாங்க வருமானத்திலிருந்து ஒதுக்கப்படும். வருடா வருடம் பாராளுமன்றம் இந்தச் சம்பளத்தை ஒதுக்கவேண்டிய அவசியமில்லை, அதாவது நீதிபதிகளின் சம்பளம் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டில் அடங்கியதன்று. நீதிபதிகள் தமது கடமைகளைத் திறமையாகச் செய்கிறார்களா ? அவர்கள் செய்யும் வேலைக்குக் கொடுக்கப்படும் சம்பளம் அதிகமானதா என்ற வகையில் நீதிமன்றங்களின் மதிப்பைக் குறைக்கக்கூடிய விஷயங்களை அல்லது திமன்றங்களின் சுதந்திரத்தைப் பாதிக்கக்கூடிய விஷயங்களைப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் விவாதிக்க இடம் இருக்கமாட்டாது.

(3) நீதிபதிகளுக்குக் கொடுக்கப்படும் சம்பளம் நீதிபதிகள் உத்தியோகத்திலிருக்கும் வரை குறைக்கப்படமாட்டாது. அவர்கள் தமது கடமைகளைப்பட்சபாதமின்றியும் பயமின்றியும் செய்வதற்கு இது ஒரு பாதுகாப்பாகும். மேலும் பாராளுமன்றத்தின் நோக்கங்களுக்கு மாமுகவோ நிர்வாக அதிகாரிகளுக்கு மாமுகவோ தீர்ப்பளித்து நிர்வாகத்துக்குச் சங்கடத்தை உண்டாக்கிஞல் நீதிபதிகளுடைய சம்பளம் குறைக்கப்படலாமென்ற அச்சம் ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே இந்தப் பாதுகாப்பளிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு அச்சமுண்டாஞல் அது நீதிபதிமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியதுபோலாகும். தம்மிடம் பொது சனங்களுக்கிருக்கும் மதிப்பைக் குறைக்கும் வகையில் எவ்வித கண்டனமும் தம்மீது செய்யப்படமாட்டாதென்ற நம்பிக்கை உடையவராக எந்த நீதிபதியுமிருக்கவேண்டியதவசியம். நியாய துரந்தரராகவும் நியாயவாதியாகவும் தேறியவர்களை உயர்தர

நீதிமன்றம் தனது அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொள்ளும் குற்றங்காரணமாகவோ இலஞ்சம் முதலிய ஊழல்கள் காரணமாகவோ தொழிலுக்கேற்ற ஒழுக்கத்தைக் கைவிட்டதன் காரணமாகவோ எவரையும் உயர்தர நீதிமன்றம் வேலையிலிருந்து நீக்க அல்லது தற்காலிகமாக நிறுத்திவைக்க உரிமையுடையதாகும்.

## உயர்தர நீதிமன்றத்தின் அதிகாரங்கள்

(1) குற்றம் சம்பந்தமான எல்லா வழக்குகளையும் விசாரணை செய்ய உயர்தர நீதிமன்றத்துக்கு முதல் விசாரணை செய்யும் அதிகாரமுண்டு. கொலை, கற்பழித்தல், திருட்டு முதலிய பெருங் குற்றங்கள் சம்பந்தமாகவும் அதற்கு விசேஷ அதிகாரமுண்டு. இந்த அதிகாரம் ஐந்து வட்டார எல்லைக்குட்படுத்தப்பட்டிருக்கிறது :— மேற்கு வட்டாரம், மத்திய வட்டாரம், தெற்கு வட்டாரம், கிழக்கு வட்டாரம் என்பவையாகும். உயர்தர நீதிமன்றத்தின் குற்ற விசாரணைக் காலத்தில் ஒரு நீதிபதியோ உப நீதிபதியோ யூரிச்சபையுடன் சேர்ந்து இந்த அதிகாரத்தைப் பிரயோகிக்கலாம். மஜிஸ்ரேட் நீதிமன்றத்திலிருந்து உயர்தர நீதிமன்றத்துக்கு அனுப்பப்படும். வழக்குகள் உயர்தர நீதிமன்றத்தினுல் மாத்திரமே விசாரணை செய்யப்படும். விசேஷ சந்தர்ப்பங்களில் ஒரு வழக்கு கொழும்பில் மூன்று நீதிபதிகள் முன்னிலையில் யூரிச்சபை சகிதமாக விசாரணை செய்யப்படவேண்டுமென்று பிரதம நீதிபதி தமது விரகைக் கொண்டு கட்டளையிடலாம். கிராமக் கோடுகள் தவிர்ந்த ஏனைய நீதிமன்றங்களிலிருந்து புனர் விசாரணைக்கு அனுப்பப்படும் சிவில் வழக்குகளைத் திருப்பி விசாரணை செய்வதற்கு உயர்தர நீதிமன்றங்களுக்கு அதிகாரமுண்டு. சிவில் வழக்குகளில் முதல் விசாரணை செய்யும் அதிகாரம் பொதுவாக உயர்தர நீதிமன்றங்களுக்குக் கிடையாது. உயர்தர நீதிமன்றத்துக்கு மனுச் செய்யும் வழக்குகளை இரண்டு நீதிபதிகள் பொதுவாக விசாரணை செய்வார்கள். அவர்களிடையே அபிப்பிராயபேதமிருந்தால் அல்லது சட்டம் சம்பந்தமான ஒருபிரச்சினை எழுந்தால் அதைமூன்று நீதிபதிகள் விசாரணை செய்யலாம். இரண்டு நீதிபதிகள் விசாரணை செய்யுமிடத்தில் அவர்களிடையே ஏகமனதான அபிப்பிராயமிருக்குமானுல் அவ்வபிப்பிராயமே உயர்தர நீதிமன்றத்தின் அபிப்பிராயமாகக் கொள்ளப்படும். மூன்று நீதிபதிகள் விசாரணை செய்யுமிடத்தில் பெரும்பான்மையோரின் முடிவே உயர்தர நீதிமன்றத்தின் தீர்ப்பாகக் கொள்ளப்படும். குற்ற வழக்குச் சம்பந்தமாக மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் கொடுக்கப்படும் தீர்ப்புக்கு மேல்நீதிமன்றங்களுக்கு மனுச் செய்து கொள்ளலாம். அதற்குக் குற்ற வழக்குகள் சம்பந்தமான சட்டவிதிகள் இடமளிக்கின்றன. அவ்வாறு மனுச்செய்வதா

ஞல் தீர்ப்புக் கூறப்பட்ட 10 நாட்களுக்குள் செய்தல் வேண்டும். குற்ற வழக்குகளில் பிரிவு நீதிமன்றங்கள் கொடுக்கும் தீர்ப்புக்கெதிராக மனுச்செய்தால் அம்மனுக்களைக் குறைந்தது இரண்டு நீதிபதிகளாவது சேர்ந்து விசாரணை செய்யவேண்டும். அவ்வாறு மனுச் செய்பவர் அத்தகைய தீர்ப்பினுலோ கட்டளையினுலோ பாதிக்கப் பட்டவராயிருக்க வேண்டும்.

(3) எந்த நீதிமன்றத்திலும் வைக்கப்பட்டிருக்கும் சாசனங்களையும் பார்வையிட உயர்தர நீதிமன்றத்துக்கு முழு அதிகாரமுண்டு. எந்தப் பிரிவு நீதிபதி மீதும் உப நீதிபதி மீதும் மஜிஸ்ரேட் மீதும் மற்றுமுள்ள நீதிமன்றங்களின் நீதிபதிகள் மீதும் நடவடிக்கை யெடுக்க அதற்கு அதிகாரமுண்டு. எந்தவொரு சிவில் அல்லது குற்ற வழக்கும் ஒரு நீதிமன்றத்தில் சரியான முறைப்படி விசாரணை செய்யப்படமாட்டாதெனக் கண்டால் அல்லது சில சிக்கலான சட்டப் பிரச்சினைகள் எழுமெனக்கண்டால் அவ்வழக்குகளை வேறு நீதிமன்றங்களுக்கு விசாரணைக்கனுப்பவும் உயர்தர நீதிமன்றத்துக்கு அதிகாரமுண்டு. தனக்கெதிராக அல்லது மற்ற நீதிமன்றங்களுக் கெதிராக அவமானம் விளையக்கூடிய குற்றம் செய்தால் அதனை உடனுக்குடன் விசாரிக்கும் அதிகாரம் அதற்குண்டு.

## குற்ற வழக்கு ஆட்சேபனை மனு விசாரணை நீதி மன்றம்

இந் நீதிமன்றம் 1948-ம் ஆண்டின் 23-ம் இல. சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டது. ஆயினும், 1940-ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்துதான் இது செயலாற்றத் தொடங்கியது. அக் காலத்தில் பிரதம நீதிபதியாகவிருந்த மகா கனம். சேர் சிட்னி ஏபிரஹாமின் முயற்சி காரணமாகவே இந்நீதிமன்றம் அமைக்கப் பட்டது. இது தாபிக்கப்படுவதற்கு முன்னர் ஒரு கைதி தனது குறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு இருமார்க்கங்கள் மட்டுமிருந்தன. இவற்றிலொன்று விசேஷ அனுமதி பெற்று மன்னவ மாமன்றத்துக்கு ஆட்சேபனை மனுச் செய்தல். அபூர்வ சந்தர்ப்பங்களில் மட்டும் இவ்வனுமதியளிக்கப்படும். மற்ருென்று தண்டனையை மாற்றும்படி அல்லது குறைக்கும்படி தேசாதிபதிக்கு விண்ணப்பித்தல். ஒரு விசாரணையின்போது எழுந்த யாதாயினுமொரு சட்ட நுணுக்கம் சம்பந்தமாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகளின் விசாரணைக்கு ஒரு வழக்கைச் சமர்ப்பிக்க வேண்டுமென விசாரணை நடத்தும் நீதிபதி கருதினுல் அவ்விதம் வேண்டுமானுலும் செய்யலாம். இவ்விதம் நிகழ்வது துர்லபமாகவிருந்தது. தீர்ப்பை ஆட்சேபித்து மனுச்செய்வதற்கு சட்டப்பகுதிஅதிபருக்கு உரித்தளிக்கப்பட்டது.

பிரதம நீதிபதியும் உயர் நீதிமன்றத்து இளைய நீதிபதிகளும் மேற்கூறிய நீதிமன்றத்தில் அங்கம் வகிப்பர். வழக்கமாக இந் நீதி மன்றம் மூவரை அங்கத்தினராகக் கொண்டது. ஆனால், மூன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் இருப்பின், இரட்டையல்லாததொகையாக விருத்தல் வேண்டும். விசாரணை நடத்துவோரிற் பெரும்பான்மை யோரின் கருத்தின் படியே தீர்ப்புக் கூறப்படும். மனுதாரின் வழக்கை ஏற்கனவே விசாரித்தவர் ஆட்சேபனை மனுவை விசாரிக் கத் தகுதியுடையவரல்லர்.

உயர் நீதிமன்றத்தில் நடைபெற்ற விசாரணை யொன்றிற் குற்றவாளியாகக் காணப்பட்ட யாராயினும் ஒருவர் அத் தீர்ப்பை ஆட்சேபித்து

(1) ஒரு சட்ட நுணுக்கம் காரணமாக ;

(2) அல்லது, உண்மை சம்பந்தமான ஒரு பிரச்சினையையொட்டி குறித்த அனுமதி பெற்று ;

(3) அல்லது, சட்டப்படியன்றி வேறு வகையில் விதிக்கப்பட்ட ஒரு தீர்ப்பை ஆட்சேபித்து.

ஒருவர் செய்யும் மனுவை ஏற்றுக்கொள்ள இந்நீதிமன்றத் திற்கு நியாயாதிக்கமுண்டு.

(1) நீதி செலுத்த உதவிபுரியும் மத்தியஸ்த சபையின் (யூரிமாரின்) தீர்ப்பு நியாயமற்றதென அல்லது அளிக் கப்பட்ட சாட்சியத்தை ஆதாரமாகக் கொண்டு அத்தகைய தீர்ப்பு அளிக்கப்படவில்லையென,

(2) யாதாயினுமொரு சட்ட நுணுக்கம் சம்பந்தமாகத் தவ றுன முடிவு செய்யப்பட்டதென,

(3) நீதி வழங்கும் விஷயத்தில் தவறு நேர்ந்துவிட்டதென நீதி மன்றம் அபிப்பிராயப்பட்டால் ஆட்சேபனை மனுவை அனும திக்க அதிகாரமுண்டு.

ஒரு தீர்ப்பை அழித்து வேறொரு தீர்ப்பைக்கூறச் சட்டம் அனு மதிக்குமிடத்து அவ்விதம் செய்யவும் இந் நீதிமன்றத்திற்கு அதி காரமளிக்கப்பட்டிருக்கிறது. விசாரணை நடத்திய நீதிபதி அளித்த தீர்ப்பை அதிகரிக்கவும் அதற்கு உரித்துண்டு.

### மன்னர் நீதிமாமன்றம் :

ஒரு சிவில் வழக்கு அல்லது நடவடிக்கை விஷயத்தில் தீர்ப்பை ஆட்சேபித்து மன்னவ மாமன்றத்திற்கு மனுச் செயவதற்கு எவ ருக்கும் உரித்துண்டு. இந் நீதிமன்றத்திற்கு ஆட்சேபனை மனுச் செய்வதாயின், பின்வரும் நிபந்தனைகளுக் கமைதல்வேண்டும் :

(1) எத் தீர்ப்பை ஆட்சேபித்து மனுச் செய்யப்படுகிறதோ அத்தீர்ப்பு ஓர் இறுதியான தீர்ப்பாக இருத்தல்வேண்டும். அதாவது, தீர்ப்பு முடிவானதாகவிருப்பதென்றால், கிளப்பப்பட்ட சட்ட நுணுக்கங்கள் விஷயத்தில் கடைசியாகவும் முடிவாகவும் இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் முடிவுசெய்திருத்தல் வேண்டும்.

(2) மனுவுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட விஷயம் ரூ. 5000 பெறுமதியானதாகவோ அதற்கு மேற்பட்டதாகவோ இருக்கவேண்டும். சொத்து சம்பந்தமாகவோ குடியியல் உரிமை சம்பந்தமாகவோ செய்யப்பட்ட மனுவாகவிருந்தால் அதுவும் ரூ. 5000 பெறுமதியுடையதாகவோ அதற்குமேல் பெறுமதியுடையதாகவோ இருக்க வேண்டும்.

உயர்தர நீதிமன்றத்தின் விரகின்படி சில மனுக்கள் மன்னர் நீதி மாமன்றத்துக்குச் சிபார்சு செய்யப்படும். இது மற்ற நீதிமன்றங்களினால் அளிக்கப்பட்ட முடிவான தீர்ப்பின் பேரிலோ விசாரணையின்போது நீதிபதியால் செய்யப்பட்ட கட்டளையின் பேரிலோ மன்னர் நீதி மாமன்றத்திற்கு விசாரணைக்கனுப்பும் தகைமை வாய்ந்ததென உயர்தர நீதிமன்றம் கருதினால் அவ்விதம் செய்யலாம். குற்ற வழக்குகள் சம்பந்தமாகவும் இவ்வாறு மனுச் செய்யலாம். 1933-ம் ஆண்டின் சாசனத்தின் 53-ம் பிரிவின்படி இவ்வுரிமை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் மிக முக்கியமானதும் பொதுசன நன்மைக்கேதுவானதுமான சந்தர்ப்பங்களில் தான் இத்தகைய விண்ணப்பங்கள் அனுமதிக்கப்படும். மற்றும்படி அவை அனுமதிக்கப்படமாட்டா.

## கப்பற் போக்குவரத்துச் சம்பந்தமான நீதிமன்றம் :

1891-ம் ஆண்டில் செய்யப்பட்ட கப்பற் போக்குவரத்துச் சம்பந்தமான நீதிமன்றச் சட்டத்தின் 2-வது பிரிவின்படி இலங்கையின் கப்பற் போக்குவரத்துச் சம்பந்தமான நீதிமன்றமாக உயர்தர நீதிமன்றம் கடமையாற்றலாமென அதிகாரம் வழங்கப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் இந்தக் கடமையைப் பிரிவு நீதிமன்றங்கள் புரியலாம். அதற்குத் தேசாதிபதியின் அனுமதி வேண்டும். அவ்வாறு அனுமதி கொடுப்பதற்குத் தேசாதிபதிக்கு அதிகாரமுண்டு. இந் நீதிமன்றம் கப்பற் போக்குவரத்துச் சம்பந்தமான விஷயங்களில் நீதி செலுத்தும்.

*பிரிவு நீதிமன்றங்கள் :*

குடியியல் விஷயங்களிலும் வருமான விஷயங்களிலும் கலியாண விஷயங்களிலும் தத்துவமெடுத்தலிலும் இந்நீதிமன்றங்கள் விசாரணை செய்ய உரிமையுடையன. புத்திக் குறைவானவர்கள், பைத்தியக்காரர்கள், பிராயமற்றவர்கள், பாதுகாப்பிலுள்ளவர்கள் ஆகியோர் விஷயத்திலும் அவர்கள் சொத்து விஷயத்திலும் இந் நீதிமன்றங்கள் விசாரணை நடத்தலாம். மேலும், பாதுகாவலரையும் பராமரிப்பாளரையும் நியமிக்கவும் இந் நீதிமன்றங்களுக்கு உரிமையுண்டு. நம்பிக்கைச் சொத்து சம்பந்தமாகவும், பாதுகாவலர் தர்ம கர்த்தாக்கள் சம்பந்தமாகவும் முதல் விசாரணை செய்ய இந் நீதிமன்றத்துக்கு உரிமையுண்டு. சில வழக்குகளில் ஒருவர் செய்யவேண்டியதைப் பற்றியும் செய்யத்தகாததைப் பற்றியும் கட்டளையிட இந்நீதிமன்றங்களுக்கு உரிமையுண்டு. உயர்தர நீதிமன்றத்தில் விசேஷ அதிகாரத்துக்கப்பாற்பட்ட விஷயங்களிலும் குற்ற வழக்குகள் சம்பந்தமாக இந் நீதிமன்றங்கள் விசாரணை செய்யலாம். மஜிஸ்ரேட் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட வழக்குகளும் வேறு நீதிமன்றங்களிலிருந்து உயர்தர நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட வழக்குகளும் இங்கே விசாரணை செய்யப்படலாம்.

பின்வரும் தீர்ப்புக்களைக் கூறப் பிரிவு நீதிமன்றங்களுக்கு அதிகாரமுண்டு :

(அ) இரண்டு ஆண்டு காலத்துக்கு மேற்படாத இரு வகைச் சிறைத் தண்டனை

(ஆ) ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதம்

(இ) கசையடி

(ஈ) மேற்கூறியவற்றில் எவையாயினும், இரு தண்டனைகள் சேர்ந்த சட்டரீதியான தண்டனை யாதாயினும்.

நீதிமன்றத்தில் அவமரியாதையாக நடக்கும் எவரையும் உடனுக்குடனே விசாரிப்பதற்கும் நீதிமன்றங்களுக்கு அதிகாரமுண்டு. மேலும் எவையாயினும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனித்தனி குற்றங்கள் சப்பந்தமான ஒரு விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவர் விஷயத்தில் ஒரு நீதிமன்றம் விதிக்கக் கூடிய மொத்தத் தண்டனை மேற்கூறியதன் இரு மடங்காகும். அதற்கு மேற்கொண்டு விதிக்க அதற்கு அதிகாரமில்லை.

கிராம நீதிமன்றங்களின் தீர்ப்புகளை ஆட்சேபித்துச் செய்யப் படும் மனுக்களைப் பெரும்பகுதி நீதி மன்றங்கள் விசாரணை செய்யும்.

## மஜிஸ்ரேட் நீதிமன்றங்கள் :

ஒரு மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படக்கூடிய குற்றங்கள் 1898-ம் ஆண்டின் குற்ற நடவடிக்கைப் பிரமாணத்தின் 16-ம் அத்தியாயத்திலுள்ள அட்டவணையிலும், நீதிமன்றச் சட்டம், இதர சட்டங்கள் ஆகியவற்றின் ஏற்பாடுகளிலும் குறிக்கப் பட்டுள்ளன.

கூடுதலான அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்குச் சட்டம் அனுமதிக்கும் சந்தர்ப்பங்களிலன்றி, மஜிஸ்ரேட் நீதிமன்றங்களின் அதிகாரங்கள் பின்வருமாறு :-

(அ) ஆறு மாத காலத்திற்கு மேற்படாத இரு வகைச் சிறைத் தண்டனை

(ஆ) நூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதம்.

(இ) குற்றம் புரிந்தவர் 16 வயதுக்குட்பட்டவராயின் கசையடி.

(ஈ) மேற்கூறியவற்றில் எவையாயினும் இரு தண்டனைகள் சேர்ந்த சட்டரீதியான தண்டனை யாதாயினும்.

எவையாயினுமிரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனித் தனிக் குற்றங்கள் சம்பந்தமான ஒரு விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்ட ஒருவர் விஷயத்தில் ஒரு நீதிமன்றம் விதிக்கக் கூடிய மொத்தத் தண்டனை மேற்கூறியதன் இரு மடங்காகும்.

பாரதூரமான குற்றங்கள் விஷயத்தில் மேல் நீதிமன்றத்தின் விசாரணைக்கனுப்பும் பொருட்டு பூர்வாங்க விசாரணைகள் நடத்தவும் மஜிஸ்ரேட் நீதிமன்றங்களுக்கு அதிகாரமுண்டு.

1899-ம் ஆண்டின் பராமரிப்புச் சட்டத்தின் பிரகாரம் மனைவியர் குழந்தைகள் ஆகியோரைப் பராமரிக்குமாறு கட்டளையிடவும் இந் நீதிமன்றங்களுக்கு அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது,

நகரசபை விவகாரங்கள் விஷயத்தில், கொழும்பில் தனிப் பட்ட நகரசபை மஜிஸ்ரேட் நீதிமன்றமொன்றுண்டு. மற்றும் நகரசபை நகர்களில் தல நீதிபதி அவரது ஏனைய கடமைகளுடன்

நகரசபை மஜிஸ்ரேட்டாகவும் கடமை புரிவார். நகரசபை மஜிஸ்ரேட்களுக்கு சிவில் நியாயாதிக்கம் யாதாயினும் கிடையாது. நகரசபைச் சட்டத்தின் 164 (1)-ம் பிரிவிற் குறிப்பிடப்பட்டுள்ள நகரசபை துணைச் சட்டங்களெவற்றையும் மீறி நகரசபையின் எல்லைக்குட் புரியப்படும் குற்றங்களை அவர் விசாரிக்கலாம்.

## விண்ணப்ப நீதிமன்றங்கள் :

கொழும்பில் ஒரு கமிஷன் தலைமையில் விசாரணை நடத்தும் தனிப்பட்ட நீதிமன்றமுண்டு. மற்றைய பெரும் பகுதிகள் யாவிலும் ஒரு பெரிய பகுதி நீதிபதி அல்லது ஒரு மஜிஸ்ரேட், நீதி பரிபாலனஞ் செய்வார். அவர் தமது ஏனைய கடமைகளுடன் விண்ணப்பக் கமிஷனராகவும் கடமை புரிவார்.

கடன், நட்டம், கோரப்படும் தொகை அல்லது பிணக்குக் காரணமான நிலத்தின் பெறுமதி முந்நூறு ரூபாய்க்கு மேற்படாத சகல விவகாரங்களிலும் (சில சந்தர்ப்பங்கள் நீங்கலாக) இந் நீதிமன்றங்களுக்கு ஆரம்ப சிவில் நியாயாதிக்கமுண்டு.

இயற்கையான பெற்றோரல்லாதார், 1941-ம் ஆண்டின் 24-ம் இலக்க குழந்தைகள் சட்டத்தின் பிரகாரம் குழந்தைகளை சுவீகரிப்பதற்கு அனுமதியளிக்கவும் இந்நீதி மன்றங்களுக்கு அதிகாரமுண்டு.

## கிராம நீதிமன்றங்கள் :

கடன் நட்டம், கோரப்படும் தொகை அல்லது பிணக்குக் காரணமான நிலத்தின் பெறுமதி நூறு ரூபாய்க்கு மேற்படாத வியாச்சியங்கள் விஷயத்தில் இந் நீதிமன்றங்களுக்குச் சிவில் நியாயாதிக்கமுண்டு. ஆயினும், மந்திரி அரசாங்க வர்த்தமானியில் பிரகடனஞ் செய்து இந்நீதி எல்லையை விஸ்தரிக்கலாம்.

குற்ற வழக்குகள் சம்பந்தமாக, பின்வரும் விஷயங்கள் கிராம நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்திற்குட்பட்டனவாகும் :-

(அ) கிராமச் சங்கச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட உப சட்டங்கள் அல்லது சட்டத்தை மீறிய குற்றங்கள் யாவும். புரிந்த குற்றம் பாரதூரமானதாகவிருந்தபோதிலும் அது வேறொரு சட்டத்திற்குட்பட்டதாயுமிருந்தாலன்றி இந் நியாயாதிக்கத்தை விலக்க முடியாது.

(ஆ) சட்டத்தினகத்தேயுள்ள இரண்டாவது அட்டவணை யில் தற்காலிகமாகக் குறிக்கப்பட்ட குற்றங்கள்.

(இ) கிராம நீதிமன்றச் சட்டத்தின் பிரகாரம் நீதிமன்ற மொன்றுக்குத் திட்டமாக வழங்கப்பட்ட நியாயாதிக் கத்திற்குட்பட்ட குற்றங்கள் யாவும்.

ஒரு கிராம நீதிமன்றம் ஐம்பது ரூபாய்க்கு மேற்படாத அபராதம் அல்லது 14 நாட்சிறைத் தண்டனை விதிக்கலாம், நீதி சேவைக்குழு நியமிக்கும், ஒருவர் அதற்குத் தலைமை வகிப்பார்.

## நீதிச் சேவைக் குழு :

இத்தேசத்தின் நீதிச்சேவைகளை நிர்வகிப்பதற்கு நீதிச்சேவைக் குழு என்னும் தனிப்பட்ட தாபனமொன்றை நிறுவ இலங்கை அரசியற்றிட்டத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. பிரதம நீதிபதி, உயர் நீதிமன்றத்து நீதிபதியொருவர், ஒரு நீதிபதி யாகவுள்ள அல்லது உயர் நீதிமன்றத்து நீதிபதியாகவிருந்த மற்றுமொருவர் ஆகியோரை அங்கத்வர்களாகக் கொண்ட இக் குழுவுக்குப் பிரதம நீதிபதி தலைமை தாங்குவார். இப்பொழுது பிரதம நீதிபதியும் உயர் நீதிமன்றத்து நீதிபதிகள் இருவரும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். தலைவரைத் தவிர, இக்குழு வின் அங்கத்தவர்களை மகா தேசாதிபதி நியமிப்பார். பாராளு மன்றத்தில் அல்லது மேல் சபையில் அங்கத்துவம் வகிக்கு மொருவர் இக்குழுவின் அங்கத்தவராக விருப்பதற்கில்லை.

தலைவர் நீங்கலாக இக்குழுவின் அங்கத்தவர் எவரும், தாமாகப் பதவியிலிருந்து விலகினாலன்றி, காரணங்காட்டி மாதே சாதிபதி அவரைப் பதவியிலிருந்து விலக்கினாலன்றி அல்லது உயர் நீதிமன்றத்து நீதிபதியென்ற முறையில் அவ்வங்கத்தவர் பதவியி லிருந்து விலகினாலன்றி, ஐந்து வருடகாலத்திற்கு உத்தியோகம் புரியலாம். அவர் ஒருமுறை விலகியபின் மீண்டும் மேற்படி குழு வின் அங்கத்தவராக நியமிக்கப்படலாம்.

இக்குழுவால் நியமிக்கப்படும் செயலாளரொருவர் அதன் வேலையைக் கவனிப்பார். (அ) அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையொன்றின் பிரகாரம் சம்பள அதிகரிப் பின் விளைவாக ஏற்படும் மாற்றங்களல்லாத ஏனைய நீதிசேவை மாற்றங்கள் யாவற்றையும் அனுமதிக்கும் அதிகாரத்தையும், (ஆ) குழு தக்கதெனக் கருதும் சில கட்டுப்பாடுகளுக் கமைய, தற்காலிக நியமனங்களைச் செய்யும் உரிமையையும், அது தன் சார்பாக, அவருக்கு வழங்கியிருக்கிறது.

நீதி இலாகா உத்தியோகத்தரின் நியமனம், மாற்றம், வேலை நீக்கம், கட்டுப்பாடு ஆசிய விஷயங்கள் யாவும் நீதி சேவைக் குழு வின் அதிகாரத்திற்குட்பட்டவையாகும். 'ஒரு நீதவான்' என்பது நீதி உத்தியோகம் வகிப்பவரெனப் பொருள்படும். ஆனால், அது ஓர் உயர்தர நீதிமன்றத்து நீதிபதியையோ காலாகால நீதிமன் றத்து நீதிபதியையோ (அசைஸ் கமிஷனரையோ) உள்ளடக்காது.

நீதி சேவைக்கு அதிகாரியை நியமிக்கும் பொறுப்பு இவ் விசேஷ குழுவுக்கு அளிக்கப்பட்டதன் நோக்கம் அரசியல் வட் டாரத்தையோ மற்றும் வட்டாரங்களையோ சேர்ந்தவர்கள் அதி காரிகள் விஷயத்தில் தலையிடாவண்ணம் பார்த்துக் கொள்வதற் காகும். நிர்வாகத்தின் அல்லது அதன் பிரதிகாரரின் செல்வாக் குக்கு அல்லது நெருக்குதலுக்கு ஆளாகக்கூடிய ஒருவரிடம் அல் லது ஒருசபையிடம் இத்தகைய உரிமை ஒப்படைக்கப்பட்டால், பட்சபாதமற்ற முறையில் நியமனங்கள் செய்யப்பட மாட்டா வென்னும் அச்சம் சிறுபான்மைச் சமூகத்தினர்க்கு ஏற்படலா மென்பதால் அவர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடனும் இவ் வேற்பாடு செய்யப்பட்டது. இக்குழுவின் தீர்ப்பைத் தமது கடமை யின் போதன்றித் தமக்குச் சாதகமாக மாற்றிக் கொள்ள முயலும் எவருக்கும் ஒரு வருடத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனை அல்லது ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத அபராதம் அல்லது அப ராதமும் சிறைத்தண்டனையும் விதிக்கப்படலாம்.

முக்கிய கவனிப்பு: மாதேசாதிபதியால் செய்யப்படும் நிய மனங்கள் விஷயத்தில் இவ்வத்தியாயத்திற் கூறப்பட்ட சந்தர்ப் பங்கள் யாவிலும் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரிலேயே அவர் அத்தகைய நியமனங்களைச் செய்வாரென்பது குறிப்பிடப் பட வேண்டும். உண்மையில் அத்தகைய நியமனங்களைச் செய் பவர் பிரதம மந்திரியேயன்றி மாதேசாதிபதியல்லர்.

## சிறைச் சாலையும் பாலியக் குற்றவாளிகள் மன்றமும் தண்டனையின் நோக்கமும்:

சட்டத்தை மீறுவோர் சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறார் கள். அது அவர்கள் செய்த குற்றத்துக்குத் தண்டனையாகும். சிறை செல்வதே ஓர் அவமானம். சிறை சென்று திரும்பிய ஒரு வனைச் சமூகம் மதிப்பதில்லை. சிறைவாசத்தினால் உண்டாகும் அவ மானம் மறுபடியும் குற்றம் செய்யாது அவனைத் தடை செய்யும். மற்றவர்களுக்கும் அதுஒருபடிப்பனையாகும். சிறையிலிருக்கும்வரை

குற்றவாளி சட்டத்தை மீறிய குற்றத்தைச் செய்தானென உணர்த் தப்படுகிறான். சிறையிலிருக்கும் பொழுதுதான் வீடு, சுற்றமித்திரர் ஆகியோரைப் பிரிந்திருப்பது எவ்வளவு துன்பமான விஷயமென் பதை ஒருவன் உணர்வான். எனவே, மறுபடியும் குற்றம்செய்யாத வாறு அது தடுக்கிறது. சிறைச்சாலை அதிகாரிகள் சிறைக்குச் சென் றவனை அவன் விடுதலை அடைந்தவுடன் வாழ்க்கையில் ஈடுபட்டு நல்ல பிரசையாயிருக்க வழி செய்யவேண்டும். அவன் பிழைப்ப தற்கு ஏதாவது தொழில் முறைகளைக் காட்டிவிட வேண்டும். அதன் பயனாக அவன் தனக்கும் சமூகத்துக்கும் பயன் தரக்கூடிய தொழிலைப் புரிந்துகொண்டு சீவனம் செய்வான். சிறை வாழ்க்கை யினால் மனமுடைந்து சமூகத்தின் அபிப்பிராயத்தைத் துச்சமாக மதிக்கும் மனோபாவம் அவனிடத்து வளரவிடக் கூடாது. சிறையி லிருந்து விடுதலையடைந்ததும் ஒருவன் நல்வாழ்வு நடத்துவதற்குப் பயிற்சியளிப்பது அவசியமாகுமென்று இங்கிலாந்தில் நடைமுறை யிலிருக்கும் ஒரு சட்டம் குறிப்பிடுகிறது. மேலே கூறிய நிலைமை இந்த நாட்டில் இல்லையெனவே கூறவேண்டும். இலங்கையிலுள்ள சிறைச்சாலைகளில் இட நெருக்கம் அதிகமுண்டு. அதிகாரிகளும் குறைவு. கொழும்பு, மகாறை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள சிறைக்கூடங்கள் பழங்காலக் கருத்துக்கேற்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, குற்றஞ்செய்த வனைச் சிறையிலிட்டுப் பழிவாங்க வேண்டுமென்ற கருத்துக்கமைய அவை கட்டப்பட்டன. இடநெருக்கடி இருப்பதனால் முதற் குற் றஞ் செய்தவர்கள் பலமுறை சிறைவைக்கப்பட்டவர்களோடு ஒன் றாக இருக்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதனால் முதன் முதல் சிறை சென்றவர்கள் தாம் திருந்தி நடக்கவேண்டுமென்ற எண்ணத்தை நாளடைவில் கைவிட்டுவிடுகிறார்கள். பெரிய சிறைச் சாலைகளில் சாதாரண குற்றஞ் செய்தவர்களோடு பெரும் பாத கச் செயல்களைச் செய்தவர்களும் இருப்பதால், அவர்களை நடத் தும் முறை கடுமையான காவல் முறையாகவிருப்பதன்றி அவர்க ளைச் சீர்திருத்தவேண்டுமென்ற நோக்கம் சரியாக வெளிப்படுத்தப் படாததன் காரணமாக சாதாரண கைதிகள் சிறைவாசம் தம்மைச் சீர்திருத்துவதற்காகவே ஏற்பட்டதென்பதை நன்கு உணர்வதில்லை. இதனால் அவர்கள் தம்மைத் திருத்திக்கொள்ள வேண்டுமென்ற உள்ளக் கிளர்ச்சியற்றவர்களாக இருந்துவிடுகிறார்கள். பழங்கால முறைகளை அனுசரித்து, கல் உடைப்பதும், கயிறு திரிப்பதும், மட்டை அடித்தலுமே சிறைச்சாலையில் கைதிகளுக்குக் கொடுக்கப் பட்ட வேலைகளாயிருந்துவந்தன. ஆனால், சமீப காலத்தில் பய னுள்ள மரியாதையான வேலைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்நிலைமைக்குச் சிறை அதிகாரிகளைக் குறை கூற முடியாது. அவர்கள் நடைமுறையிலிருக்கும் சட்டங்களின்படி தமது கடமை

களைச் செய்கிறார்கள். இந் நிலையை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வந்து தன்னாலானவற்றை யெல்லாம் செய்யவேண்டிய தவசியமாகும்.

மேலும் சிறை நல்வழிச் சேவையானது இலங்கையில் 1944-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. இங்கிலாந்தில் இத்தகைய சேவை 37 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் இச்சேவை நல்ல முறையில் அமைக்கப்படவில்லை. இது கைதியை நல்வழிப்படுத்தும் நீதி பரிபாலனமெனக் கருதப்படுகிறது. குற்றவாளியை நல்வழிப்படுத்துவதற்கு இது நல்ல சாதனம். பெருங் குற்றஞ் செய்தவர்களுக்குக்கூட இது பயன்படும். சிறை நல்வழிச் சேவை சிறிது சிறிதாகவே முன்னேறியிருக்கிறது. இதில் பல்வேறு தாபனங்கள் ஆங்காங்கு சிதறிக் கிடப்பதாலும் சில பகுதிகளில் பல தாபனங்கள் நெருங்கிக் கிடப்பதாலும் ஒரு தனி அதிகாரி இவற்றையெல்லாம் மேற்பார்வை செய்துகொள் வது முடியாத காரியமாகும். மேலும் சீர்திருத்தக் கைதிகளுக்குப் போதிய விடுதிச்சாலைகள் கிடையா. அதனால் நல்வழிப்படுத்தும் அதிகாரி தங்கள் பொறுப்பில் விடப்பட்டிருக்கும் சீர்திருத் தக் கைதிகளைச் சரிவர மேற்பார்வை செய்ய முடியாதிருக்கிறார் கள். சீர்திருத்தக் கைதிகளிற் பலர் எதிர்பார்த்த அளவு சீர்திருத்த மடையாததற்கு ஒரு காரணம் நல்ல விடுதிச்சாலைகள் இல்லா மையே. எனவே, இத்துறையில் முன்னேற்றம் வேண்டுமானால் குற்றவாளிகளைச் சீர்திருத்துவதற்குத் தேவையான சாதனங்களை அமைத்துக் கொடுக்கவேண்டியது மிக அவசியமாகும்.

ஈற்றில் பாலியக் குற்றவாளிகள் பிரச்சினையுண்டு. 16 வயதுக் குக் குறைந்த நாலு சிறுவர்களை முதியோர் சிறைச்சாலையில் வைக்கவேண்டி ஏற்பட்டதென்றும் பாலியக் குற்றவாளிகள் தேர்ச் சிக் கலாசாலையில் சேர்ப்பதற்கு அவர்கள் வயது குறைந்தவர்க ளாகக் காணப்பட்டார்களென்றும் சிறைச்சாலை அதிபரின் 1948-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. குருணாகலில் ஒரு வாலிபன் நாலு தேங்காய் களவெடுத்ததற்காக நீதிபதியினால் ரூ. 30 அபராதம் விதிக்கப்பட்டானென்றும் அவ்வபராதத்தைக் கொடுக்கத் தவறிய காரணத்தால் அவன் சிறைக்கு அனுப்பப்பட் டானென்றும் ஒரு துக்ககரமான சம்பவம் குறிப்பிடப்பட்டிருக் கிறது. இது மிகவும் வருந்தத்தக்க ஒரு விஷயமாகும். சிறுவர், பாலகர் சட்டமென ஒரு சட்டம் 1939-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆக்கப்பட்ட போதிலும் குற்றஞ்செய்த சிறுவரை விசா ரணை செய்வதற்கு விசேஷ நீதிமன்றங்கள் கிடையா. கொழும்பில் மாத்திரம் ஒன்று காணப்படுகிறது. அவர்களுக்கென விளக்க மறி

யல் விடுதியோ விசேஷ பாடசாலேயோ இலங்கையில் நிறுவப்படவில்லே. அதனுல் அவர்களுக்கு நல்ல பயிற்சியளித்து அவர்களே நன்னெறிப்படுத்துவதற்கு நல்ல வசதிகளில்லே. மேற்படி சட்டம் இயற்றப்படுவதற்கு முன்னர்தொட்டு மக்கோனே என்ற இடத்தில் மாத்திரம் ஒரு விசேஷ பாடசாலே இருந்து வருகிறது. இப்பாடசாலே பல கஷ்டங்களுக்கிடையில் ஓரளவிற்கு நல்ல தொண்டு செய்து வருகிறது. 16 வயதுக்குட்பட்ட பாலியக் குற்றவாளிகளின் நிலேமை இவ்வாறு இருக்கிறது.

16 வயது தொட்டு 20 வயது வரையுள்ள இளங் குற்றவாளிகளின் நிலேமையும் அவ்வாறே காணப்படுகிறது. இவ்வகுப்பைச் சேர்ந்த பல குற்றவாளிகளுக்குப் பயிற்சியளிப்பதற்குத் தகுந்த பாடசாலேகள் இல்லாமையால் இவர்கள் முதியோர் சிறைச் சாலேகளுக்கு அனுப்பப்படுகிருர்கள். இவர்கள் வெளிக்கடைச் சிறைச்சாலேயில் புறம்பாக வைக்கப்பட்டிருந்தபோதிலும் வேலே செய்யும் நேரங்களில் மற்றக் கைதிகளோடு சேரவேண்டியிருக்கிறது. இதனுல் அவர்கள் கெட்ட வழியில் நடக்க ஏதுவாகிறது. சிறைச்சாலேச் சட்டத்தின் 42-வது (B) பிரிவின்படி பாலியக் குற்றவாளிகளேக் கூடுமானவரை வயதுவந்த குற்றவாளிகளுடன் சேர விடக்கூடாதெனக் காட்டப்பட்டிருக்கிறது. சிறுவர்களே வயதுவந்த கைதிகளோடு சேரவிடுவது ஆபத்துக்கிடமானதாகும். டெம்பிளூட்டுப் பிரபு இங்கிலாந்தில் உள்நாட்டு மந்திரியாயிருந்தபொழுது இவ்விஷயம்பற்றிப் பின்வருமாறு கூறினுர் :- பாலியக் குற்றவாளிகள் வயதுவந்த கைதிகளோடு சேருவதினுல் சீர்திருத்தமடையாதிருப்பதுமன்றி மேலும் பல குற்றங்களேச் செய்வதற்குப் பழகிக் கொள்கிருர்கள். டெம்பிளூட்டுப் பிரபுவின் அபிப்பிராயப்படி பாலியக் குற்றவாளிகளேத் திருத்துவதானுல் அவர்களேத் திறந்த சிறைச்சாலேகளில் வைத்து அவர்கள் தமது சுயமரியாதையை மறுபடியும் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலேமையை உண்டாக்கவேண்டும். இங்கிலாந்தில் இம்முறையே கையாளப்பட்டு வருகிறது. இலங்கையிலும் இதனேயே கையாளவேண்டும். பாலியக் குற்றவாளிகளேச் சீர்திருத்தக் கலாசாலேகளுக்கனுப்பி நல்வழிப்படுத்துவது மற்ருெரு முறையாகும். அப்படியொரு சீர்திருத்தக் கலாசாலே 1952-ம் ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. அது வத்துப்பிற்றிவெலே என்ற இடத்திலிருக்கிறது. இக்கலாசாலே பாலியக் குற்றவாளிகளேத் திருத்துவதிலும் அவர்களே நல்ல குடிகளாக்குவதிலும் சிறந்த முயற்சி செய்திருக்கிறது. 1952-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நீர்கொழும்பிலே இதுபோன்ற மற்ருெரு கலாசாலே ஏற்படுத்தப்பட்டது.

### சிறைச்சாலே அமைப்பு :

1877–ம் ஆண்டின் சிறைச்சாலேச் சட்டப்படி இலங்கையிலுள்ள சிறைச் சாலேகளெல்லாம் சிறை அதிபர் ஒருவரின் மேற்பார்வையில் விடப்பட்டன. 1944-ம் ஆண்டு தொடக்கம் இப்பதவிக்குச் சிறை நல்வழிச் சேவை அதிபர் என்னும் பெயர் சூட்டப்பட்டது. இலங்கையில் பலதரப்பட்ட சிறைச்சாலேகளுண்டு. பாலியக் குற்றவாளிகள், வயதுவந்த குற்றவாளிகள், முதற் குற்றவாளிகள், பலமுறை குற்றஞ்செய்தோர், குற்றவாளிகளெனத் தீர்மானிக்கப்பட்டோர், விளக்க மறியலில் வைக்கப்பட்டோர் எனப் பல வகைப்பட்ட குற்றவாளிகளுக்கும் புறம்பு புறம்பான சிறைகளுண்டு. இவையெல்லாம் ஒரு தனிப்பட்ட நிர்வாகத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதன் நோக்கம் ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்த குற்றவாளிகளுக்கும் அவரவருக்கேற்ற தண்டனே விதிப்பதும் முதற் குற்றவாளிகள் மற்றவர்களோடு சேர்ந்து தீங்கடையாதிருப்பதுமேயாகும். ஆனுல், கருத்தளவில் இது உண்டேயன்றிச் செய்கையளவில் இன்னும் பூரணமடையவில்லே. இது பூரணமடைவதற்கு எவ்வளவோ வேலேகள் செய்ய வேண்டியிருக்கின்றன.

### பாலியக் குற்றிவாளிகள் :

இவர்கள் 16 வயதுக்குட்பட்டவர்கள். இவர்களேச் சிறை வைப்பதற்கு விசேஷ விடுதிகள் போதிய அளவு இல்லாத படியால் சிறைச் சாலேயிலும் வைக்கப்பட்டிருக்கிறுர்கள். இந்த வயதுப் பிரிவைச் சேர்ந்த குற்றவாளிகளுக்குச் சிறைச்சாலே ஏற்ற இடமன்று.

### இளங் குற்றவாளிகள் :

இவர்கள் 16 வயதுக்கும் 21 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர். ஒரு மாதத்துக்கு மேற்பட்ட சிறைத்தண்டனே பெற்று வரும் இவ்வயதுப் பிரிவினரை வெலிக்கடைச் சிறைச்சாலேயில் தனிப்பட வைத்திருக்கிறுர்கள். இவர்களுக்குக் கல்வி பயிற்றப் படுகிறது. அத்துடன், பயனுள்ள சில தொழில் முறைகளும் கற்பிக்கப்படுகின்றன. இவர்கள் வயதுவந்த மற்றைய கைதிகளோடு பகலில் வேலே செய்யவேண்டியிருப்பதால் இவர்களேப் பூரணமாக ஒதுக்கி, வைத்திருப்பது முடியாத காரியமாகும்.

### நீண்டகாலச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட முதற் குற்றவாளிகள் :

இக்கைதிகளுக்குப் பல படிகளுண்டு. இம்முறைப்படி கைதிகள் பல வகுப்புகளாகப் பிரிக்கப்படுவர். குறித்த ஒரு காலவெல்லைக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒருவர் முதலில் தண்டனைப்படியில் புகுவார். இதில் அவர் ஒரு மாதம் வரை தங்குவார். பின்னர் நாலாவது வகுப்புக் கைதியாகக் கருதப்படுவார். அதன் பின் அவருடைய நடத்தை திருப்திகரமாகவிருந்தால் படிப்படியாக மூன்றாவது படிக்கு ஏற்றப்படுவார். அதற்கு ஒரு வருடத்திற்கு அப்புறம் இரண்டாவது படிக்கு உயர்த்தப்படுவார். பின்னர் ஒரு வருடங் கழிய அவருடைய நடத்தை திருப்திகரமாக இருந்தால் முதலாவது படிக்கு உயர்த்தப்படுவார். ஒவ்வொரு படிக்கும் உரிமைகளும் விசேட சலுகைகளுமுண்டு. சிறைச்சாலைக் கட்டுப்பாடு மேற்பார்வையாளராக முதற்படியிலுள்ள கைதிகள் தெரிந்தெடுக்கப்படுவார்கள். சிறைச்சாலை எல்லைக்குள் இவர்கள் காவற்காரராகக் கடமை புரிவர்.

### திரும்பவும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் :

மறுபடியும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளிற் சிலரைத் தெரிந்தெடுத்து அவர்களை மகாரையிலும், போகம்பரையிலும் சிறைவைப்பர். இவர்களில் இரண்டு வருடத் தண்டனையும் அதற்கு மேற்பட்ட காலத் தண்டனையும் வழங்கப்பட்டவர்கள் ''பி'' வகுப்பில் வைக்கப்படுவர். இவர்கள் வேலை செய்யும் பொழுது மற்றக் கைதிகளுடன் கலந்துகொள்ள விடமாட்டார்கள். இவர்களுக்குப் பின்னேரங்களில் வகுப்புகளுண்டு. அங்கே பயிற்சி அளிக்கப்படுவதுடன் விளையாட்டுகளில் பங்குபற்றவும் வசதியளிக்கப்படும். ஆறு மாதப் பயிற்சியின் பின்னர் இவர்கள் கண்டிக்கு அனுப்பப்படுவர். அங்கே இவர்கள் ''ஏ'' வகுப்பில் வைக்கப்படுவர். சம்பளம், கைத்தொழிற் பயிற்சி ஆகியவற்றைப் பொறுத்தவரையில் இவர்கள் ''ஏ'' வகுப்புக் கைதிகளாகவே கருதப்படுவர்.

சிறைச்சாலை நிர்வாகத்தை ஆராய்ந்து அறிக்கை செய்யுமாறு 1949-ம் ஆண்டு ஜூன் மாதம் கிரேஷியன் விசாரணைச் சபை ஏற்படுத்தப்பட்டது. அச்சபையின் சிபார்சுகளின் பயனாகக் கைதிகள் நன்கு கவனிக்கப்பட்டு வருகிறார்கள். மட்டை அடித்தல் நிறுத்தப்பட்டுவிட்டது. கயிறு திரிக்க இயந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. கைதிகளுக்குப் பலவிதமான தொழிற் பயிற்சிகள்

அளிக்கப்படுகின்றன. சமையல் துவங்கி, கக்கூஸ் வேலைவரை எல்லாம் கைதிகளாலே செய்விக்கப்படுகின்றன. இருந்தும் சிறைச் சாலைக் கட்டடங்கள் பழைய நிலையிற்ருனிருக்கின்றன. 1950-ம் ஆண்டு நிர்வாக அறிக்கையில் சிறைச்சாலையதிகாரி பின்வருமாறு குறிப்பிட்டார் :-

"சிறைச்சாலைகளிற் பல, ஒரு புதிய காட்சியையும், நோக்கத்தையும் கைக்கொண்டிருக்கின்றன. பழைய முறைகளையும் நோக்கங்களையும் ஓரளவுக்கு நாம் கைவிட்டபோதிலும், இன்னும் சில பழைய கொள்கைகளைக் கைவிட முடியாத நிலைமையிலிருக்கிருேம்."

## சிறை நல்வழிச் சேவை :

இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் இச்சேவையுண்டு ஆனுல் முன்னேற்றம் சிறிது சிறிதாகவே காணப்படுகிறது. இங்கிலாந்தில் சிறை நல்வழிச்சேவை 1907-ம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது. 37 வருடங்களின் பின்னர்தான் இம்முறை இலங்கையில் புகுத்தப்பட்டது. இலங்கையிலுள்ள நீதி பரிபாலனப் பிரிவுகள் ஐந்தாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பிரிவுக்கும் சிறை நல்வழியதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிருர். இப்பிரிவுகள் பின்வருமாறு :

(1) மேற் பிரிவு (2) மத்திய பிரிவு (3) வடமேற்குப் பிரிவு (4) தெற்குப் பிரிவு (5) வடக்குப் பிரிவு. இலங்கை முழுவதும் இரண்டு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு மேற்பார்வையதிகாரியின் கீழ் வைக்கப்பட்டிருக்கிறது.

## பாலியக் குற்றவாளிகட்குப் பயிற்சிப் பாடசாலைகள் :

இவ்வாருன ஒரு பயிற்சிப் பாடசாலை முதன் முதல் 1940-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் வத்துப்பிற்றி வெலையில் ஸ்தாபிக்கப் பட்டது. இப்பாடசாலை நாலு வீடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முதல் வீடு தகுதிகாண் வீடு. அதாவது பாலியக் குற்றவாளி ஒருவர் எத்தகைய தன்மையுடையவர், அவருடைய தேவைகள் எவை, எத்தகைய வீட்டில் அவரை விடலாமென்ற விஷயங்களெல்லாம் இங்கேதான் நிச்சயிக்கப்படுகின்றன. மற்ற மூன்று வீடுகளில் ஒன்றில் மிக வயது குறைந்தவர்கள் விடப்படுவர். மற்ருெரு வீட்டில் முன்னர் சிறைவாசமோ பயிற்சியோ பெற்ற வாலிபர் வைக்கப்படுவர். மற்ற மூன்ருவது வீட்டில், வயதாலும் தகைமையாலும் நடுத்தரமாகவுள்ளவர்கள் வைக்கப்படுவர்.

*1952*-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நீர்கொழும்பில் இத்தகைய இரண்டாவது பாடசாலே திறந்து வைக்கப்பட்டது.

பயிற்சியளிக்கப்பட்டபின் மேற்பார்வை செய்வதற்கு ஒரு சங்கமுண்டு. இது ஒருசிறு குழுவினுல் நிர்வகிக்கப்படும். இக்குழுவின் தலேவர் மேல்மாகாண அரசாங்க ஏஜண்டராவர். அவரின் கீழ் வேதனம் பெற்று வேலேசெய்யும் ஒரு மனேஜர் உளர். பயிற்சி பெற்றபின் வெளியே அனுப்பப்பட்டவர்களேக் கவனிப்பதும் அவர்களுக்கு வேலே தேடிக்கொடுப்பதுமே இந்தச் சங்கத்தின் வேலேயாகும்.

விடுதலேயான கைதிகளே மேற்பார்வை செய்வதற்கும் ஒரு சங்கமுண்டு. விடுதலேயான கைதிகளுக்கு இச்சங்கம் பண உதவியளிக்கும். அதைக்கொண்டு அவர்கள் [விரும்பியதொரு தொழிலே மேற்கொள்ளலாம். கூடுமானவரை வேலே எடுத்துக் கொடுப்பதும் இச்சங்கத்தின் கருமங்களிலொன்ருகும். இச்சங்கத்தின் உப சபைகள் எல்லாச் சிறைச்சாலேகளிலுமுண்டு. கொழும்பில் ஒரு மத்திய நிர்வாகச் சபையுண்டு. இச்சங்கத்துக்கு அரசாங்கம் நல்ல பண உதவியளித்து வருகிறது.

## ஐந்தாம் அத்தியாயம்

# சனசமூகத்தின் தேவைகள்

### உணவு உற்பத்தி :

இலங்கை மக்களின் முக்கியமான உணவுப் பொருள் அரிசி. அதன் பெரும் பகுதி வெளிநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகிறது. இலங்கையின் சனத்தொகை வருடமொன்றுக்கு இரண்டு இலட்சமாகக் கூடிக்கொண்டே வருகிறது. இலங்கையின் உணவுத் தேவைகளை இங்கேயே உற்பத்தி செய்து விடவேண்டுமென்பதே நமது அரசாங்கத்தின் கொள்கையாகும். இதனுல் இலங்கை வருமானத்தின் பெரும் பகுதியை வெளிநாடுகட்கு வாரி இறைக்காமற் பாதுகாக்கலாம். அவ்வாறு கிடைக்கும் பொருளைக் கொண்டு தேசத்தின் அபிவிருத்திக்கான திட்டங்களை நடைமுறையிற் கொண்டுவரலாம். இன்று நம்நாட்டில் விளைவு உண்டாகும் முறைப்படி பார்த்தால் ஒரு ஆளுக்கு உணவு உண்டாக்க அரை ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. நாற்று நடுதல் நல்ல விதை நெல்லை விதைத்தல், பரம்படித்தல் போன்ற புதிய விவசாய முறைகளைப் பயன் படுத்தி விளைவை அதிகரித்தாலன்றி அரசாங்கத்தின் கொள்கையை நிறைவேற்ற முடியாது. பல நூற்றுண்டுகளாகப் பயன்படாது அழிந்து கிடக்கும் குளங்களைத் திருத்திப் புதிய நிலங்களைச் செய்கை பண்ணுவது நீர்ப்பாசனப் பகுதியாரின் கடமையாகும். அத்துடன் புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்துத் தரிசாய்க் கிடக்கும் நிலங்களை நெல் விளையும் வயல்களாக்குவதும் அவர்கள் கடமையே. நவீன விவசாய முறைகளை விவசாயிகள் பின்பற்றச் செய்வது விவசாயப்பகுதியின் கடமையாகும்.

இலங்கையில் இரண்டு போகம் நெல் விளையும். ஒன்றை முன்மாரி அல்லது கால போகம் என்பர். மற்றதைச் சிறுபோகம் அல்லது பின்மாரி என்பர். சிங்களத்தில் இவை முறையே மகா போகம், யால போகம் என வழங்கப்படும். மழை நிறையவுள்ள காலத்திற் செய்யப்படும் வேளாண்மையே காலபோகம் ; மழை குன்றி நீர் அற்ற காலத்தில் செய்யப்படுவது சிறு போகம். இலங்கையின் விவசாயத்திற் பெரும் பகுதி சிறுபோகத்திற்றுன் செய்யப்படுகிறது. அதனுல் பெரும் போகம் புறக்கணிக்கப் படவே, அப்போகத்தில் வரக்கூடிய விளைவும் வராமற் போய்

நாட்டுக்கு நட்டமுண்டாகிறது. கராச்சித் திட்டம் போன்ற விவசாயத் திட்டங்களை அரசாங்கம் ஆரம்பித்து எவ்வளவு அதிகமாக வயலைச் செய்கை பண்ணலாமோ அவ்வளவுக்கு விவசாயிகள் செய்கை பண்ணவும், பெரும்போகச் சாகுபடியை மேற்கொள்ளவும் ஊக்கங்கொடுத்தது. இந்நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்திராவிட்டால் விவசாய விருத்தி குன்றி நம் நாடு உணவுக்கு வெளிநாட்டவரையே அதிகம் நம்பியிருக்க வேண்டிய நிலைமை உண்டாகியிருக்கும். இயந்திர சாதனங்களைக் கொண்டு விவசாயஞ் செய்யும் முறையை அனுசரிப்பதால் பெரும்படியாக வேளாண்மை செய்யலாம். அதன் பயனாக அவசியமில்லாத செலவுகளைக் குறைக்கவும், விளைவைப் பெருக்கவும், உணவு நிலைமையை விருத்தி செய்யவும் வாய்ப்புண்டாகும்.

### நீர்ப்பாசன இலாக்கா :

மழை குறைவால் இலங்கை எக்காலத்திலாவது இன்னல் அடைந்தது கிடையாது. ஆனால் சில சமயம் பருவந் தப்பி மழை பெய்வதுண்டு. அதனால் அம்மழைநீரைச் சேகரித்து விவசாயிக்குத் தேவையான நேரத்தில் வழங்கவேண்டியது அவசியமாயிற்று. இக்கடமையை நீர்ப்பாசன இலாக்கா அது ஆரம்பிக்கப்பட்ட 1900-ம் ஆண்டு துவக்கம் செய்து வருகிறது. மழை நன்றாகப் பெய்யும் காலங்களில் நீரைத் தேக்கி மழை பெய்யாத காலத்தில் வயல்களுக்குப் பயன்படுத்தக் கொடுப்பதும், அநேக ஏக்கர் தொகையான காட்டு நிலத்தை விளைநிலமாக்குவதுமே நீர்ப்பாசன இலாக்காவின் முக்கியமான வேலையென்று முன்னைநாள் நீர்ப்பாசன அதிகாரியொருவர் கூறினார் ஆரம்பத்தில் இந்த இலாக்கா, ஏற்கனவே சீர்திருத்தப்பட்ட சில பெரிய நீர்ப்பாசன அமைப்புகளைப் பரிபாலித்து வருவதையும், பாழடைந்துபோன புராதனக் குளங்களை மறுபடியும் சீர்திருத்துவதையுமே தமது கடமையாகப் பார்த்துவந்தது. பின்னர் இலங்கை உணவு விஷயத்தில் தனக்குத் தேவையானதைத் தானே உற்பத்தி செய்துகொள்ள வேண்டுமென்ற கொள்கையை அரசாங்கம் மேற்கொண்டதும் இந்த இலாக்காவின் வேலைகள் மிகவும் விரிவடைந்தன. நவீன விஞ்ஞான முறையிற் கிராம நீர்ப்பாசன வேலைகள் திருத்தியமைக்கப்பட்டன. கல்லோயாத் திட்டம் போன்ற பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன வெள்ளத்தடை, வடிகால் வசதி முதலியன செய்யப்பட்டன. செய்கைக்கேற்ற நிலங்களில் உப்பு நீர்வந்து கெடுத்து விடாமற் பாதுகாப்புகள் செய்யப்பட்டன. அரசாங்கத்தின் ஆறுவருட அபிவிருத்தித்திட்டத்தைச் செவ்வனே நடத்துவதற்கு இந்த இலாக்கா

பெரிதும் துணைபுரிந்து வந்தது. இந்த அபிவிருத்தித் திட்டப்படி 1953-ம் ஆண்டு முடிவதற்குள் 80,078 ஏக்கர் நிலத்தைச் சாகுபடிக்கேற்ற நிலமாக மாற்ற வேண்டுமென்பது நோக்கமாயிருந்தது. பராக்கிரம சமுத்திரத் திட்டம், எலஹராத் திட்டம், (மின்னேரியாத் திட்டம், ஹுருலு வாவித் திட்டம்), காகமத் திட்ட விஸ்தரிப்பு, பத்துமேதில்லாத் திட்டம், ரிதிபெந்த எலத் திட்டம், மினிப்பே விஸ்தரிப்புத் திட்டம், வளவைத் தேக்கத் திட்டம் என்பன போன்ற பல நீர்ப்பாசனத் திட்டங்கள் ஆறு வருட அபிவிருத்தித் திட்டத்திற் சேர்ந்தவையாகும், இவற்றுக்கெல்லாம் இந்த இலாக்கா பல முயற்சிகளைச் செய்ய வேண்டியிருந்தது. இவற்றைவிட வேறும் பல திட்டங்களை இவ்விலாக்கா உருவாக்கிற்று. அதன் பயனாக ஏராளமான நிலம் செய்கை பண்ணப்பட்டது. இவற்றுட் சில நாலந்தா ஓயாத் திட்டம், யாழ்ப்பாணக் குடாக் கடற்றிட்டம், முத்துராஜவெலத் திட்டம், அத்தனகல்ல ஓயாத் திட்டம், பொல்கொடைத் திட்டம் என்பனவாகும். இவற்றோடு பலகல்லக் குளமும் சீர்திருத்தப்பட்டது. வேறுஞ் சில சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் செப்பஞ் செய்யப்பட்டன.

நீர்ப்பாசன இலாக்காவின் கடமைகளைப் பின்வருமாறு சுருக்கமாகத் தொகுத்துக் கூறலாம்.

(1) பெரிய நீர்ப்பாசன அமைப்புகளையும் சிறிய நீர்ப்பாசன அமைப்புகளையும் புனர் நிர்மாணஞ் செய்தல். புதிய நீர்ப்பாசன அமைப்புகளை உண்டாக்கல்.

(2) நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் வெள்ளப் பாதுகாப்பளித்தல்.

(3) பெரிய நீர்ப்பாசனத் திட்ட அணைகளிலிருந்து நீர்வீழ்ச்சி மின்சாரத்தை உற்பத்திசெய்தல்.

(4) வடிகால்களை அமைத்தல்.

(5) சதுப்பு நிலங்களை நெல் வயல்களாக மாற்றுதல்.

(6) வயல் நிலங்களில் கடல் நீர் வராமற்றடுத்தல்.

(7) நீர்ப்பாசன அமைப்புகளுள்ள பிரதேசங்களிலும், புதிய குடியேற்றப் பிரதேசங்களிலும் றேட்டு, கால்வாய், முதலிய வசதிகளை ஏற்படுத்துதல்.

(8) இலாக்கா அதிகாரிகளுக்கு வீடுகளமைத்தல், இலாக்காவின் உபயோகத்துக்கான கட்டடங்களைக் கட்டுதல்.

இவ்விலாக்காவில் ஒரு அதிபரும் பதிலதிபரும் ஒரு உதவியதிபரும் நிர்வாக பரிபாலனத்தைக் கவனித்து வருகின்றனர். கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தைச் சேர்ந்த படம் வரை கந்தோருக்கு உயர்தர பிரிவு நீர்ப்பாசன எஞ்சினியர் ஒருவர் தலைவராயிருக்கிறார். நிர்வாக ஒழுங்குகளைக் கவனிப்பதற்கு சிவில் சேவை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நீர்ப்பாசன இலாக்கா மத்தியத் தாபனத்தையும் ஐந்து கிளைகளையும் உடையது. மத்தியத்தாபனம் பிரிவு எஞ்சினியர்களின் தலைமையில் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் உட்பிரிவுகளுக்கு நீர்ப்பாசன எஞ்சினியர்கள் பொறுப்புடையவராயிருப்பர். பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பரிபாலிப்பதும் விஸ்தரிப்பதுமே மத்தியத் தாபனத்தின் கடமையாகும். சிறிய திட்டங்களைச் சீர்திருத்திப் பரிபாலிப்பதும் இவர்களுடைய கடமையே.

மேற்கூறிய ஐந்து கிளைகளின் கடமைகள் பின்வருமாறு :—

(1) ஆறுவருடத்திட்டத்தின் கீழுள்ள சில பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களையமைத்தல்.

(2) இலாக்காவின் பெரிய கட்டட நிர்மாண வேலைகளைப் பற்றித் திட்டம் போடுவதும் செலவு வகைகளைக் கணித்தலும்.

(3) அதிகாரிகளுக்குத் தொழில் நுட்பப் பயிற்சியளித்தலும் புதிய அதிகாரிகளை நியமித்தலும்.

(4) விவசாயமும் சிறிய நீர்ப்பாசனக் கட்டடங்களமைத்தலும். இவற்றைச் செய்ய கிராம விவசாய அதிகாரிகள் காரியாதிகாரிகள் மேற்பார்வையில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(5) கட்டட இயந்திரங்களையமைத்தலும், பரிபாலித்தலும், நிர்வகித்தலும்.

## பல பயன்கள் தரும் திட்டம் :

கிழக்கு மாகாணத்தில் அரசாங்கம் மேற்கொண்டுள்ள கல்லோயாத் திட்டம் ஒரு பெரிய அபிவிருத்தித் திட்டமாகும். இது பல பயன்கள் தரும் ஒரு திட்டமாகும். இதுவரை செய்கை பண்ணப்படாது கிடந்த ஏராளமான நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சவும், நீர் மின்சார சக்தியை உண்டாக்கவும், குழாய்கள் மூலம் தண்ணீர்

பெறவும் வெள்ளப் பாதுகாப்பு ஏற்படுத்தவும், உள்ளூர் நீர்வடி தற்கு ஏதுவாகவும் உல்லாசப் பிரயாணம் செய்வோருக்கு பொழுதுபோக்களிக்கக் கூடியதாகவும் பலவிதமான பயன்களை இத்திட்டமளிக்கிறது. பலபயன்கள் தரும்திட்டமென்பதன் கருத்து இதுதான். முன்னைய நீர்ப்பாசனத் திட்டங்களைப் போல வயல்க ளுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்கு மாத்திரம் பயன்படாமல் இது வேறு பல பயன்களையும் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது.

கல்லோயாத் திட்டம் 1949-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட் டது. இங்கினியகலே என்ற இடத்தில் 3600 அடி நீளமுள்ள ஓர் அணையைக் கட்டினர். மிக உயர்ந்த இடத்தில் இதன் உயரம் 154 அடியாகும். கொழும்புத்துறைமுகத்தைவிட இரண்டரைப் பங்கு பெரிதான 30 சதுர மைல் விஸ்தீரணமுள்ள நீர் தேக்கம் இங்கே யுண்டு. இதன் கொள்ளளவு 2,600,000 கலனாகும். இலங்கையி லுள்ள மற்றெல்லாக் குளங்களிலும் தேங்கும் நீரின் அளவு நீர் இங்கே தேங்கி நிற்கிறது. இதன் இயக்கும் இயந்திரம் பிரதான அணைக்கட்டின் கீழ் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் நீரியக்கு இயந்திரங்களுண்டு.

இத்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ஒரு காலத்தில் இங்கே 33,000 ஏக்கர் நிலம் சாகுபடி செய்யப்பட்டது. பின்னர் அது 26,000 ஆகக் குறைந்தது. திட்டம் பூர்த்தியானதும் 60,000 ஏக்கர் நிலத்தில் இரண்டு போக சாகுபடி செய்யலாம். அதாவது 60.000 ஏக்கரை வருடத்துக்கிருமுறை சாகுபடி செய்வதால் 120,000 ஏக்கரில் விளைவு உண்டாகிறது. முன்னர் வருடமொன் றுக்கு 26,000 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்ட இடத்தில் இப் பொழுது இவ்வளவு ஏக்கர் சாகுபடி செய்வது பெரிய அபிவிருத்தி யென்றே கூறவேண்டும். மேலும், வெள்ளப்பெருக்கினால் வருடா வருடம் பட்டிப்பளை ஆற்றின் வடி நிலத்துக்கு உண்டாகும் சேதம் தவிர்க்கப்படுகிறது, மழை காலத்தில் பெய்யும் நீரைத் தேக்கு வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாதலால் பட்டிப்பளை யாற்று வடி நிலத்தைச் சேதமாக்கும் வெள்ளம் சேகரிக்கப்படு கிறது. அணைக்கட்டினால் தடுக்கப்படும் நீரிலிருந்து 9000 குதிரை சக்தியுள்ள மின்சாரம் உற்பத்தி செய்யலாமெனவும் அது சாதா ரணமாக எல்லாக் காலத்திலும் குறைந்தது 60,000 குதிரை சக்தி யுள்ள மின்சாரத்தை வழங்கக்கூடியதாயிருக்குமெனவும் எதிர் பார்க்கப்படுகிறது. இந்த மின் சக்தியைக் கொண்டு தொழிற்சாலை களை இயக்கலாம். நெல்லுடன் மாற்றுப் பயிரான கரும்பை இப் பகுதியிற் சாகுபடி செய்யலாமென்றும் சீனித் தொழிற்சாலைகளுக்

கும் வேறு தொழிற்சாலைகளுக்கும் மின்சக்தியைப் பயன் படுத்தலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு குடியிருக்கும் சனங்களுக்குக் குழாய் மூலம் நீரும் இத்தேக்கத்திலிருந்து கொடுக்க முடியும்.

இத்திட்டத்தை நிர்வகிப்பதற்கு ஒரு சபை நியமிக்கப்பட்டிருக்கிறது. ஐக்கிய அமெரிக்காவில் தென்னெசிப் பள்ளத்தாக்கில் இவ்வாறே பல பயன்கள் தரு திட்டமொன்று நடைமுறையிலிருந்து வருகிறது. அதன் நிர்வாகத்தை நடத்துவதற்கு அமைக்கப்பட்ட சபை போலவே கல்லோயா அபிவிருத்திச் சபையும் அமைக்கப்பட்டிருக்கிறது. கல்லோயாச் சபைச் சட்டமென ஒரு சட்டம் இருக்கிறது. அதன்படி கல்லோயாப் பிரதேசம் அபிவிருத்தியான பிரதேசமென்றும், அபிவிருத்தியாகாத பிரதேசமென்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இச்சபை ஒரு தலைவரையும் மூன்று அங்கத்தவரையும் கொண்டதாகும். அங்கத்தவரிலொருவர் நிதிமந்திரியால் நியமிக்கப்பட்டவராவர். மற்ற அங்கத்தவர்கள் காணி, காணி அபிவிருத்தியமைச்சினுல் நியமிக்கப்பட்டவராவர். இத்திட்டம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் பரிபாலனத்திற்குட்பட்டதாகும். சபையின் அங்கத்தவர்கள் ஐந்து வருடத்திற்கு உத்தியோகம் புரிவர். ஒரு தவணைக்கு உத்தியோகம் வகித்தவர்களைத் தேவையானுல் மறுபடியும் நியமிக்கலாம். சபையின் நிர்வாகம் ஒரு காரியதரிசியால் நடத்தப்படும். கல்லோயாப் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் அது வளர்ந்துகொண்டுவரும்பொழுது அதன் கீழ் வரக்கூடிய ஏனைய பகுதிகளின் அபிவிருத்தியையும் இச்சபை கவனித்துவரும். இச்சபையின் கடமைகள் பின்வருமாறு :

(1) அபிவிருத்தியடையாத பகுதிகளை அபிவிருத்தி செய்தல்.

(2) நீர்ப்பாசனத் திட்டங்களை அமைத்து நடைமுறையிற் கொண்டுவருதல். நீர் வழங்குதல், வெள்ளப் பாதுகாப்பு, நீர் வடிய வசதியமைத்தல், மின்சார உற்பத்தி செய்தல், அதனை வழங்குதல்.

(3) காடு வளர்த்தல்.

(4) மண்ணரிப்பைத் தடுத்தல்.

(5) சுகாதாரத்தை விருத்தி செய்தல்.

(6) கால்நடை நோய், பயிர் நோய் என்பவற்றைத் தடுத்தல்.

இதன் கீழுள்ள பகுதிகளில் விவசாயத்தையும் கைத்தொழிலேயும் விருத்தி செய்தல், அவற்றின் பொருளாதார வளர்ச்சியையும் கலே வளர்ச்சியையும் கவனித்தல்.

அபிவிருத்தியடைந்த பிரதேசத்தில் நீர்ப்பாசனத்துக்குத் தண்ணீர் கொடுப்பதைத் தவிர மற்ற விஷயங்களிலெல்லாம் இச் சபை சர்வாதிகாரமுடையதாயிருக்கும். நீர்ப்பாசன விஷயத்தில் மாமூலான அரசாங்க நடவடிக்கை இருந்துவரும். அபிவிருத்தி யடையாத பகுதிகளில் காணி, குடியேற்றம், நீர்ப்பாசனம், வீதி யமைத்தல், கட்டடம் நிர்மாணித்தல், காட்டு வளத்தைப் பயன் படுத்துதல் முதலியனவெல்லாம் சபையின் அதிகாரத்திலிருக்கும்

நாட்டின் அபிவிருத்திக்காக அரசாங்க மெடுத்துக்கொண்ட பல பயன்கள் தருதிட்டங்களில் கல்லோயாவே முதற் திட்டமாகும். வளவை கங்கையையும், களனி கங்கையையும் அணைகட்டி மறித்து இதுபோன்ற பல திட்டங்களேயமைக்க அரசாங்கம் உத்தேசித் திருக்கிறது. வளவைகங்கைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் பயனுக 40,000 ஏக்கர் புதுநிலம் வயல் நிலமாக்கப்பட்டு வருடத்துக்கு இரண்டு போக விளேவு உண்டாக்கப்படும். மேலும் இதன் பயனுக 60,000 பரிவலு மின்சக்தி உற்பத்தி செய்யப்படும்.

## குடியேற்றத் திட்டம்:

உணவுற்பத்திக்கும் நிலமில்லாதவர்களுக்கு நிலம் வழங்கு வதற்கும் அரசாங்கம் தனக்குச் சொந்தமான நிலத்தைப் பங் கிட்டுக் கொடுப்பதுமன்றி மக்களுக்குச் சொந்தமான நிலங் களேயும் வாங்கி நிலமில்லாதவர்களுக்குப் பூதானஞ் செய்கிறது. இலங்கையில் சுமார் 19,000 சதுர மைல் விஸ்தீரண முள்ள நிலம் அரசாங்கத்திற்குச் சொந்தமானது. இது இலங்கையின் நிலப்பரப்பில் முக்காற்பங்கெனக் கூறலாம். இந்நிலத்திற் பெரும் பகுதி வரண்ட பிரதேசத்திலுண்டு. அவைகளும் காட்டுநிலமாகவே இருக்கின்றன. ஈரலிப்புப் பிரதேசத்திலுள்ள நிலங்கள் பெரும் பாலும் தேயிலே, இரப்பர், தென்னே ஆகிய வியாபாரப் பயிர்கள் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுகின்றன. இப்பகுதிகளில் சனச்செறிவும் அதிகமாகும்.

பழங்காலத்திலிருந்து வந்த குளங்களேப் புதுப்பித்தும் கல் லோயா போன்ற புதிய நீர்ப்பாசனத் திட்டங்களே ஏற்படுத்தி யும் வரண்ட பிரதேசத்தை நெல் விளேயும் பூமியாக்குவதே அரசாங்கத்தின் கொள்கையாகும். இதன் பயனுக ஒரு காலத்தில்

கணக்கற்ற மக்களின் உயிரைக் கவர்ந்த மலேரியா போன்ற சுரங்கள் அகல்வதற்கேதுவாகும். ''டி. டி. ரி.'' என்னும் கிருமி நாசினியை உபயோகித்ததன் பயனுக மலேரியா இப்பிரதேசங் களில் பெரிதும் குறைந்து விட்டது. இங்குள்ள வறிய விவசாயி களின் நிலைமையைச் சீர்திருத்துவதும் நிலமில்லாத மக்களுக்கு நிலத்தை உதவி அவர்களைக் குடியேற்றுவதும், அதற்காகக் காட் டைத் திருத்தி நாடாக்கிக் கூடிய அளவுக்கு நீர்ப்பாசன வசதி களைச் செய்து கொடுப்பதுமே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

1935-ம் ஆண்டின் 19-ம் இல. காணியபிவிருத்திச்சட்டத்தில் அரசாங்கக் காணியைப் படம் போட்டுப் பிரித்துக் கொடுப் பதற்கான முறை விவரிக்கப்பட்டிருக்கிறது. பிரிவுக் காரியாதிகாரி அல்லது காணிக் குடியேற்ற உத்தியோகத்தர் காணிக்குப் படம் போடும் வேலையைச் செய்வார். முதலில் உள்ளூர் வாசிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னரே வெளியூர் மக்களுக்கு நிலம் பிரித்துக் கொடுக்கப்படும். அரசாங்கக் காணிகளைப் படம் போட்டுப் பிரிப்பதற்குப் பல நியாயங்களுண்டு. கிராம விஸ்தரிப் புக்கும் கிராம வாசிகளின் குடியேற்றத்திற்கும் வசதியளித்தல், கிராமங்களிலுள்ள ஆடு மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் ஒதுக்கி விடுதல், பாடசாலைகள், ஆஸ்பத்திரிகள் முதலிய தாபனங் களுக்கு வீதிகளையும் கட்டடங்களையும் அரசாங்கம் அமைத்தல், வரண்ட பிரதேசத்திற்கு வந்து உணவுப் பொருள்கள் உற்பத்தி செய்ய விரும்பும் நடுத்தர வகுப்பு இலங்கையருக்குக் காணிகளை வழங்குதல் என்பன இந்நோக்கங்களுட் சிலவாகும். காணி வழங் கும் பொழுது கொடுக்கப்படும் சாசனத்தில் காணியை எவ்வாறு செய்கை பண்ணவேண்டும், எவ்வாறு வேறு பயன்களுக்கு உபயோகப்படுத்தவேண்டு மென்றெல்லாம் கூறப்பட்டி ருக்கும். காணியைப் பெறுவோர் அவ்விதம் நடப்பதவசியமாகும். ஆட்சிசெய்யும் காலம் வரைக்கும் அவர் காணியின் மதிப்பில் இரண்டு வீதத்தை அரசாங்கத்துக்கு வரியாகக் கொடுக்க வேண்டும். மேலும், அக்காணியைத் தனது குடும்பத்தவருக்கு ஓரளவுக்கு மேல் பிரித்துக் கொடுக்கக் கூடாதெனவும் தனது குடும் பத்தைச் சேராத வேறு குடும்பத்தவருக்கு, தானில்லாத காலத் தில் பராதீனப்படுத்தக் கூடாதெனவும் விதியுண்டு.

அரசாங்கக் காணியை மிகவும் நியாயமாகவே பிரித்துக் கொடுக்க வேண்டுமெனவும் சட்டம் விதிக்கிறது. காணிக்கு விண் ணப்பம் செய்பவர்கள் தமது தேவைகளைக் காணிக்கச்சேரி என்று சொல்லப்படும் மகாநாட்டில் வந்து தெரிவித்துக் காரியாதிகாரி மூலம் காணியைப் பெற்றுக்கொள்வார்கள். காணிக்கச்சேரி செய்

யும் முடிவில், அதிருப்தி கொண்டுள்ளவர்கள் காணியதிகாரிக்கு மனுச்செய்யலாம். கிராம விஸ்தரிப்பு விஷயத்தில் கிராமவாசிக ளுக்குக் காணி கொடுக்கும்பொழுது ஒவ்வொரு குடும்பத்தவரும் திருப்திகரமாக வாழ்க்கை நடத்தக்கூடிய வகையில் காணியை வழங்குவதே அரசாங்கத்தின்கொள்கையாகும். வீடு கட்டி இருந்து கொண்டு நிலத்தைச் செய்கை பண்ணுவதற்குத் தேவையான பொருளுதவியையும் அரசாங்கம் செய்கிறது. சிறுவர்களின் கல்விக் காகப் பாடசாலைகளையும், வைத்திய தேவைகளுக்கான வைத்திய சாலைகளையும், மருந்துச்சாலைகளையும், வயற் செய்கைக்கான நீர்ப் பாசன வசதிகளையும், வீட்டுத்தேவைக்குத் தண்ணீர் பெறுவதற் குப் பொதுக்கிணறுகளையும் அரசாங்கம் அமைத்துக் கொடுக்கிறது.

வரண்ட பிரதேசக்குடியேற்றம் ஒரு விரிவான திட்டத்தின் பிரகாரமே நடத்தப்படுகிறது. நிலமானது வயற் காணியாகவும், வீட்டுத் தோட்டமாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். பின்னர், காணியபிவிருத்தி இலாக்கா காட்டை வெட்டித் திருத்திக்கொடுக் கும். நீர்ப்பாசன இலாக்கா கால்வாய்களை வெட்டிக் கொடுக்கும். விவசாய இலாக்கா மண்ணை ஆராய்ச்சி செய்து எத்தகைய பயிர் களைச் சாகுபடி செய்யலாமென்று யோசனை கூறும். குடிசைகள், ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள், விளையாட்டு மைதானங்கள் என்ப வற்றைக் காணியபிவிருத்தி இலாக்கா அமைத்துக் கொடுக்கும். இயந்திர சாதனங்களை உபயோகித்து உழுவதற்கு வசதியாகவே வயற் காணிகள் அமைக்கப்படும். இவையெல்லாம் முடிந்த பின் னர் மக்கள் வந்து குடியேறுவர். அரசாங்கம் அவர்களுக்கு எல்லா வித வசதிகளையும் செய்துகொடுக்கும். நடுவதற்குரிய நாற்று மற் றைய உபகரணங்களென்பனவெல்லாம் அரசாங்கத்தால் வழங் கப்படும். வீட்டுத் தோட்டத்தில் வளர்ப்பதற்கான ஆடு மாடுகளை யும் அரசாங்கம் வழங்கும். தேவையான பொருள்களை வாங்கவும் பணத்தைக் கடனெடுக்கவும், உற்பத்திசெய்த பொருட்களை விற் கவுத் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் உதவி புரியுமாதலால் அவற் றையமைக்கவும் அரசாங்கம் உதவி செய்யும். குடியேறிய மக்க ளிடையே சமூகத் தொடர்புண்டாகவே ஒரு புதிய சமூகம் உதயமாகும்.

இந்தக் குடியேற்றத் திட்டத்தை அரசாங்கம் 1930 ஆம் ஆண்டு ஆரம்பித்தது. வரண்ட பிரதேசத்தைச் சேர்ந்த மின்னே ரியா, காகம, தப்போவா ஆகிய பகுதிகளிற்றான் முதலில் குடி யேற்றம் துவங்கிற்று. மலேரியாச் சுரம் இப்பகுதிகளிலிருந்தபடி யால் முதலில் மக்கள் குடியேறப் பின்னின்றார்கள். ஆனால் மலே ரியாச்சுரம், நீக்கப்பட்டதும், இலங்கையின் தென் பகுதியிலிருந்து

ஏராளமான சனங்கள் வரண்ட பிரதேசத்தில் வந்து குடியேறினர். இன்று இப்பகுதி பாலுந் தேனும் நிறைந்த வளம் மலிந்த நாடாகி வருகிறது.

## ஏற்றுமதி விவசாயப் பொருட்கள் :

ஈரலிப்புப் பிரதேசமானது 40 லட்சம் ஏக்கர் கொண்டது. இது மேல்மாகாணம், மத்திய மாகாணம், சப்ரகமுவா மாகாணம் என்பவற்றையும் ஊவா மாகாணம் என்பவற்றின் பகுதிகளையும் உள்ளடக்கியது. இலங்கையின் மூன்று பிரதான ஏற்றுமதிப் பொருள்களான தேயிலை, இரப்பர், தேங்காய் என்பன இங்கே சாகுபடி செய்யப்படுகின்றன. இலங்கையின் வருவாய் பெரும்பாலும் இந்த மூன்று பொருள்களிற்ருன் தங்கியிருக்கிறது. அபிவிருத்திக்கான மூலப் பொருள்களை வாங்கவும் போகப் பொருள்களை இறக்குமதி செய்யவுந் தேவையான பணம் இந்த வருமானத்திலிருந்துதான் கிடைக்கிறது. உணவுக்கு அவசியமான நெல்லும் இப்பகுதிகளில் அநேக இடங்களில் விளைவிக்கப்படுகிறது, கொக்கோ, கறுவா, புகையிலை, புல்லெண்ணெய்ப் பயிர், ஏலம். பாக்குப் போன்ற சிறிய ஏற்றுமதிப் பொருட்களும் இப்பகுதியிற் செய்கைபண்ணப்படுகின்றன.

1952–ல் 567,000 ஏக்கர் தேயிலை பயிராயிற்று. 6,000 அடி உயரம் வரை தேயிலை வளரும். இதற்கு வருடத்தில் 80 துவக்கம் 120 அங்குல மழை வேண்டும். 4000 அடிக்கு மேல் வளரும் தேயிலை உயர்புலத் தேயிலை யெனப்படும். 2000 அடிக்கு மேல் வளர்வன மத்தியபுலத் தேயிலை யெனப்படும். 2000 அடிக்கு கீழே வளர்வன கீழ்புலத் தேயிலை யெனப்படும். உயர்புலத் தேயிலை குணத்திற் சிறந்தது. அதற்கு நல்ல மதிப்புண்டு. தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வோரில் 80 வீதத்தினர் தென்னிந்தியத் தொழிலாளர். 1952 ஆம் ஆண்டில் 7230 லட்சம் ரூபாய் பெறுமதியான 3140 லட்சம் இருத்தல் தேயிலை ஏற்றுமதியாயிற்று.

தலவாக்கொல்லையிலுள்ள சென்கூம் தோட்டத்தில் ஆய்கூடமும் ஆய் கருவிகளும் உள்ள தேயிலையாராய்ச்சி நிலையமொன்றுண்டு. தேயிலை சம்பந்தமான வியாதிகளைப் பற்றிச் சாத்திர முறையில் ஆராய்ச்சி செய்வதும் அவற்றைப் போக்கடிக்க வழிவகைகளைத் தேடுவதுமே இவ்வாய்கூடத்தின் முக்கிய வேலையாகும். சமீப காலத்தில் தேயிலையில் ஒரு வகையான் பூச்சி விழுந்து தேயிலைத் தொழிலுக்கு ஆபத்தை உண்டாக்கி வந்தது.

மேலும் தேயிலை விருத்திக்கான பல ஆராய்ச்சிகளைப் இவ்வாராய்ச்சி நிலையம் மேற்கொள்ளும். இந்நிலையம் 1925-ம் ஆண்டு நிறுவப்பட்டது.

1952 ஆம் ஆண்டில் 657,000 ஏக்கரில் இரப்பர் செய்கை பண்ணப்பட்டது. இரப்பர் 2000 அடிக்குக் கீழான உயரத்தில் நன்கு வளரும். வருடத்தில் 80 அங்குல மழை வீழ்ச்சி அதற்கு அவசியம். இரப்பர்த் தோட்டங்களில் பெரும்பாலானவை மேல் மாகாணம், மத்திய மாகாணம், தென் மாகாணம், சப்ரகமுவா மாகாணம் ஆகிய இடங்களிற் காணப்படுகின்றன. இங்கேயும் இந்தியத் தொழிலாளரே பெரும்பாலும் காணப்படுகின்றனர். ஆனுல் சிறுபான்மை இலங்கைத் தொழிலாளருமுண்டு. 60 விகிதத்தினர் இந்தியத் தொழிலாளர். 40 விகிதத்தினர் இலங்கைத் தொழிலாளர். 1952-ல் ஏறத்தாள 3630 லட்சம் ரூபாய் பெறுமதியான 206,244,000 இருத்தல் இரப்பர் ஏற்றுமதி செய்யப்பட்டது.

சர்வதேச நிலையைப் பொறுத்து இரப்பருக்கு உயர்ச்சியும் வீழ்ச்சியுமுண்டாகும். இரண்டாவது மகாயுத்தத்தின் போது மலாயா ஜப்பானியர் கையிற் சிக்கிய காலத்தில் நேச தேசங்களின் இரப்பர்த் தேவையை இலங்கையே பூர்த்திசெய்ய நேரிட்டது. யுத்தம்முடிய இலங்கைஇறப்பரின்விலை குறைந்தது. மலாயா இரப்பர் சந்தைகளில் தோன்றியது. அன்றியும் இந்தோனீஷியாவிலும் தென்னமெரிக்காவிலும் இரப்பர் உற்பத்தி செய்யப்பட்டதால் இலங்கைஇரப்பருக்குப் போட்டியுண்டானது. ஐக்கிய அமெரிக்காவில் செயற்கை இரப்பர் செய்யப்பட்டது. இக்காரணங்களால் இலங்கை இரப்பரின் விலை வீழ்ந்தது. கொரியா யுத்தம் துவங்கினதும் இலங்கை இரப்பரின் விலை ஏறிற்று. சீனுவோடு இரப்பர் உடன்படிக்கை செய்யப்பட்டதாலும் இலங்கை இரப்பர் நிலைமை வீழ்ச்சியடையாதிருந்தது. ஆனுல் இரப்பரைப் போலவே இரப்பரின் விலையும் நெகிழ்ச்சியுடையதாயிருக்கும். வேறு தேசங்களின் போட்டியிருப்பதால் இரப்பர் விலை எப்பொழுதும் ஒரே மாதிரி இருக்காது. இதனுல் இரப்பர்த் தொழிலுக்கு உதவியளிப்பதற்காக அரசாங்கம் பல திட்டங்களை வகுத்திருக்கிறது. இதன் பயனுக இறப்பர்த்தோட்டக்காரருக்குப் பணஉதவிசெய்யப்படும். நல்லஇரப்பர்மரங்களை நாட்டவும், இரப்பர்த்தோட்டங்களை யழித்துத் தேயிலை முதலிய பயிர்களைச் சாகுபடி செய்யவும் இரப்பர் புனர் நிர்மாணத் திட்டப்படி அரசாங்கம் கடன் கொடுக்கும்.

அகலவத்தையில் டாட்டன் பீல்டு தோட்டத்தில் இரப்பர் ஆராய்ச்சிநிலையமொன்றுண்டு. இது இரப்பர் பயிரிடுதல், பசளையிடுதல், இரப்பர் நோய்களைத் தடுத்தல் முதலிய விஷயங்களைப் பற்றி விஞ்ஞான முறையில் ஆராய்ந்து யோசனை கூறும்.

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் தென்னை பெரிய இடத்தை வகிக்கிறது. இலங்கையில் 10 லட்சம் ஏக்கர் தென்னந் தோட்டமுண்டு. இதில் மூன்றிலிருபகுதி சிறு தோட்டங்களாகும். அதாவது 10 ஏக்கரும் அதற்குக் குறைவானவையுமாகும். தென்னந் தோட்டத் தொழில் சிறு தோட்டக்காரரின் தொழில் எனலாம். தென்னையினால் பலவகையான பயனுண்டு. தேங்காய், கொப்பரு, தேங்காயெண்ணெய், பிண்ணாக்கு, தும்பு, கயிறு, கள்ளு, சாராயம் என்பன தென்னையிலிருந்து பெறும் சில பொருட்களாகும். கள்ளையும் சாராயத்தையும் விட மற்றவையெல்லாம் ஏற்றுமதிப் பொருட்களாகும். 1952-ல் 2460 லட்சம் ரூபாய் பெறுமதியான தெங்குப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

லுணுவிலையிலுள்ள பண்டிருப்புத் தோட்டத்தில் ஒரு தென்னை ஆராய்ச்சி நிலையம் உண்டு. தென்னை நாற்றிடல், நல்ல நாற்றைத் தெரிதல், மண்ணாராய்ச்சி செய்தல், பசளையிடுதல் என்பன பற்றி இந்த நிலையத்தில் விஞ்ஞான முறைப்படி ஆராயப்படுகின்றன.

இலங்கையின் இதர சிறு ஏற்றுமதிப் பொருள்கள் வருமாறு: கண்டி, மாத்தளைப் பகுதிகளில் கொக்கோ; மேல் மாகாணத்திலும் தென் மாகாணத்திலும் கறுவா; புல்லெண்ணெய்-மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய பகுதிகளில்; புகையிலை-யாழ்ப்பாணம், தும்பறை, மாத்தளை. குருணாகல் என்னும் பகுதிகளில்; ஏலம்-மத்தியமாகாணத்தில்; பாக்கு-கேகாலைப்பகுதியிலும் வேறு பல பகுதிகளிலும்.

## விவசாயப் பகுதி :

இதுவரை கூறியவற்றால் விவசாயப் பகுதியின் வேலைகளைப் பற்றி ஒருவாறு அறியக்கூடியதாயிருக்கும். இப்பகுதி ஒரு அதிகாரியையும், இரண்டு பதில் அதிகாரிகளையும், இரண்டு உத்வி அதிகாரிகளையும், ஒரு கந்தோர் நிர்வாகியையுமுடையது. கணக்கு, பண விஷயம் முதலியனபற்றி மேற்பார்வை செய்ய ஒரு கணக்கதிகாரியுமுண்டு.

இப்பகுதியின் வேலைகளை 5 கிளைகளாகப் பிரிக்கலாம். முதற்கிளை தேயிலை, இரப்பர், தென்னை, ஆராய்ச்சி நிலையங்களைக் கொண்டது. இவ்வாராய்ச்சி நிலையங்களொவ்வொன்றும் ஒவ்வொரு தலைவரையும் தொழில் நுட்பமறிந்த பல அதிகாரிகளையுமுடையது. இலங்கையில் தேயிலை, இரப்பர், தென்னை என்பவற்றை நல்ல முறையில் வளர்ப்பதற்குரிய ஆராய்சிகளை இவ்வாராயச்சி நிலையங்கள் நடத்தும்.

விவசாய ஆராய்ச்சி நிலையமொன்றுண்டு. (1) உயர்தர விவசாய அதிகாரி ஒருவர் தலைமையில் தாவர ஆராய்ச்சிப் பகுதியொன்றுண்டு. இவருக்கு உதவியாக இரண்டு ஆராய்ச்சி அதிகாரிகளுளர். இவர்களில் ஒருவர் வடமத்தியமாகாணத்திலும் மற்றவர் கிழக்கு மாகாணத்திலும் கடமையாற்றுவர். அவ்வப்பகுதிகளில் வளரும் தானியம், பயிர் என்பவற்றைப்பற்றி இவர்கள் ஆராய்ச்சி நடத்துவர். (2) ஒரு இரசாயன விற்பன்னர் தலைமையில் இரசாயனப் பகுதியொன்றுண்டு. இவர் மண்ணுராய்ச்சியுடன் இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள மண் வகைகளை ஆராய்ந்தும், விவசாயம் சம்பந்தமான இரசாயன ஆராய்ச்சியைச்செய்தும் வருவார்: (3) கிருமி ஆராய்ச்சிப் பகுதி யொன்றுண்டு. இப் பகுதித் தலைவர் பயிர்நோய்களைப்பற்றி ஆராய்வார். (4) பயிர் நோய்ப் பகுதி பயிர் நோய் அதிகாரியின் தலைமையிலுண்டு. இவர் இலங்கையில் உண்டாக்கப்படும் பயிர்களுக்கு வரும் நோய்களைப்பற்றி ஆராய்ந்து ஆலோசனை கூறுவார். (5) தோட்டக் கலைப் பகுதி, (6) புகையிலைப்பகுதியென்பன முறையே தோட்டக்கலை நிபுணர், புகையிலை நிபுணர் என்போர் தலைமையிலுண்டு. (7) முறையான தாவரப் பகுதி, (8) மண் பாதுகாப்புப் பகுதியென்பன ஆராய்ச்சி நிபுணர் இருவர் தலைமையிலுண்டு. (9) விவசாய எந்திரப் பகுதி விவசாய எஞ்சினியர் தலைமையிலுண்டு, இவர் விவசாய எந்திரங்களைப் பற்றி ஆராய்ந்து யோசனை கூறுவதுடன் பிரசாரமுஞ் செய்வார். (10) கடைசியாகப் பேராதனை, ஹக்கலை, ஹெனரத்கொடை ஆகிய இடங்களிலுள்ள தாவரத் தோட்டங்களை மேற்பார்வை செய்யும் பகுதியுண்டு. இத்தாவரத் தோட்டங்களில் பலவகையான தாவரங்களை வளர்த்து ஆராய்ச்சி செய்யப்படுகிறது. இவற்றுள் இலங்கையில் வளரக்கூடிய தாவரங்களெவையென்ற ஆராய்ச்சி நடைபெறும். இலங்கைச் சுவாத்தியத்துக்கும் மண்ணுக்குமேற்ற தாவரங்களெவையென்ற ஆராய்ச்சி இங்கே நடைபெறும்.

இலங்கையின் பல பாகங்களிலும் நிறுவப்பட்டிருக்கும் அரசாங்க விவசாயப் பண்ணைகளிலுள்ள கால்நடைகளைப் பரிபாலிப்பதற்காக மிருக பரிபாலன சேவையும் மிருக நோய்ச்சிகிச்சை நிலை

யமும் உண்டு. விவசாய அதிகாரி பொறுப்பிற் பல விவசாயப் பிரிவுகளுண்டு. அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட பல உணவுற்பத்தித் திட்டங்கள், குடியேற்றத் திட்டங்கள், விவசாயத் திட்டங்களென்பன இவ்வதிகாரியால் மேற்பார்வை செய்யப்படும்.

விவசாயக் கல்வியை ஊட்டுவதும் பிரசாரஞ் செய்வதும் விவசாயப் பகுதியின் வேலைகளிலொன்ருகும். பேராதனையில் ஒரு விவசாயக் கல்லூரியும், ஆராய்ச்சி நிலையமுமுண்டு. பெண்கள் விவசாயம் பயில்வதற்காகக் குண்டசாலையில் ஒரு பாடசாலையுண்டு. இலங்கையின் பலபாகங்களில் செய்முறைக் கல்வி போதிக்கும் விவசாயப் பண்ணைகள் பலவுள. விவசாயப் பிரசாரம் விவசாய அதிகாரி ஒருவரின் தலைமையில் நடைபெற்று வருகிறது. பல விதமான பயிர்ச்செய்கை, கால் நடை வளர்ப்பு முதலிய விஷயங்கள் பற்றிச் சினிமாப்படம் மூலமும், பொருட்காட்சி மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலமும், சிறு புத்தகங்கள் மூலமும், சுவரொட்டி விளம்பரங்கள் மூலமும் இப்பகுதி பிரசாரஞ் செய்யும்.

## சமூக சேவை

சமூகத்திலுண்டாகும் எதிர்பாராத இடையூறுகளை நீக்கிச் சனங்களுக்குச் சகாயமளிக்கும் தொண்டு இருபது வருடங்களுக்கு முன்னர்தான் திட்டப்படி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. அதற்குமுன் வெள்ளத்தினாலோ, பொருளாதார மந்தத்தினாலோ, நோயினாலோ, காற்றினாலோ சனங்களுக்கு ஆபத்துண்டானால் அதை நீக்குவதற்கு அவர்கள் பெரும்பாலும் சுற்றத்தவரையும் தயாள சிந்தையுடைய செல்வர்களையும் பொது மக்கள் ஆதரவையும், சிலவேளை அரசாங்கத்தின் நன்கொடையையும் எதிர்பார்த்திருந்தனர். 1930-ம் ஆண்டு தொடக்கம் டொனமூர் அரசியற்றிட்டம் அமுலுக்கு வந்ததுமுதல் இன்னலுற்ற குடிசனங்களின் நன்மையைக் கவனிக்கும் விஷயத்தில் அரசாங்கம் சிரத்தை எடுத்தது. 1930-ம் ஆண்டிலிருந்து உண்டான பொருளாதார மந்தத்தின் பயனாக ஏற்பட்ட நிலைமையை விசாரிக்க அக்காலத்தில் சிவில் சேவையிலிருந்த எம். எம். உவெடர்பேண் நியமிக்கப்பட்டார். பின்னர், 1934-ம், 35-ம் ஆண்டுகளில் உண்டான மலேரியாப் பரவு நோய் காரணமாக சிவில் சேவையைச் சேர்ந்த எச். ஈ. நியூன்ஹாம் என்பவர் ஒரு விசேஷ அறிக்கை தயார் செய்தார். ஏழைகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் உதவி செய்வதற்கு அக்காலத்தில் அரசாங்கம் ரூபா 86,000,000 செலவு செய்தது. பின்னர், அக்காலத்து

வர்த்தக அமைச்சின் முயற்சியினுல் பொருளாதார ஆராய்ச்சிகள் பல நடத்தப்பட்டன. இவற்றின் பயனுகக் கிராமங்களில் எவ்வளவு வறுமையும் துன்பமும் நிலவுகிறதென்பதை அரசாங்கம் தெட்டத்தெளிய அறிந்துகொண்டது. எனவே, கிராமவாசிகளின் இவ்வறுமையையும் நிச்ச நிரப்பையும் போக்குவதற்கு ஒரு தாபனம் வேண்டுமென அரசாங்கம் உணர்ந்தது. 1944-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

(அ) இப்போது நடைமுறையிலிருந்து வரும் சமூக சகாயத்தையும் அதுபோன்ற சேவையையும் ஆராய்தல்;

(ஆ) வயோதிபர். நோயாளர். வேலையற்ருேர், விதவைகள், அனுதைகள் ஆகியோருக்கு சகாயமளித்தல் பற்றி ஆராய்தல்.

என்னும் விஷயங்கள் இவ்விசாரணைக் குழுவின் பரிசீலனைக்கு விடப்பட்டன. இக்குழு சமர்ப்பித்த அறிக்கை 1947-ம் ஆண்டில் அரசாங்க அறிக்கையாகப் பிரகடனஞ் செய்யப்பட்டது.

## சமூகசேவை இலாக்கா :

பொதுசன சகாயம், நஷ்டஈடு, தர்மத்தாபனங்கள், சமூகஇன்சூரன்ஸ் என்ற இன்னேரன்ன விஷயங்களை மேற்பார்வை செய்வதற்காக 1948-ம் ஆண்டு மேலே கூறிய விசாரணைக் குழுவின் சிபார்சின்படி சமூக சேவை இலாக்காவென ஒரு புதிய இலாக்கா நிறுவப்பட்டது. மேற்படி விசாரணைக்குழு வேறும் பல சிபார்சுகளைச் செய்திருந்தது. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு :-

(1) பிரசவ சகாயம், அந்திமக் கிரியைகளுக்கான சகாயம் என்பன உட்பட ஒரு சுகாதார இன்சூரன்ஸ் திட்டம் அமைத்தல்;

(2) வேலையற்ருேர் இஸ்சூரன்ஸ் திட்டம்;

(3) வேலையற்ருேர் சகாயத்திட்டம்;

(9) சேம நிதித் திட்டம்.

இச் சிபார்சுகளையும் இந்த இலாக்காவே கவனிக்கவேண்டுமெனக் கூறப்பட்டது. இவ்விலாக்கா தொழில், சமூக சேவை அமைச்சின் கீழ் இருந்து வந்தது. இவ்விலாக்கா ஒரு அதிகாரியின் தலைமையில் விடப்பட்டது. தொழிலாளர் நட்ட ஈட்டுக்கும்

இவரே பொறுப்புடையவராக்கப்பட்டார். இவருக்கு கீழ் ஒரு பதிலதிகாரி நியமிக்கப்பட்டார். அவருக்கு அடுத்தபடியாகப் பல உதவி அதிகாரிகள் கடமையாற்றினர். இவர்களே தொழிலாளர் நட்ட ஈட்டுக்கும் உதவியதிகாரிகளாய்க் கடமையாற்றினர். இவர்களை விடப் பல நிர்வாக அதிகாரிகளும், சமூக சேவை அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். இலாக்காவின் பண விஷயங்களை ஒரு கணக்கதிகாரி பார்வையிட்டார். பொதுசன சகாயம் வழங்குவதற்கும், சமூகசேவை நிர்வாகம் நடத்துவதற்கும் காரியாதிகாரிகளும், கிராமத் தலைமைக்காரரும், தபாற் கந்தோர் அதிகாரிகளும் துணை புரிந்தனர்.

1939-ம் ஆண்டு வறுமைச் சட்டப்படி தேவையான சந்தர்ப்பங்களில் சகாயம் செய்யப்படுகிறதா என்பதை இவ்விலாக்கா கவனித்துக்கொள்ளும். வறியோர் சகாயம் பின்வரும் விஷயங்களில் அனுமதிக்கப்படும் :

(1) முதியோருக்கும் பலவீனருக்கும் மாதம், மாதம் சகாயப் பணம் வழங்கல். (2) நெருப்பினுலோ, விபத்தினுலோ, சூருவளிக்காற்றினுலோ கட்டடங்களுக்குச் சேதமுண்டானுற் சகாயம் வழங்கல். (3) கடந்த மகாயுத்தம் காரணமாக ஏழைச் சனங்களுக்குண்டான சேதத்தை நிவர்த்தி செய்தல். (4) சமயச் சங்கங்கள் நடத்தும் வயோதிபர் சங்கம், சமூக சேவைச் சங்கம் முதலிய சங்கங்களுக்கு உதவி நன்கொடையளித்தல். (5) யுத்தத்தில் அங்கவீனர்களாகிய ராணுவவீரர் முயற்சியிலீடுபடுதற்குப் பண உதவி செய்தல். (6) வேலையற்றோர்க்குச் சகாயஞ் செய்தல். (7) பரவுநோய், வெள்ளம், மழையின்மை, விளைவு நட்டம் என்பவற்றுல் உண்டாகும் சேதத்துக்கு நிவர்த்தியளித்தல்.

தொழிலாளர் தமது வேலையின்போது விபத்துக்குட்பட்டால் அல்லது நோய்வாய்ப்பட்டால் அதற்கு நட்ட ஈடு அளித்தல். காயமுற்ற தொழிலாளரின் முறைப்பாடுகளை விசாரித்து நட்ட ஈடளிப்பது அவ்விலாக்கர்த் தலைவர் அல்லது உதவித் தலைவர் கவனிக்கவேண்டிய விஷயங்களாகும்.

மேலும் இவ்விலாக்கா பல தர்மத் தாபனங்களை நடத்தி வருகிறது. அரசாங்க வயோதிபர் விடுதி, அனுதைகள் விடுதி, செவிடர், குருடர் தொழிற்சாலை என்னும் இத்தகைய தாபனங்கள் இவற்றிற் சிலவாகும். சமூகசேவை விசாரணைக்குழுவினர் சிபார்சு செய்த பல சமூக இன்சூரன்ஸ்சுத் திட்டங்களையும் இவ்விலாக்காவே நடைமுறைக்குக் கொண்டுவரும். இத்திட்

டங்களை அமுல் நடத்துவதற்காகச் சில பூர்வாங்க வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. சர்வதேச தொழிற்தாபனத்தைச் சேர்ந்த மொறிஸ் சிடாக்கு என்பவர் இத்திட்டங்களைப் பரிசீலனை செய்து சுகாதாரம், வேலையின்மை என்பவற்றைப்பற்றிய இன்சூரன்ஸ் திட்டத்தையும் தேசீய சேமநிதித் திட்டத்தையும் தயார் செய்திருக்கிறார். நாட்டின் பொருளாதார நிலைமையை ஆராய்ந்து இத்திட்டங்களை இவ்விலாக்கா சிறிது மாற்றியமைத் திருக்கிறது.

அரசாங்க வருமானத்தின் பெரும் பகுதி சமூக சேவைக் குச் செலவு செய்யப்படுகிறது. டொனமூர் அரசியற்றிட்டம் அமுலுக்கு வருமுன் 1925-1930 வரை அரசாங்க வருமானத்தில் 16 வீதமே சமூக சேவைக்குச் செலவு செய்யப்பட்டது. இலங்கை சுதந்திரமடைவதற்கு முன் வருமானத்தில் 26 வீதம் இவ்வாறு செலவு செய்யப்பட்டது. 1947--51 வரை வருமானத் தில் 41 வீதம் சமூக சேவையிற் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

## கல்வி

### கல்வி இலாக்கா :

இலங்கையின் கல்வித் திட்டம் கல்வியமைச்சின் பரிபாலனத் திலிருக்கிறது. ஆரம்பக் கல்வியும் மேற் கல்வியும் கல்வி இலாக் காவினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. கல்வித் திட்டத் தினமைப்பு, மேற்பார்வையென்பனவற்றை இவ்விலாக்கா மத்திய கல்வியாலோசனைச் சபைகளின் யோசனைப்படியும் தல ஆலோசனைச் சபைகளின் யோசனைப்படியும் நடத்தி வருகிறது.

கல்வி இலாக்காவுக்கு வித்தியாதிபதி தலைவர். அவருக்குத் துணையாகப் பிரதி வித்தியாதிபதிகளும், உதவி வித்தியாதிபதிகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாகாணக் கல்வி, நிர்வாகம் வித்தியாதிகாரிகளால் நடத்தப்படுகிறது. இவர்களுக்குத் துணையாகப் பகுதி வித்தியாதரிசகர்களும் வட்டார வித்தியாதரிசகர்களுமிருக்கிறார்கள். மாகாணங்களிலும் வட்டார்ரங்களிலும் கல்வி நிலை குறையாமல் ஆக வேண்டியவற்றைச் செய்வதே இவர்களின் முக்கியமான கடமைகளாகும். தேகப்பயிற்சிக் கல்விக்குப் பொறுப்பாக ஒரு உதவி வித்தியாதிகாரி கடமையாற்றுகிறார். அவரின் கீழ் பகுதித்தேகப்பயிற்சி வித்தியாதரிசிகளும் வட்டார வித்தியாதரிசிகளும், வித்தியாதரிசினிகளும் கடமையாற்றுகிறார்கள். இலாக்காவின் பண விஷயங்களைக் கவனிக்க ஒரு பிரதம கணக்காளரும் பல

உதவிக் கணக்காளர்களுமிருக்கிறார்கள். நாட்டில் நடத்தப்படும் பலவகையான பரீட்சைகளையும் ஒழுங்கு செய்து நடத்துவதற்குப் பரீட்சை இலாக்காவென ஒரு பகுதி பரீட்சையதிகாரியின் தலைமையில் நிறுவப்பட்டிருக்கிறது.

பாடசாலைகளில் உபயோகிப்பதற்காக நல்ல பாட நூல்களைப் பொறுக்கியெடுத்துச் சிபார்சு செய்வதற்குப் பாட நூற் பிரசுர சபையென ஒரு தாபனம் 1950-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. பாடநூற் கையெழுத்துப் பிரதிகளை வாசித்து அதிற் செய்ய வேண்டிய திருத்தங்களையும் இச்சபை பாட நூலாசிரியருக்கு வழங்கும். இச்சபையின் தலைவர் வித்தியாதிபதியாவர்.

கல்வி சம்பந்தமான விஷயங்களில் வித்தியாதிபதிக்கு ஆலோசனை கூறுவதே மத்தியக் கல்வியாலோசனைச் சபையின் கடமையாகும். மேலும் இச்சபை கல்வியபிவிருத்திக்கான தனது யோசனைகளையும் சமர்ப்பிக்கலாம். இச்சபையில் பாடசாலை முகாமைக்காரரும், ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளும் பிரசித்தி பெற்ற கல்வி நிபுணரும் வேறு சிலரும் அங்கம் வகிப்பர்.

பட்டின சபைப் பகுதிகளிலும் காரியாதிகாரிப்பற்றுக்களிலும் தலக் கல்வியாலோசனைச் சபைகளுண்டு. இவை மந்திரியினால் நியமிக்கப்படும். இவற்றில் மாகாணக் கல்வி உத்தியோகத்தரும், அவ்வப் பகுதிகளின் பாராளுமன்ற அங்கத்தவரும், வேறு சிலரும் அங்கம் வகிப்பர். அவ்வப்பகுதிகளின் கல்வித் தேவைகளைப்பற்றி வித்தியாதிபதிக்கு ஆலோசனை கூறுவதே இச்சபைகளின் கடமையாகும்.

## கல்வி முறை:

பாலர் பிரிவு துவக்கம் சர்வகலாசாலைவரை கல்வி இலவசமாகப் பயிற்றப்படுகிறது. 1943-ல் நியமிக்கப்பட்ட கல்வி விசேடக் கமிட்டியின் சிபார்சின்படியே மேற்படி இலவசக் கல்வி முறை அமுலுக்கு வந்தது. இது 1945-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. தேவையான சந்தர்ப்பங்களில் வறிய மாணவருக்கு இலவச விடுதி வசதிகளுமளிக்கப்படும். இதன் பயனாகக் கல்வி உபமானியம் வர வரக் கூடிக்கொண்டே வருகிறது. 1946-ல் கல்விக்கென அரசாங்கம் 430 லட்சம் ரூபாய் ஒதுக்கிற்று. 1953—54 வரை இச்செலவு 1565 லட்சமாக உயர்ந்து விட்டது. 1945-ம் ஆண்டுக்கு முன் சிங்களப் பாடசாலைகளிலும் தமிழ்ப்பாடசாலைகளிலுமே இலவசக் கல்வி வழங்கப்பட்டது.

ஆறு வயதுக்கும் 14 வயதுக்கும் இடையிலுள்ள குழந்தைகள். பாடசாலை செல்ல வேண்டியது சட்டப்படி கட்டாயமானது. பெற்றோர் தமது பிள்ளைகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்புகிறார்களா என்பதைக் கவனிப்பதற்கு வரவு அதிகாரி என ஒருவரை நியமித்தனர்.

ஐந்தாம் வகுப்பு வரைக்கும் போதனை தாய்மொழியில் நடக்கும். (இப்பொழுது 1957-ம் ஆண்டிலிருந்து சி. பா. த. ப. வகுப்புவரை எல்லாப் போதனையும் தாய்மொழியிலிருக்க வேண்டுமென விதிக்கப்பட்டிருக்கிறது.) நாளடைவில் பாலர் வகுப்புத் துவக்கம் சர்வகலாசாலைவரை எல்லாப் போதனையும் தாய்மொழியில் இருக்கவேண்டுமென்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

பாலர் வகுப்புத் துவங்கிக் கலாசாலைவரை எல்லார்க்கும் இலவசக் கல்வியளிக்கப்படுமெனக் கொள்கையளவில் இருந்தபோதிலும் எல்லாரும் அங்கு சேர்த்துக்கொள்ளப்படமாட்டார். 1950-ம் ஆண்டில் பிரகடனஞ் செய்யப்பட்ட கல்வி சம்பந்தமான வெள்ளை அறிக்கையில் கல்வியானது மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவை ஆரம்ப வகுப்பு; மேல் வகுப்பு; உயர்தர வகுப்பு. கட்டாயக் கல்வியின் முதலிரு ஆண்டுகளும் சிசுப் பாடசாலையில் கழியும். மேல் வகுப்புப் படிப்பானது 11 வயதில் ஆரம்பமாகும். அது இரண்டாக வகுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று கனிட்ட உயர் வகுப்பு, இது எட்டாந்தரம் வரை ஒருவரை இட்டுச் செல்லும். எட்டாந்தரத்தில் தகுதிகாண் பரீட்சையென ஒரு தேர்வு நடத்தப்படும். இத்தேர்வின் முடிவைக்கொண்டு ஒருவர் சிரேட்டபாடசாலைப் படிப்புக்குத் தகுந்தவரா அல்லது தொழிற் கல்விக்குத் தகுந்தவரா என நிச்சயிக்கப்படும். இரண்டாவது சிரேட்ட உயர் வகுப்பு. இது ஒருவரைச் சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்புக்கும், அதற்கப்பாலும் இட்டுச் சென்று பின்னர் சர்வகலாசாலைக்கோ தொழில் நுடபக் கல்லூரிக்கோ புகச் செய்யும்.

5 வயது தொட்டு 14 வயது வரை கல்வி இலவசமாக வழங்கப்படும். பின்னர் எட்டாம் வகுப்புத் தகுதிப் பரீட்சையில் சித்தியெய்தியவர்களுக்குச் சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்புக்குப் பயிற்சியளிக்கப்படும். வேறு சிலர் தொழிற் கலாசாலைகளுக்கு அனுப்பப்படுவர். இங்கேயும் இலவசக் கல்வி வழங்கப்படும். எட்டாம் வகுப்புத் தகுதித் தேர்லிற் சித்தி

யெய்தாதவர்கள் சர்வகலாசாலைக்கும் மற்றும் உத்தியோகங்களுக்கும் படிக்க விரும்பினால், தனிப்பட்டவர்கள் நடத்தும் பாடசாலைகளிற் சேர்ந்து சம்பளம் கொடுத்துப் படிக்க வேண்டும்.

சர்வ கலாசாலையிலும், சட்டக் கல்லூரியிலும், தொழில் நுட்பக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வி வழங்கப்படுகிறது. ஆசிரியத் தொழில் பயில விரும்புவோர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிற் சேர்ந்து பயிலவேண்டும். இவற்றிற் சில அரசாங்கத்தால் நடத்தப்படுகின்றன. வேறுசில சமயத்தாபனங்களால் அரசாங்க நன்கொடைபெற்று நடத்தப்படுகின்றன. விவசாய இலாக்காவினால் விவசாயப் பாடசாலைகளும், பெண்கள் கமப்பாடசாலையும் நடத்தப்படுகின்றன. கைத்தொழில் இலாக்காவினால் கைத்தொழிற் பாடசாலைகளும், பயிற்சியளிக்கும் பாடசாலைகளும் நடாத்தப்படுகின்றன. இவை ஒருவகையில் தொழிற்பாடசாலைகளாக விளங்குகின்றன. குருடருக்குஞ் செவிடருக்கும் புறம்பான பாடசாலைகள் தாபிக்கப்பட்டிருக்கின்றன.

### பாடசாலை வகைகள் :

இலங்கையிலுள்ள பாடசாலைகளிற் பெரும்பாலானவை, நூற்கல்வியும் பொதுக்கல்வியுமளித்து வருகின்றன. அவை தொழிற் கல்வியளிப்பதில்லை. ஆங்கிலப் பள்ளிக்கூடங்கள் கனிட்ட விகுப்பு வரை அதாவது எட்டாம் வகுப்பு வரை பயிற்றுகின்றன. சில கனிட்ட பாடசாலைகளில் சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்புகளுமுண்டு. இது கல்விப்பகுதியாரின் அனுமதியோடு நடத்தப்படுவது. வேறு சில பாடசாலைகள் சிரேட்ட பாடசாலைகள். இங்கே உயர்தரப் பாடசாலைப் பத்திர வகுப்பு, சர்வகலாசாலைப் பிரவேச வகுப்பு என்பன உண்டு. இவையும் கல்விப்பகுதியாரின் அங்கீகாரத்துடனேயே நடத்தப்படும். மத்திய பாடசாலைகள் அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. இங்கே ஆறும் வகுப்பிலிருந்து உயர்தரப் பாடசாலைத் தராதரப்பத்திர வகுப்பு வரையும் சர்வகலாசாலை பிரவேச வகுப்பு வரையுமுண்டு. இம் மத்திய கல்லூரிகள் பிரதேசவாரியாக நிறுவப்பட்டிருக்கின்றன. இவற்றையடுத்துப் பல ஆரம்ப வகுப்புப் பாடசாலைகள் உள்ளன. இப்பாடசாலைகளில் 5-ம் வகுப்பு வரை பயிற்சியளிக்கப்படும். இவை தனிப் பாடசாலைகளாகவும் உயர்தர பாடசாலைகளின் கீழ்ப்பிரிவுகளாகவுமிருக்கும். தமிழ் சிங்களம் என்னும் மொழிகளில் சிரேட்ட வகுப்பு ஆரம்ப வகுப்பு என்பனவரை பயிற்சியளிக்கும் சிங்களத் தமிழ்ப் பாடசாலைகளுமுண்டு. இவற்றுக்கும் அரசாங்கம் உதவி நன்கொடை யளித்துவரும். பௌத்த பிக்குகளுக்குப் பயிற்சியளிக்கும் பாடசாலைகள் பிரிவேனுக்களென வழங்கப்படும். இப்பாட

சாலைகளிற் சமஸ்கிருதம், பாளி, சிங்களம் முதலிய கீழைத் தேச மொழிகள் பயிற்றப்படும். தொழிற் கல்வி பயிற்றும் பாடசாலைகள் விவசாய இலாக்காவினுலும், கைத்தொழில் இலாக்காவினுலும், நடத்தப்படுகின்றன. இவற்றைவிட அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், தனிப்பட்ட தாபனங்கள் நடத்தும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும், தொழில் நுட்பக் கல்லூரியும், விசேஷ தொழில் நுட்பக் கல்வி பயிற்றுகின்றன. மத்திய பாடசாலைகளிலும், சிங்கள, தமிழ்ப் பாடசாலைகளிலும், கைப்பணியிற் பயிற்சியளிக்கப்படுகின்றது.

## வளர்ந்தோர் கல்வி :

கிராம வாசிகளிடையேயுள்ள கல்வியறிவை வளர்ப்பதற்கு அரசாங்கம் கருத்துக்கொண்டிருக்கிறது. எழுத்து வாசினையற்றவர்களும் வயதடைந்தோருமான பிரசைகளுக்குக் கல்வியறிவை ஊட்டும் நோக்கத்தோடு வளர்ந்தோர் கல்வி நிலையங்கள் நாடெங்கும் நிறுவும் பொருட்டு 1939-ம் ஆண்டில் சில அதிகாரிகளை அரசாங்கம் நியமித்தது. கிராமச் சனங்களுக்கு எண்ணும் எழுத்தும் வாசினையும் படிப்பிப்பதும் சுரித்திரம், குடியியல், சுகாதாரம் என்ற விஷயங்களில் அறிவையூட்டுவதும் சங்கீதம், நாட்டியம், ஆடல், பாடல் என்பவற்றில் ஆர்வத்தையுண்டாக்குவதும் இலேசான நூல்களையும் பத்திரிகைகளையும் அவர்கள் வாசிக்கப் பழக்குவதுமே வளர்ந்தோர் கல்வி இயக்கத்தின் முக்கியமான நோக்கமாகும். கட்புல, செவிப்புல சாதனங்களைக் கொண்டே சாதாரணமாக இந்நிலையங்களிற் கல்வி புகட்டப்படும். பல நிலையங்களுக்கு வானெலிப் பெட்டிகளும் கிராமபோன் பெட்டிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. கல்வி சம்பந்தமாகவும் அன்றுட விசேட சம்பவங்களைப்பற்றியும் சினிமாப்படங்கள் காட்டப்படும். கிராமாபிவிருத்திப்பகுதி, தலத்தாபனப்பகுதி, சமாச்சாரப்பகுதி, தேசீய நூதனசாலைப் பகுதி என்ற பல்வேறு பகுதிகளின் அதிகாரிகளுடைய உதவியைக் கல்விப் பகுதி பெற்றே இம்முயற்சியைச் செய்து வருகிறது. பிரதேச நிர்வாகிகள் என்ற அதிகாரிகளைக் கல்விப் பகுதி நியமித்திருக்கிறது. வளர்ந்தோர் கல்வியின் நோக்கம், விரிவு, கருத்து என்பவற்றைப் பற்றிப் பொதுசனங்களுக்கு அறிவுறுத்திப் புதிய திட்டங்களை அமைத்தல், தற்போது நடைமுறையிலிருந்துவரும் தாபனங்களை மேற்பார்வை செய்தல், வளர்ந்தோர் கல்வி பயிலும் முறைகளிற் பயிற்சி கொடுத்து ஆசிரியர்களைத் தேர்ச்சியடையச் செய்தல் என்பனவே குறித்த பிரதேச அதிகாரியின் முக்கிய கடமைகளாகும். 1951-ம் ஆண்டு ஜூன் மாதம் வளர்ந்தோர் கல்வி மத்திய ஆலோசனைச் சபை

யொன்று ஏற்படுத்தப்பட்டது. பல அரசாங்கப் பகுதிகள் நடத்தி வரும் வளர்ந்தோர் கல்வி முயற்சியைத் தொடர்புபடுத்தி அவற்றுக்கிடையே ஒற்றுமையை உண்டாக்குவதே இச்சபையின் நோக்கமாகும்.

மூலாதாரக் கல்வித் திட்டமொன்றை மின்னேரியாவில் ஆரம்பித்து நடத்த ஒரு நிபுணரை ஐக்கிய நாடுகளின் கல்வி விஞ்ஞானக் கலைத் தாபனம் (யூனெஸ்கோ) அனுப்பியிருக்கிறது. இத்திட்டம் இலங்கையின் ஏனைய பாகங்களிலுள்ள வளர்ந்தோர் கல்வித் தாபனங்களுக்கு ஒரு வழிகாட்டியாகும். வாழ்க்கைக்கு அவசியமானதும், இதுவரை பெற்றுக்கொள்ளாததுமான அறிவைச் சனங்களுக்கு ஊட்டுவதே மூலாதாரக் கல்வித் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் கிரித்தலை, பொலன்னறுவையாகிய பிரதேசங்களையுள்ளடக்கிய மின்னேரியாக் குளத்தைச் சுற்றிய பகுதிகளில் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். 56 கிராமங்களையும் பட்டினங்களையும் உள்ளடக்கிய 55,000 மக்களுக்கு இத்திட்டம் பயன் தரும். இத்திட்டம் நாலு பிரிவுகளையுடையது. (1) கல்வியும் சமூக சேவையும் (2) விவசாய விருத்தியும் மனையியற் கலையும் (3) கைத்தொழிலும் கூட்டுறவும் (4) சுகாதாரக் கல்வி. மக்களின் உடல் வளர்ச்சி, உள்ள வளர்ச்சி, ஆன்மார்த்த வளர்ச்சி என்பவற்றையும் சமூக சுகாதார பொருளாதார விருத்தியையும் கவனிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். பாடசாலை விட்டு நீங்கிய சிறுவர்க்கும் வளர்ந்தோர்க்கும் இங்கே கல்வியூட்டப்படும். பாடசாலை மாணவர் தம் பள்ளிக்கூடங்களிற் படிக்க வசதியில்லாத சில சுகாதாரமுறைகள் இங்கே கற்பிக்கப்படும். இதுபெரும்பாலும் ஒரு கிராமச் சர்வகலாசாலையெனலாம். இங்கே வளர்ந்தோருக்குக்கல்வி பயிற்றலிலும், கிராம அபிவிருத்தியிலும், பயிற்சி வழங்கப்படும். இலங்கையின் பல பகுதிகளிலுமிருக்கும் வளர்ந்தோர் கல்வி நிலையங்களில் கல்வி பயிற்றக்கூடிய ஆசிரியர் பலரை இங்கே தோற்றுவிக்கிறார்கள். கல்வியறிவை வளர்ப்பதும் சனங்களை வாசிக்கப் பழக்குவதுமே வளர்ந்தோர் கல்வியின் பிரதான நோக்கம். அதன் பயனாகச் சனங்கள் தமது கடமைகளை உணர்ந்து பயனுள்ள வாழ்வு நடத்தி ஆட்சியாளர்க்கு முன்மாதிரி காட்டக்கூடியவராயிருப்பர்.

## சுகாதாரமும் சுத்தமான வாழ்வும்

### சுகாதாரப் பகுதி:

நாட்டின் சுகர்தாரம், சுத்தம் என்பவற்றைச் சுகாதார அமைச்சு கவனித்து வருகிறது. நாட்டு மக்களின் சுகாதாரம் சுத்தமான வாழ்க்கை முறையென்பவற்றைச் சுகாதாரப் பகுதி

கவனிக்கிறது. இப்பகுதியின் தலைவர் சுகாதார மேலதிகாரி. இவருக்குத் துணையாக மூன்று பதிலதிகாரிகளுளர். இவர்களில் ஒருவர் வைத்திய சேவையையும், மற்றவர் பொதுசன சுகாதாரத்தையும், மூன்றுமவர் பரிசோதனை நிலையத்தையும் கவனிப்பார். வைத்தியப் பகுதியை மேற்பார்ப்பவர் நோயைக் குணமாக்கும் துறைக்குத் தலைவராவர். பொதுசன சுகாதாரப் பகுதியின் தலைவர் நோய் வராமற்றடை செய்யும் வேலைகளைக் கவனிப்பார். ஆராய்ச்சிச்சாலைத் தலைவர் வைத்திய ஆராய்ச்சிகளுக்குத் தலைவராவார்.

நாட்டு மக்களின் சுகாதாரத்துக்குச் சுகாதாரப்பகுதி பொறுப்புடையது. நோய்த்தடை, நோய்ப்பரிகாரம் என்பன இப்பகுதியின் முழுப்பொறுப்பிலிருக்கின்றன. தலத் தாபனங்களும். கல்விப் பகுதியும் இப்பகுதிக்கு ஆங்காங்கு துணைபுரியும். பாடசாலை மாணவரின் சுகாதாரத்தைக் கவனிப்பதற்குத் தேகப் பயிற்சியை மேற்பார்வை செய்யும் உதவி வித்தியாதிபதி பொறுப்புள்ளவராயிருக்கிறார். நகரசபைக்குட்பட்ட சுகாதார விடயங்கள் அவ்வந் நகர சபையைச் சேர்ந்த சுகாதார வைத்தியராற் கவனிக்கப்படும். நோய்வாய்ப்பட்டவர்களைப் பார்ப்பதும் சுகாதாரப் பகுதியின் கடமையாகும். கொழும்பிலும் மற்ற இடங்களிலுமுள்ள தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் வைத்தியசாலைக்கு மிகச் சிறு தொகையினரே செல்வர். மற்றவர்கள் அரசாங்கத்தால் நடத்தப்படும் வைத்தியசாலைகட்கும் பிரசவ ஆஸ்பத்திரிகட்கும் மருந்துச் சாலைகட்குமே செல்வர். மனநோய், தொற்றுநோய், கசநோய் குட்டநோய் என்பவற்றுக்காக விசேட ஆஸ்பத்திரிகளை அரசாங்கம் நடத்திவருகிறது.

## தொற்றுநோய்த் தடை :

வெளிநாடுகளிலிருந்து தொற்று நோய்கள் இலங்கையிற் பரவாவண்ணம் தடுப்பதற்கான சேவைகள் சுகாதார சேவைப் பகுதியின் பொறுப்பில் இருக்கின்றன. (1) தென்னிந்தியாவிலுள்ள மண்டபம், தட்டாப்பாறை என்ற இடங்களில் இலங்கைக்கு வரும் தொழிலாளிகளும், பிரயாணிகளும் தொற்று நோயாற் பீடிக்கப்படாதிருக்கிறார்களா என்று பார்ப்பதற்கு வைத்திய முகாம்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. (2) வெளிநாடுகளிலிருந்து வருங் கப்பல்களிலிருப்போருக்குத் தொற்றுநோயுண்டாவெனப்பரிசீலனை செய்ய துறைமுகச் சுகாதார சேவை அமைக்கப்பட்டிருக்கிறது. (3) இலங்கையில் விமான நிலையமுள்ள இடங்களிலும். விமானச் சுகாதார சேவை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## நோய்த்தடை :

நோய்த்தடைக்கான முயற்சிகளைச் சுகாதார வைத்திய அதிகாரி கவனிப்பர். அவர்கள் சுகாதாரப் பிரதேசங்களை ஏற்படுத்திச் சுகாதாரப் பரிசோதகர், பொதுச்சுகாதாரத் தாதிமார், பொதுச் சுகாதார மருத்துவிச்சிமார் ஆகியோரின் உதவியுடன் தமதுகடமைகளை நடத்துவர். காசநோய், மலேரியா, மேகநோய், குட்டநோய் முதலிய அபாயமான நோய்களை மேற்பார்வை செய்யத் தனிப்பட்ட தாபனங்களுண்டு. இவைகள் வைத்திய மேற்பார்வையாளர்களின் தலைமையில் வேலை நடத்துகின்றன. சுகாதாரப் பிரதேசங்களுக்குப் பொறுப்பாயுள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் மூலமே இவர்கள் தமது வேலையை நடத்துவார்கள்.

## நோய்ப் பரிகாரம் :

நோயைத்தடுக்க முடியாதபோது நோய் பரவுகிறது. அப்பொழுதும் வைத்திய சுகாதார இலாக்காவே நோய்க்குப் பரிகாரஞ் செய்யும் பொறுப்பை ஏற்கும். இவ்வேலை மூன்று விதமான தாபனங்கள் மூலம் நடைபெறும். முதலில் மாகாண ஆஸ்பத்திரிகளைக் குறிப்பிடலாம். இவை பெரிய தாபனங்கள். தனிப்பட்ட நோய்களில் நிபுணராயுள்ளவர்கள் இங்கு நியமிக்கப்பட்டிருக்கின்றனர். அடுத்தபடியாகப் பகுதி ஆஸ்பத்திரிகள் உண்டு. இவை சிறிய தாபனங்கள். இங்கே சாதாரண நோய்களும், சத்திர சிகிச்சையும், பிரசவ சிசுருட்சையும் நடைபெறும். மத்திய மருந்துச்சாலையென மற்ருெரு தாபனமுண்டு. இங்கே வெளி வைத்தியம் நடைபெறும். இத்தாபனங்கள் பல பிரசவசாலைகளையுமுடையன. இவற்றைவிடக் கிராம வைத்தியசாலைகளுமுண்டு. இவை சர்வ சாதாரணமான நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும். இப்பல்வேறு தாபனங்களோடும் தொடர்பு வைத்திருப்பதற்காக அம்புலன்ஸ் வாகனச் சேவையுண்டு. ஒரு தாபனத்திலுள்ள நோயாளிக்கு விசேட சிகிச்சை கொடுப்பதற்காக மற்ருெரு தாபனத்துக்குக் கொண்டு செல்வதாளுல் இவ்வாகனங்களில் ஏற்றிச் செல்லலாம். எக்ஸ்றே சிகிச்சை, கிருமி ஆராய்ச்சி, மின் சிகிச்சை, பற் சிகிச்சை முதலியன இந்தத் தாபனங்களிற் சிலவற்றில் அளிக்கப்படுகின்றன. மாதம் 50 ரூபாய்க்குக் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு இலவசமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. உயர்ந்த வருமனாமுள்ளவர்கள் குறிப்பிட்ட ஒரு தொகையைக் கொடுக்க வேண்டியதவசியம்.

அரசாங்கம் பொதுசனச் சுகாதாரத்தைப் பேணுவதற்காக எவ்வளவு பணத்தைச் செலவு செய்கிறதென்பதைப் பின் வரும் புள்ளிவிவரங்கள் காட்டக்கூடியனவா யிருக்கின்றன. 1938-ல்

தலைக்கு ரூ. 2-19 சதம் வைத்திய வசதிக்கெனச் செலவு செய்யப் பட்டது. 1951-ல் தலைக்கு 9 ரூபாய் செலவாயிற்று. 1952-ல் அரசாங்க சுகாதார வசதிகட்காக 880 லட்சம் ரூபாய் அதாவது இலங்கை அரசாங்க வருமானத்தில் 8·64 வீதத்தைச் செலவு செய்தது. இதன் பயனாக இலங்கையில் வருடா வருடம் இறப்பவர்களின் தொகை குறைந்துவிட்டது. 1930ஆம் ஆண்டில் 1000 பேருக்கு 25·4 பேர் இறந்தனர். 1951-ல் இத்தொகை 12·8 ஆகக் குறைந்தது. அதே வருடத்தில் பிறந்த ஆயிரங் குழந்தைகளில் 82 இறந்தன. ஆயிரம் கர்ப்பிணிகளில் 5·6 வீதத்தினரே இறந்தனர்.

## சுகாதார இயக்கங்கள்

### கயரோகம் :

நாட்டு மக்களின் முதலாவது சத்துரு கயரோகமெனக் கருதப்படுகிறது. இதைத் தடுப்பதற்காக ஒரு இயக்கம் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இதன் தலைவர் பல நிபுணர்களின் உதவியைப் பெற்றுத் தமது வேலையை நடத்துகிறார். கயரோகத் தாபனம் ஒன்று கொழும்பிலுண்டு. கந்தானையிலும் காங்கேசன்துறையிலும் இரு சுகத் தாபனங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. ராகமை, வெலிசரை, புத்தளம் ஆகிய இடங்களில் கயரோக ஆஸ்பத்திரிகளுண்டு. கண்டி, யாழ்ப்பாணம், காலி ஆகிய இடங்களில் கயரோக வைத்திய சாலைகளுண்டு. மற்றப் பகுதிகளில் உள்ள சிவில் ஆஸ்பத்திரிகளில் கயரோகப் பகுதியென ஒரு பகுதி கயரோகத்தால் பீடிக்கப்பட்டுள்ளவர்களின் நன்மைக்காக அமைக்கப்பட்டிருக்கிறது. கயரோகச் சிகிச்சையில் விசேட திறமை பெறுவதற்காகப் பல வைத்தியர்கள் வெளிநாட்டுச் சர்வகலாசாலைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். உலக சுகாதாரத் தாபனமும் இவ்வியக்கத்தில் இலங்கைக்குத் துணை புரிந்திருக்கிறது. 1949-ம் ஆண்டில் கயரோகத்தைத் தடுக்கும் பி. சி. ஜி ஊசி மருந்து கொடுப்பதற்காக காந்திநேவியாவிலிருந்து ஒரு கோஷ்டியினர் இலங்கைக்கு வந்தார்கள். 1950-ம் ஆண்டில் சர்வதேச கயரோகத் தடுப்பு இயக்கத்தைச் சேர்ந்த மற்றொரு கோஷ்டியினர் இங்கு வந்தனர். இலங்கையில் கயரோகம் பரவியுள்ள அளவை ஆராய்ந்தறிவதற்காக உலக சுகாதாரத் தாபனம் எங்கும் சென்று ஆராய்ச்சி நடத்தக்கூடிய ரேடியோக்கிராப் அமைப்பை உதவிற்று. அத்துடன் ஒரு ஆய்கூடத்தையும் உதவிற்று. 1952 ஆம் ஆண்டில் திரு. டொனால்டு பார்ளோவின் தலைமையில் கயரோக நிபுணர் கோஷ்டியொன்று இங்கு வந்தது.

இக்கோஷ்டியின் ஆராய்ச்சியின் பயனுக வெளியிடப்பட்ட அறிக்கை இலங்கையில் கயரோகம் பெரிதும் காணப்படுகிறதெனத் தெரிவித்தது. இக்கொடிய வியாதியைத் தடுப்பதற்காகப் பல ஆலோசனை களைப்பார்ளோ தமதுஅறிக்கையிற் குறிப்பிட்டார். அவைநாளடைவில்நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். கயரோகத்தடுப்புச் சங்கம் என்ற தாபனம் கடந்த பல வருடங்களாகக் கயரோகத்தடை இயக்கத்தில் பெரு முயற்சி செய்து வந்துள்ளது. அத்துடன் கயரோக ஆஸ்பத்திரிகள் கட்டவும், நோயாளருக்கு உதவி புரியவும் நிதி திரட்டி வந்திருக்கிறது.

## யானைக்கால் வியாதி Filariasis :

இந்நோயைத் தடுப்பதற்காகப் பொதுச்சுகாதாரப் பகுதியினரால் 1947-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஒரு திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்நோய் பெரும்பாலும் தெகிவளைப் பகுதியிற்ருன் காணப்பட்டது. எனவே இப்பகுதியில் இந்நோயைத் தடுப்பதற்காகத் திறமான தொரு சிகிச்சைச்சாலை அமைக்கப்பட்டது. இந்நோயைத் தடுக்கக்கூடிய மருந்தும் நோயாளருக்கு வழங்கப்பட்டது. இந்நோய்க்குக்காரணம் ஒரு கொசு என்றும் அதை அழித்துவிட்டால் நோய் பரவாதென்றும் உணர்ந்த சுகாதாரப் பகுதியினர் 1949 ஆம் ஆண்டில் உலக சுகாதாரத் தாபனத்தின் நிபுணரான வைத்தியர் எம். ஓ. டி. ஐயங்காரை ஆலோசனை கேட்டனர். அவர் ஆராய்ச்சி செய்ததன் பயனுகச் சில சிபார்சுகளைச் செய்தார். அவை நடைமுறையிற்கொண்டுவரப்பட்டிருக்கின்றன. கொசுத் தடைக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கொசு பெருகும் இடங்களெங்கும் டி. டி. ரி. மருந்து ஊற்றப்பட்டு வருகிறது. இந்நோய் இல்லாத இடங்களில் நோய் பரவாமல் தடுப்பதற்கான வழிவகைகளைக் கையாளுமாறு சுகாதார வைத்தியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

## மேக ரோகம் :

இந்நோய் இந்நாட்டில் அதிகம் பரவி வருவதாக அறிந்த சுகாதாரப் பகுதியினர் அதைத் தடுப்பதற்கு ஒரு திட்டம்போட்டனர். பிரசாரமும் நடத்தினர். இரண்டாவது மகாயுத்தம் நடைபெற்ற காலத்திற்ருன் இந்நோய் இந்நாட்டில் அதிகரித்தது. எனவே, 1942 ஆம் ஆண்டிலும் 1943ஆம் ஆண்டிலும் பல சட்டங்கள் செய்யப்பட்டன. இவற்றின்படி இந்நோய் கண்டவர்கள் அதனை அதிகாரிகளுக்கு அறிவித்துவிட வேண்டுமெனவும் அவ்வாறு செய்யத்

தவறினோர் தண்டனைக்குள்ளாவாரென்றும் விதிக்கப்பட்டது. மேக நோய்த் தடைபற்றி விசேட அறிவையும் பயிற்சியையும் பெற்று வருவதற்காகச் சில வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப் பட்டனர். உலக சுகாதாரத் தாபன நிபுணர்களான லேபி வைத்தியரும் ஜுங்கல்வாலா வைத்தியரும் இலங்கைத்தீவில் மேகரோகத் தடைத் தாபனத்தின் முறைகளைச் சீர்திருத்தியமைப்பதற்குச் சில யோசனைகள் கூறினர். அதன் பயனாக இலங்கை முழுவதும் மேக ரோகத் தடை இயக்கம் நடத்தக் கொழும்பிலே ஒரு தாபனம் நிறுவப்பட்டது. உலக சுகாதாரத் தாபனம் இதற்குச் சில அதிகாரிகளையும் உபகரணங்களையும் உதவிற்று.

### மலேரியாச் சுரம் :

முன்னொரு காலத்தில் பரவிவந்த இந்நோய் இப்பொழுது மிகவும் குறைந்து விட்டது. இந்நோய் காரணமாகவே இத்தேசத்தின் அபிவிருத்தித் திட்டங்களிற் பெரும்பாலானவை தடைப்பட்டன. 1945-ம் ஆண்டில் மலேரியா நுளம்பை ஒழிப்பதற்குத் தீவிரமான முயற்சியெடுக்கப்பட்டது. சுகாதார இலாக்கா அதிகாரிகள் டி. டி. ரி. கிருமி நாசினியைத் தெளித்துப் பல இடங்களில் மலேரியாவை ஒழித்தனர். 1950-ம் ஆண்டில் இலங்கையில் மலேரியா அடியோடு ஒழிக்கப்பட்டது. மீண்டும் உலக சுகாதாரத் தாபனத்தின் உதவியை நாடினர். அதன் பயனாக, புரூஸ் உவில்சன் வைத்தியர் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். அவர் இங்கு வந்து பல உபயோகமான ஆலோசனைகளைக் கூறினர்.

### குட்ட ரோகம் :

1932-ம் ஆண்டிலிருந்து குட்டரோகிகள் விடயத்தில் இந்நாட்டிலே முன்னையிலும் பார்க்கச் சீவகாருண்யமான முறையில் இந்நோயாளருக்குச்சிகிச்சை செய்யப்பட்டுவந்தது. நோயாளிகளை அவர்கள் இட்டப்படி தனித்திருக்க விடுதல், நவீன வைத்திய முறைப்படி சிகிச்சையளித்தல், நோயாளிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்வோரை மேற்பார்வை செய்தல் என்பனவே இம் முறைகளாகும். இது ஒரு தொற்று நோயாதலால் இதைத்தடுத்தற்கு ஒரே ஒருவழி நோயாளிகளை ஒதுக்கி வைத்திருத்தலாகும். நோயாளிகளின் உழைப்பில் தங்கியிருப்பவர்களுக்கு அரசாங்கம் பண உதவி செய்கிறது. குட்ட ரோகத்தடை இரண்டு வகையில் செய்யப்பட்டுவருகிறது. ஒன்று, ஆஸ்பத்திரிகள் மூலமும், மற்றொன்று விவசாயப் பண்ணைகள் மூலமுமாகும். ஹெந்தலை, மாந்தீவு என்ற இரு இடங்களில் குட்டரோக ஆஸ்பத்திரிகளுண்டு.

அங்கே அவர்களுக்குச் சிகிச்சையளிக்கப்படும். ஊருகஹா என்ற இடத்தில் விவசாயப் பண்ணையுண்டு. திடகாத்திரமுள்ள நோயாளிகள் அங்கே குடியேறியிருக்கின்றனர். நோய் பரவக்கூடிய நிலைமையுள்ள இடங்களில் சிகிச்சை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

# விசேட சேவைகள்

## பாடசாலைச் சுகாதார வேலை :

விசேட சேவைகள் சில இப் பகுதியினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் மிக முக்கியமானது பாடசாலைச் சுகாதார வேலையாகும். 1919-ம் ஆண்டு பாடசாலை மாணவரின் சுகாதாரத்தைக்கவனிப்பதற்குச் சிறிதளவிற் சிலமுயற்சிகள் செய்யப்பட்டன. அந்தக் காலம் தொடங்கியே மாணவரின் சுகாதாரத்தைக் கவனிப்பதற்காகச் சுகாதார வைத்திய அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். காலத்திற்குக் காலம் இவர்கள் பாடசாலைகளுக்குச் சென்று வைத்திய சோதனை செய்வார்கள். இப்பரிசோதனைகள் ஒழுங்காக நடக்கும் பொருட்டு கல்விப்பகுதி அதிகாரி ஒருவர் இவர்களுக்கு உதவி புரிந்து வந்தார்.

## தோட்டங்களில் சுகாதாரம் :

தோட்டச் சுகாதாரம் சம்பந்தமாகவும் இப்பகுதியினர் பல வேலைகளைச் செய்து வந்தனர். 1912-ம் ஆண்டின் வைத்தியத் தேவைச் சட்டத்தின் பிரகாரம் தோட்டத் தொழிலாளரின் சுகாதாரத்தைக் கவனிக்க வேண்டிய பொறுப்பு இந்தஇலாக்காவையே சேர்ந்ததாகும். எனவே, வைத்திய அதிகாரிகள் தோட்டங்களுக்கு அடிக்கடி போய் அங்குள்ள சுகாதார வசதிகளையும் தொழிலாளரின் சுகாதார நிலைமையையும் பரிசீலனை செய்து வந்தனர். 1950-ம் ஆண்டில் செய்யப்பட்ட சட்டங்களின்படி தொழிலாளர் வீடுகள். குறித்த ஒரு பிரமாணத்தின்படி கட்டப்பட்டிருக்கின்றனவா என்பதைச் சுகாதாரச் சேவைத் தலைவர் கவனிக்கவேண்டிய தவசியமாகும். தோட்ட முதலாளிகளுடைய கவனயீனம் காரணமாகத் தொழிலாளரின் சுகாதாரம் கெட்டுப்போகாமல் பார்த்துக் கொள்ளவும் அவர்களுக்கு வீடுவாசல்கள் திருப்தியான முறையில் இருக்கின்றனவா வென்பதைக் கவனிக்கவும் சில வைத்திய அதிகாரிகளைச் சுகாதாரப் பகுதியினர் நியமித்திருக்கின்றனர்.

### சுகாதாரக் கல்வி :

பாடசாலைகளில் சுகாதாரக் கல்வியை ஊட்டுவதற்காக ஒரு திட்டத்தை இவ்விலாக்கா அமைத்திருக்கிறது. இதற்குக் கல்விப் பகுதியினரும் உதவிபுரிந்து வருகிறார்கள். துண்டுப் பிரசுரங்கள் மூலமும், சுவரொட்டி விளம்பரங்கள் மூலமும், விரிவுரைகள் மூலமும், சுகாதாரக் காட்சிகள் மூலமும் இவ்வேலை நடைபெற்று வருகிறது. பத்திரிகைகளும், அரசாங்கத் திரைப்படப் பகுதியினரும் இதற்கு உதவிபுரிகிறார்கள். 1938-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அகில இலங்கைச் சுகாதார வாரம் நல்ல பிரசாரம் நடத்தி வந்தது. சனங்களிடையே சுகாதார உணர்ச்சியை உண்டாக்குவதற்கு இவ்வியக்கம் இதுவரை பெருந்தொண்டு புரிந்திருக்கிறது. ஒவ்வொரு வருடமும் ஜூலை மாதத்தின் மூன்றாவது வாரத்தில் இப் பிரசாரம் இலங்கை முழுவதிலும் பல்வேறு வகையில் நடத்தப்பட்டு வருகிறது. பத்திரிகைகளும், தலத்தாபனங்களும், பள்ளிக்கூடங்களும், வைத்திய அதிகாரிகளும் இதற்குத் துணைபுரிந்து வருகிறார்கள். சுகாதாரப் பரிசோதகர், சுகாதாரத் தாதிமார், சுகாதார மருத்துவத் தாதிமார் ஆகியோரின் சங்கங்கள், வெளியிடும் வருடாந்த வெளியீடுகள்மூலமும் சுகாதாரப் பிரசாரம் நடைபெற்று வருகிறது.

### ஆயுர்வேதம் :

1941-ம் ஆண்டில் 17-ம் இலக்க ஆயுர்வேத வைத்தியச் சட்டத்தின் பயனாக அரசாங்கம் ஆயுர்வேதத்துக்குப் பூரண ஆதரவளித்தது. ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியையும் ஆஸ்பத்திரியையும் இன்னோரன்ன தாபனங்களையும் அரசாங்கம் தன்னுடைய நிர்வாகத்தின்கீழ் கொண்டு வந்திருக்கிறது. இக்கல்லூரியில் பயின்று பட்டம் பெற்ற வைத்தியர்கள் கிராமாந்தரங்களில் நல்ல சேவை செய்திருக்கிறார்கள்.

### தண்ணீர் வசதி :

லபுகமையிலுள்ள நீர்த்தேக்கத்திலிருந்து கொழும்புக்கு குழாய் மூலம் தண்ணீர்கிடைக்கிறது. இது நகரிலிருந்து $28\frac{1}{4}$ மைல் தூரத்திலிருக்கிறது. 2500 ஏக்கர் விஸ்தீரணமுள்ள வடி நிலத்திலிருந்து தண்ணீர் தேங்குகிறது. இத்தேக்கத்தின் கொள் அளவு 196 கோடி கலனாகும். இந்நீர் வடிகட்டப்பட்ட பின்னர் குளோரமைன் என்னும் இரசாயன பொருள் கொண்டு சுத்தஞ் செய்யப்பட்டுக் குழாய்மூலம் அனுப்பப்படுகிறது. லபுகமைத் தண்ணீர்

கொழும்புத் தேவைக்குப் போதாமையால் இரத்தினபுரிப்பகுதியைச் சேர்ந்த களத்துவாவை அருவியிலுள்ள தண்ணீரைத் தேக்குவதற்கு 1949-ம் ஆண்டில் ஒரு திட்டம்போடப்பட்டது. இதன் வடி நிலம் 3320 ஏக்கர் விஸ்தீரணமுடையது. இதன் கொள்ளளவு 351 கோடி கலனாகும்.

கண்டித் தண்ணீர்ப் பிரச்சினை கண்டி நகரசபைக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் பல ஆண்டுகளாக தலையிடியைக் கொடுத்து வருகிறது. இப்பொழுது உள்ள நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 440 இலட்சம் கலனாகும். வடி நிலத்தின் விஸ்தீரணம் 400 ஏக்கராகும். 1944-ம் ஆண்டில் இராணுவ அதிகாரிகள் நீர் இறைக்குந் திட்ட மொன்றை யமைத்ததன் பயனாகக் கண்டிக்குச் சிறிது அதிகம் தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்தது. இத்திட்டம் 1941-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டது. பேராதனையில் மகாவெலி கங்கையிலிருந்து நீரை இறைக்கிறார்கள். 10 மணி நேரத்திற்கு நீரை இறைத்தால் 2½ இலட்சம் கலன் தண்ணீர் ஒரு நாளைக்குக் கிடைக்கும். 1950-ம் ஆண்டில் அவசரகாலத் திட்டமொன்று அமைக்கப்பட்டு அதன் பயனாக 6 இலட்சம் கலன் தண்ணீர் தினசரி கிடைக்கிறது. கண்டியின் தண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஒரு பெரிய திட்டம் உருவாகி வருகிறது. மகாவெலி கங்கையிலிருந்து தேவையான நீரை எடுக்க வேண்டுமென்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

# ஆறும் அத்தியாயம்

# கூட்டுறவு

## கூட்டுறவின் தன்மை :

கூட்டுறவு இயக்கம் பிரதானமாக மக்களின் இயக்கமாகும்,

''ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கிடில் அனைவர்க்கும் தாழ்வே''

என்ற உத்தமமான கொள்கையை மக்களிடையே பரப்புவதுதான் இவ்வியக்கத்தின் நோக்கமாகும். கழுத்தை நெரிக்கும் போட்டி மலிந்துள்ள இக்கால உலகத்தில் தனிப்பட்டவர்கள் ஒருவரோடொருவர் போட்டியிட்டு மல்லாடுவதிலும் பார்க்க உயர்ந்ததும் சிறந்ததுமான இலட்சியங்களை ஒன்றுபட்டு உழைப்பதனால் பெறமுடியும். இந்த வகையிற் பார்க்கப்போனால் சனநாயகக்கூட்டுறவு இயக்கம் சனநாயகத்தின் அடிப்படையான கொள்கையொன்றைத் தன்னகத்துக் கொண்டிருப்பதைக்காணலாம். அதாவது தனிப்பட்டவர் சேர்ந்து சமூக நலனுக்காக உழைப்பர்; சமூகம் தனிப்பட்டவர் நலனைக் கருதி உழைக்கும் என்பதே. ஏழைகட்கு உதவி செய்வதே கூட்டுறவு இயக்கத்தின் முதல் நோக்கம். கள்ள வியாபாரம் செய்பவர்களும், சிறிய கடைக்காரரும் சனங்களை ஏமாற்றாமல் காப்பாற்றுவது அதனுடைய பெரும் நோக்கமாகும். இரண்டாவது, கடன் பளுவால் வறுமையிற் கிடந்து துடிக்கும் கிராமவாசிகள் இலங்கையின் வரண்ட பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் விவசாயத் திட்டங்கள் மூலமும், குடியேற்றத் திட்டங்களின் மூலமும் விடுதலை பெற உதவி செய்வது. கூட்டுறவு வியாபாரம் பணம் படைத்த முதலாளிகளின் வியாபாரம் போன்றதன்று. வாழ்க்கையில் அதிக வசதிகளைப் பெறாது வறுமையுற்றிருப்போருக்கு உதவி செய்யும் இலாபங் கருதாத ஒரு வியாபாரமுறை இச்கூட்டுறவு இயக்கத்தில் அடங்கியிருக்கிறது. அதிக இலாபம் பெற வேண்டும் என்ற நோக்கமும் போட்டி மனப்பான்மையும் இங்கே கிடையாது. கூட்டுறவென்பது நல்ல வியாபாரத்தை அடிப்படையாகக் கொண்டதுமன்றி உயர்ந்த கொள்கையையும் கொண்டுள்ளது. முதலாளி வர்க்கத்தின் ஊக்கத்தையும் சமுதாய நலன் கருதும் ஒரு ஆட்சிமுறையின் தன்மையையும் இக்கூட்டுறவு இயக்கம் கொண்டிருக்கிறது எனலாம். எனவே, கூட்டுறவு இயக்கம் ஒரு சனநாயக இயக்கமாகும். வாழ்க்கை வசதிகளைப் பெறாத வறியவர்களின் நலன்களைக் காப்பாற்றுவதற்காகப் பொறுப்பு வாய்ந்த பெருமக்க

ளால் நடத்தப்படும் இயக்கமே கூட்டுறவு இயக்கம். இவ்வியக்கம் சில போலிகளின் சீர்கேட்டால் மலினமடைந்திருப்பது உண்மையே. அங்கத்தவரின் பணத்தை மோசடி செய்த சங்கக்கடை மனேஜர் மாரைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். சில சிறிய அதிகாரி கள் களவுசெய்து பிடிபட்டிருப்பதையும் அறிந்திருக்கிறோம். ஆனால் இத்தகைய குறைபாடுகள் எந்தச் சமூகத்திலும் இருக்கத் தான் செய்யும். எனவே, கூட்டுறவுச் சங்கம் நற்பயனை அளிப்ப தானால் முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டியதவசியம். சங்கக் கடைகளிலும் கூட்டுறவு விற்பனைத் தாபனங்களிலும் நடக்கும் அலு வல்களைப்பற்றிச் சங்க அங்கத்தவர்கள் சாக்கிரதையாயிருக்க வேண்டியதவசியமாகும். தத்தம் ஊர்களிலுள்ள கூட்டுறவுத் தாப னங்கள் பற்றிய விடயங்களில் அவர்கள் கரிசனையும் ஊக்கமும் காட்டவேண்டும். ஒவ்வொரு அங்கத்தவரும் தமது கூட்டுறவுச் சங்கக் கூட்டங்களுக்குச் சென்று அதன் நடவடிக்கைகளிற் பங்கு பற்றவேண்டும். அதன் நிர்வாகத்தில் அதிருப்தி உண்டானால் அதை அதிகாரிகளுக்கு அறிவித்துவிடவேண்டும், தேவையான நேரங்களில் கணக்குவழக்குகளைக் கேட்கவேண்டும். சங்க அலுவல் கள் நேர்மையாகவும், திறமையாகவும் நடத்தப்படாவிட்டால் கேள்விகள் கேட்டு விளக்கம் பெறவேண்டும். உதாசீனமாகவும் வேண்டாவெறுப்பாகவுமிருந்தால் ஊழல்கள் மலிந்து அங்கத்தவர் களுக்கே கேடு விளையும். அரசாங்கத்துக்கு அதனால் எவ்வித கெடு தியுமில்லை. கூட்டுறவுச் சங்க விதிகளின் பிரகாரம் ஒவ்வொரு அங் கத்தவரும் சங்கத்துவியாபார விஷயங்களிற் கட்டாயமாகப் பங்கு பற்றவேண்டுமென்ற நிர்ப்பந்தமிருப்பது ஒரு நல்லதிஷ்டமே. அங்கத்தவரில் ஒருவர் தாம் சங்கத்துக்குக் கட்டவேண்டிய பணத் தைக் கட்டாதுவிட்டால் ஈற்றில் மற்ற அங்கத்தவரே அதை எப் படியும் ஈடுசெலுத்தவேண்டும். அதனால் கட்டணம் கட்டத் தவ றியவர் சிறைச்சாலைக்குச்செல்லலாம். ஆனால் நட்டப்படுபவர் சங்க அங்கத்தவர்களே. எனவே கூட்டுறவு என்பது சனநாயகத் தத்து வங்களை மனிதர் பயின்றுகொள்வதற்கு ஏற்ற நல்லதொரு சாதன மாகும். பொறுப்புவாய்ந்த பிரசைகளாக மக்களை இவ்வியக்கம் பயிற்றுகிறது. தனிப்பட்டவர்கள் சாக்கிரதையாகவும் உற்சாகத் துடனுமிருக்கப் பழக்குகிறது. சமூக நலனைப் பற்றிய உணர்ச்சியை இது வளர்க்கிறது. தலத்தாபனத்தைச் சேர்ந்தவர்களிடையே நட்பையும் பரஸ்பர நல்லெண்ணத்தையும் விருத்திசெய்கிறது. மேலும் சமூகத்தில் வறிய நிலையிலுள்ளாரின் பொருளாதாரப் படியை உயர்த்துகிறது. இந்த வகையில் கூட்டுறவு இயக்கம் சனங்களுக்குச் சனநாயக முறையின் கொள்கைகளிற் பழக்கத்தை ஏற்படுத்துவதுடன் அரசியல் ஒழுக்கத்தின் அடிப்படைகளையும் பயிற்றுகிறது.

கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் அதன் அலுவல்களில் கட்டாயம் பங்குபற்ற வேண்டிய நிர்ப்பந்தமுண்டென்று ஏற்கனவே கூறினேம். கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பையும் கடமைகளையும் ஆராய்வோருக்கு இது நன்கு புலனுகும். ''பணமில்லாதவர்கள் ஒன்று சேர்ந்து வியாபாரம் நடத்துவதற்கு ஏற்பட்டதே கூட்டுறவுச் சங்கம், இது சுயநலப் பற்றற்ற முறையில் நடத்தப்படும். இதிற் பங்குபற்றுவோர் சங்கத்தைப் பயன்படுத்தும் அளவுக்கு அதனுல் இலாபத்தையடைவார்கள்'' என்று கூட்டுறவு பற்றி ஓர் அறிஞர் கூறியிருக்கிருர். இவ்வியக்கம் பலமில்லாத வறியவர்களின் இயக்கமாகும். கடன் கொடுக்கும் இலேவாதேவிக்காரர், கள்ளச் சந்தையில் விற்பனை நடத்துவோர், ஆகியோரின் சுரண்டல் சூழ்ச்சிகளிலிருந்து தப்புவதற்கு இச்சங்க அங்கத்தவர் எப்பொழுதும் சாக்கிரதையோடு இருக்கவேண்டும். ஒற்றுமையோடு கருமங்களைச் செய்தாற்ருன் நற்பலன் கிடைக்கும். பொது நன்மையை வளர்ப்பதற்கு அவர்கள் சங்கத்தைப் பயன் படுத்த வேண்டும். சிறந்த பலனைப் பெறவேண்டுமாளுல் தனிப்பட்ட முயற்சியோ, சுயநலப் பற்ருே இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களிடம் இருக்கக் கூடாது. கூட்டுறவு வங்கிகளும், கடன் சங்கங்களும் தனிப்பட்ட உற்பத்தியாளருக்கு நியாயமான வட்டியிற் பணங் கடன் கொடுக்கின்றன. நிலத்தையோ, நகைகளையோ ஈடாகவைத்துக் கொண்டு பணம் கடன் கொடுக்கப்படவில்லை. கடனளியிடம் உள்ள நம்பிக்கையின் பேரிலேயே கடன் கொடுக்கப்படுகிறது. கடன் எடுத்த பணத்தை அவர் ஆக்கமுயற்சியில் பயன் படுத்தவேண்டும். அதனுல் உண்டாகும் இலாபத்தைக்கொண்டு எடுத்த கடனைக் கூடிய விரைவில் திருப்பிக் கொடுக்கவேண்டும். அப்படிச் செய்தாற்ருன் சங்கம் அதைக்கொண்டு ஏனையோர்க்கும் கடன் உதவி நன்மை செய்ய முடியும். கடன் வாங்குபவர் சுயநலத்தைக் கருதாது பொது நலத்தைக் கருதவேண்டும். தனது சொந்த நன்மையோடு தன் கருமங்களைத் தாமதமின்றிச் செய்து மற்றவர்களின் நன்மையை விருத்தி செய்யவும் முயலவேண்டும். உதாரணமாக ஒருவர் சங்கத்தில் கடன் எடுக்க வேண்டுமாளுல் அவருடைய நண்பர் ஒருவர் பிணைநின்று கடனை எடுத்துக் கொடுப்பார். எனவே, அந்த நண்பனைக் காப்பாற்றுவதற்கு எடுத்த கடனை நேரத்தோடு கொடுத்துவிட வேண்டியது அவருடைய கடமையாகும். அன்றி அவர் தமது கடமையிற் பிசகினுல் அவர் சங்கத்து ஏனைய அங்கத்தவரின் நன்மதிப்பையுமிழக்க நேரிடும். எனவே ஊரிலுள்ள நல்லவர்களின் சிநேகத்தையும் நன்மதிப்பையும் அவர் இழந்து விடுவார். ஆகவே தன்து கடமைகளைத் தடங்கலின்றி நிறைவேற்றி வைப்பது அவருடைய பெருநோக்கமாயிருக்க வேண்டும். விவசாய

உற்பத்தி, விற்பனையாளர் சங்க அங்கத்தவரும் இந்த நிலையிற்றான் கடமையாற்றவேண்டும். இங்கேயும் ஸ்தலக்கூட்டுறவு வங்கி அல்லது அரசாங்க வங்கி கடன் கொடுக்கும். கடனுக்கு உத்தரவாதமாக அவருடைய விளைவு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படியிருந்தாலும் கடனைக் கொடாமல் மோசடி செய்வதற்குமிடமுண்டு. விவசாய விருத்திக்கென காசைக் கடனாக வாங்கிக் குடித்து வெறித்துச் சூதாடி வீண் விரயஞ் செய்தால் அதைத் தடுக்க யாருக்கும் உரிமையுண்டு. அரசாங்கம் அவனுக்கு இரவலாகக் கொடுக்கும் இயந்திரசாதனங்களை விற்றுவிடவும் அவனால் முடியும். ஆனால் சாதாரணமாக ஒருவர் தம்மீது மற்றவர்கள் வைத்த நம்பிக்கையை வீணாகக் கெடுத்துக்கொள்ள மாட்டார். அன்றியும் அரசாங்கம் அவருக்குக் குத்தகையாகக் கொடுத்த நிலத்தைத் திருப்பி வாங்கி விடவுங்கூடும். மேலும் சங்கத்தின் பெயருக்கும் இழுக்கை உண்டாக்குவார். அதனால் நண்பர்களும், சகாக்களும், கூட்டாளிகளும் மரியாதை செய்யமாட்டார்கள். சமூகமே அவனைத் திரஸ்கரித்து விடும். நேர்மையாகவிருந்து, கூட்டுறவுச் சங்கத்தின் நற்பெயரைக் காப்பாற்றி வாழ்க்கையை நடத்த வேண்டுமென்ற பேரவா அவனை எப்பொழுதும் நேர்மையுடனிருக்கத் தூண்டும்.

பொருள் வாங்குவோர் கூட்டுறவுச்சங்க விடயங்களும் இவ்வாறுதானிருக்கும். சங்கக்கடை நல்ல முறையில் ஒழுங்காக நடைபெற்றால்தான் நயமுண்டென்பதை ஒவ்வொரு சங்க அங்கத்தவரும் உணர்வர். எனவே, சங்கப்பணத்தை ஒருவரும் மோசடி செய்யாமல் இருக்கும்படி ஒவ்வொரு அங்கத்தவரும் கவனஞ் செலுத்துவர், சிறந்த குணமுடையவர்களைச் செயற்குழுவிற் சேர்த்துக் கொள்வர். எல்லாருடைய நன்மதிப்பையும் பெறும்வகையில் நிர்வாகக்குழுவினர் தமது பொறுப்பை நிறைவேற்றுமாறு கவனஞ் செலுத்துவர். நிர்வாகத்தலைவரும் மற்ற அதிகாரிகளும் நேர்மையுடையவராகவும் கருமங்கள் செய்வதில் திறமையுடையவர்களாகவுமிராவிட்டால் அச்சங்கத்திற் சேர்ந்த அங்கத்தவர்கள் அதை விடுத்து வேறு சங்கங்களிற் சேரப் பார்ப்பார்கள். அல்லது ஊரிலுள்ள சிறு கடைக்காரர்களில் நேர்மையுள்ளவர்களைத் தேடி அவர்களிடம் பொருள்களை வாங்குவார்கள். தம் சொந்த நலனை முன்னிட்டாவது சங்கக்கடை அதிகாரிகள் திறமையுடையவர்களாயிருக்க வேண்டியதவசியம். சங்கக்கடையில் நடக்கும் விஷயங்களில் அங்கத்தவர் கரிசனையுடையவர்களாயிருப்பர். அதன் பயனாக அதிகாரிகள் எப்பொழுதும் திறமையுடையவராக இருக்க வேண்டி நேரிடும். எனவே மற்றக் கூட்டுறவுத் தாபனங்களைப் போலவே இதுவும் கூட்டுறவு முறையை அனுசரிக்கும். அங்கத்தவர் கவலையின்றியிருப்பார்களேயானால், அது இந்தத்

தாபனத்துக்கே பெரிய கெடுதியை உண்டாக்கும். இதனால் கூட்டுறவு வங்கிகளும் அரசாங்கமும் அவர்களுக்கு உதவிபுரிய முன்வர மாட்டா. எனவே, சங்கத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து புத்தி சாலித்தனமாக அதனை நடத்தவேண்டியது அங்கத்தவர் கடமை யாகும். நல்ல குடிகளாக வாழ்வு நடத்துவதற்கு இது ஒரு சிறந்த பயிற்சியாகும். எனவே கூட்டுறவு இயக்கம் சனநாயக இயக்கமே. மக்கள் பொறுப்புணர்ச்சியோடு காரியங்களைச் செய்யக் கூட்டுறவு இயக்கம் பயிற்றுகிறது. அதன்மூலம் எல்லாரையும் நற்பிரசைக ளாக்குகிறது.

## இலங்கையில் கூட்டுறவு இயக்கம் தோன்றி வளர்ந்த வரலாறு :

1912-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்கச் சட்டம் இலங்கையில் நடைமுறைக்கு வந்தது. அதுதான் கூட்டுறவு இயக்கத்தின் தோற்றமெனலாம். கூட்டுறவுத் தாபனங்கள் சம்பந்தமாக இலங்கையில் அமுலுக்கு வந்த முதற் சட்டம் இஃதெனவே கூற லாம். கடன் கொடுக்கும் சங்கத்தின் அமைப்பை ஒழுங்கான முறையில் உருவாக்குவதே இதன் நோக்கமாயிருந்தது. ஆதியில் மத்திய அரசாங்கத்தின் கருமங்களில் ஒன்றாகக் கூட்டுறவு விட யத்தையும் விவசாயப் பகுதி மூலம் நிர்வகித்து வந்தார்கள். பின் னர் அது தனிப் பகுதியாக 1931-ம் ஆண்டுவரை நிர்வகிக்கப் பட்டு வந்தது. டொனமூர் அரசியற் சீர்திருத்தங்களின் பயனாக அது பின்னர் விவசாய மந்திரியின் கையில் ஒப்படைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் அதாவது 1912-ம் ஆண்டு துவங்கி 1931-ம் ஆண்டுவரை கூட்டுறவு இயக்கம் அதிகம் வளர்ச்சியடையவில்லை. கிராமத் தாபனங்களுக்குக் கடன் கொடுப்பதொன்றே அதன் வேலையாயிருந்தது. 1913-14-ல் 1820 அங்கத்தவரைக்கொண்ட 37 கூட்டுறவுச் சங்கங்களிருந்தன. பின்னர் சிறிது சிறிதாகச் சங்கங்களின் தொகை அதிகரித்தது. கடன் கொடுப்பதையே நோக்கமாகக் கொண்ட சங்கங்கள் மாத்திரமே 1921-ம் ஆண்டு வரை அரசாங்கத்தின் கவனத்தைப் பெற்றன. பின்னர் புதிய தொரு கூட்டுறவுச் சங்கச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1921--22-ல் 19,957 அங்கத்தவரைக் கொண்ட 169 சங்கங் களிருந்தன. 1932--33-ல் இவ்வியக்கத்தின் முதற்படி பூர்த்தி யாயிற்று. அப்பொழுது இதன் கைமுதல் 21 இலட்சம் ரூபா யாக இருந்தது. பின்னர் 26,719 அங்கத்தவரைக் கொண்ட 779 சங்கங்கள் உண்டாயின. கடன்கொடுக்கும் சங்கங்களே எப்பொழுதும் முதன்மையிடத்தைப் பெற்றன. சிக்கனம்,

பொருள் விற்பனை, பொருள் உற்பத்தி, கூட்டு விவசாயம், சங் கக்கடை என்பன போன்ற சிலவகைக் கூட்டுறவுச் சங்கங்களும் உண்டாயின. ஆனால் இவை சிறிது சிறிதாகவே வளர்ச்சி யடைந்தன.

1912--1933 வரை கொலோனியல் ஆட்சி நடைபெற்றதால் கூட்டுறவை முன்னேற்றமடையச் செய்ய அரசாங்கம் அதிக முயற்சியெடுக்கவில்லை. சங்கங்களைப் பதிவுசெய்து மேற்பார்வை செய்து வந்தார்கள். கூட்டுறவைப்பற்றிச் சனங்கள் அறிந்து கொள்ளும் வகையில் ஒருவித பிரசாரமும் நடத்தப்படவில்லை. வரண்ட பிரதேசக் குடியேற்றமோ, விவசாயமோ, விற்பனையோ அக்காலத்திற் கிடையா. அரசாங்கம் இவ்விடயங்களில் அக்கறை காட்டவில்லை. கூட்டுறவு இயக்கத்தை வளர்ப்பதற்குச் சில பதிவு அதிகாரிகள் முனைந்து நின்ற போதிலும் சனங்களிடத்திலோ, அரசாங்கத்திடமோ உற்சாகம் காணப்படாததால் அவர்கள் ஒன்றுஞ் செய்யமுடியாமற் போய்விட்டது. வன்னிப்பகுதியும், வரண்ட பிரதேசமும், "வானத்தைப் பார்த்துப் பிளிறிக் கொண் டிருந்த" கண்ணியிற் சிக்கிய யானைபோலிருந்தன. மலேரியாக் காய்ச்சல் பெரிய சத்துருவாயிருந்தது.

இவ்வியக்கத்தின் இரண்டாவது கட்டம் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டு டொனமூர் அரசியல் நடைமுறைக்கு வந்தது முதல் ஆரம்பித்தது. கொலோனியல் ஆட்சி மாறி அரைக் கொலோ னியல் ஆட்சி ஆரம்பித்தது. அரசியல் ஆட்சியில் சனங்களுக்குப் பங்கு கொடுக்கப்பட்டது. கூட்டுறவு விவசாய மந்திரியின் பொறுப்பில் விடப்பட்டது. அக்காலத்தில் விவசாய மந்திரி யாயிருந்த கௌரவ. டி. எஸ். சேனநாயகா இத்தருணத்தைப்பயன் படுத்தினார். உணவு விடயத்தில் இலங்கை மற்ற நாடுகளை நம்பி யிருக்கக் கூடாதென எண்ணி அவர் பல குடியேற்றத் திட்டங் களையும், விவசாயத் திட்டங்களையும் வகுத்தார். அத்திட்டங் களை அபிவிருத்தி செய்வதற்குக் கடன் கொடுக்கும் சங்கங்கள் நல்லதொரு சாதனமென எண்ணினார். கூட்டுறவு இயக்கத்துக்குப் புத்துயிரளித்தார்.

1936-ல் ஒரு கூட்டுறவுச் சட்டம் அமுலுக்கு வந்தது. 1912-ம் ஆண்டுச் சட்டத்திலும் 1951 ம் ஆண்டுச் சட்டத்திலுமுள்ள குறைகளை நீக்கினார். கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள பிணக்குகளை விரைவாய்த் தீர்த்து வைப்பதற்கு வழிகாணப்பட்டது கூட்டுற வுக் கடன், உயர்ந்த ஒரு இடத்தைப் பெற்றது. வரண்ட பிர தேசத்தில் விவசாய மந்திரி ஆரப்பித்த குடியேற்றத் திட்டத்

துக்கும் விவசாயத் திட்டத்துக்கும் உற்சாகமளிக்கப்பட்டது. விவசாயிகளும், குடியேறிய மக்களும் இலேசாகக் கடன் பெற்று விவசாயத்தை நடத்தக்கூடியதாயிருந்தது.

இருந்தும் இவ்வியக்கம் அதிகம் முன்னேற்றமடையவில்லை. வரண்ட பிரதேசத்தில் மலேரியா பெரிய நட்டத்தை உண்டாக்கிற்று. புதிதாக விவசாயத்திலீடுபட்டவர்களுக்கு அதிக கவர்ச்சியை அது கொடுக்கவில்லை. ஆனல் மூன்ருவது கட்டத்தில் இவ்வியக்கம் அடைந்த பெரிய வெற்றிக்கு இக்காலத்தில் அத்திவாரமிடப்பட்டது. விவசாய மந்திரி மிகுந்த ஊக்கத்துடனும் அயராத உழைப்புடனும் காட்டை அழித்து வயலாக்கினபடியால் விவசாயம் வளர்ச்சியடைந்தது. இதன் பயனுகவே 1942-ம் ஆண்டு துவக்கம் கூட்டுறவு இயக்கம் பெரிதும் முன்னேற்றமடைந்தது. 1942-ல் இவ்வியக்கத்தின் இரண்டாவது கட்டம் முடிவடைந்து மூன்ருவது கட்டம் ஆரம்பமாயிற்று. அப்பொழுது சனங்களில் 7விகிதத்தினரே கூட்டுறவிற் கரிசனையுடையவராயிருந்தனர். 1941--42-ன் முடிவில் கூட்டுறவு இயக்கத்தின் மூலதனம் 70 இலட்சமாயிருந்தது. 91,988 அங்கத்தவரையுடைய 2036 சங்கங்களிருந்தன. ஆனல் கூட்டுறவு ஐக்கிய வங்கி போன்ற ஒரு பெரிய கடன் கொடுக்கும் தாபனம் இருக்கவில்லை. நான்கு மாகாண வங்கிகள்தானிருந்தன. 2036 சங்கங்களில் 1622 கடன் கொடுக்குஞ் சங்கங்கள், சிக்கனச் சங்கங்கள், விற்பனைச் சங்கம், பொருளுற்பத்திச் சங்கம், பொருள் அனுபவிக்கும் கூட்டுறவுச் சங்கம் என்பனவெல்லாம் ஆரம்ப தசையிலிருந்தன. கூட்டுறவுப் பாடசாலையொன்றுகூட நிறுவப்படவில்லை. ஆனல் 1942-ம் ஆண்டுக்குப் பின்னர் உண்டான பிரமிக்கததக்க முன்னேற்றத்துக்கு 1932 துவக்கம் 42 வரை உற்சாகமும் விடாமுயற்சியுமுள்ள கூட்டுறவு அதிகாரிகள் அடிகோலினர் என்பதை மறந்துவிடக்கூடாது. வரண்ட பிரதேசத்தில் விவசாயம் ஆரம்பிக்கப்பட்டது. மலேரியாப் பயம் நீங்கிற்று. வன்னியிலும் அதையடுத்த வரண்ட பிரதேசங்களிலும் விவசாயிகள் கூட்டம் முதன் முதலாகக் குடியேறியது. இத்தருணத்தில் யப்பான் இரண்டாவது மகா யுத்தத்தில் ஈடுபட்டது.

கூட்டுறவு இயக்கத்தின் மூன்ருவது படி 1942 ல் ஆரம்பித்தது. அத்துடன் இவ்வியக்கம் புரட்சிகரமான மாற்றத்தையடைந்தது. 1942 வரை இந்திய முன்மாதிரியைப் பின்பற்றி இவ்வியக்கம் விருத்தியடைந்துவந்தது. கடன் கொடுப்பதே அதன் முக்கிய நோக்கமாயிருந்துவந்தது. கூட்டுறவின் மற்றைய அமிசங்கள் கவனிக்கப்படவில்லை. 1934-ல் யாழ்ப்பாணம்—மலையாளப் புகையிலை வியா

பாரக் கூட்டுறவுச் சங்கம் தாபிக்கப்பட்டது. விளைபொருள் உற்பத்தி, விற்பனை என்னும் விடயங்களில் இச்சங்கம் முன்மாதிரியாயிருந்து வந்தது. ஆனல் அதனைப் பின்பற்ற வெகு சிலரே முன்வந்தனர். கூட்டுறவு இயக்கத்தினல் உண்டான வெற்றிக்கு யாழ்ப்பாணத்தவரே காரணராயிருந்தனர். கூட்டுறவு முயற்சியினலடையக்கூடிய பயன் அதிகமென்பதை அவர்கள் முன்கூட்டியே நன்கு அறியும் ஆற்றல் பெற்றிருந்தனர். ஏனைய பகுதிகளில் உள்ளவர்கள் உறங்கிக்கொண்டிருந்தார்களெனலாம். யுத்தம் வந்தது. உணவுப் பஞ்சம் உண்டாயிற்று. அதன் பின்னர்தான் அவர்களுக்கு உணர்வுண்டாயிற்று. இரண்டாவது மகா யுத்தத்தில் யப்பான் பிரவேசித்ததும் சிறிய கடைக்காரருக்கும் இந்தியக் கடைக்காரருக்கும் பெரிய நட்டமுண்டாயிற்று. கொழும்பிலும், திருக்கோணமலையிலும் யப்பானியர் குண்டு வீசியதும் இந்தியக் கடைக்காரர் பயந்து ஓட்டமெடுத்தனர். உள்ளூர்ச் சிறிய கடைக்காரர் கள்ள வியாபாரஞ் செய்து சமூகத்துக்குப் பெரிய இடைஞ்சலையுண்டாக்கினர். எனவே அரசாங்கம் நிலைமையைச்சமாளிப்பதற்காக வியாபாரத்திலீடுபட்டு உணவுப் பொருட்களுக்குக் கட்டுப்பாடு விதித்தது. பர்மாவும், தாய்லந்தும் எதிரிகள் கையிலகப்படவே இலங்கையில் உணவுப் பொருள்களுக்குப் பஞ்சமுண்டாயிற்று. கிடைக்கக்கூடியவற்றை ஏற்றிக்கொண்டுவரக் கப்பல்களும் கிடைக்கவில்லை. எனவே உள்ளூர் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டிய நிலைமை உண்டாயிற்று. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான பிரசாரம் நாடெங்கும் நடத்தப்பட்டது. அரசாங்கம் விவசாயிகட்குப் பரிசுகள் வழங்கி உற்சாகப்படுத்திற்று. உள்ளூர் நெல் வாங்கும் திட்டத்தையும் ஆரம்பித்தது. இதனுற் கமக்காரர் அறுவடை செய்தவுடன் நெல்லை அரசாங்கம் வாங்கக்கூடியதாயிருந்தது. கமக்காரர் தமக்குத் தேவையான கலப்பை, விதைநெல் முதலியவற்றை முட்டின்றி வாங்குவதற்கும், அடுத்த போகம் வரை தமது செலவுக்கான பொருளைப் பெறுவதற்கும், விவசாயப் பொருள் உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. கள்ள வியாபாரிகள் செய்யும் அட்டூழியங்களிலிருந்து சமூகத்தைக் காப்பாற்றவும், இந்தியக் கடைக்காரரில்லாமையால் உண்டான கஷ்டத்தை நீக்கவும் பொருள் உபயோகிப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாப் பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டன. இச்சங்கங்கள் சமூகத்துக்குத் தேவையான உணவுப் பொருள்களை நியாயமாகக் கட்டுப்படுத்திய விலைக்குக்கொடுத்தன. இதனல் சமூகம் கடைக்காரரைப் புறக்கணித்துவிட்டுச் சங்கங்களில் நம்பிக்கை வைத்தது. விவசாயப் பொருள்களை விளைவிப்பதிலும் அவற்றை விற்பனை செய்வதிலும், விநியோகஞ் செயவதிலும், அரசாங்கம் பாதுகாப்பாளராகக் கடமைபுரிந்து கூட்டுறவு இயக்கத்துக்குத் தனது முழு ஆதரவையும் கொடுத்தது.

இருந்தும் சனங்கள் பேரூக்கத்துடன் இவ்வியக்கத்துக்கு உறுதுணை யாயிருந்தபடியாற்றான் அது மகத்தான வெற்றியைப் பெறக் கூடியதாயிற்று.

1942-ம் ஆண்டின் பின்னர் உள்ள புள்ளிவிபரங்களை ஆராய்ந் தால் இவ்வெற்றி எவ்வளவு மகத்தானதென்பதை அறியலாம். 1942-க்கு முன்னர் சனங்களில் ஏழுவீதத்தினர் தான் இவ்வியக்கத் திற் கலந்திருந்தனர். பெரும்பாலும் கடன் கொடுக்கும் சங்கங் களே தொழில் புரிந்தன. 38 பொருள் உபயோகிப்போர் சங்கங் களே இருந்தன. அவையும் தோட்டங்களிலே தான் காணப்பட் டன. 1946--47-ல் பெரியதொரு மாற்றமுண்டாயிற்று. 3961 சங்கக்கடைகள் ஏற்படுத்தப்பட்டன. சனத்தொகையில் மூன்றி லிரு பங்கினர் இதிற் சேர்ந்திருந்தார்கள். விவசாயப் பொருள் உற்பத்தியிலும் விற்பனையிலும்கூடப் பெரிய மாற்றமுண்டா யிற்று. 1947-ல் 8964 அங்கத்தவரைக் கொண்ட 26 சங்கங்களி ருந்தன. 1952-ல் 339 சங்கங்கள் காணப்பட்டன. இவற்றில் 8200க்கு மேற்பட்ட அங்கத்தவரிருந்தார்கள். சிறுதென்னந்தோட் டமுள்ளவர்களுக்கும் கிராமவிவசாயிகட்கும் இச்சங்கங்கள், பேரு தவி புரிந்தன. கடன் கொடுப்போரிடமிருந்து, விவசாயிகளைக் காப்பாற்றிய பெருமை இச்சங்கங்களுக்குண்டு. விவசாயஞ் செய் வதற்குத் தேவையான கலப்பை முதலியவற்றை வாங்கவும், பண உதவி பெறவும் இவை உறுதுணையாயிருந்ததால் விளைவு பெரு கிற்று. அதனால் நாட்டின் செல்வமும், செழிப்பும் அதிகரித்தது. அரசாங்கத்தின் விவசாயத் திட்டங்களை நிறைவேற்றவும் இவை துணைபுரிந்தன. உணவு விஷயத்திற் சுதந்திரம் பெறுவதற்கு இச் சங்கங்களே தகுந்த சாதனங்களாகும்.

1942-ல் கூட்டுறவுஇயக்கத்தின் அமைப்புப் பூரணமாக்கப்பட் டது. ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு வங்கி அமைக்கப் பட்டது. 1942-ற்கு முன் எல்லாமாக நான்கு வங்கிகளே நில வின. இவ்வங்கிகள் கிராமத்தேவைகளுக்கு அவசியமான பணத் தைக் கடனாகக் கொடுத்தன. அதாவது விவசாயப் பொருள் உற் பத்திச் சங்கங்களுக்கும், விற்பனைச் சங்கங்களுக்கும், கடன் கொடுக் குஞ்சங்கங்களுக்கும் இவை பணத்தைக் கடனாக வழங்கின. விவசா யிகள் இச்சங்கங்கள் மூலம் தங்களுக்குத் தேவையான பொருளைக் கடனாகப் பெற்றார்கள். 1947-ல் ஒரு மத்திய வங்கி ஏற்படுத்தப் பட்டது. இது 1949-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் வேலை செய்ய ஆரம்பித்தது. அரசாங்கம் இந்தவங்கிக்கு 20 இலட்சம் ரூபாவை வட்டியின்றி 5 வருடத்துக்குக் கடனாகக் கொடுத்தது. கூட்டுறவு

இயக்கத்தின் பணக்கொள்கையை ஒழுங்கான முறையில் நடப்பிப்பதும், மாகாணக் கூட்டுறவு வங்கிகட்குக் கடன் உதவுவதுமே இதன் முக்கியமான கடமையாகும்.

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் 1943-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவுப் பகுதியின் ஒரு கிளையாக ஆரம்பிக்கப்பட்டது. 1945 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கூட்டுறவு அபிவிருத்திப் பகுதியின் ஒரு கிளையாக இதுமாற்றப்பட்டது. இந்த நிலைமை 1949 ஆம் ஆண்டுவரை இருந்து வந்தது. அவ்வாண்டில் கூட்டுறவு மொத்த விற்பனைத்தாபனச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன் பயனாக இந்தத் தாபனம் ஐந்து பேரைக் கொண்ட ஒரு சங்கத்தின் நிர்வாகத்தில் விடப்பட்டது' கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்துக்கு ஒவ்வொரு மாகாணத்திலும் மத்திய பண்டசாலையுண்டு. கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைச் சங்கங்களுமுண்டு. இவற்றின் மூலமாகவே இந்தத் தாபனம் தனது கருமங்களை நடத்துகிறது. இன்று இத் தாபனத்தின் மூலமாகத்தான் அரிசி, புடைவை என்பன பெருந் தொகையாக விநியோகஞ் செய்யப்படுகின்றன.

நிர்வாகத் துறையில் இச்சங்கங்களை யெல்லாம் நிர்வகிப்பதற்காக 1945 ல் கூட்டுறவு விருத்தியாதிகாரியின் இலாக்கா என ஒரு பகுதி ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியைத் திடப்படுத்துவதும், அதற்கு வழி கோலுவதுமே இந்த இலாக்காவின் கடமை. அத்துடன் கூட்டுறவு மொத்த விற்பனைத்தாபனம் போன்று விசேட முயற்சிகளிற் பங்கு பற்றுவதும் ஒரு தனிக்கடமையாகும். இக்கடமைகளைக் கூட்டுறவுச் சங்கப் பதிவுப்பகுதியினர் செய்து கொள்ள வசதி இல்லாதபடியாற்றான் தனிப்பட்ட ஒரு இலாக்கா தாபிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கப்பதிவுப் பகுதியினர் சங்கங்களை மேற்பார்வை செய்வதிலும், கணக்குப் பரிசோதிப்பதிலும், கூட்டுறவு பற்றிப் பயிற்சியளிப்பதிலும், பிரசாரஞ் செய்வதிலும், புதிய சங்கங்களை அமைப்பதிலும் ஈடுபட்டிருந்தபடியால் அப்பகுதியாருக்கு இக் கருமங்களையும் பார்ப்பதற்கு அவகாசம் ஏற்படவில்லை.

கூட்டுறவு முயற்சியில் திடீரென உண்டான மகத்தான வளர்ச்சியைச் சமாளிப்பதற்கே புதிய இலாக்கா அமைக்கப்பட்டது. கூட்டுறவு இயக்கத்தை அரசாங்கப் பிடியிலிருந்து விடுவித்து அதற்குப் பூரண சுதந்திரம் அளித்த பின்னர் ஒருவேளை இந்த இலாக்கா இல்லாதொழியலாம். புதிய அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் 1947 ஆம் ஆண்டில் முதல் மந்திரி சபை

நிறுவப்பட்டபொழுது உணவுக்கும் கூட்டுறவு விவகாரங்களுக்குமாக ஒரு தனி மந்திரி நியமிக்கப்பட்ட பொழுதே கூட்டுறவு இயக்கத்தின் முக்கியத்துவத்தை அரசாங்கம் உணர்ந்து கொண்டது எனலாம். 1952-ம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் பின்னர் மந்திரி சபையைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயகா மாற்றியமைத்த பொழுது கூட்டுறவு விடயம் விவசாய உணவு மந்திரியின் பொறுப்பில் விடப்பட்டது.

1943 ஆம் ஆண்டு பொல்கொல்லையில் கூட்டுறவுப் பாடசாலை யொன்று நிறுவப்பட்டது. கூட்டுறவுப் பகுதியார் தெரிந்தெடுத்த கூட்டுறவு அதிகாரிக்குப் பயிற்சி யளிப்பதும் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் சிப்பந்திகளுக்கும் கூட்டுறவிற் சிரத்தையுள்ள பொது சனங்கட்கும் பயிற்சியளிப்பதுமே இப்பள்ளிக்கூடத்தின் முக்கியகடமையாயிற்று இக்காலத்திற்றான் சனங்களிடத்துக் கூட்டுறவு உணர்ச்சியை உண்டாக்குவதற்கும், கூட்டுறவு அறிமுறை செய்முறைகளில் அவர்களுக்கு அறிவுண்டாக்குவதற்கும் கூட்டுறவு மகாநாடுகளும். கூட்டுறவுப் பிரசாரங்களுஞ் செய்யப்பட்டன. இதன் பயனாகச் சனங்கள் கூட்டுறவு விடயத்தில் முன்னொரு போதுமில்லாத சிரத்தை காட்டத் துவங்கினார்கள்.

### கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக அமைப்பு:

1945 ஆம் ஆண்டில் கூட்டுறவு அபிவிருத்தியதிகாரியின் இலாக்கா என ஒன்று நிறுவப்பட்டதென ஏற்கனவே கூறினோம். "கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சியைத் திட்டப்படுத்துவதும் அதற்கு வழிகோலுவதும், கூட்டுறவு மொத்தவிற்பனைத் தாபனம் போன்ற விசேட முயற்சிகளிற் பங்குபற்றுவதும்" இந்த இலாக்காவின் கடமையெனவும் கண்டோம். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவுக் காரியஸ்தர் இலாக்கா இச்சங்கங்களை மேற்பார்வை செய்வதும், கணக்கு வழக்குகளைச் சரிபார்ப்பதும், கூட்டுறவுக் கல்வியை விருத்திசெய்வதும், பிரசாரஞ் செய்வதும், புதிய சங்கங்களை அமைப்பதும், இறந்துபோன சங்கங்களின் காரியங்களை ஒழுங்கு செய்வதும் கடமையாகக் கொண்டிருக்கிறது. சங்கங்களிடையே பிணக்கு உண்டானால் மத்தியட்சம் செய்யவும் இந்த இலாக்காவுக்கு உரிமையுண்டு. சனங்களிடையே உள்ள வறுமைக்குரிய காரணங்களை ஆராய்ந்து அதைக் கூட்டுறவு முறையில் எவ்வாறு தீர்க்கலாம் என்பதைக் கண்டறிவதும் இவ்விலாக்காவின் கருமங்களிலொன்றாகும். கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரிதான் கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்குப்

பொதுப்படையாகப் பொறுப்புள்ளவர். அதன் பயனுகக் கூட்டுறவுப் பதிவுக் காரியஸ்தர் இலாக்கா அவருடைய மேற்பார்வையிற்ருனிருக்கிறது.

பதிவுக் காரியஸ்தரின் இலாக்கா ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு உதவிப் பதிவுக் காரியஸ்தரை நியமித்திருக்கிறது. அவரே அம்மாகாணத்திற்குப் பொறுப்புடையவர். இவருக்கு உதவியாக ஒரு உதவிப் பதிவுக்காரியஸ்தர் நியமிக்கப்படுவர். குறிப்பிட்டதொரு தொகைக்கு அதிகமான கூட்டுறவுச் சங்கங்களிருந்தால்தான் மேலதிகமான உதவிப் பதிவுக் காரிய்ஸ்தர் நியமிக்கப்படுவர். இம்மேலதிக உதவிப் பதிவுக் காரியஸ்தர் ஒரு மாகாணத்திலுள்ள குறிப்பிட்ட சில பகுதிகளுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டு வருகிருர்கள். ஒரு மாகாணத்தில் பல 'வட்டாரங்'களுண்டு. ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பொறுப்பாக ஒரு பரிசோதகர் நியமிக்கப்படுவர். இத்தகைய பரிசோதகருக்கு உதவியாகப் பல உதவிப் பரிசோதகர்கள் நியமிக்கப்படுவர். பரிசோதகர் உதவிப் பதிவுக் காரியஸ்தருக்குப் பொறுப்புடையவராவர். உதவிப் பரிசோதகர்கள் தம்முட் சில 'வட்டாரங்'களை ஏற்படுத்தி அவற்றின் எல்லைக்குட்பட்ட கூட்டுறவு விஷயங்களைப் பரிபாலித்து வருவர். ஒவ்வொரு உதவிப் பரிசோதகரும் தம் எல்லைக்குட்பட்ட கூட்டுறவுச் சங்கங்களுக்கு முழுப் பொறுப்புடையவராவார்.

1948-ல் தலைமைக் காரியாலயத்தில் கணக்குப் பரிசோதனை செய்வதற்கென ஒரு கிளை தாபிக்கப்பட்டது. இதன் பயனுக மாகாணக் காரியாலயங்கள் கணக்குப் பரிசோதனை செய்யும் கடமையைக் கைவிட்டன. கணக்குப் பரிசோதனை செய்யும் கிளைக்கு உத்தியோகத்தில் பல கால அனுபவமுள்ள உதவிப் பதிவுக் காரியஸ்தர் ஒருவர் தலைமையாக நியமிக்கப்பட்டுள்ளார். பெரிய சங்கங்கள் விடயமாக விசேட கவனஞ் செலுத்தப்படுகிறது. உதவிப் பரிசோதகர் பொறுப்பிலிருக்கும் எல்லாச் சங்கங்களும் தலைமைக் காரியாலயத்திலுள்ள கணக்குப் பரிசோதகர்களாற் கண்காணிக்கப்படுகின்றன.

புள்ளி விபரங்களைத் திரட்வடுதற்காக அதிற் கைதேர்ந்த ஒரு உதவிப் பதிவுக் காரியஸ்தர் தலைமையில் புள்ளி விவரக் கிளையொன்று நிறுவப்பட்டிருக்கிறது. இந்தக்கிளை கூட்டுறவுச் சங்கங்களின் புள்ளி விவரங்களைச் சேகரித்து, இயக்கத்திலுள்ள குறைபாடுகளை எடுத்துக் காட்டி, வளர்ச்சிக்கான வழிவகைகளை வகுக்கிறது.

பிரசாரத்துக்காக மற்ருெரு கிளை உண்டு. இது உதவிப் பதிவுக் காரியஸ்தர் ஒருவர் தலைமையிலிருக்கிறது. இவர் பிரசார முறைகளில் வல்லமையுடையவர். இவருக்குக் கீழ் ஒரு பரிசோதகரும் பல உதவிப் பரிசோதகர்களும் வேலை செய்கின்றனர். இக்கிளையில் படம் எடுக்கும் ஒருபகுதியும், படவிளக்கம் கொடுக்கும் ஒரு பகுதியுமுண்டு. கூட்டுறவு இயக்கம் சம்பந்தமான பிரசாரஞ் செய்வதற்குத் தேர்ச்சி பெற்ற ஒரு நிபுணரும் நியமிக்கப்பட்டிருக்கிருர்.

கூட்டுறவு அபிவிருத்தியதிகாரியின் இலாக்காவில் ஒரு அதிகாரியும், ஒரு உதவி அதிகாரியும், பிரதம கணக்காளர் ஒருவரும், பல உதவிக் கணக்காளர்களும் இருக்கின்றனர். இந்த இலாக்காவின் முக்கிய நோக்கம் இயக்கத்தின் வளர்ச்சிக்கான வழி வகைகளைக் கோலுவதும், பதிவுக் காரியஸ்தர் இலாக்காவை மேற்பார்வை செய்வதுமாகும்.

## கூட்டுறவு வகைகள்

### வரையறுக்கப்படாத பொறுப்புள்ள கூட்டுறவுக் கடன் சங்கம்

இத்தகைய சங்கம் ஒரு சதுர மைல் விஸ்தீரணமுள்ள வட்டாரத்துக்குப் பயன்படுகிறது. பெரும்பாலும் இது ஒரு கிராமமாயிருக்கும். இச்சங்கத்திற் குறைந்தது 10 அங்கத்தவரா்வது இருக்க வேண்டும். அங்கத்தவர் தொகை 10 லிருந்து 100 வரை இருக்கும். அளவுக்கு அதிகமான அங்கத்தவர் இருப்பது கூடாது. அங்கத்தவர் ஒருவரையொருவர் நன்கு அறிந்தவராயிருத்தல் வேண்டும். ஏனெனில் ஒரு அங்கத்தவர் கடனுக்கு விண்ணப்பஞ் செய்திருந்தால் மற்ற அங்கத்தவர்கள் அவருடைய தராதரம், குணம் தகுதி முதலியவற்றை அறிந்தவர்களாயிருப்பின் அந்தக் கடனை அவருக்குக் கொடுப்பதில் எவ்வித கட்டமுமிராது. அளவுக்கதிகமான அங்கத்தவரிருந்தால் சம்பளமின்றி வேலை செய்யும் அதிகாரிக்கு எழுத்து வேலை அதிகப்பட்டு விடும்.

நேர்மையுள்ள சிலர் ஒன்று சேர்ந்து தமது பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்வதற்குக் கடன் எடுப்பதற்காக ஒரு சங்கமாகச் சேர்கின்றனர். முதலில் இவர்கள் கூட்டுறவு இலாக்காவுக்கு அறிவிப்பார்கள். உடனே கூட்டுறவு இலாக்கா தமது அதிகாரி ஒருவரை அவர்களிடம் அனுப்பும். அவர் கூட்டுறவின் நோக்கம், அதன் தன்மை என்பவற்றை அவர்களுக்கு விளங்

கப்படுத்துவர். கூட்டுறவுச் சங்கத்தை எவ்வாறு அமைக்கவேண்டும், அதன் சட்ட திட்டங்களென்ன என்பதை எடுத்துரைப்பார். பின்னர், சங்கம் அமைக்கப்படும். முதலில் ஒரு நிர்வாக சபையும் அதிகாரிகளுந் தெரிந்தெடுக்கப்படுவார்கள். அவ்வாறு அமைத்த சங்கத்தைப் பதிவு செய்வதற்காகக் கூட்டுறவுச் சங்கப் பதிவுக்காரியஸ்தருக்கு விண்ணப்பம் அனுப்பப்படும். அமைக்கும் சங்கத்தின் உபவிதிகளடங்கிய இரண்டு பிரதிகளும் விண்ணப்பத்தோடு அனுப்பப்படும். இவ்வுப விதிகளை அமைப்பதற்கு உதவியான மாதிரி உபவிதிகளைக் கூட்டுறவு அதிகாரியிடமிருந்து பெறலாம். அவற்றில் தேவையான மாற்றங்கள், திருத்தங்களைச் சேர்த்துப் புதிய உபவிதிகளை ஒரு சங்கத்துக்கு உண்டாக்கலாம். இவ்வாறு துவக்கப்படும் சங்கங்கள் பொதுவாகப் பதிவு செய்யப்பட்டே வருகின்றன.

கிராமக் கமக்காரரின் நிலைமையை உயர்த்துவதற்காகவே இத்தகைய சங்கங்கள் உண்டாக்கப்படுகின்றன. கமக்காரருக்கு எத்தனையோ வகைகளிற் பணந் தேவைப்படலாம், நிலச் செய்கைக்குப் பணம் தேவைப்படலாம். சிலர் கால்நடை வாங்க விரும்புவர்; வேறு சிலர் நிலம் வாங்க விரும்புவர்; வேறு சிலருக்கு நிலத்தைத் திருத்தவோ, குத்தகைக்கு எடுக்கவோ, வியாபாரஞ் செய்யவோ, வீடு கட்டவோ, வண்டி, மாடு முதலியன வாங்கவோ கலப்பை முதலியன வாங்கவோ பணந் தேவைப்படலாம். மற்றுஞ் சிலருக்கு உணவுப் பொருள் வாங்கவும், மருந்து வாங்கவும் பணம் தேவைப்படும். சிலருக்குப் பழைய கடன் கொடுக்கவும், கலியாணச் செலவுக்கும் பணந் தேவைப்படலாம். ஆனுல் பொருள் உற்பத்திக்கான முயற்சிகளுக்காகவே பிரதானமாகக் கடன் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு கடனுங் குறித்தவொரு செலவுக்காகவே வழங்கப்படும். ஒவ்வொருவருடைய தராதரத்தைக் கொண்டே அவர் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும் முறை நிச்சயப்படுத்தப் படுகிறது. உதாரணமாக வட்டி விகிதம், எத்தனை முறையிற் கடனைத் திருப்பிக் கொடுப்பது, எவ்வளவு காலத்துள் கடன் திருப்பிக் கொடுபடவேண்டும் என்ற இத்தகைய விடயங்களெல்லாம் கடன் வாங்குபவரின் தராதரத்தைப் பொறுத்தவை. சங்கத்தின் அங்கத்தவர் சாதாரணமாகச் சொற்ப பணமுடையவர்களாகவேயிருப்பார்கள். செல்வரும், அரசாங்க அதிகாரிகளும் இச்சங்கங்களில் அங்கத்தவராக வருதற்கு அவ்வளவு ஆதரவு கொடுக்கப்படுவதில்லை. ஏனெனில் அவர்கள் தமது செல்வாக்கினுல் மற்ற அங்கத்தவரின் ஆட்சேபனையின்றியே கடனை இலேசாகப் பெறக்கூடிய வசதியைப் பெற்றுவிடுவார்கள். இதனுல் சங்கத்தின் சனநாயக முறைக்கும் கூட்டுறவுத் தன்மைக்கும் பங்கமேற்படலாம்.

கடன் கொடுப்பதற்குச் சங்கத்திற் பணமிருக்கவேண்டும். பணத்தைப் பெறுவது கட்டமன்று. ஆனால் சில சட்ட திட்டங்களுக்கமையவே பணத்தைப் பெறலாம். சங்கம் பெறும் கடனுக்கு அதனுடைய அங்கத்தவர் வரையறையின்றிப் பொறுப்புடையவராக இருக்கவேண்டும். வரையறையின்றியென்றால் சங்கம் எவ்வளவு பணத்தைக் கடனாகப் பெறுகிறதோ அவ்வளவுக்கும் ஒவ்வொரு அங்கத்தவரும் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் பொறுப்புடையவராவார். அதாவது பலர் வட்டிக்குச் சங்கத்துக்குக் காசு கொடுத்திருப்பார்கள்; அல்லது அரசாங்கம் கடன் கொடுத்திருக்கும். இல்லையேல் கூட்டுறவு மத்திய வங்கி கடன் கொடுத்திருக்கலாம். அப்பணங்களைச் சங்கம் திருப்பிக் கொடுக்க முடியாவிட்டால் அதன் அங்கத்தவர் ஒவ்வொருவரும் அதை ஈடுசெய்யக் கடமைப்பட்டவராவார். ஒவ்வொரு அங்கத்தவரும் தமது சொத்துக்களை விற்றாவது அந்தக் கடன் பணத்தை ஈடுசெய்யக் கடமைப்பட்டவராவார். சங்கத்தின் வருமானம் பலவகையில் சேர்வதுண்டு. ஒன்று, அது கடன் கொடுத்த வட்டியால் உண்டாகும் வருமானம். இரண்டாவது, சங்க அங்கத்தவரின் சேமிப்புப் பணம். மூன்றாவது, அங்கத்தவர் வட்டிக்குக் கொடுத்த பணம். நாலாவது, சங்கப் பங்குகளை அங்கத்தவருக்கு விற்ற பணம். இவற்றைவிட அரசாங்கமோ, கூட்டுறவு மத்திய வங்கியோ கடனாகக் கொடுத்த பணமும் இருக்கும். இப்பணத்தைப் பரிபாலிப்பவர் சங்கத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட தனாதிகாரியாவர். சங்கம் கடனாளியாகப் போய்விட்டாற்றான் அதன் அங்கத்தவர்கள் அது வாங்கிய கடன்களுக்குப் பொறுப்பாளிகளாவர். சங்கம் வாங்கிய கடன்களைத் திருப்பிக் கொடுக்கமுடியாத நிலைமை உண்டானால் கடன் கொடுத்தவர் பதிவுக் காரியஸ்தருக்கு எழுதிச் சங்கத்தின் கணக்குகளைப் பரிசீலனை செய்விக்கலாம். 1936 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்து 35-வது சட்டத்தின் இரண்டாவது பிரிவு இதற்கு உரிமையளிக்கிறது. கணக்குப் பரிசீலனை செய்தபின் பதிவுக் காரியஸ்தர் அச் சங்கத்தைக் கடனாளியாகப் பிரகடனம் செய்யலாம். இவ்வாறு பிரகடனஞ் செய்யப்பட்டதும், பதிவுக் காரியஸ்தரின் பிரதிநிதி சங்கத்தின் வருமானங்களைத் தாமே கைப்பற்றிக் கடன்களைத் தீர்க்கலாம். அவ்வருமானம் எல்லாக் கடனையுங் கொடுக்கப் போதாவிட்டால், முன் கூறியபடி, அங்கத்தவர் ஈடுசெய்ய வேண்டிய விடயத்திலீடுபடுவார். கடன் முழுத் தொகையையும் சங்கம் கொடுக்கச் சக்தியற்றிருந்தால் எவ்வளவு பணம் மேலதிகமாகத் தேவைப்படுகிறதோ அந்தப் பணத்தை (அ) அங்கத்தவரிடமிருந்தும் (ஆ) பழைய அங்கத்தவரிடமிருந்தும் (இ) இறந்துபோன அங்கத்தவரின் சொத்துகளிலிருந்தும் வசூல்

செய்ய அதிகாரி முயல்வர். பழைய அங்கத்தவர் அல்லது இறந்துபோன அங்கத்தவரின் பொறுப்பு இரண்டு வருடத்தின் பின் முடிவடைந்துவிடும். அதாவது ஒரு அங்கத்தவர் தமது அங்கத்துவத்தை நீக்கிக் கொண்டால் அவ்வாறு, நீங்கிய தேதியிலிருந்து இரண்டு வருடத்தின் பின் அவருடைய பொறுப்பு நீங்கிவிடும். இறந்துபோன அங்கத்தவர் விடயமும் அவ்வாறே. இவர்கள் அங்கத்துவ பதவியிலிருந்து நீங்கிய பின்னர் சங்கம் பெற்ற கடன்களுக்கு இவர்கள் பொறுப்புடையவரல்லர். அங்கத்தவர் தமது பங்குக் கடனைக் கொடுக்க மறுத்தால் கோட்டில் வழக்குத் தாக்கல் செய்து அக்கடனை அறவிடலாம், ஒரு சங்கத்தை 'ஒடுக்கி விடுதல்' என்பது மற்றெவ் வழிகளுமில்லை யென்று கண்ட பின்னர் செய்யப்படுவதாகும். அதற்கிடையில் சங்க அங்கத்தவர் தமது நன்மையை உத்தேசித்தாவது கடன் எடுத்தவர்கள் தக்க தருணத்தில் அதைத் திருப்பிக் கொடுக்கப் பண்ணுவார்கள் என்பதிற் சந்தேகமில்லை.

கடன் கேட்டு அங்கத்தவர் விண்ணப்பஞ் செய்தால் அதனைச் சங்கப் பொதுக் கூட்டம் தெரிவு செய்த நிர்வாக சபை ஆலோசனை செய்யும். கடன் கொடுப்பதா இல்லையா என்பதை இந்த நிர்வாக சபையே தீர்மானிக்கும். கடன் கேட்பவர் குறித்த கால எல்லைக்குள் அதனைத் திருப்பிக் கொடுத்து விடுவாரென இரண்டு அங்கத்தவர் உத்தரவாதஞ் செய்யவேண்டும். கடன் எடுப்பதற்கு வேண்டிய பிணை இவ்வளவுதான். நிலமோ, உடைமைகளோ ஈடாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. நிலத்தை ஈடாக ஏற்றால் கடனாளி கடனைக் கொடுக்கத் தவறியபோது அதனை விற்க வேண்டும். உடைமைகளை ஈடாக ஏற்றால் அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருக்கச் சங்கந்துக்கு இடமில்லை; அன்றியும் அவற்றின் விலையை மதிப்பிடுவது அதற்குக் கடினமான வேலையாகும். எனவே, பிணை நிற்போர் கடனை வாங்கிக் கொடுப்பர். என்ன விடயத்துக்குக் கடன் எடுக்கப்பட்டதோ அந்த விடயத்துக்கே அது பயன் படுத்தப்படுகிறதென்பதை அவர்கள்கவனிப்பார்கள். அன்றியும் கடனாளி பணத்தை நேரத்துக்குத் திருப்பிக் கொடுக்கிறான என்பதையும் அவர்கள் கவனிப்பர். கடனாளி பணத்தைக் கொடுக்கத் தவறினால் பிணை நிற்பவர்களே அதைக் கொடுக்க வேண்டி யேற்படும்.

ஒவ்வொரு அங்கத்தவருக்கு நிர்வாகசபை எவ்வளவு தொகை பணங் கொடுக்கலாம், சங்கம் மற்றத் தாபனங்களிலிருந்து எவ்வளவு பணத்தைக் கடனாகப் பெறலாமென்ற விடயங்களைச் சங்கத்தின் பொதுக்கூட்டமே நிச்சயிக்க வேண்டும். பின்னர்

நிர்வாகசபை சங்கத்தின் சார்பில் கடனுக்கு விண்ணப்பஞ் செய்து கொள்ளும். சங்க விடயங்கள் அனைத்திலும் பொதுக் கூட்டம் கண்ணோட்டஞ் செலுத்திக் கொண்டே வரும். அதன் கட்டுப் பாட்டின் கீழ்த்தான் எல்லாக் கருமங்களும் நடைபெறும். நிர்வாக சபை தனது கருமங்களைச் சரிவர நடத்தவில்லை யென்று ஒரு அங்கத்தவர் கருதினால் அவர் பொதுக் கூட்டத்தைக் கூட்டி அந் நிர்வாக சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்றி அச்சபையைக் கலைத்துவிட்டுப் புதியதொரு நிர்வாக சபையைத் தெரிந்தெடுக்கலாம். நேர்மையற்ற ஒரு அங்கத்தவரைச் சங்கத்தி லிருந்து கலைக்க வேண்டுமானால் பொதுக் கூட்டம் கூடவேண்டும். அதில் முழு அங்கத்தவர் தொகையிற் பாதிப் பேராவது சமுக மளிக்க வேண்டும். அவ்வாறு சமுகமளித்தோரில் மூன்றிலிரண்டு பகுதியினரின் அதிகப்படியான வாக்குக்கிடைத்தால் அந்த அங்கத் தவரை விலக்கி விடலாம். நேர்மையற்ற ஒரு சிறுபான்மைக் குழுவினர் வேண்டுமென்றே தன்னை எதிர்க்கிறார்களென்று ஒரு அங்கத்தவர் கருதினால் அவர் சங்கத்தின் முக்காற் பங்கு அங்கத் தவர்களைச் சேர்த்துச் சங்கத்தின் பதிவை ரத்துச் செய்யுமாறு அவர்கள் மூலம் பதிவுக் காரியஸ்தருக்கு விண்ணப்பஞ் செய்விக் கலாம். இதில் அவர் வெற்றி பெறுவிட்டால் தானே அந்தச் சங் கத்திலிருந்து விலகிக் கொள்ளலாம். ஒரு சங்கத்தின் மீது பதிவுக் காரியஸ்தருக்குச் சர்வாதிகாரமுமுண்டெனச் சாதாரணமாகக் கருதப்படுவது தவறு. அவருடைய அதிகாரம் மிகச் சொற்பம். சங்கத்தைப் பதிவு செய்யலாமா என்று நிச்சயிப்பது அவரே. ஒரு சங்கத்தின் கணக்கு வழக்குகளைப் பார்த்து அதை ''ஒடுக்க'' வேண் டுமானால் ஒடுக்கிவிட அவருக்கு அதிகாரமுண்டு. ஆனால் இவ்வதி காரம் வேறொரு வழியுமில்லாத தருணத்திற்றான் பயன்படுத்தப் படும். சங்கத்தின் நிர்வாகம் முதலியனவெல்லாம் பொதுக் கூட்டத்தின் கையிலும் நிர்வாக சபையின் கையிலுமே விடப்படும். பதிவுக் காரியஸ்தர் நல்ல ஆலோசனை கூறலாம்; எச்சரிக்கை செய்யலாம். தேவையான போது உற்சாகமளிக்கலாம். ஆனால் தன் விருப்பப்படி நடக்குமாறு உத்தரவிடவோ கட்டளையிடவோ அவருக்கு அதிகாரங் கிடையாது.

## வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கூட்டுறவுக் கடன் சங்கம்:

வரையறுக்கப்படாத பொறுப்புள்ள கூட்டுறவுச் சங்கங்களே கிராமாந்தரங்களில் அதிகமாகக் காணப்படும். பட்டினங்களிலும், சிறிய பட்டினங்களிலுமுள்ளவை அநேகமாக வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கடன் சங்கங்களாகும். கிராமங்களில் உள்ள

வரையறுக்கப்படாத கூட்டுறவுக் கடன் சங்கங்களின் அங்கத்தவர் ஒருவரையொருவர் நன்கு பழகியவர்களாயிருப்பர். வரையறுக்கப்பட்ட சங்கத்து அங்கத்தவர்கள் அவ்வளவு பழக்கமுடையவர்களன்று. இதனுற்முன் ஒவ்வொரு அங்கத்தவரின் பொறுப்பும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு சங்கங்களும் அமைப்பு வகையில் ஒன்றுதான். ஆனுல் பிந்திய சங்கத்து அங்கத்தவர் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்திருக்க வேண்டுமென்ற அவசியமே கிடையாது. இச்சங்கங்கள் சிறிய வியாபாரி, கடை முதலாளி போன்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டவை. இச்சங்கத்திற் கொடுக்கும் கடன் அநேகமாக வியாபாரத்தை விருத்தி செய்வதற்கேயாகும். கடன், வழக்கமாக உரொக்கக் கடனுகவே கொடுக்கப்படும். இம்முறைப்படி கடனுளி கொடுத்த பணத்தில் எஞ்சியதற்கே வட்டி கொடுக்க வேண்டும். கடன் வாங்கிய முழுத்தொகை மீதும் எப்பொழுதும் வட்டி கொடுக்க வேண்டியதில்லை. இதனுற் சங்கத்து முதல், அதிக காலத்துக்கு முடக்கப்பட்டிராது. சங்கத்தில் பணம் எப்பொழுதுமிருக்கும். அதைத் தகுந்த வட்டிக்குச் சங்கம் கடன் கொடுக்கக் கூடியதாயிருக்கும். கூட்டுறவுச்சங்க அதிகாரி தமது 1948-50ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கையிற் பின்வருமாறு குறிப்பிட்டார் ; ''வரையறுக்கப்பட்ட கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு அதிக வளர்ச்சி கிடையாது. அங்கத்தவர் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்ளாதபடியால் வரையறையில்லாத கடன் சங்க முறையை இச்சங்க அங்கத்தவர் விரும்புவதில்லை. இருந்தும் இச் சங்கங்கள் உயிரோடிருப்பதுமன்றித் திருப்திகரமாகத் தமது கருமங்களை நடத்தியும் வருகின்றன. தனிப்பட்டவர்கள் கொடுக்கும் பிணையை நம்பிக் குறைந்த வட்டியிற் கடன் கொடுத்து வருவதால் இச்சங்கங்கள் பல சிறிய பட்டணங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றன.''

## கூட்டுறவு வங்கிகள் :

கடன் சங்கங்கள், தமக்கு வேண்டிய முதலின் பெரும் பகுதியைக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து பெறுகின்றனவென்று முன்னரே கூறியிருக்கிறேம். இவ்வங்கிகளில் தனிப்பட்டவர்களும் சங்கங்களும் அங்கத்துவம் வகிக்கலாம். ஆனுல் சங்கங்களையே அங்கம் வகிக்கத் தூண்டுவார்கள். வங்கி போன்ற ஒரு தாபனத்தின் நிர்வாக முறைகளிற் தனிப்பட்டவர்கள் பயிற்சி பெறுவதற்காக அவர்களும் அங்கத்தவர்களாகச் சேர்க்கப்படுகின்றனர். ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு வங்கியுண்டு. தனிப்பட்டவர்களிடமிருந்தும், கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும், அர

சாங்கத்திடமிருந்தும், வேறு வகைகளிலும் வங்கிக்கு முதல் கிடைக்கிறது. இலங்கைக் கூட்டுறவுச் சமஷ்டி வங்கியிலிருந்து கடனுகப் பணம் எடுக்கப்படுகிறது. வேறு தாபனங்களிலிருந்தும் கடன் ஏடுக்கப்படுகிறது. இவ்வங்கிகள் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கடன் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கடன் கொடுக்கின்றன. விவசாயம் அதிகமாக நடைபெறும் பகுதிகளிலுள்ள கூட்டுறவு வங்கிகளின் நில அபிவிருத்திப் பகுதியினர் கூட்டுறவுப் பொருளுற்பத்திச் சங்கங்களுக்கும், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் அப்பணத்தை விநியோகஞ் செய்வர். பதிவுக் காரியஸ்தரின் சிபார்சின் பேரிற்றான் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணம் கடனுகக் கொடுக்கப்படுகிறது. ஒரு சங்கத்தின் பணவிடயங்களைப்பற்றி ஆராய்வதற்கு வங்கி தனது பிரதிநிதிகளைப் பெரும்பாலும் அனுப்புவதில்லை. அசாதாரண நிலைமை ஏற்பட்டாற்றான் அவ்வாறு செய்வார்கள். சங்கங்களின் உத்தரவாதம் கூட்டு உத்தரவாதமானபடியால், அது திருப்திகரமானதென வங்கி கருதும். கொடுக்கல் வாங்கல் முதலியன காசோலை மூலம் நடைபெறுவதால் பணம் இழந்து போகக்கூடிய ஆபத்து இல்லை. இவ்வங்கிகளின் வருமானமும் மேலதிகமான பணமும் அரசாங்கக் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்படும். அன்றியும் தபாற்கந்தோர் சேம வங்கியிலும், இலங்கைச் சேமிப்பு வங்கியிலும், இலங்கை வங்கிப் பங்குகளிலும் அரசாங்க ஈட்டு வங்கிக் கடன் சீட்டிலும் முதலீடு செய்யப்படும். சில சமயம் கூட்டுறவுச் சங்கப் பங்குகளிலும், நிலைத்த வைப்பாக வங்கிகளிலும் முதலீடு செய்வர்.

## இலங்கைக் கூட்டுறவு சமஷ்டிவங்கி :

கூட்டுறவு இயக்கத்தின் மிகப் பெரிய வங்கி இதுவே. இதன் கடமைகள் (1) கூட்டுறவு இயக்கத்தின் பணக் கொள்கையை வழிப்படுத்துதல் (2) சங்கங்களின் பணத்தைத் தொடர்பு செய்து மேற்பார்வை செய்தல் (3) மாகாண வங்கிகளுக்குக் கடன் கொடுத்தல் (4) மாகாண வங்கிகளின் மிச்சத் தொகைகளைச் சம நிலைப்படுத்தும் மத்திய தாபனமாயிருத்தல். அரசாங்கம் வங்கிக்கு ஆரம்ப வைப்புப் பணமாக 20 இலட்சம் ரூபாவை 5 வருடத்திற்கு வட்டியின்றிக் கொடுத்தது. ஆனுல், வங்கி சேம நிதியாக $1\frac{1}{2}$ வீத வட்டியை ஒதுக்கி வைக்க வேண்டுமென்ற நிபந்தனையையும் விதித்தது. வட்டியில்லாத கால எல்லையை அரசாங்கம் வேண்டுமானுல் நீடிக்கவும் தயாராக இருந்தது. மேலதிகமாக அரசாங்கத்திடமிருந்து வங்கி கடன் பெற வேண்டுமானுல் வட்டி கொடுக்க வேண்டிய நிபந்தனையு

முண்டு. அரசாங்கத்தின் வைப்பு நிதி வங்கியிலிருக்கும் வரை கூட்டுறவுப் பகுதிக்குப் பொறுப்பாயுள்ள மந்திரி நியமிக்கும் ஒருவரே வங்கி நிர்வாக சபையின் தலைவராவார். இவ்வங்கி 1949-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. பணச் சட்டத்தின் பிரகாரம் இது வர்த்தக வங்கியாகக் கருதப்பட்டது. இவ்வாறு வர்த்தக வங்கியாக இதனை வகுத்துக் கொண்டதன் காரணமாய் நடப்புக் கணக்கில் வட்டி கொடுக்க வேண்டிய அவசியமில்லை. அல்லாவிட்டால், வாடிக்கைக்காரரை அதிகம் சேர்த்துக் கொள்ளுவதற்காக அதிக வட்டி கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம்.

## விவசாயப் பொருள் உற்பத்தி, விற்பனைச் சங்கங்கள்:

1940-ம் ஆண்டிற்கூட இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் அதிக நன்மையைக் கொடுக்கவில்லையென்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவுக்காரியஸ்தர் தமது வருடாந்த அறிக்கையில் பின்வருமாறு எழுதினர்: ''டென்மாக்கிற் போலன்றி இலங்கையிற் கூட்டுறவு விற்பனையானது அரசாங்கத்தின் கட்டாயத்தின்பேரில்தான் ஆரம்பிக்கப்பட்டது. இது பெரும்பாலும் தோல்வியடைந்ததென்றே கருதவேண்டும்.'' இரண்டாவது மகா யுத்தம் ஆரம்பித்த 1939-ம், 1940-ம் ஆண்டுகளில் விவசாயப் பொருள் உற்பத்திக்கும் விற்பனைக்குமாக 18 சங்கங்களே இருந்தன. யாழ்ப்பாண மலையாளப் புகையிலை விற்பனைச் சங்கத்தைத் தவிர மற்றச் சங்கங்கள் ஒன்றும் நல்ல நிலைமையில் இருக்கவில்லை. ஆனல் யப்பான் யுத்தத்தில் ஈடுபட்டதன் காரணமாக இலங்கைக்கு அரிசி கொடுத்துதவிய தாய்லந்து, பர்மா முதலிய தேசங்கள் அரிசியை அனுப்பமுடியாதிருந்தன. மேலும், வேறு தேசங்களிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதற்குக் கப்பல் வசதி இல்லாமற் போயிற்று. இக்காரணங்களால் உள்ளூரில் உணவுப் பஞ்சம் உண்டாகவே உள்ளூர் உணவுப் பொருள்களை விருத்தி செய்வதற்கு அவசியம் ஏற்பட்டது. இதனல் விவசாயப் பொருள் உற்பத்தி, கூட்டுறவுச் சங்கங்கள் எங்கும் ஆரம்பிக்கப்பட்டன. 1944--1945-ம் ஆண்டில் 160 சங்கங்கள் தோன்றின. 1950-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் 310 சங்கங்களுக்கு அதிகமாகக் காணப்பட்டன. இதற்கு முக்கிய காரணம் அரசாங்கம் விவசாயிகளுக்கு உதவி புரிய முன்வந்தமையேயாகும். உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்காக அரசாங்கம் பல திட்டங்களை வகுத்தது. உணவுப் பொருள்களையும் கறிப் பொருள்களையும் உள்ளூரில் பெருக உற்பத்தி செய்வதற்கும் அவற்றை விற்பனை செய்வதற்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படுத்தப்பட்டன. உணவுப் பொருள்

வாங்கவும் விநியோகம் செய்யவும் ஒரு இலாக்கா அமைக்கப்பட்டது. அது நெல், தானியம் வாங்கும் திட்டமென ஒரு திட்டத்தை அமைத்தது. இத்திட்டத்தின்படி நெல் வாங்குவதற்கு அரசாங்கம் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களைப் பயன்படுத்திற்று. விற்பனை வசதி இலாக்கா வெங்காயம், மிளகாய் முதலியவற்றை வட மாகாணத்தில் வாங்குவதற்கு இவ்வாறே பல கூட்டுறவு விற்பனைச் சங்கங்களைப் பயன்படுத்துகிறது. மீன்பிடி இலாக்கா கூட்டுறவு இலாக்காவின் உதவியுடன் பல மீன் தொழில் சம்பந்தமான கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தது. இலங்கைத் தெங்குப் பொருட் சங்கமும், பல தெங்குப் பொருள் விற்பனைச் சங்கங்களை அமைக்க முயன்றது. கடன் கொடுத்தும், விவசாய உபகரணங்களை இலவசமாகக் கொடுத்தும் அரசாங்கம் பலவாறு ஊக்கமளித்தது. இதன் பயனுக் கூட்டுறவு இயக்கம் பெருத்த வெற்றி கண்டது. சில சங்கங்கள் ஏராளமாக நயம் பெற்றன. சில தமது சொந்தத்தில் மோட்டார் வாகனங்களையும் வைத்தன. இவ்வியக்கத்தின் முன்னேற்றத்தை அவதானித்த ஒரு பதிவுக்காரியஸ்தர் 1950-ல் பின்வருமாறு எழுதினுர்: "பல நூற்றுண்டுகளாகச் செயலற்றுக் கிடந்த வன்னிப் பகுதிகட்குக் கூட்டுறவு புதியதொரு நம்பிக்கையையும் புதிய வாழ்வையும் கொடுத்திருக்கிறது."

விவசாயிகள் கடனில் ஆழ்ந்துபோகாமல் இச்சங்கங்கள் காப்பாற்றுகின்றன. இந்திய விவசாயிகளைப் போலவே இலங்கை விவசாயிகளும் "கடனிற் பிறந்து கடனில் வாழ்ந்து கடனில் மடிந்தார்கள்." வரையறையற்ற பொறுப்புடைய கூட்டுறவுக் கடன் சங்கங்கள் இவ்விவசாயிகளின் நிலைமையைச் சீர்திருத்த முடியாதிருக்கின்றன. இவை விவசாயிகளுக்குத் தற்காலிகமான உதவியைச் செய்தன. அருவி வெட்டி முடிந்ததும் விவசாயி ஆரம்பத்திலிருந்த நிலைமையிலேயே இருக்கவேண்டியேற்பட்டது. ஆனுல் கடன் பளுவால் வாடி, ஆபத்தான நிலையிலிருந்த விவசாயிக்கு விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்களும், உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் வரப்பிரசாதமாயின.

விவசாயி தனது நிலத்தைப் பண்படுத்தி, செய்கை பண்ணுவதற்குத் தேவையான பண உதவி செய்வதே அரசாங்கத்தின் நோக்கமாயிருந்தது. மூன்று இலாக்காக்களின் வேலையைத் தொடர்புபடுத்துவதனுலும் உத்தியோகப் பற்றுள்ள தாபனங்கள் பலவற்றையும் உத்தியோகப் பற்றற்ற தாபனங்கள் பலவற்றையும் சேர்த்துக் கொள்வதன் மூலமாகவும் இந்நோக்கம் நிறைவேற்றப்பட்டது. பிரிவு விவசாயக்குழு என்று ஒரு தாபனமிருக்கிறது. அதில் அந்தப் பகுதிக்குப் பொறுப்புள்ள சிவில் சேவை அதிகாரியும் அப்பகுதிக்

குரிய பாராளுமன்ற அங்கத்தவர்களும் விவசாய இலாக்கா நீர்ப்பாசன இலாக்கா ஆகியவற்றின் பிரதிநிதிகளும் அங்கம் வகிப்பர், போகச் சாகுபடிக்கு முன்னரே விவசாய முயற்சிகளுக்குத் தேவையான செலவினங்களைப் பற்றி இக் குழு ஒரு திட்டம் தயார் செய்யும். இதனை அந்தந்த இலாக்காக்களைச் சேர்ந்த சிறிய அதிகாரிகள் அவ்வவ்விலாக்காவின் சார்பாகச் சமர்ப்பிப்பார்கள். இத் திட்டத்தை மேலே கூறிய குழுவினர் ஆராய்ந்து அங்கீகரிப்பர். பின்னர், காணி அபிவிருத்தி அதிபரிடமிருந்து பணத்தைக் கடன் பெறுவதற்காக அத் திட்டம் கூட்டுறவுச் சங்கப் பதிவுக் காரியஸ்தரின் சிபார்சுடன் அனுப்பப்படும். அதனைக் காணி அபிவிருத்தியதிபர் அங்கீகரிப்பாராயின் கடன் தொகை உரொக்கக் கடனாகமாகாணக் கூட்டுறவு வங்கிமூலம் கொடுக்கப்படும். இந்த உரொக்கக் கடனை விவசாயி அருவி வெட்டினதும் தீர்த்துவிட வேண்டும். விளைவை விற்பனை செய்வதற்குத் தரகர்கள் தலையிட்டு ஏழை விவசாயியைக் குட்டிச் சுவராக்கி விடாமல் பாதுகாப்பதற்காக அரசாங்கம் முற்றிய நெல் விளைவைப் பிணையாக வைத்துக்கொண்டு விற்பனை வசதிக்கான கடனை அவ்விவசாயிக்குக் கொடுக்கும். அறுவடையின் பின்னர் அரசாங்கம் விவசாயிக்கு நடைமுறை விலையின் பிரகாரம் பணத்தைக் கொடுத்து விளைவைப் பெற்றுக் கொள்ளும். அவ்வாறு கொடுக்கும்பொழுதுதான் கொடுத்த முற்பணத்தைக் கழித்துக்கொள்ளும். பெரிய விவசாயப் பொருள் உற்பத்திச் சங்கங்களினதும் விற்பனைச் சங்கங்களினதும் நிர்வாக வேலைகளைச் செய்வதற்காக நிர்வாகத்தில் கைதேர்ந்த உணவு உற்பத்தி மேற்பார்வையாளரை அச் சங்கங்களுக்குக் கொடுத்து உதவி செய்கிறது. சில பெரிய சங்கங்கள் தமக்குச் சொந்தமாகவே பண்டகசாலைகளை அமைத்திருக்கின்றன. வேறு சில சங்கங்கள் கிட்டங்கியமைப்பதற்குக் காணி அபிவிருத்தி அதிபரிடமிருந்து 2 வீத வட்டிக்குக் கடன் பெறுகின்றன.

இச்சங்கங்கள் அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைக்குப் பெருந் துணையாக இருந்து வருகின்றன. ஏராளமான புது நிலங்களைப் பண்படுத்தி, சாகுபடி செய்ய உதவுகின்றன. சிக்கனமானதும் நவீன விஞ்ஞானப் போக்குடையதுமான விவசாய முறைகளை நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கின்றன. விவசாயிகளின் பரம்பரையான கடன் பளுவை நீக்கியிருக்கின்றன. விவசாய உபகரணங்களைக் கொடுத்து நிலத்தைப் பண்படுத்தவும், பணத்தைக் கடனாகக் கொடுத்து அறுவடை செய்யும் வரை கஷ்டமின்றிச் சீவனம் நடத்தவும் விவசாயிகளுக்குத் துணை புரிந்திருக்கின்றன. விவசாயிகளின் வறுமையையும் அறியாமையையும் பயன்படுத்திக் கடும் வட்டிக்குக் கடன் கொடுத்து, அவனுடைய விளைவையும்

அது அறுவடையாகு முன்னரே மிக மலிவாக வாங்கிக் கொள்ளும் தரகரிடமிருந்து அவர்களைக் காப்பாற்றியிருக்கின்றன. அறுவடை யான தானியத்தை நல்ல விலைக்கு விற்கும்வரை சேமித்து வைக்கப் பண்டகசாலைகளை அமைப்பதற்கும் துணை புரிந்திருக்கின்றன.

இச் சந்தர்ப்பத்தில் இந்நாட்டில் அதிக வெற்றிகரமாய் விட யங்களை நடத்தி வந்த சில பொருள் உற்பத்திச் சங்கங்களினதும் பழைய சரித்திரத்தை ஆராய்தல் நன்று. இலங்கையிலுள்ள கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மிகவும் பழையது யாழ்ப்பாண மலையாளப் புகையிலை விற்பனைச் சங்கமாகும். இச்சங்கம் 1934 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. தரகரினதும் வட்டிக் குப் பணம் கொடுப்போரினதும் கொடுமையிலிருந்து யாழ்ப்பா ணப் புகையிலைத் தோட்டக்காரரைக் காப்பாற்றும் நோக்க மாகவே இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. இது 13 அங்கத்தவரு டன் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இச்சங்கத்தில் பல நூற்றுக் கணக்கான அங்கத்தவரிருக்கிறார்கள். திருவாங்கூரில் புகையிலைக்கு என்ன விலையுண்டோ அந்த விலையைக் கொண்டு நிச்சயிக்கப்பட்ட ஒரு திட்டமான விலைக்கு யாழ்ப்பாணத் தோட்டக்காரரிடமிருந்து புகையிலையைச் சங்கம் வாங்குகிறது. இந்த விலையில் ஒரு விகிதம் தோட்டக்காரருக்கு முற்பணமாகக் கொடுக்கப்படுகிறது. பின்னர் புகையிலையை வாங்கி அடுக்கி உப்புநீர் தெளித்துச் சிப்பமாக்கு வார்கள். பின்னர் கப்பலில் ஏற்றித் திருவாங்கூருக்கு அனுப்புவர். புகையிலை விற்பனையால் வரும் பணம் சங்கத்துக்கு அனுப்பப்படும். சங்கம் தன் செலவுக்கு ஏற்ற கழிவை எடுத்துக்கொண்டு இலாபத் தில் ஒரு பகுதியைச் சங்க சேம நிதிக்கு ஒதுக்கிவிட்டு எஞ்சியதைப் புகையிலை கொடுத்தவர்களிடையே, கொடுத்த புகையிலைக்கேற்ற விகிதத்தில் பங்கீடு செய்வர். அரசாங்கம் பலவகையிற் சங்கத் துக்குத் துணை புரிந்திருக்கிறது. புகையிலை உலர்த்துவதற்கு நல்ல தொரு கட்டிடம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. வியாபார நெருக்கடி உண்டாகுங் காலங்களில் பண உதவி செய்திருக்கிறது. இந்திய அரசாங்கத்துடன் வியாபார உடன்படிக்கை செய்து யாழ்ப்பாணப் புகையிலைக்கு நல்ல விலையை ஏற்படுத்தியிருக்கிறது.

வட இலங்கையிலுள்ள விவசாயப் பொருள் உற்பத்திச் சங் கங்களும் விற்பனைச் சங்கங்களும் ஒன்று சேர்ந்து வட மாகாண விவசாயப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கமென ஒரு சங்கத்தை 1942 ஆம் ஆண்டு ஏற்படுத்தின. விற்பனை விட யத்தில் கூட்டுறவு முயற்சியடைந்த வெற்றிக்கு இது ஒரு உதா ரணமாகும். தங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு நல்ல விலையைப் பெறும் விடயத்தில் இச்சங்கம் உற்பத்தியாளருக்கு உதவி செய்

கிறது. மேலும் உயர்ந்த சாதி விதைகளை விவசாய இலாக்கா விலிருந்து பெற்று அங்கத்தவருக்கு விநியோகம் செய்கிறது. இச் சங்கம் இயந்திரசாதனங்களையும் மோட்டார் வாகனங்களையும் சொந்தமாக வைத்திருக்கிறது.

நெற் சங்கங்களுள் மின்னேரியாச் சங்கம் 1940-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இது நல்ல வெற்றி பெற்றிருக்கிற தெனலாம். மின்னேரியாக் குடியேற்றத் திட்டத்திற் சேர்ந்த விவசாயிகள் தங்கள் விளைவை நல்ல விலைக்கு விற்க இச்சங்கம் உதவியாயிருந்தது. உள்நாட்டு நெல் வாங்குந் திட்டத்தின் கீழ் நெல் வாங்கிய அரசாங்கத்துக்கு இச்சங்கம் ஒரு காரியஸ்த ராக இருந்தது. சங்கம் நல்ல இலாபத்தை ஈட்டியதனுல் 1945-ல் அது 45,331 ரூபாவுக்கு விற்பனை இலாக்காவிட மிருந்து நெற் குத்தும் ஒரு இயந்திரத்தை வாங்கக் கூடியதா யிருந்தது. மின்னேரியா விவசாயிகளின் நிலைமையைச் சீர் திருத்த இச்சங்கம் எவ்வளவோ துணை புரிந்திருக்கிறது. தெங்குப் பொருள் விற்பனைச் சங்கங்களும் சிறிய தென்னந் தோட்டக்காரருக்கு மிகுந்த உதவி புரிந்து வந்திருக்கின்றது. முன்னெல்லாம் இரக்கமற்ற கொப்பரு வியாபாரிகள் கையிற் தத்தளித்த சிறு தோட்டக்காரர்கள் இன்று இச் சங்கங்கள் மூலம் தமது பொருள்களை இலாபகரமாக விற்கக் கூடியதாயிருக்கிறது. இலங்கைத் தெங்குப் பொருட் சங்கம் சிறிய தென்னந் தோட்டமுள்ளவர்களைக் கூட்டுறவு முறையில் கூடச் செய்து, அதன் பயனுக அவர்களுடைய கஷ்டங்களை அகற்றியது. 1942-ல் இச்சங்கங்களெல்லாம் ஒன்று சேர்ந்து தென்னைப் பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க மென ஒரு பெரிய சங்கத்தையுண்டாக்கின. இச்சங்கத்தின் மூலம் தெங்குப் பொருள்களுக்கு நல்ல விலையை ஏற்படுத்தினர். இத்தகைய விற்பனைச் சங்கங்களுட் சந்தலங்காவிலும், குருணு கலிலும் உள்ள சங்கங்கள் நல்ல வேலை செய்திருக்கின்றன. 1950 ஆம் ஆண்டு வரையில் இவ்விரு சங்கங்களும் தமது இயந்திரங்களினுல் இரட்டிப்பான விலையுள்ள இலாபத்தைப் பெற் றதுமன்றி முதலில் ஆறு வீதத்துக்கு அதிகமாகவும் ஆதாயம் பெறக் கூடியதாயுமிருந்தது.

கூட்டுறவுப் பாற் பண்ணைகள் இந்நாட்டில் அதிகம் வெற்றி பெறவில்லை. இதற்குக் காரணம் இப்பண்ணைகளிலிருந்து ஒப்பந் தப்படி ஏராளமான பாலை எவரும் வாங்கக்கூடிய நிலைமை கிடையாது. இதனுல் தனிப்பட்டவர்கள் மலிவாகப் பாலை வாங் கித் தண்ணீர் கலந்து விற்கிருர்கள். யாழ்ப்பாணக் கூட்டுறவுப் பாற் பண்ணையும், கொழும்புப் பாற் சங்கமும் நல்ல முறையில் தமது கருமங்களை நடத்துகின்றன.

கைத்தறி நெசவாளர் சங்கம், பாய் உற்பத்தியாளர் சங்கம், கயிறு உற்பத்தியாளர் சங்கம், பனையோலைக் கடகம் இழைப்போர் சங்கம் என்ற கூட்டுறவுச் சங்கங்களும் வேறு பல குடிசைக் கைத்தொழிற் சங்கங்களும் ஓரளவு முன்னேற்ற மடைந்து வந்திருக்கின்றன. இச்சங்கங்கள் ஓரளவு வேலை கொடுப்பதுடன் நாட்டுப் பெண்களுக்கு வருவாயைத் தரக் கூடிய ஒரு வழியையும் காட்டி வருகின்றன. நாட்டில் வேலை யில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கும் இஃதொரு வழி யாகும்.

## நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் :

பொருள் உற்பத்தி, விற்பனையாகிய துறைகளில் இருந்த நிலைமையே, நுகர்வோர் கூட்டுறவுச் சங்க விடயத்திலும் உண்டானது. அதாவது இவை ஆரம்பத்தில் அதிக முன்னேற்ற மடையவில்லை. 1942-ல் யப்பான் யுத்தத்திலீடுபட்ட பின்னர் தான் குறிப்பிடத்தக்க முன்னேற்றமுண்டானது. சிறிய கடைக்காரரும் சில்லறை வியாபாரிகளுமே இச்சங்கங்களுடன் பலமாகப் போட்டியிட்டனர். சிறிய கடைக்காரர் தமது வாடிக் கைக் காரருக்குக் கடன் கொடுத்து வந்தனர். நுகர்வோர் கூட் டுறவுச் சங்கம் கைக்காசுக்கே பொருள்களை விற்றது. 1941-42-ல் இலங்கை முழுவதிலும் 52 நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களி ருந்தன. இவற்றில் 38 தோட்டப்பகுதிகளிற் காணப்பட்டன. யப்பான் யுத்தத்தில் இறங்கியதும் உள்ளூரில் வியாபாரம் நடத் திய இந்திய வியாபாரிகள் நாட்டை விட்டுக் கிளம்பினர். சிறிய கடைக்காரர் கள்ளச் சந்தையிற் கொள்ளை இலாபந்தேடும் முயற் சியில் ஈடுபட்டனர். எனவே, அரசாங்கம் "சங்கக் கடைகள்" என்ற பெயருடன் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவிற்று. இச்சங்கங்கள் நாளுக்கு நாட் பெருகின. 1946-ல் 4034 சங் கக்கடைகள் காணப்பட்டன. பின்னர் இவற்றின் தொகை குறையத் தொடங்கி 1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 3430 சங்கக் கடைகளே காணப்பட்டன. இக்கடைகள் யுத்த கால நெருக்கடியைச் சமாளிக்க உண்டாக்கப்பட்டன. எனினும் சமாதான காலத்திலும் நல்ல பயனைக் கொடுத்தன. கட்டுப் பாடற்ற பொருள்களான தேங்காய், மீன், இறைச்சி முதலிய வற்றைக் குறைந்த விலைக்குச் சனங்களுக்கு விநியோகஞ் செய் வதன் மூலம் வாழ்க்கைச் செலவை ஏறவிடாது தடுத்தவை இச் சங்கங்களே. அரிசி மீதுள்ள கட்டுப்பாட்டை நீக்கி மற்றஅத்தி யாவசியமான பொருள்களின் விநியோகம் சம்பந்தமாக அரசாங் கம் வைத்திருக்கும் கட்டுப்பாட்டையும் நீக்கி விட்டால் இச்சங்

கக் கடைகள் தொடர்ந்து சீவிக்க முடியுமா என்று கூறிக்கொள்ள முடியாது. ஆனுல் சங்கக் கடைக்குப் பெரிய எதிரி சில்லறைக் கடைக்காரன். ஏனெனில், அவன் கடன் கொடுத்து வாடிக் கைக்காரரைத் தன் பக்கம் சேர்த்துக்கொள்வான். மேலும் சங் கக் கடை விலையிலும் பார்க்கக் குறைந்த விலைக்குப் பொருள்களைக் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. இவ்வகையான ஆபத்துக்களைச் கூட்டுறவு இயக்கத்தினர் அறிந்திருக்கின்றனர். கடனுக்குப் பொருள் விற்கும் முறையைச் சங்கக் கடைகளும் மேற்கொள் ளத் துவங்கியிருக்கின்றன. உள்ளூர்க் கூட்டுறவுக் கடன் சங்கங்க ளுடனும் விவசாயப்பொருள் உற்பத்திச் சங்கங்களுடனும், விற் பனைச் சங்கங்களுடனும் சில சங்கக்கடைகள் தொடர்பு வைத் திருக்கின்றன. இதன் பிரகாரம் வாடிக்கைக்காரர் பேரில் ஒரு கூட்டுறவுச்சங்கம் சங்கக்கடைக்கு முற்பணம் கொடுக்கக்கூடியதா யிருக்கிறது. இந்த முற்பணத்தை ஈடாகக் கொண்டு வாடிக்கைக் காரர் கடனுக்குச் சாமான்களை வாங்கமுடியும். முற்பணம் ஈடா கக் கொடுத்த சங்கம் அப்பணத்தைக் கடன்காரரிடமிருந்து திருப்பிப் பெற்றுக்கொள்வதற்கு வசதியான ஒரு முறையை அனு சரிக்கும். வேறு சில சங்கக்கடைகளில் மற்ருெரு விதமான முறை பின்பற்றப்படுகிறது. அதாவது, ஒரு வாடிக்கைக்காரருக்குச் சேரவேண்டிய வருடாந்த இலாபப் பணத்தை அவரிடம் கொடுத்து விடாமல் அவர் பேரில் வரவு வைத்துக்கொள்ளுகிருர்கள். இவ் வாறு இப்பணம் நியாயமான ஒரு பெருந் தொகையாகச் சேர்ந் தவுடன் அவ்வாடிக்கைக்காரர் அத்தொகையின் பேரில் கடனுக் குச் சாமான் பெறக்கூடியதாயிருக்கும். விற்பனை முறைகளைச் சங் கக் கடைகளும் அனுசரிப்பதற்காகக் கூட்டுறவுப் பாடசாலையில் அம்முறைகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. நாளடைவில் சங்கக் கடைகளும் இம்முறைகளை அனுசரித்து வியாபாரிகளோடு விற் பனை முறையில் போட்டியிடும் நிலைமை ஏற்படலாம். தனிப்பட்ட வியாபாரிகள் மலிவான விலைக்குச் சாமானை விற்பதனுல் சங்கக் கடைகளுக்கு விற்பனை குறையலாம். இந்த நிலைமையைச் சமா ளிப்பதற்காகச் சங்கக்கடைகள் மொத்தவியாபாரத் தாபனங்களை ஏற்படுத்தின. அவற்றின் மூலம் மலிவாகச் சாமான்களை வாங்கு கின்றன. மொத்தவியாபாரத் தாபனங்கள் பெருந்தொகையாகப் பொருள்களை வாங்குவதனுல் சங்கக்கடைகளுக்குப் பொருள்களை மலிவாக விநியோகஞ்செய்ய முடியும். கூட்டுறவு மொத்த வியா பாரத் தாபனந்தான் கூட்டுறவு இயக்கத்தின் சிகரமாகும். சங்கக் கடைகளுக்கும் ஏனைய மொத்தவியாபாரத் தாபனங்களுக்கும் பொருள்களைச் சிறுவியாபாரிகளோடு போட்டியிடத் தக்கவகையில் மலிவாகக்கொடுக்க இத்தாபனம் எப்பொழுதும் தயாராக இருக் கிறது. இக்காரணங்களைக்கொண்டு பார்க்குமிடத்து வாடிக்கைக்

காரர் சாதாரண காலங்களில் கூட தமது சங்கக் கடைகளைக் கை விட மாட்டார்களென்பது ஒருதலை. ஏனெனில், நெருக்கடியான காலங்களில் சங்கக்கடைகள்வாடிக்கைக்காரருக்குப்பெருந்துணையா யிருந்துவந்திருக்கின்றன. மேலும் அவர்களுக்குச் சங்கக்கடைகளில் பாத்தியதையுண்டு. சில பங்குகள் அவர்களுக்கு இருக்கும். அத ஞல் சங்கக்கடை ஒருவகையில் வாடிக்கைக் காரரின் சொந்தக் கடையாகிறது. சங்கக் கடையில் வரும் இலாபத்தில் ஒரு பகுதி அவர்களுக்கும் சொந்தமாகும். மேலும் வாங்கும் பொருள்கள் மனமறிந்த நல்ல பொருள்களாகவுமிருக்கும். தனிப்பட்ட வியா பாரி விடயத்தில் பழுதுபட்ட பொருள்களையும் சிலவேளை வாடிக் கைக்காரர் தலையில் கட்டி விடலாம். இக் காரணங்களால் கூட் டுறவு இயக்கம் சாதாரண காலங்களிலும் வியாபாரிகளின் போட் டியை நிர்வகித்து தலையெடுத்துவிடுமென எண்ண இடமுண்டு.

## கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம்:

இலங்கையிலுள்ள மிகப் பெரிய வியாபாரத் தாபனம் இதுவே, 1950-ம் ஆண்டு மே மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை இதன் மொத்த விற்பனை 370 இலட்சம் ரூபா வாகும். இதேகாலத்தில் அரிசி, மா. சீனி, என்ற வகையில் 150 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்களை அரசாங்கத் திடம் வாங்கியிருக்கிறது. இதிலிருந்து இதன் வியாபாரம் எவ்வளவு விசாலமான தென்பதை அறிந்து கொள்ளலாம். இத் தாபனத்தில் 4000 சங்கங்கள் சேர்ந்திருக்கின்றன. 15 கோடி ரூபாய்க்கு வியாபாரம் நடைபெறுகிறது. இலங்கையின் குடிசனத் தொகையில் மூன்றில் இரு பகுதியினரின் அத்தியாவசியத் தேவை களைப்பூர்த்தி செய்கிறது. வாழ்க்கைச் செலவு அதிகரிக்காமல் தடுத் திருக்கிறது. கடந்த சில வருடங்களாக யப்பானிலிருந்து சீலையை இறக்குமதி செய்து இலங்கையில் சீலையை மலியச் செய்திருக் கிறது. கொழும்பு எல்லைக்குள் தேங்காயைக் கட்டுப்பாட்டு விலைக்கு விநியோகஞ் செய்தும், யாழ்ப்பாணக் குடா நாட்டில் விளையும் வெங்காயத்தை உத்தரவாத விலைக்கு வாங்கியும், அர சாங்கத்தின் ஒரு காரியஸ்தராக இருந்து வந்திருக்கிறது. இத் தாபனம் 1943-ம் ஆண்டு ஜனவரி மாதம் நிறுவப்பட்டது. முத லில் கூட்டுறவுச் சங்கப் பதிவுக் காரியஸ்தர் இலாக்காவின் ஒரு கிளையாக இது இருந்தது. பின்னர் 1945-ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கூட்டுறவுஅபிவிருத்தி இலாக்காவெனத் துவங்கப்பட்ட புதிய இலாக்காவுடன் இது இணைக்கப்பட்டது. இக்காலத்தில் தான் உணவு. சீலை என்பவற்றை விநியோகஞ்செய்யும் தலைசிறந்த தாபனமாக இதுவிளங்கிற்று. ஒவ்வொரு மாகாணத்திலும் இதற்கு

மத்திய பண்டசாலைகளுண்டு. அவற்றிலிருந்து கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டசாலைகளுக்குப் பொருள்கள் அனுப்பப்படும் தனிப்பட்ட ஒரு தாபனமாக இது விளங்கவேண்டு மென்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இப்பொழுது இது சர்வ சுதந்திர முள்ள ஒரு நிர்வாகக் குழுவின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்துக்கு வழக்கமான பணக்கட்டுப்பாடுள்ள "சிவப்பு நாடா" நிர்வாகம் இதற்குக்கிடையாது. இது வியாபார முறையில் நடத்தப்பட்டு வருகிறது. 1949 ம் ஆண்டுக கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனச் சட்டத்தின் பிரகாரம் இது 1950-ம் ஆண்டு ஜூலை மாதத்தில் தனிப்பட்ட தாபனமாக மாறிற்று. இச்சட்டப் பிரகாரம் இத்தாபனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு வரையறுக் கப்பட்டிருக்கின்றன.

(அ) கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கி விநியோகஞ் செய்தல்.

(ஆ) கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான எல்லாவிதமான பொருள்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்று வியாபாரம் செய்தல்.

(இ) வியாபாரம், கைத்தொழில், வங்கி முயற்சி, கப்பற் றொழில், இன்ஸூரன்ஸ் முதலியவையுட்பட என்ன வித மான தொழிலையும் எடுத்து நடத்துதல்.

இதே சட்டப் பிரகாரம் அரசாங்கம் பின்வரும் நன்மைகளை இத்தாபனத்திற்கு வழங்கியிருக்கிறது.

(1) இச்சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட நிர்வாகக் குழு, கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் இதுவரை வைத்திருந்த வர்த்தகச் சரக்குகளை யெல்லாம் அரசாங் கத்தின் பேரால் ஏற்றுக்கொள்ளவேண்டும். வர்த்தகச் சரக்கில் சரி அரைவாசி இனமாகக் கொடுக்கப்பட்டது. மற்ற அரைப் பகுதிக்கும் தாபனம் $1\frac{1}{2}$ வீத வட்டியில் 30 வருடத்திற்குள் அவற்றின் பெறுமதியைக் கொடுக்க வேண்டும்.

(2) இத்தாபனம் தானாக வியாபாரத்தை ஆரம்பிப்பதற்காக நிர்வாகக் குழுவுக்கு 40 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படும். தாபனத்துக்குத் தேவையான கட்டடங்களை அமைப்பதற் காக 15 இலட்சம் ரூபாய் $1\frac{1}{2}$ வீத வட்டியில் கடனாகக் கொடுக்கப்படும். இது முப்பது வருட காலத்தில் திருப் பிக் கொடுக்கப்படவேண்டும்.

(3) இத்தாபனத்தின் சேம நிதியாக வைத்தற்கு நிர்வாகக் குழுவுக்கு 30 இலட்சம் ரூபாய் கொடுக்கப்படும்.

(4) இலாப வரியோ வருமான வரியோ முத்திரைத் தீர்வையோ பதிவுக் கட்டணமோ இந்நிர்வாகக் குழுவுக்குக் கிடையாது.

சட்டப் பிரகாரம் நிர்வாகக் குழு ஒரு தலைவரையும், ஒரு பிரதித் தலைவரையும், பத்துக்கு மேற்படாததாயும், நான்கிற்குக் கீழ்ப்படாததாயுமுள்ள அங்கத்தவர்களையும் கொண்டிருக்கவேண்டும். அங்கத்தவர் தொகை, சம்பந்தப்பட்ட அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியால் நிச்சயிக்கப்படும். நிர்வாகக் குழு ஒவ்வொரு வருடமும் தாபனத்தின் கணக்கு வழக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பொது நன்மையைக் கருதி மந்திரியானவர் நிர்வாகக் குழுவுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கலாம். நிர்வாகக் குழுவின் விவகாரங்களைப் பற்றி விசாரணை நடத்த வேண்டுமென அவர் நினைத்தால் அவ்வாறு செய்யலாம். தாபனத்தின் இலாபம் சேம நிதிக்குப் பயன்படுத்தப்படும். அல்லது, நிர்வாகக் குழு என்ன செய்யவேண்டுமென நிச்சயிக்கிறதோ அதைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படும். இதற்கு மந்திரியின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனத்தை நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் கையில் ஒப்படைத்து இலங்கைக் கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கம் என்ற பெயருடன் அதை அச்சங்கங்கள் நடத்த வேண்டுமென்பதே அரசாங்கத்தின் பெரிய நோக்கமாகும்.

### *மாகாண நிர்வாகச் சங்கங்கள் :*

ஒவ்வொரு மாகாணத்திலும் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக இத்தகைய மாகாண நிர்வாக சங்கங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இவை கடன் சங்கம், மொத்த வியாபாரச் சங்கம், கூட்டுறவு விற்பனைச் சங்கம் என்பவற்றிலிருந்து வித்தியாசப்பட்டவை. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு சங்கமுண்டு. அவ்வவ்மாகாணத்திலுள்ள கூட்டுறவு முயற்சிகளெல்லாம் அவ்வவ்மாகாணத்தின் நிர்வாக சங்கத்தினுல் மேற்பார்வை செய்யப்படும். வருங்காலத்தில் அமைக்கப்படவிருக்கும் இலங்கைக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் அடிப்படையாக இந்நிர்வாக சங்கம் அமையும். இலங்

கைக் கூட்டுறவு இயக்கத்தின் நிர்வாகத்திற்கும் நடவடிக்கைகளுக்கும் இச்சங்கமே பொறுப்புள்ளதாயிருக்கும். இச்சங்கங்கள் பிரதிநிதித்துவம் வாய்ந்தவை. சிறிய காரியக் குழுக்களைக் கொண்டு அலுவல்களை நடத்தும். பிரசாரம், கூட்டம் கூடுதல், கூட்டுறவு பற்றிய பிரசுரங்களைப் பொதுசனங்களிடையே பரப்புதல், சகலவிதமான கூட்டுறவுச் சங்கங்களையும் அமைப்பதற்கு உதவி புரிதல், பலங்குன்றிய சங்கங்களுக்குப் புத்துயிரளித்து அவற்றை இயக்குவித்தல் போன்ற முயற்சிகளை யெல்லாம் இந் நிர்வாகச் சங்கமே நடத்துவிக்கும்.

## சிக்கனச் சங்கங்கள் :

கூட்டுறவு இயக்கத்தின் பிரதான நோக்கங்களிலொன்று சிக்கன வாழ்வை முன்னேற்றுவதாகும். இத்துறையில் ஆண்களின் சங்கங்களிலும் பார்க்கப் பெண்களின் சங்கங்களே அதிகமாக இருக்கின்றன. அரசாங்க ஊழியரின் சிக்கனச் சங்கங்கள் பெண்களின் சங்கங்களுக்கு இரண்டாவது இடத்தைப் பெறுகின்றனச ஆனல், தொகை குறைந்தாலும் அங்கத்துவம், சேமிப்புத் தொகை என்பவற்றில், மற்றெல்லாச் சங்கங்களையும்விட அரசாங்க ஊழிய ங்கம் சிறந்து விளங்குகிறது. அரசாங்க ஊழியர் விடயத்தில் அவர்களுக்கு அதிக சிரமமின்றியே அவர்களுடைய மாதச் சம்பளத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் ஒரு சிறு தொகை கழிக்கப்பட்டு வருகிறது. ஆனல், வைத்தியச் செலவுக்காகவோ, வேறு குடும்பச் செலவுக்காகவோ அடிக்கடி சேமிப்பிலிருந்து பணம் எடுக்கப்படுவதால் சிக்கனத்தின் நோக்கமே கெட்டுப் போகிறது.

## வேறு சங்கங்கள் :

பாடசாலை மாணவரிடையே கூட்டுறவு முறையைப் பயிற்றுவதற்காகப் பாடசாலைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இவை பாடசாலை மாணவருக்குப் புத்தகங்கள், கடுதாசி, மை, பேனை முதலிய உபகரணங்களை மலிவான விலைக்கு விற்று வருகின்றன. மூளாயிலுள்ள கூட்டுறவு வைத்தியசாலை தெல்லிப்பளையிலுள்ள கூட்டுறவு வைத்தியசாலை மாத்தறையிலுள்ள மாத்தறைக் கூட்டுறவு மருந்துச்சாலை என்பனவும் ஒருவகைக் கூட்டுறவுச் சங்கங்களே. வடமராட்சி கூட்டுறவுப் போக்குவரத்துச் சங்கம், யாழ்ப்பாணம் தீவுப்பகுதி மோட்டார் வள்ளப் போக்குவரத்துச் சங்கம், கல்லோயா அபிவிருத்திச் சங்கம் என்பனவும் கூட்டுறவுச் சங்கங்களே.

## கூட்டுறவுக் கல்வி :

*1943*-ம் ஆண்டு பொல்கொல்லையில் கூட்டுறவு அதிகாரிகளுக்குப் பயிற்சி யளிப்பதற்காகக் கூட்டுறவுப் பாடசாலையொன்று ஆரம்பிக்கப்பட்டது. அதில் கூட்டுறவை எவ்வாறு முன்னேற்றலாம், என்ன துறையில் ஆலோசனை கூறலாம் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு வழக்குகளை எவ்வாறு பரிசோதிக்கலாம் என்ற இன்னோரன்ன விடயங்களில் அங்கே பயிற்சி யளிக்கப்படுகிறது. கூட்டுறவு இலாக்கா அதிகாரிகளுக்கு முறையான பயிற்சி யளிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் முகாமைக்காரர், விற்பனையாளர் ஆகியோருக்கு வியாபார முறை, கூட்டுறவுக் கணக்கு வைத்தல், கூட்டுறவுச் சட்டங்கள், நுகர்வோர் கூட்டுறவு என்பவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களின் அதிகாரிகளுக்கும், இதர சிப்பந்திகளுக்கும் நேர்முக வகுப்புகளும், எழுத்து மூலம் பயிற்சியும் நடத்தப்பட்டு வருகின்றன. கூட்டுறவு ஒரு பாடமாகப் பாடசாலைப் பாடத்திட்டங்களிலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஏழாம் அத்தியாயம்

# இலங்கையின் அரசியல் வளர்ச்சி

## *1796 துவக்கம் 1815 வரை :*

இலங்கையின் தற்கால அரசியல் வளர்ச்சி 1798-ல் பிரிட்டன் இலங்கையில் ஆட்சி ஆரம்பித்த காலத்திலிருந்துதான் துவங்கியதெனலாம். 1815-ல் தான் கண்டி இராச்சியமும் ஆங்கிலேயர் கைக்கு வந்தது. அதன் பயனுக இலங்கை முழுவதும் பிரித்தானியர் ஆட்சியின்கீழ் அடங்கியது. அதனுல் 1815லிருந்து தான் அரசியல் அமைப்பில் விசேட மாற்றங்க ளுண்டாயின வென்று கருத வேண்டும்.

1798 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ந் திகதி டச்சுக்காரர் கரையோரப் பிரதேசங்களைப் பிரித்தானியருக்குக் கொடுத்தார்கள். அதன் பின்னர் இலங்கையின் அரசியல் நிர்வாகம் சென்னையிலுள்ள பிரித்தானிய அதிகாரிகளால் நடத்தப்பட்டது. இதற்குக் காரணம் இலங்கைத்தீவு தங்கள் கையிற்ருன் இருக்குமா அல்லது சண்டை முடிந்த பின் டச்சுக்காரர் வசம் திருப்பிக் கொடுக்கவேண்டி வருமா என்ற சந்தேகமேயாகும். மாட்சிமை தங்கிய பிரெடரிக் நோர்த் என்பவர் 1798 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 12ஆம் தேதி இலங்கையின் முதற் தேசாதிபதியாகப் பதவியேற்ருர். இருந்தும் சென்னையில் இருந்த கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகளிடமிருந்தே சில விடயங்களில் இவர் கட்டளை பெற்று நிர்வாகத்தை நடத்தவேண்டியிருந்தது. இம் மாதிரியான இரட்டை ஆட்சி 1802-ல் முடிவுற்றது. அவ்வாண்டில் எழுதப்பட்ட ஏமியன்ஸ் உடன்படிக்கைப்படி இலங்கை பிரித்தானிய குடியேற்ற நாடாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

இப்புதிய நிலைமையில் நிர்வாகப் பொறுப்பு தேசாதிபதியின் கையில் விடப்பட்டது. தேசாதிபதிக்கு ஆலோசனை கூறப் பிரதம சேனுதிபதியும், பிரதம நீதியரசரும், அரசாங்கத்துப் பிரதம காரியதரிசியும், வேறிருவரும் நியமிக்கப்பட்டனர். இவர்களுடைய ஆலோசனையைத் தேசாதிபதி ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமிருக்கவில்லை. ஏற்காதுவிட்டால் அதற்குரிய காரணத்தைக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு எழுதி அறிவிக்கவேண்டியிருந்தது. 1815 ஆம் ஆண்டில் கண்டி இராச்சியத்தைப் பிரித்தானியர் கைப்பற்றும்வரை இந்த நிலைமை இருந்துவந்தது. 1805 துவக்கம்

1812 வரையுள்ள காலத்தில் அரசியலமைப்பிற் திருத்தங்கள் செய்யவேண்டுமென யோசனைகள் கூறப்பட்டன. இவ்வியக்கத்தில் முனைந்து நின்றவர் பிரதம நீதியரசராயிருந்த சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் ஆவார். இலங்கை போன்ற ஒரு புதிய பிரித்தானிய குடியேற்ற நாட்டுக்கு அத்தகைய அரசியற் சீர்திருத்தம் அகாலமானதென்றும், மிகமுற்போக்குடையதென்றும் கருதப்பட்டது. சேர் அலெக்சாண்டர் பிரதேச வாரியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட சட்ட சபை வேண்டுமென்றும் சிவில் சேவிஸ் உள்ளூர் மக்களைக்கொண்டதாயிருக்க வேண்டுமென்றும், மற்றும் சட்டம் இலங்கைக்குச் செல்லுபடியாகத்தக்கதாயிருக்க வேண்டுமென்றும் வாதாடினர்.

## கண்டி உடன்படிக்கை :

இலங்கையின் அரசியலமைப்பு வளர்ச்சியில் அடுத்து மிக முக்கியமானதாயுள்ள சம்பவம் பிரித்தானியர் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியமையே யாகும். 1815-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2-ந் தேதி கூடிய கண்டி அரசியற் சமாசத்தில் குடியேற்றச் சட்டம் ஒன்று வாசிக்கப்பட்டது. இச் சட்டப் பிரகாரம் பிரித்தானிய அரசாங்கம் பௌத்த தர்மத்தைக் காப்பாற்றுவதாக வாக்குறுதியளித்தது. கண்டி இராச்சியத்தில், அக்காலத்தில் நிலவிய நீதிமுறைகளையே தொடர்ந்து நடத்துவதாகவும் பிரித்தானிய ஆட்சிக்கு விரோதமில்லாத வகையில் கண்டிப் பிரதானிகள் தங்களுடைய பரம்பரையான உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவித்து வரலாமெனவும் வாக்குறுதியளிக்கப்பட்டது. கண்டி நிர்வாகம் ஒரு சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இச்சங்கத்தில் ஒரு பிரித்தானிய தானிகர், ஒரு நீதிபதி, ஒரு அரசிறை அதிகாரி, ஒரு சேனாதிபதி ஆகிய இவர்களுடன் கண்டி மாகாணங்களின் காரியாதிகாரியென ஒருவரும் நியமிக்கப்பட்டனர். ஆனால், இத்தகைய நிர்வாக ஒழுங்கு ஆரம்பத்திலிருந்தே பயனளிக்கவில்லை. பொருளாதாரத் துறையிலென்றுலென்ன, நிர்வாகத் துறையிலென்றுலென்ன, இதனால் எவ்வித நன்மையு மேற்படவில்லை. மலைநாட்டுக்கும் கடற்கரைப் பிரதேசங்களுக்குமிடையில் கட்டுப்பாடில்லாத வியாபாரம் நடத்த அனுமதிக்கப்பட்டதினால் கிடைத்த வருவாயும், கண்டிய பிரதானிகளுக்கிருந்துவந்த மேல் வரும்படியும் இல்லாமற் போய்விட்டது. அது அவர்களுக்கு ஆத்திரமூட்டியது. மேலும் அரசாங்கம் கரை நாட்டவரைக் கிராமத் தலைமைக்காரராக நியமித்தது. அவர்கள் பல்லக்குகளில் ஏறித் திரிந்தமை கண்டிப் பிரதானிகளுக்குக் கோபத்தை யுண்டாக்கியது. கண்டி அரச

சனுக்கு மாத்திரமே விசேஷ உரிமையாயிருந்த பல்லக்கில் கரை நாட்டிலிருந்து வந்த கிராமத் தலைமைக்காரர் ஏறிச் சென்றதை முன்னிட்டு கண்டிப் பிரதானிகள் ஆத்திரமடைந்தனர். இக் காரணங்களால் 1817-ம் ஆண்டில் ஒரு பெரிய கலகம் உண்டாகியது. இது ஆட்சி நடத்திய பிரித்தானியருக்கு மிகுந்த கஷ்டத்தை உண்டாக்கிற்று. அதிக பிரயத்தனத்தின் பின்னர் தான் அவர்கள் நாட்டில் அமைதியை நிலைநாட்டினர்.

இதன் பயனாக அரசியல் நிர்வாகத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. கண்டி உடன்படிக்கையின் பிரகாரம் கண்டிப் பிரதானிகளுக்கிருந்த பல அதிகாரங்களை அவர்கள் இழக்க நேரிட்டது. கண்டி இராச்சியமும் தேசாதிபதியின் நேரடியான மேற்பார்வையில் வைக்கப்பட்டது. அவருக்குதவியாக ஒரு ஆலோசனைச் சபை நியமிக்கப்பட்டது.

## கோல்புறூக் குழு :

இலங்கையின் அரசியல் நிர்வாகம் என்பவற்றைப் பற்றி ஒரு விசாரணை நடத்துமாறு உவில்லியம் கோல்புறூக் என்பவர் 1829-ம் ஆண்டு நியமிக்கப்பட்டார். அரசியல் விடயத்தில் இவர் தாராளமான மனப்பான்மையுடையவர். அதனால் அவர் இலங்கையின் அரசியல் துறையிலும் நிர்வாகத் துறையிலும் பல முக்கியமான மாற்றங்களைச் செய்யவேண்டுமென ஆலோசனை கூறினார். கோல்புறூக் சொன்ன அரசியல் திருத்தங்களைப்பற்றி மாத்திரமே இங்கு நாம் ஆராய்வாம். கண்டி இராச்சியம் கரைப் பிரதேசங்களிலிருந்து பிரிந்திருப்பதால் ஒரு சில பிரதானிகளுக்கே நன்மையுண்டென்றும் ஆதலால் அவ்விரு இராச்சியங்களையும் ஒன்றுபடுத்துவது பெரிதும் பயனுடையதென்றும் அவர் கருதினர். இலங்கையில் ஒரு சட்ட நிருபண சபையும், ஒரு சட்ட நிருவாக சபையும் அமைக்கப்பட வேண்டுமென்பதே அவருடைய மற்றொரு முக்கியமான சிபார்சாகும். அரசியல் நிர்வாகத்திலும் அரசிறை விடயத்திலும் தேசாதிபதிக்குத் துணைசெய்யச் சில அதிகாரிகளைக் கொண்டு அமைக்கப்பட்டதே சட்ட நிர்வாக சபையாகும். சட்ட நிருபண சபை தேசாதிபதியினால் நியமிக்கப்பட்ட உத்தியோகப்பற்றுள்ள 9 அங்கத்தவரையும் உத்தியோகப்பற்றற்ற 6 அங்கத்தவர்களையும் கொண்ட பிரதிநிதித்துவம் வாய்ந்த சபையாகும். பொதுவிடயங்களில் அரசாங்கம் ஒரு முடிவுக்கு வருமுன்னர் சட்ட நிருபண சபை அவற்றைப்பற்றி நன்கு விவாதிக்க வேண்டும் என்ற நோக்கமாகவே அது சிபார்சு செய்யப்பட்டது.

இதில் தேர்தலுக்கு இடமே கிடையாது. தேசாதிபதி தான் விரும்பியவர்களை நியமிக்கலாம். உத்தியோகப் பற்றற்றவர்கள் அரசாங்கத்திற்கு விரோதமாக வாதாடினாலும் உத்தியோகப் பற்றுள்ள 9 அங்கத்தவரும் அரசாங்கக் கட்சியை ஆதரித்து எல்லா விஷயங்களையும் நிறைவேற்றக்கூடியதாயிருந்தது. இவ்வாறு பல குறைபாடுகளிருந்தபோதிலும் பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு ஆட்சியை உருவாக்குவதற்கு கோல்புறூக் அரசியற் சீர்திருத்தங்கள் அடிப்படையாக அமைந்தன. பத்திரிகைகள் பல தோன்றி தமது அபிப்பிராயங்களைச் சுதந்திரமாக வெளியிட்டன. கல்வி விருத்தியடைந்தது. வியாபாரத்துறையில் இலங்கையர் அதிகம் அதிகமாக ஈடுபட்டனர். இக்காரணங்களால் மேலும் அரசியற் சீர்திருத்தம் வேண்டுமென்ற கிளர்ச்சி நாட்டில் உண்டாயிற்று. இங்கிலாந்திலுள்ள அதிகார வர்க்கத்தினர் காலத்துக்குக் காலம் சில அரசியற் சலுகைகளை வழங்கி வந்தனர். ஆனால் மொத்தத்தில் அவையெல்லாம் ஒரே அச்சில் வார்க்கப்பட்ட உருவங்களாகவே இருந்தன.

## 1910-ம் ஆண்டுச் சீர்திருத்தம் :

தொடர்ந்து நடத்தப்பட்ட கிளர்ச்சியின் பயனாக 1910-ம் ஆண்டில் சில அரசியற் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. உத்தியோகப்பற்றற்ற பத்து அங்கத்தவரும் உத்தியோகப்பற்றுள்ள 11 அங்கத்தவருமாக 21 அங்கத்தவரைக் கொண்டதாகச் சட்ட நிரூபண சபை திருத்தியமைக்கப்பட்டது. உத்தியோகப்பற்றற்ற 10 அங்கத்தவரில் நால்வர் தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். மற்ற ஆறு பேரும் நாட்டிலுள்ள பல்வேறு சமூகத்தவரின் நலவுரிமைகளையும் உத்தேசித்து நியமிக்கப்பட்டவர்களாவர். இவர்கள் பல்வேறு சமூகத்தின் சனத்தொகையையனுசரித்து நியமிக்கப்பட்டவர்களன்று. அதிகார வர்க்கத்தின் மனம் போனபடியே நியமிக்கப்பட்டவராவர். ஆனால் இந்த வகையான அங்கத்துவ அமைப்பில் ஒரு நன்மை காணப்பட்டது. அதாவது, உத்தியோகப்பற்றற்றவர்களின் தொகை பெரும்பான்மையாக இருந்தமையே. நியமன அங்கத்தவர் தொகை அதிகமாயிருந்தபடியால் அரசாங்கத்துக்கு அதிக எதிர்ப்பு இல்லாதிருக்கத்தக்க நிலைமையுண்டானது. அரசியற் சீர்திருத்தக் கிளர்ச்சியில் முன்னணியில் நின்ற ஐரோப்பியர் சிறிது சிறிதாகக் குறைந்துவிட்டனர். இருந்தும் தேர்தல் மூலம் பிரதிநிதிகளை அனுப்பும் கொள்கை ஆரம்பிக்கப்பட்டது. இதன் பயனாகக் கல்வி கற்ற மத்திய வகுப்பினர் மேலும் அரசியற் சீர்திருத்தத்துக்கு வாதாடினர். பூரண பொறுப்பாட்சி பெறுவதற்கு அவர்கள் இயக்கத்தை ஆரம்பித்தனர்.

## 1920-ம்—1924-ம் ஆண்டுச் சீர்திருத்தம் :

அரசியற் சீர்திருத்தத்தின் அடுத்தபடி 1920 லும், 1924லும் ஏற்பட்ட திருத்தங்களாகும். முதலாவது உலக மகாயுத்தம் காரணமாகவும், 1915-ல் உண்டான கலகம் காரணமாகவும், இலங்கைத் தேசிய மகா சபை என்ற சங்கத்தின் முயற்சியினு லும் மேலும் சில அரசியற் சீர்திருத்தத்தை இலங்கைக்கு வழங்க வேண்டுமென்று பிரித்தானிய அரசாங்கம் தீர்மானித்தது. சட்ட நிருபண சபையை மாற்றியமைக்க வேண்டுமென்று 1920-ம் ஆண்டில் பிரித்தானிய குடியேற்ற நாட்டு மந்திரி விரும்பி அவ் வாறே செய்தார். உத்தியோகப் பற்றற்றவர்களின் தொகை முதன் முதலாக அதிகரிக்கப்பட்டது. 37 அங்கத்தவரைக் கொண்ட சபையில் 23 பேர் உத்தியோகப்பற்றற்ற அங்கத்த வர்களாயிருந்தனர். இவர்களில் 11 பேர் பிரதேசவாரியாகத் தெரிவு செய்யப்பட்டனர். 5 பேர் விசேட தொகுதிகளின் பிரதிநிதிகளாகத் தெரியப்பட்டனர். இத்துடன் சட்ட நிர்வாக சபையில் முதன் முறையாக மூன்று உத்தியோகப்பற்றற்ற அங் கத்தவர் இடம் பெற்றனர். ஆனுல் தேசாதிபதி கையில் முழு அதிகாரமும் இருந்துவந்தது. ஒரு பிரேரணை மிகுந்த முக்கியத் துவம் வாய்ந்ததென்று சொல்லி உத்தியோகப்பற்றுள்ள அங்கத் தவரின் வாக்குகளைப் பெற்று அவர் அதனை நிறைவேற்ற அதி காரமளிக்கப்பட்டிருந்தார். சட்ட சபையின் நடவடிக்கைகளை நிறுத்தவும் அவருக்கு அதிகாரமிருந்தது.

இந்த அரசியற் சீர்திருத்தங்கள் அதிக திருப்தியை அளிக்க வில்லை. எனவே, 1924-ல் சிலசிறிய திருத்தங்கள் வழங்கப்பட் டன. சட்டசபையின் அமைப்பு மறுபடியும் திருத்தப்பட்டது. 12 உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தவரும், 34 தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுமாகச் சட்டசபையில் இடம்பெற்றனர். இவர்களில் 23 பேர் தேர்தற் தொகுதிகளின் பிரதிநிதிகளாயிருந்தனர். வகுப்பு உரிமைகளைத் திருப்தி செய்வதற்காக ஆறு இடங்கள் ஒதுக்கப் பட்டன. இவற்றுள் பறங்கியர், ஐரோப்பியர், மேல் மாகாணத் திலுள்ள தமிழர் ஆகியோருடைய நலவுரிமைகளைப் பாதுகாக்க இந்த ஆறு இடங்களும் ஒதுக்கப்பட்டன. எந்தப் பிரேரணையை யும் பரமாவசியமானதெனக் கூறும் அதிகாரம் தேசாதிபதிக் கிருந்துவந்தது. இப்படிப் பரமாவசியமான விடயங்களில் உத்தி யோகப்பற்றுள்ள அங்கத்தவரின் வாக்குகளும், நியமன அங்கத் தவரின் வாக்குகளுமே எடுக்கப்படும். சட்ட நிர்வாக சபையி லும், 4 உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர் சேர்த்துக்கொள்ளப் பட்டனர். இத்திருத்தங்களும் கருதிய பலனைத்தரவில்லை. இதற்குக்

காரணம் சட்ட சபையானது பண விடயங்களில் அதிக அதிகாரம் பெற்றிருந்தபடியால் சட்ட நிர்வாக சபை ஒன்றுஞ் செய்ய முடியாது தம்பித்து நிற்கும் நிலைமை உண்டானது. சட்ட நிரு பண சபையானது பொறுப்பில்லாத சபையாயிருந்தபடியால், அரசாங்கத்திற்குத் தொல்லை கொடுக்கக்கூடிய நிலைமையில் அஃது இருந்தது

## டொனமூர் அரசியலமைப்பு :

அரசியலமைப்பிலுள்ள குறைபாடுகளை யறிந்த அக்காலத் தேசாதிபதியான சேர். ஹியூ கிளிபோட், நடைமுறையிலிருந்த அந்த அரசியற்றிட்டத்திலுள்ள குறைகளை ஆராயவும் தேவையான திருத்தங்களைச் சிபார்சு செய்யும் ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு அறிவித்தனர். இதன் பிரகாரம் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு 1927-ம் ஆண்டு டொனமூர் பிரபுவின் தலைமையில் இலங்கைக்கு வந்து முன்னறியாத ஒரு அரசியலமைப்பைச் சிபார்சு செய்தது. சட்ட நிருபண சபை அமைப்பின் அடிப்படையான குறை அங்கத்தவர் பொறுப்பில்லாமல் அதிகாரம் பெற்றிருப்பதேயாகுமென்பதை டொனமூர் விசாரணைக் குழுவினர் விரைவில் அறிந்து கொண்டார்கள். இதனுல் அங்கத்தினர் அரசாங்கத்தின் திட்டங்களையெல்லாம் கண்டபடி கண்டித்துக் கொண்டிருந்தார்களேயன்றி அதற்கு உதவிபுரியும் நிலைமையில் அவர்களிருக்கவில்லை. பொறுப்பற்ற விதமாக அற்ப முறைகளை அனுட்டித்து அவர்கள் அரசாங்கத்தைக் கண்டித்தனர். அன்றியும் நிரந்தரமான எதிர்க் கட்சியினராகவும் அவர்கள் விளங்கினர். எனவே, அதிகாரத்துடன் ஓரளவு பொறுப்பும் அவர்களுக்கிருக்கக் கூடியதொரு அரசியலமைப்புத் திட்டத்தை விசாரணைக் குழுவினர் சிபார்சு செய்தனர். பிரதிநிதித்துவம் வாய்ந்த அங்கத்தவர்கள் நிர்வாகத்திலும் சட்ட நிருபண விடயங்களிலும் அதிகாரம் பெறக் கூடிய ஆட்சி முறையை வகுத்தனர். மேலும் உத்தியோகப் பற்றற்ற சட்டசபை அங்கத்தவர்களுக்கு நிர்வாகத்தில் பயிற்சியளிப்பதற்காக நிர்வாகக் கமிட்டி ஆட்சி முறையை அவர்கள் சிபார்சு செய்தனர். டொனமூர் அரசியலமைப்பைப் பற்றி மேலே விவரமாக ஆராய்வாம்.

## சர்வசன வாக்குரிமை :

புதிய அரசியற் சீர்திருத்தத்தில் விளங்கிய மிக முக்கியமான அமிசம் 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாருக்கும் வாக்குரிமையளிக்கப்பட்டமையேயாகும். இத்தகைய புரட்சிகரமான ஒரு மாற்றத்தை விசாரணைக் குழுவினர் சிபார்சு

செய்வதற்குப் பல காரணங்களிருந்தன. முன்னேற்றமடைந்த மற்ற நாடுகளில் உள்ளதுபோலச் சமூகத் துறையிலும் தொழிற் துறையிலும் பல சட்டங்களை இலங்கையிலும் இயற்றவேண்டியிருந் தது. தொழிலாளர் நட்டஈடு, தொழிற்சாலை ஒழுங்கு, வேலைநேர ஒழுங்கு, கடின வேலை செய்வோருக்கு ஏற்ற சம்பளம் என்ற இன்னோரன்ன கருணைமயமான விடயங்களைபற்றிச் சட்டஞ்செய்ய வேண்டுமானால் சர்வசன வாக்குரிமை இருக்க வேண்டியது அவ சியமெனக் கருதப்பட்டது. ஏனெனில், சனப்பிரதிநிதிகளா யிருப்போர் அப்பொழுது தான் பொதுசன நலனுக்கான இவ் விடயங்களைச் சட்ட மூலம் அமுல் நடத்த நினைப்பர். வாக் குரிமையைக் குறைப்பதால் ஒருசிறு தொகையினர் பெருந்தொகை யானோர் மீது ஆதிக்கஞ்செலுத்தக்கூடிய நிலைமை உண்டாகும். அரசியலில் எல்லாருக்கும் உரிமையுண்டென்று இக்கால அரசியற் கொள்கைப்படி நாட்டில் உண்மையான பொறுப்பாட்சி ஏற்பட வேண்டுமானால் அது சர்வசனங்களுடைய பிரதிநிதித்துவமுடைய ஆட்சியாயிருக்க வேண்டுமென உணரப்பட்டது. மேலும் தேர்தல் அபேட்சகர்கள் நேர்மையற்ற முறையில் தேர்தலில் வெற்றி பெறுமற் தடுப்பதற்குச் சர்வசன வாக்குரிமை அவசியமெனவும் விசாரணைக்குழுவினர் உணர்ந்தனர். பிரித்தானிய அரசியல் வளர்ச் சியிலும் இந்த உண்மை தெளிவாயிற்று என அவர்கள் கண்ட னர். தேர்தல் நேர்மையான முறையில் நடைபெற வேண்டுமா னால் வாக்குரிமையை எல்லாருக்கும் அளிக்க வேண்டியதவசிய மெனக் கண்டனர். ஆட்சியில் எல்லாச் சனங்களுக்கும் பங்கி ருக்க வேண்டும். அப்பொழுதுதான் பொது சனங்களின் தேவை களை ஆட்சியாளர் அறிந்து ஆவன செய்ய முடியும். அதற்கு எல்லாருக்கும் வாக்குரிமையிருக்க வேண்டியது அவசியமாயிற்று. மற்றுமொரு மிக முக்கியமான விடயம் தெளிவாயிற்று. அதா வது, பொதுசனம் அரசியல் உணர்ச்சி பெறுவதானால் வாக்கு ரிமை மூலந்தான் அதைப் பெறலாமென்பதே. வாக்குரிமையை மறுத்தால் அதனுடைய அரசியலறிவு மந்தமாகிவிடும்; பொறுப் பாட்சியின் பயனை ஒருசிறு தொகையினரே அனுபவிக்கக்கூடிய தாயிருக்கும். பொறுப்பாட்சியென்றாலென்ன என்பதைச் சனங் களுக்கறிவுறுத்த வேண்டுமானால் அது சர்வசன வாக்குரிமையி னாற்றான் முடியும். இக்காரணங்களையெல்லாம் மனதில் வைத் துக்கொண்டே டொனமூர்க் குழுவினர் சர்வசன வாக்குரிமை யளிக்கப்பட வேண்டுமெனச் சிபார்சு செய்தனர். 1931 துவக் கம் 1947 வரை நாட்டில் ஏற்பட்ட பெரும் சமூக முன்னேற் றத்துக்கு டொனமூர்க் குழுவின் இந்தச் சிபார்சே காரணமென்பது இப்பொழுது நிதரிசனமாகிவிட்டது.

### பிரதேசவாரியான பிரதிநிதித்துவம் :

விசாரணைக் குழுவினர் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழித்துக் கட்டினர். வகுப்புப் பிரதிநிதித்துவம் நாட்டிலுள்ள பல்வேறு சாதியினரையும் தனிப்படப் பிரிந்து வாழ்க்கை நடத்தச் செய்வதுமன்றி ஒரு தேச மக்களென்ற தேசீய உணர்ச்சியையும் வளர விடாது தடுத்து விடுமெனவும் கருதினர். பொது நன்மையைக் கருதாது தத்தம் வகுப்பு நன்மைகளை முன்னேற்றுவதற்கே வகுப்புப் பிரதிநிதிகள் சட்ட சபைக்குச் சென்றனர். அன்றியும் வகுப்புப் பிரதிநிதிகளிடையே பயமும் சமுசயமுமே காணப்பட்டனவன்றிப் பரஸ்பர நல்லெண்ணம் காண்பது அரிதாக விருந்ததெனவும் அவர்கள் கருதினர். பாரபட்சமான செய்கைகளில் அரசாங்கம் ஈடுபடுகிறதோவென்று கவனிப்பதிலேயே அவர்கள் ஊக்கமெடுத்தனர். வகுப்புப் பிரதிநிதித்துவம் மக்களிடையே வேற்றுமையை உண்டாக்கி வகுப்பு உணர்ச்சியை வளர்க்குமென்றும் வகுப்பு ஒற்றுமைக்குப் பாதகமானதென்றும் தனிப்பட்ட ஒரு வகுப்புக்கிடையிலேயே பிளவுகளை யுண்டுபண்ணி விடுகிறதென்றும் விசாரணைக் குழுவினர் அபிப்பிராயப்பட்டனர். ஒரு வகுப்பினரிடையே பல சாதிகளைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். அவர்கள் தத்தம் நலவுரிமைகளைப் பாதுகாக்கத் தனிப்பட்ட பிரதிநிதித்துவம் வேண்டுமென்று வாதாடினர். இவ்வாறான காரணங்களை மனதிற் கொண்டே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருக்கக் கூடாதென்றும் பிரதேசவாரியான தேர்தல் மூலம் பிரதிநிதித்துவம் பெற முடியாத வகுப்பினரின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்காக தேசாதிபதி சில அங்கத்தவரை நியமனம் செய்யவும் அரசியற் சட்டத்தில் வசதி ஏற்படுத்தப்பட்டது. சில சமூகத்தினர் ஒரு பிரதேசத்தில் பெருந்தொகையாகக் காணப்படமாட்டார்கள். பலவேறு இடங்களில் பிரிந்திருப்பர். அதனால், தேர்தலில் வெற்றிபெறக் கூடிய பலம் அவர்களுக்கு இராது. அதற்காகவே, இவ்வொழுங்கு செய்யப்பட்டது.

### பிரித்தானிய சாம்ராச்சிய அதிகாரம் :

இப்புதிய அரசியற் திட்டத்தில் பொறுப்பாட்சித் துறையில் சிறிது முன்னேற்றம் இருந்த போதிலும் வேறு சில துறைகளில் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் அதிகாரம் இருந்தே வந்தது. புதிய சட்ட சபையின் செயல்களைக் கட்டுப்படுத்தும் விதமான சில விசேட அதிகாரங்கள் தேசாதிபதியின் கையில் விடப்பட்டன.

பண விடயம், நீதி பரிபாலனம், அரசாங்க நிர்வாகஸ்தர் என்ற மூன்று பெரிய அரசாங்கப் பகுதிகள் மூன்று அரசாங்க அதிகாரிகள் பொறுப்பில் விடப்பட்டன. அவர்கள் அரசாங்க சபையின் அங்கத்தவராக இருக்கவும் அதன் விவகாரங்களில் பங்கு பற்றவும் உரிமை யுடையவர்களாயிருந்தார்கள். ஆனல் அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கொடுக்கப்படவில்லை. நிர்வாக சபைக் கூட்டங்களில் அவர்கள் சமுகமளிப்பது அந்நிர்வாக சபைத் தலைவர்களுக்குப் பெரிய தலையிடியை உண்டாக்கிற்று.

இப்புதிய அரசியல் திட்டத்தின் முக்கியமான அமிசங்கள் பின்வருமாறு :

## அரசாங்க சபை :

இது 61 அங்கத்தவர்களைக் கொண்டதாயிருந்தது. கூட்டங்களில் சபாநாயகர் தலைமை வகிப்பார். அங்கத்தவர்களில் 50 பேர் தேர்தற் தொகுதிகள் மூலம் சர்வசன வாக்குரிமை பெற்ற வாக்காளரால் தெரிவு செய்யப்பட்டவர்கள். சிறுபான்மைச் சமூகத்தவரின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டவர்கள் 8 பேர். இவர்களில் நால்வர் ஐரோப்பியர். ஒருவர் பறங்கியர். மற்றொருவர் இலங்கைச் சோனகர். இன்னொருவர் மலாய்க்காரர். எட்டாவது அங்கத்தவர் இந்திய வர்த்தக வகுப்பைச் சேர்ந்தவராவர். இவர்களைவிட மேற்கூறிய மூன்று அரசாங்க அதிகாரிகள் இவ்வரசாங்க சபையில் அங்கத்துவம் வகிப்பர்.

## நிர்வாக சபைகள் :

தேர்தலின் பின் அரசாங்க சபை ஏழு நிர்வாக சபைகளாகப் பிரிக்கப்பட்டதுண்டு. சபையின் நிர்வாகிகளையும் அது தெரிவுசெய்யும். ஒவ்வொரு நிர்வாகச் சபையிலும் எட்டு அங்கத்தவர்களுக்கு மேற்படாமலும் ஏழு அங்கத்தவர்களுக்குக் குறையாமலும் இருந்தனர். குறித்த நிர்வாக சபைகளாவன.

(1) உள்நாட்டு விவகாரம்

(2) விவசாயம்

(3) தலத்தாபனம்

(4) சுகாதாரம்
(5) தொழில், கைத்தொழில், வர்த்தகம்
(6) கல்வி
(7) போக்குவரத்து

## நிர்வாகிகள் :

அரசாங்க சபையின் நிர்வாகிகள் பின்வருமாறு :

(அ) சபையின் தினசரி விவகாரங்களைப் பற்றிய குறிப்பை எழுதி வைப்பதற்கு அரசாங்க சபைக் காரியதரிசி யென ஒருவருளர்.

(ஆ) சபாநாயகர், உப சபாநாயகர், நிர்வாக சபை களின் பிரதித் தலைவர். இவர்கள் எல்லோரும் சபையினால் தெரிவு செய்யப்படும் நிர்வாகிகள்

(இ) ஏழு மந்திரிகள். இவர்கள் ஏழு நிர்வாக சபை களினாலே தெரிவு செய்யப்படுவர்.

(ஈ) மூன்று அரசாங்க அதிகாரிகள். இவர்கள் தேசாதிபதியினால் நியமிக்கப்படுவர். இம் மூவரும் தேசாதிபதியும் சேர்ந்த ஒரு குழுதான் அரசாங்க சேவைக்குழு.

## மூன்று அரசாங்க அதிகாரிகள் :

இம்மூன்று அரசாங்க அதிகாரிகள் ''ஒதுக்கப்பட்ட விடயங்கள்'' என்ற பகுதிகளுக்குப் பொறுப்புடையராவர். இவை மிக முக்கியமான அரசாங்கப்பகுதிகள். சாதாரண உடையில் விளங்கும் மூன்று போலீஸ் அதிகாரிகளென இவர்கள் குறிப்பிடப்பட்டதிலிருந்தே எத்தகைய பெரிய விடயங்களை இவர்கள் கவனித்து வந்தார்களென்பது புலனாகும். இவர்களில் முதலாவதாக உள்ளவர் பிரதம காரியதரிசியாவர். உத்தியோகம் வகிக்கும் காரணத்தால் இவர் மந்திரி சபையின் தலைவராவர். அரசாங்க அதிகாரிகள் எல்லாருக்கும் இவரே தலைமையான வர். நாட்டின் பாதுகாப்பு இவர் கையில் விடப்பட்டது. வெளி நாட்டுத் தொடர்பும் இவருடைய அதிகாரத்திலேயே இருந்தது. தேசாதிபதி இல்லாத சமயத்தில் இவரே அவருக்குப் பதிலாகக் கடமையாற்றுவார். அத்தருணங்களில் அரசாங்கத்தின் நிர்வாக அதிகாரியென இவர் அழைக்கப்படுவார்.

இவருக்கடுத்தபடியாக உள்ளவர் நிதிக் காரியதரிசியாவர். திறைச்சேரி, அரசாங்கப் பண்டசாலை, அரசாங்க அச்சகம் என்பன இவர் பொறுப்பிலிருந்தன. அரசாங்க சபைக்கும் நிர்வாக சபைகளினுல் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவருக்கும் இவரே பண விடயமாக ஆலோசனை கூறுவர். அபிவிருத்தித் 'திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருவதனுல் அரசாங்க சபையோ மந்திரிகளோ இவருடைய அனுமதியைப் பெறவேண்டியதவசியம். ஒரு திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு பணம் தேவையென்பது பற்றி பணக்காரியதரிசியே ஆராய வேண்டும். அவருக்கு அது சம்மதமானுல் திட்டம் அமுல் நடத்தப்படும். சம்மதமில்லாவிட்டால் அது கைவிடப்படும். நிதிக்காரியதரிசி தேசாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு அதிகாரியாவர். அவர் எந்தத் தேர்தற் தொகுதிக்கும் பொறுப்புடையவரன்று. விடயங்களை நன்கறிந்து கொள்ளாததனுல் உண்டான ஒரு அபிப்பிராயமென அவர் உணர்ந்தால் எந்தப் பொது அபிப்பிராயத்தையும் பொருட் படுத்தாது விட்டுவிடலாம். நிதிக் காரியதரிசி பதவியை வகித்தவர்கள் அநேகமாக ஐரோப்பியராயிருந்தபடியால் ஏகாதிபத்திய விடயங்களுக்கு ஆபத்து உண்டான சமயங்களில் அவர் குறுக்கிடுவது, இயற்கையென்று அடிக்கடி அவர் மீது குறை கூறப்பட்டது. ஆனுல், அவருடைய நிலைமை மிகவும் தர்ம சங்கடமாகவே இருந்தது. இங்கே கூறப்பட்ட பல்வேறு கடமைகளோடு நாட்டின் நிதி நிலைமைக்கும் அவரே பொறுப்புடையவரானுர்.

மூன்முவது அதிகாரி சட்டக் காரியதரிசி. நாட்டின் நீதி பரிபாலனம் இவர் கையில் விடப்பட்டது. அரசாங்கசபைத் தேர்தற் கடமைகளை இவரே கவனித்து வந்தார். சட்டம் சம்பந்தமான விடயங்களில் இவர் அரசாங்க சபைக்கு ஆலோசனை கூறுவர். அரசாங்க சபையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களைச் சட்டப் பரிமொழியில் எழுதும் பொறுப்புடைய சட்டப் பகுதி இவருடைய தலைமையிலிருந்தது. குற்றம் சம்பந்தமான வழக்குகளும் சிவில் வழக்குகளும் அரசாங்கத்தின் சார்பாக இப் பகுதியினராலேயே தொடுக்கப்படும்.

## மந்திரி சபை :

நிர்வாக சபைகளொவ்வொன்றும் தமது தலைவரைத் தெரிந்தெடுக்கும், அத்தலைவர் மந்திரிப் பதவி ஏற்பார். இவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட 7 மந்திரிகளும், முன்னர் கூறிய மூன்று அரசாங்க அதிகாரிகளும் சேர்ந்த சபையே மந்திரி சபை

யாகும். பிரதம காரியதரிசி என்ற அதிகாரி தமது பதவி காரணமாக இம்மந்திரி சபையின் தலைவராவர். அரசாங்க சபை முதல்வர் மந்திரி சபையின் உபதலைவராவர். ஏழு நிர்வாக சபைகளின் தலைவர்கள் சேர்ந்து தமக்கிடையே ஒருவரைச் சபை முதல்வராகத் தெரிவு செய்வார்கள். மந்திரிசபையினர் ஏதாவதொரு விடயம் பற்றித் தீர்மானம் செய்யும் பொழுது இம்மூன்று அரசாங்க அதிகாரிகளும் தேவையான சமயங்களில் தமது ஆலோசனையை அவர்களுக்குக் கூறுவதன்றி வாக்களிப்பது கிடையாது.

அரசாங்க சபையின் வேலைத்திட்டம், சபை கூடவேண்டிய தேதி, நிகழ்ச்சி நிரல் ஆகியவற்றை மந்திரி சபை ஒழுங்கு செய்யும். வருடத்தின் வரவு செலவுத் திட்டத்தை வகுத்துத் தயார் செய்வது அவர்களின் மிக முக்கியமான கடமையாகும். வரவு செலவுத் திட்டத்திற்கு மந்திரிகள் எல்லாரும் கூட்டுப் பொறுப்புடையவர்களாயிருந்தார்கள். இத்திட்டத்தை அரசாங்க சபை ஏற்றுக்கொண்டால் மந்திரிசபை தொடர்ந்து நிலைத்திருக்கும். இல்லாவிட்டால் அதன் ஆயுள் முடிவடையும் திட்டத்தை நிறைவேற்றுமல் அதனை மந்திரி சபையின் புனராலோசனைக்குச் சமர்ப்பிக்க அரசாங்க சபைக்கு உரிமையுண்டு. இரண்டாம் முறையும் அதனை அரசாங்கசபை நிராகரிக்குமானல் தேசாதிபதி அரசாங்க சபையைக் கலைத்து விடலாம். வரவு செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு மூன்று மாதத்திற்கிடையில் அது சபையின் அங்கீகாரத்தைப் பெறுவிட்டாலும் தேசாதிபதி சபையைக் கலைத்துவிடலாம். மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத்தீர்மானம் நிறைவேற்றப்படும்பொழுது சபை கலைக்கப்படும். தனிப்பட்ட மந்திரிகள் தமது நிர்வாக சபைகளின் சார்பில் கொண்டுவரும் திட்டங்களை மந்திரிசபை ஆலோசனை செய்யும். அவ்வாறு, சமர்ப்பிக்கப்படும் திட்டங்களுக்குத் தேவையான பணச்செலவை ஆராய்தல், அத்திட்டங்கள் சாத்தியமானவையா அல்லவா என்பதைப் பரிசீலனை செய்தல், அவற்றை நடைமுறையிற் கொண்டுவரும்படி சிபார்சு செய்தல். அவற்றில் திருத்தங்களைச் செய்தல் என்னும் இவ்விடயங்களெல்லாம் மந்திரி சபையினுல் பரிசீலனை செய்யப்படும். ஒரு முறை அரசாங்க சபையினுல் நிறைவேற்றப்பட்ட ஒரு திட்டத்தை நிராகரிக்க மந்திரி சபைக்கு அதிகாரம் கிடையாது.

### தேசாதிபதியின் அதிகாரங்கள் :

சுயாதீனமாக ஒரு சட்ட சபைக்குக் கூட்டாகப் பொறுப்புள்ள மந்திரிகள் கையில் அரசாங்கப் பொறுப்பை ஒப்படைத்து

விட்டு எவ்வித பொறுப்புமில்லாத ஒரு தேசாதிபதியை ஏற்படுத்துவதா? அல்லது அரசாங்க அலுவல்கள் எல்லாவற்றையும் நடத்தக்கூடிய சர்வாதிகாரமுள்ள தேசாதிபதியை ஏற்படுத்துவதா? டொனமூர்க் குழுவினர் அமைக்கவிருந்த அரசியற் திட்டத்திற்கு இவ்விருவகையான தேசாதிபதிகளும் பொருத்தமற்றவர்களாகவே காணப்பட்டனர். பொறுப்பாட்சித் துறையில் எவ்வளவுக்கு முன்னேற்றமிருந்ததோ அவ்வளவுக்குத் தேசாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டியிருந்தது. எனவே, முற்கூறிய இரண்டுவிதமான எல்லைகளுக்கும் இடையிலுள்ள ஒரு அந்தஸ்தைப் புதிய அரசியற் திட்டத்தில் தேசாதிபதிக்கு வழங்கவேண்டியிருந்தது.

எனவே, தேசாதிபதி புதிய அரசியற் திட்டத்தைக் காவல் காக்கும் காவற்காரனுக இருக்கவேண்டியதாயிற்று. தேர்தல் மூலம் சனப் பிரதிநிதிகளாக அரசாங்க சபையில் அங்கம் வகிப்போர் தவறுன வழிகளிற் செல்லும் பொழுது தேசாதிபதி குறுக்கிட்டு நல்வழிப்படுத்துவார். அரசாங்க விடயங்களில் அவர் தாமாக முன்வந்து எதுவும் செய்ய வேண்டிய அவசியமிருக்கவில்லை. அரசாங்கசபையோ மந்திரிசபையோ அவசர புத்திகொண்டு தாறுமாருக எதையும் செய்துவிடாமல் தடுப்பதும் நேரத்தோடு எச்சரிக்கை செய்வதும் அவரின் கடமையாகும். சனப்பிரதிநிதிகளிடம் நிர்வாகப் பொறுப்பு கொடுக்கப்படும்பொழுது அப்பொறுப்பை அவர்கள் துர்ப்பிரயோகஞ் செய்யாமல் தடுப்பதற்காகத் தேசாதிபதிக்கு விசேட அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று விசாரணைக் குழுவினர் கருதினர். இவ் விசேட அதிகாரம் ஒரு பாதுகாப்பாகும். மற்றொரு பாதுகாப்பு, அரசாங்க சபையில் அங்கத்துவம் வகிக்கும் நிபுணர்களான மூன்று அரசாங்க அதிகாரிகளாவர். இவ்விரு பாதுகாப்புகளையும் தக்க தருணத்தில் ஏற்றவாறு உபயோகித்தல் தேசாதிபதியின் கடமையாகும்.

அரசாங்க சபை அங்கத்தவர்களை அழைத்து அச்சபையின் கூட்டத்தில் அவர்களுக்குப் பிரசங்கம் செய்யத் தேசாதிபதிக்கு அதிகாரமுண்டு. 1920-ம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட அரச கட்டளைகள் என்ற சாசனத்தின்படி பத்து வகையான மசோதாக்களுக்கு மன்னர் பிரானின் அங்கீகாரத்தைத் தேசாதிபதி பெற்றுக்கொள்ள வேண்டுமென விதிக்கப்பட்டிருக்கிறது. ஐரோப்பியரல்லாதாருக்கு இல்லாத சகாயங்கள் ஐரோப்பியராயுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படக் கூடாதென்ற பிரமாணமொன்றைத் தவிர மற்றச் சட்டங்கள் எல்லாவற்றையும் அமுல் நடத்தலா

மென டொனமூர் விசாரணைக் குழுவினர் கருதினர். அத்துடன் தேசாதிபதியின் விசேட அதிகாரத்துக்குரியதாக 6 வகைப்பட்ட புதிய மசோதாக்களையும் சேர்த்துக்கொண்டனர். அவை பின் வருமாறு :-

(1) குறித்த ஒரு சமூகத்தவரையோ சமயத்தவரையோ சில வசதியீனங்களுக்குட்படுத்தி அவர்களுக்குரிய சலுகைகளைக் கொடாத மசோதா.

(2) அரசாங்க ஊழியரின் உரிமைகளை அல்லது சலுகைகளைப் பாதிக்கக்கூடிய மசோதா.

(3) இத்தேசத்தின் நிதி நிலைமையைப் பாதிக்கக்கூடிய மசோதா.

(4) இத்தேசத்தின் பாதுகாப்பு இராணுவம் அல்லது பொதுசனப் பாதுகாப்பு சம்பந்தமான மசோதா.

(5) வெளிநாட்டு வர்த்தகத்தையும், துறைமுகங்களையும், கப்பற் போக்குவரத்தையும், இராணுவ விடயங்களையும் ஏகாதிபத்திய விடயங்களையும் பாதிக்கக் கூடிய மசோதா.

(6) இத்தேசத்தின் நீதி பரிபாலனத்தைப் பாதிக்கக்கூடிய மசோதா.

இத்தகைய மசோதாக்களெல்லாம் தேசாதிபதியின் விசேட அதிகாரத்திற்குட்பட்டவை. மேலும், அது தீமையுடையதென எதை அவர் கருதுகிறாரோ அத்தகைய மசோதாவையும் தமது விசேட அதிகாரம் பெறவேண்டியதொன்றென வைத்துக் கொள்ளலாம். இவ்வகையான மசோதாக்கள் அரசாங்க சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டால் தேசாதிபதி ஆறு வகையில் அவற்றைத் தீர்த்து வைக்கலாம் :-

(1) மசோதாவை நேரடியாக அங்கீகரித்தல்.

(2) மன்னர் பிரானின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பித்தல்.

(3) திருத்தங்களிருந்தால் அவற்றைக் குறிப்பிட்டு, அம் மசோதாவைச் சபைக்கு மறுபடியும் சமர்ப்பித்தல். திருத்தமில்லாவிட்டால் அப்படியே புனராலோசனைக்குச் சமர்ப்பித்தல்.

(4) மிக முக்கியமானதொரு கொள்கை இம்மசோதாவில் அடங்கியிருப்பதால் சபையின் பெரும்பான்மை வாக்கில் மூன்றில் இருபங்கு பெறவேண்டுமென அதனை உறுதிப்படுத்துதல்.

(5) அங்கீகாரமளித்துவிட்டு ஆறு மாதத்திற்கு அம் மசோதா நடைமுறைக்கு வரக்கூடாதெனத் தடுத்தல்.

(6) தம்து அங்கீகாரத்தை அடியோடு மறுத்தல்.

தேசாதிபதி இவ்வதிகாரங்களை வேருெருவரின் தலையீடின்றித் தாமாகவே பிரயோகிக்கலாம். ஆனுல், தமது முடிவைப் பற்றிய விவரங்களைக் குடியேற்றநாட்டு மந்திரிக்கு அறிவிக்க வேண்டியது அவருடைய கடமையாகும்.

சில சட்டங்களை அரசாங்க சபை நிறைவேற்றத் தவறினுல் தாமாகவே அவற்றைச் சட்டமாக்கவும் அவருக்கு அதிகாரமிருந்தது. அப்படிச் செய்யும் பொழுது அதைப்பற்றி அவர் குடியேற்றநாட்டு மந்திரிக்கு அறிவிக்க வேண்டும். அப்படியான சட்டங்களைக் குடியேற்றநாட்டு மந்திரியின் அங்கீகாரம் பெறுவதற்கு வசதி பார்த்திராமல் உடனேயே நடைமுறைக்குக் கொண்டும் வரலாம். நிர்வாக சபைகள் செய்யும் முடிவுகளையும் எடுக்கும் நடவடிக்கைகளையும் தேசாதிபதிக்கு அறிவிக்க வேண்டியது கடமை. சட்டமியற்றுவதில் அவருக்கு அளிக்கப்பட்ட ஆறு அதிகாரங்களையும் இவ்வாருன அறிக்கைகள் சம்பந்தமாகவும் அவர் பிரயோகிக்கலாம் தமது அங்கீகாரத்தைத் தேசாதிபதி கொடுக்க மறுத்தால் அல்லது அவ்வறிக்கைகள், தீர்மானங்கள் என்பவற்றைப்பற்றி மேலும் ஆலோசனை செய்ய வேண்டுமென அவர் விரும்பினுல், அவ்விடயம் குடியேற்றநாட்டு மந்திரிக்கு அறிவிக்கப்படவேண்டும். சட்டமியற்றுந் துறையில் தேசாதிபதிக்கு என்னென்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டனவோ என்னென்ன மசோதாக்கள் சம்பந்தமாக அவர் தமது அங்கீகாரத்தை மறுக்கவோ, பின் போடவோ உரிமை வழங்கப்பட்டதோ அத்தகைய அதிகாரங்களும் உரிமைகளும் நிர்வாகத் துறையிலும் அவருக்கு வழங்கப்பட்டன. அரசாங்க சபை நிறைவேற்ற மறுத்த சட்டங்கள் சம்பந்தமாக அவருக்கு என்ன அதிகாரம் வழங்கப்பட்டதோ அதே அதிகாரங்கள் பரமாவசியமான விடயங்களிலும் அவருக்குக் கொடுக்கப்பட்டன.

அரசாங்க அதிகாரியின் கீழ் விடப்பட்ட கருமங்கள் சம்பந்தமாகவும் தேசாதிபதி சில கடமைகளைச் செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டார். அரசியற் கொள்கையளவில் தேசாதிபதியே இம்மூன்று அதிகாரிகளுக்கும் பொறுப்புடையவராவர். ஆனுல், நடைமுறையில் அது பொருந்தாது. ஏனெனில் பண விடயத்திலும் அரசியற் கொள்கை விடயத்திலும் அரசாங்கசபை அதிகாரமுடை

யதாயிருந்தது. எனவே, இம்மூன்று அரசாங்க அதிகாரிகளும் தங்களின் கீழுள்ள இலாக்காக்களின் நிர்வாகத்திற்குப் பொறுப்புடையவராவர். எனவே, இவ்விலாக்காக்கள் விடயத்தில் தேசாதிபதி இம் மூன்று அரசாங்க அதிகாரிகளின் ஆலோசனைப்படி நடக்கவேண்டியிருந்தது. உள்ளூர் விடயங்களில் அவ்வாறு நடந்தாலும் ஏகாதிபத்திய விடயங்களில் அவர் தான் நினைத்தபடி நடக்கலாம். பொதுவாகப் பார்க்குமிடத்து, இவ்வரசாங்க அதிகாரிகள் விடயத்தில் அவர் மேற்பார்வை செய்யும் கடமையுடையவரேயன்றி நேரடியாகத் தலையிடும் கடமையற்றவராகவே இருந்தார். தேசாதிபதியே சேனாதிபதியாகவுமிருந்ததால் நாட்டின் பாதுகாப்புக்கு இவரே பொறுப்புடையவரானார். இவர் கவனிக்கும் ஏகாதிபத்திய விடயங்களுள் இதுவுமொன்று.

சட்ட நிரூபணத்துறையிலும் சட்ட நிர்வாகத் துறையிலும் தேசாதிபதிக்கு இருக்கும் அதிகாரங்களைப் பற்றி இதுவரை கூறினோம். இவற்றை விட வேறுசில அதிகாரங்களும் இவருக்குண்டு. நீதிபரிபாலனத்தில் நீதிமன்றங்களின் தீர்ப்பைக் கருணைகாட்டும் காரணமாக மாற்றவும் இவருக்கு விசேட உரிமையுண்டு. மந்திரிமாரின் ஆலோசனையை இவர் கோரலாம். எந்த அரசாங்க இலாக்கா சம்பந்தப்பட்ட அதிகாரப் பத்திரத்தையும் இவர் பார்வையிடலாம். நிர்வாக சபைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை இவரே கடைசியாக நியமிப்பவராதலால் அத்தகைய தலைவர்மீது இவருக்கு அதிருப்தி ஏற்படுமானால் அவரை நியமிக்க மறுத்து வேறொருவரைத் தெரிந்தெடுக்குமாறு கட்டளையிடவும் இவருக்கு உரிமையுண்டு.

அவசரகால அதிகாரங்கள் என்ற வகையில் சில உரிமைகள் தேசாதிபதிக்குண்டு. நெருக்கடி ஏற்பட்டால் எந்த அரசாங்க இலாக்காவையும் முறைப்படி பிரகடனம்செய்தபின், தமது அதிகாரத்தின் கீழ் கொண்டுவர இவருக்கு உரிமையுண்டு. அப்படியான சந்தர்ப்பங்களில் அதைக் குடியேற்றநாட்டு மந்திரிக்கு அறிவிக்க வேண்டியது இவருடைய கடமையாகும். அன்றியும், அதற்கான சட்டங்களை அரசாங்க சபையின் அங்கீகாரத்துடன் நடைமுறைக்கும் கொண்டுவரலாம்.

அரசாங்க ஊழியர் விடயத்திலும் அதிகாரிகளின் நியமனம், இடமாற்றம், வேலை நீக்கம், ஒழுங்குக் கட்டுப்பாடு என்பன இவருடைய பொறுப்பாகும். இங்கேயும் இவர் குடியேற்ற நாட்டு மந்திரிக்குப் பொறுப்புடையவராவார். கீழ்த்தர அதிகாரிகளை நியமிக்கும் விடயத்தில் இவர் தமது உரிமையை இலாக்கா தலைவர்களிடம் ஒப்படைக்கலாம்.

தேசாதிபதி நேரடியாகக் கருமங்களில் ஈடுபடுவதில்லை. அவர் மற்றவர்களைக் கொண்டு கருமங்களைச் செய்விப்பர். அவருடைய வேலை மேற்பார்வை மட்டில் அடங்கும். நாட்டின் நிர்வாகத்துக்கு அவர் பொறுப்புடையவரன்று. ''நிர்வாகத்துக்குப் பொறுப்புடையவர்கள் அரசியற் சட்டத்தில் விதிக்கப்பட்ட பிரமாணங்களுக்கு மாறாக நடவாமலிருக்கிறார்களா என்று கவனிப்பது'' அவருடைய கடமையாகும். கருமங்களை உறுதியாக நடத்திவைக்கும் சக்தியாகவும் வேகத்தைத் தடுக்கும் இடறு கட்டையாகவும் தேசாதிபதி யிருப்பார் என்பதே விசாரணைக் குழுவினரின் நோக்கமாகும். முடிக்குரிய குடியேற்றநாட்டு ஆட்சி முறையை நடத்தாமலும் செயலற்று ஒன்றுஞ் செய்யாதிராமலும் நடு நின்று ஆட்சி நடத்துவிப்பதே தேசாதிபதியின் கடமையாயமைந்தது. உள்ளூர்க் கட்சிபேதங்களில் அவர் ஈடுபடக் கூடாது. அவர் நடுநிலைமை வகிக்கவேண்டும். அதன்மூலம் பொது சனங்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும். மந்திரி சபைக் கூட்டங்களில் அவர் தலைமை வகிக்கக் கூடாதெனத் தடுக்கப் பட்டமைக்குக் காரணமிதுவே. சுருங்கக் கூறினால் அவர் எல்லாவற்றையும் மேற்பார்வை செய்யும் அத்தியட்சராவர். இக்கடமையைச் செவ்வனே செய்வதற்கு நிர்வாகத்தின் எல்லாப் பகுதிகளிலும் தொடர்பு வைத்துக்கொள்ள அவருக்குப் போதிய சாவகாசமளிக்கப்பட்டது. அரசாங்க சபையின் அறிக்கைகளும், நிர்வாக சபைக் கூட்டங்களின் நடவடிக்கைகளும் அவருக்கு அறிவிக்கப்பட்டன.

## புதிய அரசியற் திட்டத்தில் உள்ள குறைகள் :

டொனமூர் அரசியற்றிட்டத்தின் மிகப்பெரிய குறை நிர்வாக சபை ஆட்சியாகும். இவ்வாட்சி முறையில் சில நன்மைகளிருந்தாலும் பல தீமைகளும் மலிந்திருந்தன. அரசாங்க நிர்வாகத்தை நேரடியாகப் பார்த்துக் கொள்ளும் சந்தர்ப்பத்தை நிர்வாகசபையானது தனிப்பட்ட அங்கத்தவர்க்கு வழங்கிற்று. ஒரு சட்டத்தைச் செய்யும் பொழுது அதனாற் பாதிக்கப்படும் பகுதியினர் அதைப்பற்றித் தமது கருத்துக்களையும் கோரிக்கைகளையும், அது சட்டமாகுமுன் கூறுவதற்குப் போதிய சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. மேலும் நாட்டின் அரசியல் அரங்கில் அரசாங்க சபை அங்கத்தவருக்கு உன்னத தானமொன்று வழங்கப்பட்டது. அரசாங்க ஊழியர்களை நியமிக்கும் விடயத்

தில் அவருக்கு ஒரு பங்கிருந்தது, உத்தியோகங்களில் எவ்வளவு விகிதத்தைத் தனது தொகுதியினருக்குக் கொடுக்கலாமென நிச்சயிக்கும் உரிமையுமிருந்தது. சட்டங்களை உருவாக்குவதிலும் அவற்றை நிறைவேற்றுவதிலும், அவருக்குப் பெரிய பங்கிருந்தது. அன்றியும் தனது நிர்வாக சபையில் பெரும்பான்மையினரின் ஆதரவு இருக்கும் பட்சத்தில் அதன் தலைவராகிய மந்திரியை நிர்ப்பந்தப்படுத்தித் தன் விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய சந்தர்ப்பமுமிருந்தது. இவ்வகையில் அவர் அமெரிக்க மேல் சபை அங்கத்தவரைப் போலிருந்தார். அவர்களைப் போலவே இவரும் பெரிய பெரிய பிரசங்கங்களைச் சபையிற் செய்ய முடிந்தது. ஆற்றொழுக்குப் போல இவர்களுடைய பிரசங்கமும் நிரந்தரமாக ஒழுகிக்கொண்டே யிருக்கும். ஒருவர் ஒரு சமயம் செய்த நீண்ட பிரசங்கத்தினுல் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்ருது, தடுக்கக்கூடிய நிலைமையையும் உண்டாக்கினுர். கபினெற் ஆட்சியில் அங்கத்தவர் தமது கட்சியின் கொள்கையையே எடுத்துக் கூற வேண்டிய நிலைமையுண்டு. ஆனுல் டொனமூர் ஆட்சியில் தனிப்பட்ட அங்கத்தவர் ஆட்டு மந்தை போல ஒரு கட்சியின் கொள்கையைப் பின்பற்ற வேண்டிய நிலைமை யுண்டாகவில்லை. அமெரிக்க மேற்சபை அதிகாரிகள் போலவே அவர் இருந்தார். பிரித்தானிய பாராளுமன்ற அங்கத்தவருக்கில்லாத செல்வாக்கு இவருக்கு இருந்தது. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் பெற்ற காலத்தில் இருந்த பல சிலாக்கியங்களைச் சிறுபான்மைக் கட்சியினர் டொனமூர் ஆட்சியில் இழந்திருந்த போதிலும் நிர்வாகக் கமிட்டி முறையில் அவர்கள் தமது குறைகளை இடித்துக் கூறவும் தமது கட்சியைச் சேர்ந்த சிலரை மந்திரிகளாகத் தெரிவு செய்யவும் போதிய வசதியிருந்தது.

இங்கே எடுத்துக்காட்டப்பட்ட நன்மைகளே டொனமூர்த் திட்டத்தை நன்கு நடைமுறையிற் கொண்டு வருவதற்குப் பெரிய முட்டுக்கட்டையாயுமிருந்தன. தனிப்பட்ட அங்கத்தவர் தமது அதிகாரத்தை மிதமாகப் பயன்படுத்தத் தவறினர். சில சமயம் அதனைத் துர்ப்பிரயோகஞ் செய்யவுந் தலைப்பட்டார். அதனுல் நிர்வாகத்தில் அவசரமின்றித் தலையிட நேர்ந்தது. அதிகாரிகள் நியமன விடயத்தில் நிர்வாக சபை தனக்குத் தேவையானவர்களைச் சிபார்சு செய்தது. இதனுல் பட்சபாதங் காட்டுவதும், சுற்றமித்திரருக்குத் தனிச் சலுகை காட்டுவதும் மலிந்தது. நிர்வாக சபையின் சிபார்சுகளுக்கு மாருக உத்தியோகங்களில் நியமிக்கப்பட்டவர்களுக்கு நிர்வாக சபை அங்கத்தவர் நேரடியாகப் பல தொல்லைகளை உண்டாக்கினர்.

அத்துடன் கடுமையான இமிசைகளுக்கு முட்படுத்தினர். அவர்கள் தம் கடமைகளைப் புரியவிடாமல் பல இன்னல்களை விளைத்தனர். நிர்வாக சபையும் மந்திரிகளும் செய்த பல குறைகளை அவ்வதிகாரிகள் மீது சுமத்தினர். இக்காரணங்களால் அரசாங்க அதிகாரிகள் தமது கடமைகளில் உற்சாகமிழக்க வேண்டியதாயிற்று. மேலும் அவர்கள் ஒரு தலைவருக்கு விசுவாசமுள்ளவராயில்லாமல் பலருக்கும் தொண்டு செய்யவேண்டிய நிலைமை உண்டானது. மந்திரியின் சொற்படி அவர் நடந்தால் மூன்று அரசாங்க அதிகாரிகளின் கோபத்துக்காளாவார். பிரதம காரியதரிசியின் கட்டளைப்படியோ, தேசாதிபதியின் கட்டளைப்படியோ நடந்தால் மந்திரிகளின் கோபத்துக்கோ நிர்வாக சபையின் கோபத்துக்கோ ஆளாகவேண்டிவரும். இது ஒரு பெரிய தருமசங்கடமான நிலைமை. பல எசமானரைத் திருப்திப்படுத்த முனைந்தும் கடைசியாக ஒருவரையாவது திருப்திப்படுத்த முடியாதிருந்தார். இக்காரணத்தால் பல அரசாங்க அதிகாரிகள் டொனமூர் திட்டத்தில் விதிக்கப்பட்ட பிரமாணப்படி தமது உத்தியோக காலம் முடிவடைதற்கு முன்னரே நட்ட ஈடு பெற்றுக்கொண்டு தமது பதவிகளிலிருந்து நீங்கினர்.

சிறுபான்மைக் கட்சியினர்கூட டொனமூர்த் திட்டத்தை முழு மனதுடன் ஆதரிக்கவில்லை. பல காலமாக விசேட பிரதிநிதித்துவம் பெற்றுவந்த சிறுபான்மையினருக்கு டொனமூர்த் திட்டத்தில் அச்சலுகை மறுக்கப்பட்டது. அதை அவர்கள் எப்பொழுதும் மறக்கவில்லை. மேலும், சர்வசன வாக்குரிமையும் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமும் வழங்கப்பட்டதால் பிற்போக்கான பிரதேசங்கள் மீது அதிக கவனஞ் செலுத்தப்பட்டது. இப்பிற்போக்கான பகுதிகளுக்குப் பெரும்பான்மைச் சமூகத்தினரே பிரதிநிதிகளாக இருந்தனர். அதனால் பெரும்பான்மையோர் தங்கள் விடயத்தில் பாரபட்சமாக நடக்கிறார்களென்றும் அவர்கள் கூறினர். எனவே, அரசியலில் மேலும் சீர்திருத்தஞ் செய்யவேண்டுமென்ற கிளர்ச்சியுண்டானபொழுது சிறுபான்மையோர் அதற்குப் பூரண ஆதரவளிக்கவில்லை. முதலாவது மந்திரி சபையில் பதவி வகித்த சிறுபான்மைச் சமூகத்தவர்கள் சிங்களத் தலைவர்கள் கொண்டுவந்த சீர்திருத்தப் பிரேரணைகளுக்குப் பூரண ஆதரவளிக்க மறுத்தனர். அதனால் குடியேற்ற நாட்டு மந்திரி அரசியலில் எவ்வித சீர்திருத்தமும் செய்வதற்கு இணங்கவில்லை. சிறுபான்மைக் கட்சித் தலைவரின் இக்கொள்கை சிங்களத் தலைவர்களுக்கு ஆத்திரத்தை யுண்டாக்கிற்று. 1936-ம் ஆண்டில் நிறுவப்பட்ட இரண்டாவது மந்திரி சபையில் எல்லாரும் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவே காணப்பட்டனர்.

all sinhalese ministers

இரண்டாவது மந்திரி சபை, அமைக்கப்பட்டபோது ஒவ்வொரு நிர்வாக சபையின் தலைவர்களும் பெரும்பான்மைக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடியவாறு கணக்குப்போட்டு நிர்வாக சபைகளை அமைத்தனர். அதன் பயனுக முதலாவது மந்திரி சபையில் சிறுபான்மையினர் இருந்த காரணத்தால் ஏற்படாத ஒருமைப்பாடு இப்பொழுது ஏற்பட்டது. முன்கூறிய பிரகாரம் நிர்வாக சபை ஆட்சி சிறுபான்மையினருக்கு அதிக சந்தர்ப்பங்களை உதவி அவர்களுடைய நல உரிமைகளை நன்கு காப்பாற்றக்கூடிய வசதியைப் பெற்றிருந்தபோதிலும், மறைமுகமாக வகுப்பு வேற்றுமையை அதிகரிக்கவே செய்தது. வகுப்புப் பூசல் உச்ச நிலையை யடைந்திருந்தபடியினுல் 1938-ம் ஆண்டில் அரசியல் சீர்திருத்தம்பற்றி அறிக்கை செய்த தேசாதிபதி கொல்டிக்கொற் நிர்வாகசபை ஆட்சி நீடிக்குமானுல் சர்வ சிங்கள மந்திரிசபை தொடர்ந்து அமைக்கப்படுமென்றும் அதை மாற்றுவதற்கு பிரித்தானியர் கபிநெற் ஆட்சி முறையைப் போன்ற ஒரு மந்திரி சபையைச் சிறிது மாற்றங்களுடன் இலங்கையிலும் புகுத்துவது நலம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அரசியல், பொருளாதாரம், சமூகநலன் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கட்சி ஆட்சிமுறையை நிர்வாகசபை ஆட்சிமுறை தடைப்படுத்திற்று. இதற்கொரு காரணம் தனிப்பட்ட அங்கத்தவருக்கு ஒப்புயர்வற்ற ஒரு தனி அந்தஸ்தை நிர்வாகசபை ஆட்சிமுறை வழங்கியமை. கட்சி ஆட்சி முறையில் அமைக்கப்பட்ட கபிநெற் நிர்வாகம் தனிப்பட்ட அங்கத்தவர்களுக்கு விசேட அந்தஸ்துக் கொடுக்க மாட்டாது. வாக்கெடுப்பென்னும் சக்கரத்தில் அவரும் ஒரு பகுதியாகவே சுழன்று கொண்டிருப்பார். ஆனுல், நிர்வாகசபை ஆட்சியில் மந்திரிகளைத் தெரிந்தெடுக்கும் பொறுப்புத் தனிப்பட்ட அங்கத்தவருக்குண்டு. அந்த மந்திரியும் நிர்வாக சபைக்கன்றி வேறெருவருக்கும் பொறுப்புடையவரன்று. அவர் பலமற்றவராயிருந்தால் நிர்வாக சபையின் சொற்படி நடப்பார். அப்படியின்றி அவர் திட சித்தமும் ஊக்கமும் உடையவராயிருந்தால் தம் சொற்படி நிர்வாக சபையை நடத்துவர். எல்லாம் மந்திரியின் தனிப்பட்ட திறமையிற் தங்கியிருக்கும். மற்ற மந்திரிகளைக் கண்காணித்து அவர்களைக் கொண்டு நடத்தக்கூடிய ஒரு முதல் மந்திரிக்கு டொனமூர்த் திட்டத்தில் இடமில்லை. பாராளுமன்ற ஆட்சிமுறையில் கபிநெற் சபையானது ஒன்று சேர்ந்து பிரிவின்றிப் பொறுப்புடையதொரு தாபனமாகும். ஆனுல் இந்த வகையில் மந்திரிசபை கூட்டாகப் பொறுப்புடையதன்று. வருடாந்த வரவு செலவுத் திட்டம் சம்பந்தப்பட்ட வரையில் மாத்

திரமே அது கூட்டுப் பொறுப்புடையதாகும். இங்கேயும் 1938-ம் ஆண்டில் தேசாதிபதி கோல்டிகொற் அவரது பிரசித்திபெற்ற அறிக்கையிற் குறிப்பிட்டவாறு ''மந்திரிசபை வரவு செலவுத் திட்டத்தில் நீலப் பென்சிலால் அங்குமிங்கும் சில மாற்றங்களைச் செய்தார்களேயன்றி அதை அமைக்கும் பொறுப்பு அவர்களுக்கு இருக்கவில்லை. இதன் பயனாக நாட்டின் பொருளாதாரத்தில் பலதுறைப்பட்ட வளர்ச்சியொன்றும் உண்டாகவில்லை. திறமை வாய்ந்த மந்திரிகள் தமது திட்டங்களை முன்னேறச் செய்தார்கள். திறமையற்றவர்கள் செயலற்றிருந்தனர். இம் மந்திரிகள் அரசியற் கொள்கைகளுக்காகத் 'தெரிவுசெய்யப்பட்டவர்களல்லர். நிர்வாக சபையிலுள்ள பல அங்கத்தவர்கள் வாக்குகளைப் பெற்று மந்திரி பதவிக்குவந்தவர்களாவர். அவர்கள் எந்த இலாக்காக்களுக்குப் பொறுப்புடையவர்களாயிருந்தார்களோ அந்த இலாக்காக்களடைந்த வெற்றியே அவர்களுக்குப் புகழையுண்டாக்கிற்று. இங்கேயும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளாமல் தப்புவதற்கு அவர்களுக்குச் சந்தர்ப்பம் இருந்தது. சில மந்திரிகள் தமது விருப்பத்திற்கு மாறாகவே தங்கீழுள்ள நிர்வாக சபைகள் கொண்டுவந்த திட்டங்களை ஆதரித்தனர். அதனால் அவற்றை அமுல் நடத்துவதில் அவர்கள் அக்கறை கொள்ளவில்லை. திட்டங்கள் நல்ல பலனைக்கொடாவிட்டால் அதை நிர்வகித்த அரசாங்க அதிகாரியைப் பகிரங்கமாகக் கண்டிக்கவும் தலைப்பட்டனர். இவ்வாறே அரசாங்கக் கொள்கையானது தொடர்புபடுத்தப்பட்டோ திட்டஞ் செய்யப்பட்டோ இருக்கவில்லை. ஊக்கமுள்ள மந்திரிகள் தமது திட்டங்களை உற்சாகத்தோடு நடைமுறைக்குக் கொண்டு வந்தனர். ஊக்கமற்றவர்கள் வாளா விருந்தனர். இதனால் நாட்டின் பொது நன்மைக்கு அனுகூலமான சில சமூக திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர முயற்சியெடுக்கப்படவில்லை. எனவே, நாடு சில துறைகளில் முன்னேற்றமடைந்தும் வேறு பல துறைகளில் முன்னேற்றமடையாமலுமிருந்தது.

மூன்று அரசாங்க அதிகாரிகளின் நிலைமையும் தேசாதிபதியின் விசேட அதிகாரங்களும் அதிக குழப்பத்தை யுண்டாக்கின. அரசியல் திட்டத்திலுள்ள இரட்டை ஆட்சியின் அமிசங்கள் இவையே. மந்திரிசபை, கண்டபடி சட்டங்களைச் செய்யாமற் கட்டுப்படுத்துவது இம் மூன்று அரசாங்க அதிகாரிகளின் கடமையாகக் கருதப்பட்டது. இவர்களுக்கு எவ்வித பொறுப்பும் கிடையாது. தம்மளவில் சுதந்திரமுடையவர்களாக விருந்தார்கள். மந்திரிகள் போடும் திட்டங்களைப் பணக்காரியதரிசி நுணுக்கமாக ஆராய்ந்து மட்டுப்படுத்தி வந்ததால் அத்திட்டங்களுக்குத் தடையேற்பட்டது. அப்படியிருந்தும் பணக்காரியதரிசி சட்டசபைக்கோ

வாக்காளருக்கோ பொறுப்புடையவராக இருக்கவில்லை. பிரதம காரியதரிசி அரசாங்க அதிகாரிகளுக்குத் தலைவராயிருந்தார். மந்திரிகள் வகுக்குந் திட்டங்களையும் அனுசரிக்கும் கொள்கைகளையும் நிறைவேற்றப் பிரதம காரியதரிசி நியமிப்போரையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. நாட்டின் நீதி பரிபாலனம் சட்டக்காரியதரிசி கையிலிருந்தது. மந்திரி சபை வகுக்கும் சட்டங்களை நிறுத்துவதற்குத் தேசாதிபதிக்கு விசேட அதிகாரங்கள் இருந்தன. இதனுல் அவர்கள் தாங்கள் நினைத்தவாறு சட்டமியற்றமுடியாதிருந்தது. ஒரு புறத்தில் தனிப்பட்ட அங்கத்தவர்கள் மந்திரிசபையைக் கடிந்தனர். மற்றொரு புறத்தில் தேசாதிபதியும் அரசாங்க அதிகாரிகளும் அவர்கள் விருப்பப்படி காரியங்களைச் செய்யாது தடுத்தனர். இந்த நிலையில் மந்திரி சபை செயலற்றுச் சும்மாவிருக்கும் அவஸ்தையை அடையாதிருந்தது ஆச்சரியமே. இதற்குக் காரணம் அவர்களுடைய அரசியற் திறமையும் சட்டசபை அங்கத்தவர்களைச் சமாளிக்கும் சாமர்த்தியமுமேயாகும். அன்றியும் தேசாதிபதியும் அரசாங்க அதிகாரிகளும் மந்திரி சபை மீது அனுதாபங் காட்டிப் பொறுமையுடன் அவர்களுடைய சட்டசபை முயற்சிகளைக் கவனித்து ஒத்துழைத்தமையும் மற்றொரு காரணமாகும். அதனுல் அவர்கள் தமது நாளாந்தக் கடமைகளை ஒருவாறு செய்து முடிக்கக் கூடியதாயிருந்தது.

## கோல்டிகொற் தேசாதிபதியின் அரசியற் சீர்திருத்த அறிக்கை :

அரசியற் திட்டத்திலுள்ள பெரும் குறைகளைப் பற்றியும் அவற்றின் பயனுக அதைச் சரிவர நடைமுறைக்குக் கொண்டு வர முடியாத தன்மையைப் பற்றியும் எல்லா வகுப்புச் சமூகத்தவரிடையும் நிலவிவந்த மனக் கசப்பைப்பற்றிப் பிரித்தானிய குடியேற்ற நாட்டதிகாரிகள் நன்கறிந்திருந்தார்கள். சிறுபான்மைச் சமூகத்தவர் பெரிதும் மனங் கோணியிருந்தார்கள். பெரும்பான்மைச் சமூகத் தலைவர்கள் கோபங்கொண்டனர். அரசாங்க ஊழியர்களிடையிலும் மனச்சோர்வு உண்டாகியது. பிரித்தானிய குடியேற்ற நாட்டு மந்திரியாயிருந்த திரு. ஒம்ஸ்பிகோர் என்பவர் 1937-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கைத் தேசாதிபதி சேர் அன்ட்ரூ கோல்டிகொற்றுக்கு ஒரு கடிதமனுப்பினர். அதில் நாட்டின் அரசியல் நிலைமையை ஆராய்ந்து நடைமுறையிலிருந்த அரசியற் திட்டத்தை நன்கு நிர்வகிக்கவும், சனங்களின் விருப்பங்களை ஓரளவுக்கு நிறைவேற்றவும் கூடிய சில சீர்திருத்தங்களைச் செய்யுமாறு தேசாதிபதியைக் கேட்டிருந்தார். (அ) தேசாதி

பதியின் விசேட அதிகாரங்கள் நன்கு தெளிவுபடுத்த வேண்டுமென அவர் விரும்பியதுடன் (ஆ) நிர்வாக சபைகள், அரசாங்க சபை (இ) சிறுபான்மைச் சமூகம், அவர்களுடைய பிரதிநிதித்துவம் (ஈ) வாக்குரிமை என்பவற்றைப் பற்றியும் அறிவிக்குமாறு வேண்டினர்.

தேசாதிபதி கோல்டிகொற் இலங்கையிலுள்ள பல்வேறு சமூகத்தவரையும் கலந்தாலோசித்த பின் தமது பதிலைக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பினர். இதுவே 1938-ம் ஆண்டின் அரசியற் சீர்திருத்த அறிக்கையெனப் பெயர் பெற்றது. இதில் அவர் நிர்வாக சபை ஆட்சி முறையினல் உண்டாகும் பெருந் தீமைகளைப் பற்றியும் அதன் பயனாக அரசியல் வாழ்வில் உண்டான கெடுதிகளைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். நிர்வாக சபை ஆட்சி முறையை ஒழித்து மூன்று அரசாங்க அதிகாரிகளையும் நீக்கி ஒருவகையான மந்திரிசபை ஆட்சி முறையை ஏற்படுத்திச் சிறுபான்மைச் சமூகத்தவரின் நலவுரிமைகளைப் பாதுகாக்கவுஞ் சட்டஞ் செய்யவேண்டுமென விரும்பினர். மூன்று அதிகாரிகளின் கடமைகளிற் சிலவற்றைப் பொறுப்புள்ள மந்திரிகள் வசம் விட்டுவிட வேண்டுமென்றும் வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு போன்ற விடயங்கள் மந்திரி அந்தஸ்தில்லாத ஒரு அதிகாரி கையில் விடப்படவேண்டுமென்றும் அவர் தேசாதிபதியின் பிரதம காரியதரிசியென அழைக்கப்பட வேண்டுமென்றும் அரசாங்க சேவைக் குழுவின் தலைவராக அவரே கடமைபுரிய வேண்டுமென்றும் சிபார்சு செய்தார்.

நிதிக்காரியதரிசியின் கடமைகளிற் சிலவற்றை அரசாங்க சேவைக்குழுவின் கையில் ஒப்படைக்க வேண்டுமென்றும் வேறு சிலவற்றை நிதி மந்திரியின் கையில் விட்டுவிட வேண்டுமென்றும் குறிப்பிட்டார். மிக முக்கியமான பண விடயங்கள் பற்றி விசேட ஆலோசனை கூறுவதற்கு நிதி ஆலோசகர் ஒருவரை நியமிக்க வேண்டுமெனவும் விரும்பினர்.

நீதி பரிபாலனத் துறையில் சட்டக் காரியதரிசியின் கடமைகள் சிலவற்றை உள்நாட்டு மந்திரி கையில் விட்டுவிட வேண்டுமென்றும் இராச கருணை சம்பந்தமாகத் தேசாதிபதிக்கு நேரடியாக ஆலோசனை கூறுதல், நிறைவேற்றப்பட்ட சட்டத்துக்கு அங்கீகாரமளித்தல், நீதிபதிகளை நியமித்தல் போன்ற விடயங்கள் சட்ட ஆலோசகர் ஒருவர் கையில் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் தேசாதிபதி குறிப்பிட்டார்.

பிரதம காரியதரிசியையும் மேலே கூறிய இரண்டு ஆலோசகரையும் தேசாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்களையும் உறுப்பினராகக் கொண்ட ஒரு அரசாங்க சேவைக் குழு நியமிக்கவும் சிபார்சு செய்யப்பட்டது. மாமூலான விவகாரங்களை இக் குழு கவனிக்கும். ஒரு இலாக்காவின் தலைவர் அல்லது உபதலைவர் அல்லது மாகாண அதிபர் போன்ற அதிகாரிகளின் நியமனங்கள் அல்லது இடமாற்றங்கள் (கபினெற்) மந்திரி சபையின் அபிப்பிராயத்தை அறிவதற்காக அதற்குச் சமர்ப்பிக்கப்படும்.

சிறுபான்மைச் சமூகத்தவரின் பிரதிநிதித்துவம் சம்பந்தமாகச் சட்ட சபையில் பாதிப்பேர் சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாகவும், மற்றப் பாதிப்பேர் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவராகவுமிருக்க வேண்டுமெனக் கோரிய ஐம்பதுக் கைம்பது கொள்கையைத் தேசாதிபதி முற்றுக நிராகரித்தார். ஆனுல் சிறுபான்மையினருக்கு மேலும் அதிகப்படியான பிரதிநிதித்துவமிருக்க வேண்டுமென்பதை அவர் ஒப்புக்கொண்டு அவர்களுக்கு 10 அதிகப்படியான தானங்களைச் சிபார்சு செய்தார். ஐரோப்பியர்களுக்கும் பறங்கியருக்கும் பிரதிநிதித்துவம் பெருத வேறு வகுப்பினருக்கும் இடமளிப்பதற்காக எட்டுத் தானங்கள் சிபார்சு செய்யப்பட்டன.

தேசாதிபதியின் விசேட அதிகாரங்களை ஒரு போதும் எடுத்து விடக் கூடாதெனச் சேர். அன்ட்ரூ கோல்டிகொற் அழுத்தமாக வற்புறுத்தினுர். மற்றச் சீர்திருத்தச் சிபார்சுகளிலும் பார்க்க இந்த விடயம் பெரும்பான்மைச் சமூகத்துத் தலைவர்களுக்குப் பெரிய ஏமாற்றத்தை உண்டாக்கியது. டொனமூர் அரசியற் திட்டத்தினுல் உண்டான நோய்க்கு கோல்டிகொற் தேசாதிபதி கொடுத்த மருந்து குணப்படுத்தவில்லை. நோயாளி சிகிச்சை பெற மறுத்து விட்டார். பிரித்தானிய குடியேற்ற நாட்டதிகாரிகளும் நல்ல மாத்திரைகளைக் கொடுக்கப் பின்வாங்கினர். அரசாங்கசபை தேசாதிபதியின் சீர்திருத்த அறிக்கையை மிகவும் கடுமையாகக் கண்டித்தது. பல்வேறு நியாயங்களைக் கொண்டு பல்வேறு வகுப்பினரும் அதைக் கண்டித்தார்கள். ஈற்றில் தேசாதிபதி இலங்கையின் முக்கியமான வகுப்பினருடைய ஏகோபித்த சம்மதத்தைத் தமது சீர்திருத்த அறிக்கை பெறவில்லையென்று மேலதிகாரிகளுக்கு அறிவித்தார்.

## 1941-ம் ஆண்டிலும் 1943-ம் ஆண்டிலும் செய்த பிரகடனங்கள் :

இவ்விடயத்தில் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுப்பதற்குள் இரண்டாவது மகாயுத்தம் உண்டானது. அதனால் அரசியற் சீர் திருத்தப் பேச்சுகளுக்கு முற்றுப்புள்ளியிடப்பட்டது. அரசாங்க சபையின் சீவியகாலம் நீடிக்கப்பட்டது. நாட்டில் அரசியல் வட்டாரங்களிலுண்டான அதிருப்தியைப்பற்றிப் பிரித்தானிய அரசாங்கத்திற்கு அறிவிக்கப்பட்டது. 1941-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பிரித்தானிய அரசாங்கம் இலங்கை மந்திரி சபைக்கு ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்தது. (அ) அதில் அரசியல் திட்டத்தைச் சீர்திருத்தும் விடயம் மிக முக்கியமானதென்பதும் உடனே கவனிக்கப்பட வேண்டியதென்பதும் பிரித்தானிய அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. (ஆ) இவ்விடயத்தில் ஏகோபித்த அபிப்பிராயமில்லாதபடியால் இதனை ஒரு விசாரணைக் குழு ஆராய்ச்சி செய்யவேண்டும். அல்லது ஒரு மகாநாடு தீர்மானிக்கவேண்டும். (இ) யுத்தம் காரணமாக இதனை உடனே செய்வது முடியாததால் யுத்தம் முடிவடைந்ததும் தாமதமின்றி இது கவனிக்கப்படும் என்றெல்லாம் அவ்வறிக்கையில் உறுதி கூறப்பட்டது.

மந்திரிசபை இவ்வறிக்கை பற்றி அதிருப்தி தெரிவித்ததோடு விசாரணைக் குழுவை நியமிக்கும் யோசனையை அடியோடு நிராகரித்தது. நாட்டின் அரசியல் நிலைமையைச் சரிவர ஆராயாமலே தேசாதிபதி அறிக்கை சமர்ப்பித்தாரென்பதே இதற்குக் காரணமாகும். அரசியற் சீர்திருத்தம் பற்றியும் பிரித்தானிய குடியேற்ற நாட்டு அதிகாரிகள் ஒரு திட்டமான முடிவுக்கு வருவதற்காகவே அரசாங்க சபையின் சீவிய காலம் நீடிக்கப்பட்டதென்றும், ஆனால் 1941-ம் ஆண்டின் அரசியல் அறிக்கையின்படி அரசாங்க சபையின் ஆயுளை நீடிக்கவேண்டிய காரணமில்லையென்றும் மேலும் மந்திரி சபை எடுத்துக்காட்டிற்று.

1941-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இரண்டாவது மகாயுத்தத்தில் யப்பானும் ஈடுபடவே, குடியேற்ற நாட்டுக் காரியாலயம் தர்ம சங்கடமான ஒரு நிலையிலிருந்து தப்பியது. 1942-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் குடியேற்ற நாட்டு மந்திரியின் விருப்பப்படி இலங்கைத் தேசாதிபதி நாட்டில் நிலவிய நெருக்கடியான நிலைமையை உத்தேசித்து அரசாங்க சபையின் ஆயுளை மேலும் நீடிக்கவேண்டுமென அறிவித்தார். அரசியல் சீர்திருத்த விடயத்தையும் மகாயுத்தம் முடிந்த பின்னரே ஆலோசிக்க வேண்டிய அவசியமும் உண்டானது, இருந்தும் மந்திரிகள்

அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாகக் கிளர்ச்சி செய்து கொண்டே இருந்தனர். கிறிப்ஸ் விசாரணைக் குழு இந்தியாவுக்கு வந்த பொழுது சேர் ஸ்டாபோர்ட் கிறிப்ஸ் இலங்கைக்கும் வந்து விசாரணை நடத்த வேண்டுமென்றும் அது முடியாவிட்டால் இலங்கை அரசியற் தூதுக்கோஷ்டியொன்று அவரை இந்தியாவிற் கண்டு இலங்கைக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து கொடுக்கும் விடயத்தை அவருடன் விவாதிக்க வேண்டுமென்றும் பிரித்தானிய குடியேற்ற நாட்டு மந்திரிக்கு எடுத்துக் காட்டினர். சேர் ஸ்டாபோர்ட் கிறிப்ஸ் இலங்கைக்கு வருவது முடியாத காரியமென்றும் யுத்தம் முடிந்து வெற்றியுண்டானதும் இலங்கை அரசியற் சீர்திருத்த விடயம் உடனே கவனிக்கப்படுமென்றும் குடியேற்ற நாட்டு மந்திரி பதில் தெரிவித்தார். ஆனால் மந்திரிகள் அவ்வளவில் நிற்கவில்லை. இலங்கையில் யுத்த முயற்சி தொடர்ந்து நடைபெற வேண்டுமானால் அரசியற் சீர்திருத்தம்பற்றி ஒரு திட்டமான அறிக்கையைக் குடியேற்ற நாட்டு மந்திரி பிரகடனஞ் செய்ய வேண்டுமென மந்திரிகள் மீண்டும் வற்புறுத்தினர். இதன் பயனாக 1943-ம் ஆண்டு மே மாதம் 26-ந் திகதி பிரித்தானிய அரசாங்கம் ஓர் அறிக்கையைப் பிரகடனஞ் செய்தது. அதன் பிரகாரம் கீழ்க்காணும் விடயங்கள் வற்புறுத்தப்பட்டன :-

(அ) உள்நாட்டுக் குடிசன நிர்வாகத் துறையிலெல்லாம் பூரண சுதந்திரமுள்ளதும் பிரித்தானிய மன்னரின் கீழ் அடங்கியதுமான அரசியல் அந்தஸ்தை இலங்கைக்கு வழங்கும் முறையில் இலங்கை அரசியற் திட்டம் யுத்தம் முடிந்தபின் புனராலோசனை செய்யப்படும்.

(ஆ) இலங்கையின் பாதுகாப்பையும் வெளிநாட்டு விவகாரங்களையும் பிரித்தானிய அரசின் அதிகாரத்தின் கீழ் அதன் ஆலோசனைப்படி நடந்த ஒழுங்கு செய்யப்படும்.

(இ) தேசாதிபதியின் விசேட அதிகாரம் பின்வரும் விடயங்களையொட்டிய மசோதாக்கள் சம்பந்தமாக மாத்திரமே பிரயோகிக்கப்படும் :-

(1) மன்னர்பிரானின் சிறப்புரிமைக்குட்பட்ட விடயங்கள், இலங்கையில் வசியாத பிரித்தானிய பிரசைகளின் சொத்து, உரிமை சம்பந்தமான விடயங்கள் பிரித்தானிய பொது நல அரசுக்குட்பட்ட தேசங்கள்

சம்பந்தமான வியாபாரம், கப்பற் போக்குவரத்து.

(2) எந்தச் சாதியாருக்கோ சமயத்தாருக்கோ பாதகம் விளைக்கக்கூடியதாய் அவர்களுடைய பலத்த எதிர்ப்பை ஈட்டிய விடயங்கள்.

(3) நாணயம் சம்பந்தமான விடயங்கள்.

(ஈ) மற்றத் தேசங்களுடன் வியாபார உடன்படிக்கை செய்யும் விடயத்தில் அதிக தலையீடிருக்க மாட்டாது.

(உ) இவ்வறிக்கையின் பிரகாரம் ஒரு அரசியற். திட்டத்தை அமைக்கும் விடயம் யுத்தத்தின் வெற்றிகரமான முடிவைப் பொறுத்ததாகும். ஆனுல் அதற்கிடையில் இவ்வறிக்கையின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட விபரமான சீர்திருத்தச் சிபார்சுகளை மந்திரிகள் செய்யலாம். அதுவும் அரசாங்க சபையில் அங்கத்துவம் வகிக்கும் மூன்று அரசாங்க அதிகாரிகளையும் சபாநாயகரையும் அல்லது அவருக்குப் பதிலாகக் கடமையாற்றுபவரையும் தவிர்த்த ஏனைய அங்கத்தவர்களில் முக்காற் பங்கினருக்குத் திருப்தியளிக்கக்கூடிய சிபார்சுகளாயிருக்க வேண்டும்.

## மந்திரிகளின் நகல் திட்டம் :

மந்திரிகள் பிரித்தானிய அரசாங்கத்தின் இவ்வறிக்கையை ஏற்றுக்கொண்டு அதற்கு அவர்கள் எவ்வாறு பொருள் கொண்டார்களென்பதைக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அறிவித்துவிட்டு அதன்படி அரசியற் சீர்திருத்த நகற் திட்டமொன்றைத் தயார் செய்தனர். இது 1944-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் முடிவாக எழுதப்பட்டு அதன் பிரதியும் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு அனுப்பப்பட்டது. 1945-ம் ஆண்டின் இறுதியில் அரசாங்க சபையின் ஆயுள் முடிந்துவிடுமாதலால் தமது அரசியற் சீர்திருத்தச் சிபார்சுகளைக் குடியேற்ற நாட்டு மந்திரி உடனே ஆலோசனை செய்து புதிய அரசியற் திட்டத்தை வகுப்பதே சிறந்ததென்றும், அத்திட்டத்தின் கீழ் புதிய பொதுத் தேர்தல் நடத்துவதே உகந்த தென்றும் மந்திரிகள் எடுத்துக் கூறினர். இதற்கிடையில் சிறுபான்மை வகுப்பினர் தமது நலவுரிமைகளை மந்திரிகள் கவனிக்கவில்லை யென்று குறை கூறினர். இலங்கையிலுள்ள இந்திய மக்களின் தராதரத்தைப்பற்றி இந்திய அரசாங்க

மும் அச்சம் தெரிவித்தது. இவற்றையெல்லாம் பரிசீலனை செய்த பின் 1944-ம் ஆண்டு ஜுலை மாதம் பிரித்தானிய பாராளுமன்றத்தில் குடியேற்ற நாட்டு மந்திரி பின்வருமாறு தெரிவித்தார் :

> ''இலங்கை மந்திரிகள் நகற் திட்டத்தைச் சமர்ப்பித்துவிட்டார்கள். அதனை உடனே ஆலோசிக்குமாறும் கேட்டிருக்கின்றனர். அவர்களின் சிபார்சுகளை ஆலோசனை செய்வதற்கும், இலங்கையிலுள்ள பல்வேறு சமூகத்தவரையும் அரசியற் சீர்திருத்தம்பற்றி ஆலோசிப்பதற்காகவும் பிரித்தானிய அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை இலங்கைக்கு அனுப்பத் தீர்மானித்திருக்கிறது. மேலும் பொதுத் தேர்தலொன்றை ஏற்படுத்துவதனுல் இலங்கையின் யுத்த முயற்சி தடைப்படலாம். அவ்வாறு தடைபடாதிருப்பதற்காக இலங்கை அரசாங்க சபையின் ஆயுள் மேலும் இரண்டு வருட காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது.''

சிறுபான்மையினருட்படப் பல்வேறு வகுப்பினரின் ஆலோசனைகளைக் கேட்பதற்காக அரசியல் விசாரணைக் குழுவொன்றை நியமிப்பது அடாதென மந்திரிகள் வெகுண்டனர். 1943-ம் ஆண்டில் பிரித்தானியா. பிரகடனஞ் செய்த இலங்கை அரசியற் சீர்திருத்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மந்திரிகள் தமது சிபார்சுகளைச் செய்தார்களா இல்லையா என்று ஆராய்ச்சி செய்வது மாத்திரந்தான் விசாரணைக் குழுவின் கடமையாயிருக்கவேண்டும். சிறுபான்மைச் சமூகத்தவரின் கோரிக்கைகளைத் திருப்தி செய்யும் விடயம், தமது திட்டம் அரசாங்க சபை அங்கத்தவரில் முக்காற் பங்கினரின் அங்கீகாரத்தைப் பெற்றதும் தீர்ந்துவிடுமென மந்திரிகள் அபிப்பிராயப்பட்டனர். குடியேற்ற நாட்டு மந்திரி முன் கொடுத்த வாக்கை மீறிவிட்டாரென்றும் ஆனபடியால் தமது திட்டத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு விசாரணைக் குழுவைப் பகிஷ்கரிப்பதென்றும் மந்திரிகள் தீர்மானித்தனர்.

விசாரணைக்குழு இலங்கைக்கு வந்தது. மந்திரிகளின் நகற் திட்டத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு சிறுபான்மையினரின் அபிப்பிராயங்களையும் ஏனைய வகுப்பினரின் கருத்துக்களையும் விசாரிக்கத் தொடங்கிற்று. மந்திரிகளின் நகற் திட்டம் பின்வரும் சிபார்சுகளைச் செய்திருந்தது.

(1) நிர்வாக சபை ஆட்சியை நீக்கிவிட்டுப் பத்து மந்திரிகளைக்கொண்ட மந்திரி சபையை அமைத்தல். பிரதம மந்திரியை மகாதேசாதிபதி நியமித்தல்; மற்ற மந்திரி

களைப் பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி நியமித்தல்.

(2) பத்து மந்திரிகளுக்கும் உதவியாகப் பத்து உதவி மந்திரி களை நியமித்தல்.

(3) பிரதேச வாரியாகத் தெரிவு செய்யப்பட்ட 95 அங் கத்தவர்களையும் சிறுபான்மையினருக்கும் பிற்போக் கான பிரதேசங்களுக்கும் அதிகப்படியான பிரதிநிதித் துவமளிப்பதற்காக ஐந்து நியமன அங்கத்தவர்களையும் கொண்ட அரசாங்கசபை அமைத்தல். பிரதிநிதித்துவ விஷயத்தில் குடி சனத் தொகையையும் பிரதேச அமைப்பையும் ஆலோசனைக் கெடுத்துக் கொள்ளுதல், இலங்கைத் தமிழரும் முஸ்லீம்களும் குடிசனச் செறிவில் லாத இடங்களில் பிரிந்து வசிப்பதால் இத்தகைய பிரதி நிதித்துவம் அவர்களுக்கு அதிக வசதியைக் கொடுக்கு மெனக் கருதப்பட்டது.

இரண்டாவது சபையொன்றை அமைக்கும் விஷயம் அர சாங்க சபையினால் வருங்காலத்தில் தீர்மானிக்கப்பட வேண்டு மென விடப்பட்டது. இதனைத் தீர்மானிக்கும்பொழுது அர சாங்க சபையும் வாக்கை எடுத்து அதில் கூடிய பக்கத்துக்குக் கிடைக்கும் வாக்கின்படி தீர்மானிக்கப்பட வேண்டுமெனக் கரு தப்பட்டது.

(4) 1943-ம் ஆண்டின் அரசியற் பிரகடனத்தின்படி உள் நாட்டு நிர்வாக விடயத்தில் மகாதேசாதிபதிக்களிக்கப் பட்ட விசேட அதிகாரங்களைக் குறைத்தல். வெளி நாட்டு விவகாரத்திலும் பாதுகாப்பிலும் மகா தேசாதி பதிக்கு விசேட அதிகாரங்களிருந்தன.

(5) அரசாங்க சேவையும் நீதிபரிபாலன சேவையும் முறையே அரசாங்க சேவைக் குழுவின்கீழும் நீதி பரிபாலன சேவைக்குழுவின் கீழும் விடப்படல். மகா தேசாதிபதி பிரதம மந்திரியைக் கலந்தாலோசித்த பின்னர் பிரதம நீதியரசரையும், உயர்தர நீதிமன்றத்து நீதிபதிகளை யும் நியமித்தல். மகாதேசாதிபதி இவ்விடயத்தில் பிரதம மந்திரியின் யோசனைப்படி நடக்க வேண்டிய தில்லை.

## சோல்பரி விசாரணைக் குழுவும், பட்சபாதம் காட்டியதாகக் குறை கூறுதலும்

சோல்பரி விசாரணைக் குழு நாட்டிலுள்ள வகுப்புகளையும் சிறுபான்மைக் கட்சியினரையுங் கலந்து ஆலோசனை நடத்தினர். சிறுபான்மையினரிடத்துப் பெரும்பான்மையினர் பட்சபாதகமாக நடந்தனர் என்று கூறப்பட்ட குறையை விசாரணை செய்தனர். பின்வரும் விடயங்கள் பற்றிக் குறை கூறப்பட்டது.

(அ) அரசாங்க வருமானத்தைச் செலவுக்குப் பங்கீடு செய்யும் முறை.

(ஆ) அரசாங்க அதிகாரிகளின் நியமனங்கள்.

(இ) சட்டஞ் செய்யும் முறை.

(1) அரசாங்க வருமானப் பங்கீடு பற்றிக் கூறப்பட்ட பொழுது 1931-ம் ஆண்டு துவக்கம் 1943-ம் ஆண்டு வரை 115 இலட்சம் ரூபாய் பெரிய நீர்ப்பாசனவேலை களுக்குச் செலவு செய்யப்பட்டதென்றும் அதில் வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் 20 இலட்சம் ரூபாய் அதாவது 19 விகிதமே செலவு செய்யப்பட்ட தெனவும் எடுத்துக் காட்டப்பட்டது. மத்திய மாகாணத்திலும் வட மத்திய மாகாணத்திலுமே அதிக பணஞ் செலவு செய்யப்பட்டதாகவு மெடுத்துக் கூறப் பட்டது.

(2) சிறிய நீர்ப்பாசன வேலைகட்குச் செலவு செய்யப்பட்ட $32\frac{1}{2}$ இலட்சம் ரூபாயில் வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் 400,000 ரூபாயே செலவு செய்யப் பட்டதாகவும் இது $12\frac{1}{2}$ விகித மெனவும் எடுத்துரைக் கப்பட்டது.

(3) சிங்கள நாட்டிலுள்ள பெருங் காடுகளை வெட்டித் திருத்தியும் நீர்ப்பாசன வசதிகளைத் திருத்தியமைத் தும் முயற்சிகள் நடைபெற்றனவென்றும், வட மாகா ணமும் கிழக்கு மாகாணமும் புறக்கணிக்கப் பட்டன வென்றும் எடுத்துக் கூறப்பட்டது. வட மாகாணத்தி லும் கிழக்கு மாகாணத்திலும் உள்ள வயல் நிலங்க ளில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதை விட்டு விட்டு அரசாங்கம் வட மத்திய மாகாணத்திலும் வடமேல்

மாகாணத்திலுமுள்ள மலேரியாக் காடுகளை வெட்டித் திருத்துவதிற் பணத்தை வீண் விரயஞ் செய்ததென வும் கூறப்பட்டது.

விசாரணைக் குழுவினர் இக்குற்றச் சாட்டுகளை நம்பவில்லை. விவசாய வளர்ச்சிக்காக வட மாகாணத்துக்கும். கிழக்கு மாகா ணத்துக்கும் குறைவாகவே பணம் வழங்கப்பட்டதென்ற குற் றச் சாட்டை ஆராய்ந்த பொழுது 1931-ம் ஆண்டின் முன்னர் இவ்விரு மாகாணங்களும் மற்ற மாகாணங்களைவிட அதிக பணம் பெற்றன வென்றும், 1905-ம் ஆண்டு துவக்கம் 1931-ம் ஆண்டு வரை நீர்ப்பாசன விடயங்களுக்காகச் செலவு செய்த 300 இலட் சம் ரூபாவில் 100 இலட்சம் ரூபாவுக்கு மேல் இவ்விரு மாகா ணங்களிற் செலவு செய்யப்பட்டன வென்றும் மற்ற மாகாணங் கள் இதைச் சுட்டிக் காட்டி இவ்விரு மாகாணங்களுக்கும் விசேட சலுகை காட்டப் பட்டதென்று கூறுவதாகவும் எடுத்துக் காட் டப் பட்டது.

நீண்டகாலத் திட்டங்களுக்கு அதிகப் பணத்தை வீணகச் செலவு செய்தனர் என்ற குற்றச்சாட்டு ஆராயப்பட்டது. இந் நீண்டகாலத் திட்டங்கள் நல்ல பலனைக் கொடுத்து வருகின்றன வென்றும், குறுகிய காலத் திட்டமொன்று வகுத்து நெல் விளைவை அதிகரிக்கும் பிரச்சினை நீண்டகால விவசாய அபிவிருத்தித் திட் டத்தை ஆரம்பித்த பொழுது இருக்கவில்லை யென்றும் கண்ட னர். அப்பொழுது கிழக்கு நாடுகளில் யுத்தம் உண்டாகு மென்றோ பர்மாவிலிருந்து அரிசி இறக்குமதி தடைப்படு மென்றோ எதிர்பார்க்கப்படவில்லை யெனவுங் கூறப்பட்டது. வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் பெரிய நீர்ப்பா சனத் திட்டங்களையமைக்க மந்திரி திட்டம் போட்டிருக்கிறு ரென்றும், அதற்குத் தேவையான அதிகாரிகள் பயிற்சி பெற்று வந்ததும் அவை நடைமுறைக்குக் கொண்டு வரப்படு மெனவும் எடுத்துக் காட்டப்பட்டது. இலங்கை முழுவதற்கும் பொருத்தமான ஒரு விவசாய வளர்ச்சித் திட்டத்தை அமைக்க வேண்டுமே யொழியச் சில மாகாணங்களுக்குக் கூடிய சலுகையும் மற்ற மாகாணங்களுக்குக் குறைந்த சலுகையும் காட்டும் விவ சாய முயற்சியிருக்கக் கூடாதெனவும் மந்திரிகள் கூறிய அபிப் பிராயத்தை விசாரணைக் குழுவினர் அங்கீகரித்தனர்.

வைத்தியத்துறையிலும், கல்வித்துறையிலும் வடமாகாணமும் கிழக்கு மாகாணமும் புறக்கணிக்கப்பட்டதென்றும் ஏனைய சிங்கள மாகாணங்கள் விசேடமாகக் கவனிக்கப்பட்டன வென்றும் சிறு

பான்மைக் கட்சியினரின் தாபனமான தமிழ்க் காங்கிரசு எடுத்துக் காட்டிற்று. 1931-ம் ஆண்டு துவக்கம் 1945-ம் ஆண்டுவரை ஆஸ்பத்திரி, மருந்துச்சாலை என்பனகட்டுவதற்கு 120இலட்சம்ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியது. இதில் 10 இலட்சத்துக்குச் சிறிது அதிகமான தொகையே வடமாகாணத்திலும் கீழ் மாகாணத்திலுஞ் செலவு செய்யப்பட்டன. 1933-ம் ஆண்டு துவக்கம் 1942-ம் ஆண்டுவரை அரசாங்கத்தால் தாபிக்கப்பட்டோ உதவி செய்யப்பட்டோ வந்த பாடசாலைகளின் தொகை 4000க்குச் சற்று அதிகமாகும். இவற்றுள் 3000 பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகள். தமிழ்ப்பாடசாலைகள் 900 மாத்திரமே. இவ் விடயங்களிலும் தமிழருக்கு பட்சபாதம் நடந்ததாக விசாரணைக் குழுவினர் ஒத்துக்கொள்ளவில்லை. அமெரிக்க மிஷனரி சங்கம் போன்ற வெளிநாட்டுக் கிறிஸ்தவ சங்கங்கள் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்கனவே போதிய பாடசாலைகளை ஆரம்பித்துக் கல்வியை விருத்தி செய்து வந்தார்களென்றும் பிற்போக்கான சிங்களப் பிரதேசங்களின் தேவைகளை உடனே கவனிப்பதற்காகவே அரசாங்கம் அப்பகுதிகளில் விவசாய விருத்திக்காகவும் ஆஸ்பத்திரி கட்டுவதற்காகவும் அதிக பணத்தைச் செலவு செய்ததேயன்றித் தமிழருக்குப் பட்சபாதமாக அவ்வாறு செய்யவில்லையென விசாரணைக் குழுவினர் கருதினர். கல்வித் துறையில் இதுவரையிற் பிற்போக்கடைந்திருந்த முஸ்லீம் வகுப்பினரின் கல்வி வளர்ச்சிக்காகக் கல்வி மந்திரி செய்த முயற்சிகள் தம்மைப் பெரிதும் கவர்ந்து விட்டதாக விசாரணைக் குழுவினர் கருதினர்.

அரசாங்க சேவைக்கு ஆட்களை நியமிக்கும் விடயத்தில் தமிழர் பட்சபாதமாக நடத்தப்படுகிறூர்களென்ற குற்றச்சாட்டு ஆராயப்பட்டது. அரசாங்க சேவையில் இலங்கைத் தமிழர் பெருவாரியாக உத்தியோகங்களை வகித்து வந்தனரென்றும், 1931-ம் ஆண்டு துவக்கம் இந்த நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கம் பல உபாயங்களைக் கையாண்டதென்றும், பரீட்சைப் பாடவிதானங்களைச் சற்றே மாற்றியதென்றும், அரசாங்க சேவையிற் சேரும் நிபந்தனைகள் இந்நோக்கத்தோடு மாற்றப்பட்டனவென்றும், சாட்சியமளித்த தமிழ்ப் பிரதிநிதிகள் விசாரணைக் குழுவுக்கு எடுத்துக் காட்டினர். இந்தக் குற்றச் சாட்டில் ஓரளவு உண்மையிருந்தபோதிலும், சிங்கள அரசின் திட்டமான கொள்கையினாலே தமிழருக்குப் பதிலாகச் சிங்களவர் நியமிக்கப்படுகிறூர்களென உறுதிப்படுத்த முடியாதெனவும் விசாரணைக் குழு அபிப்பிராயப் பட்டது. இலங்கைத் தமிழர் வகித்த உத்தியோகங்களைச் சிங்களவர் வகிக்க வேண்டி வந்ததற்குக் காரணம் சிங்களப் பகுதிகளில் கல்வி வளர்ச்சியடைந்த

மையே யெனவுங் கருதப்பட்டது. அரசாங்க இலிகிதர்கள் நியமனமானது அரசாங்க சேவைக்குழு என்ற தாபனத்தின் பொறுப்பில் விடப்படுமானுல் சிறுபான்மையினர் பயப்படக் காரணமில்லையெனவும் விசாரணைக் குழு கூறிற்று.

சிறுபான்மைச் சமூகத்தவருக்கு எதிராக நிறைவேற்றப் பட்ட சில சட்டங்களுக்கு உதாரணமாகப் பின்வருவன் எடுத்துக் காட்டப்பட்டன:-

1931-ம் ஆண்டின் பௌத்த அற நிலையப் பாதுகாப்புச் சட்டம், 1942-ம் ஆண்டின் அனுராதபுரிப் பாதுகாப்புச் சட்டம், 1940-ம் ஆண்டின் 24-ம் இல. மீன் பிடித் தொழிற் சட்டம், 1942-ம் ஆண்டின் 47-ம் இல. மோட்டார் பஸ் அனுமதிச்சீட்டு வழங்கும் சட்டம். பௌத்த அற நிலையப் பாதுகாப்புச் சட்டம், பௌத்தர்களின் நன்மையைக் கருதியே இயற்றப் பட்டது. இலங்கையின் குடிசனத் தொகையில் அவர்கள் ஒரு பகுதியினரானபடியால் அரசாங்க வருமானத்தைக் கொண்டு அதை நிர்வகிப்பது பட்சபாதமானதாகுமென்று சிறுபான்மைச் சமூகத்தினர் எடுத்துக் காட்டினர், இது பெரும்பான்மைச் சமூகத்தவருக்குக் காட்டப்படும் ஒரு சலுகை யென்பதை விசாரணைக் குழுவினர் ஒப்புக் கொண்டனர். மீன்பிடித் தொழிற் சட்ட விடயத்திலும் இலங்கையரல்லாதார் அல்லது இலங்கையரல்லாதாரால் நடத்தப் படும் வணிக நிலையத்தவர் அனுமதிச் சீட்டின்றி இலங்கைக் கடலில் மீன் பிடிக்கக் கூடாதெனத் தடை செய்யும் மீன்பிடித் தொழிற் சட்டமும் சிறுபான்மையினருக்குப் பாதகமானதெனக் கருதினர். அவ்வாறே மோட்டார் பஸ் சட்ட விடயத்திலும் பஸ் போக்குவரத்து நடத்தும் வணிக நிலையங்கள் தமது மூலதனத்தில் 85 வீதம் இலங்கையருடைய மூலதனமில்லாவிட்டால் அனுமதிச்சீட்டு வழங்கப்பட மாட்டாதென விதிக்கப்பட்டமை சிறுபான்மையினருக்குப் பாதகமானதென விசாரணைக் குழுவினரால் ஒப்புக் கொள்ளப்பட்டது, அனுராதபுரப் பாதுகாப்புச் சட்ட விடயத்தில் விசாரணைக் குழுவினர் சிறுபான்மை வகுப்பினரின் குற்றச்சாட்டை ஒப்புக்கொள்ளவில்லை அனுராதபுர நகரம் புராதனமான பழைய நகரமானபடியால். தொல் பொருள் 'ஆராய்ச்சி நிலையத்தார் அதனைப் பாதுகாக்கும் நோக்கமாகச் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதாயிற்று. எனவே, புதியதொரு நகரத்தை அமைக்கத் திட்டம் போடப்பட்டது. பழைய நகரப் பிரதேசத்தில் முஸ்லீம்களும் தமிழரும் சொத்துடையவர்களாயிருந்தார்கள். ஆனுல் அரசாங்

கத்தின் கொள்கை பழைய நகரத்தைப் பாதுகாப்பதன்றித் தமிழரையோ முஸ்லீம்களையோ பாதிப்பதல்ல வென்று விசாரணைக் குழுவினர் அபிப்பிராயப் பட்டனர்.

ஒரு பக்கத்தையும் சாராத பிரித்தானிய ஆட்சியாளர் கையிலிருந்த அதிகாரத்தை இலங்கை மக்களிடம் ஒப்படைக்கப்போகும் சமயத்தில், சிறுபான்மைச் சமூகத்தினரிடையே பயமும் சமுசயமும் இருந்து வருவதை விசாரணைக் குழுவினர் ஒப்புக் கொண்டனர். ஆனால், பொதுவாகப் பார்க்குமிடத்து சிறுபான்மையினரை நீதியீனமாக நடத்தும் கொள்கை அரசாங்கத்திடமிருக்கிற தென்பதை உறுதிப்படுத்தப் போதிய ஆதாரங்களில்லையென்றும், பெரும்பான்மையினரின் நன்மைக்கும் தேசத்தின் பொதுநன்மைக்கும் சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்துவது அவசியமென்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிற தென்றும் அதை உறுதிப்படுத்த, அரசாங்கத்தின் வாக்குறுதியைத் தாம் ஏற்றுக் கொள்கின்றனரென்றும் விசாரணைக் குழுவினர் எடுத்துக் காட்டினர். இருந்தும், சிறுபான்மையினரின் அச்சத்தை நீக்குவதற்காகப் புதிய அரசியற் திட்டத்தில் சில பாதுகாப்புகளை அவர்கள் சிபாரிசு செய்தனர்.

## சோல்பரி அரசியற் திட்டம்

சோல்பரி விசாரணைக் குழுவினர் சிறுபான்மையோரின் நலவுரிமைகளைக் காப்பதற்காகக் கீழ்க்கண்ட வகையில் பாதுகாப்புகளைச் சிபாரிசு செய்தனர்.

(அ) அரசாங்கப் பிரதிநிதித்துவம்.

(ஆ) இரண்டாவது சபையை அமைத்தல்.

(இ) அரசியல் சம்பந்தமில்லாத அரசாங்க சேவைக் குழுவையும், நீதிபரிபாலனக் குழுவையும் நியமித்தல்.

(ஈ) தேசாதிபதியின் விசேட அதிகாரம்.

### பிரதிநிதித்துவம்

முதற் சபையான பாராளுமன்றத்தின் அங்கத்துவம் அதிகரிக்கப்பட்டது. பழைய அரசாங்க சபையில் 61 அங்கத்தவர் இருந்தனர். புதிய பாராளுமன்றத்தில் 101 அங்கத்தவருக்கு அங்கத்துவமளிக்கப்பட்டது. இவர்களில் 95 பேர் தேர்தல் மூலமாகவும் 6 பேர் நியமன மூலமாகவும் இடம் பெறுவர். எந்த நலவுரிமை

களுக்குப் பிரதிநிதித்துவமில்லையோ அவற்றின் சார்பாக அந்த 6 அங்கத்தவரையும் மகா தேசாதிபதி நியமிப்பார். சிறுபான்மை வகுப்பினருக்கும் பிற்போக்கான பகுதிகளுக்கும் போதிய பிரதிநிதித்துவமளிப்பதற்காகவே பாராளுமன்றத்தின் அங்கத்தவர் தொகை அதிகரிக்கப்பட்டது. இப்பிரதிநிதித்துவத்தை நிச்சயிப்பதற்கு மகாதேசாதிபதி தன்னுடைய உசிதப்படி தேர்தற் தொகுதி நிர்ணயக் குழுவை நியமிப்பார். குடிசன மதிப்பு அவ்வப்போது கணிக்கப்படும் காலங்களில் அது முடிந்து ஒரு வருடத்திற்குள் இக்குழு நியமிக்கப்படும். அரசியலில் பங்கு பற்றாத மூன்றுபேர் இக்குழுவின் அங்கத்தினராவர். மந்திரிகள் முன்னர் சமர்ப்பித்த நகல் திட்டத்தின் 13-வது விதியின் 2-ம், 3-ம் உப விதிகளின் பிரகாரம் இக்குழுவினர் ஒவ்வொரு மாகாணத்தையும் பலவேறு தேர்தற் தொகுதிகளாகப் பிரிப்பார்கள். மந்திரிகளின் நகல் திட்டத்திற் கண்ட 13-வது விதியின் 2-ம், 3-ம் உப விதிகள் பின்வருமாறு :-

> "1931-ம் ஆண்டின் குடிசன மதிப்புப் பிரகாரம் ஒவ்வொரு மாகாணத்திலும் வசிக்கும் 75,000 சனங்களுக்கு ஒரு தேர்தற் தொகுதியாக தேர்தற் தொகுதிகள் பிரிக்கப்படும். அதனோடு பரப்பு வாரியாக 1000 சதுர மைலுக்கு ஒரு தேர்தற் தொகுதி வீதம் பின்வருமாறு ஒவ்வொரு மாகாணத்திற்கும் மேலதிகமான தேர்தற் தொகுதிகள் ஒதுக்கப்படும் :-

| | |
|---|---|
| மேல் மாகாணம் ... ... ... | 1 |
| மத்திய மாகாணம் ... ... ... | 2 |
| தென் மாகாணம் ... ... ... | 2 |
| வட மாகாணம் ... ... ... | 4 |
| கிழக்கு மாகாணம் ... ... ... | 4 |
| வடமேல் மாகாணம் ... ... | 3 |
| வடமத்திய மாகாணம் ... ... | 4 |
| ஊவா மாகாணம் ... ... | 3 |
| சப்ரகமுவ மாகாணம் ... ... | 2 |

ஒரு மாகாணத்தைத் தேர்தற் றொகுதிகளாகப் பிரிக்கும் பொழுது, ஒவ்வொரு தேர்தற் றொகுதியிலும், ஏறக்குறைய சமதொகையான குடிசனங்கள் இருக்கக்கூடிய வகையில் அவற்றைப் பிரிப்பார்கள். அத்துடன் அம்மாகாணத்தில் போக்குவரத்து வசதிகள், இயற்கை அமைப்புகள் என்பவற்றையும் அங்கு வசிப்போரின் ஒற்றுமை வேற்றுமைகளையும் கவனிப்பார்கள்.

சுருக்கமாகக் கூறுவதானல் ஒவ்வொரு மாகாணத்திலும் வசிக்கும் 75,000 குடிசனங்களுக்கு ஒரு பிரதிநிதியும் ஒவ்வொரு 1000 சதுர மைலுக்கு அதற்கு அதிகப்படியாக ஒரு பிரதிநிதியும் இடம் பெற வேண்டுமென்பதே மந்திரிகளின் நகல் திட்டத்திற் காணப்பட்ட யோசனையாகும்.

தேர்தற் தொகுதிகளுக்கு எல்லை வகுக்கும் பொழுது போக்குவரத்து வசதிகள், இயற்கையமைப்புகள் என்பவற்ருேடு குடிசனங்களின் ஒற்றுமை வேற்றுமைகளையும் தேர்தல் தொகுதி நிர்ணயசபை கவனிக்கவேண்டுமென்றும், மேலும் ஒரு தொகுதியில் வசிக்கும் பெரும்பான்மைச் சமூகத்தவருடன் சாதியால் அல்லது சமயத்தால் அல்லது வேறு வகையினுல் மாறுபடும் சமூகத்தினர் மிக நெருங்கியுள்ள இடங்களில் அச்சமூகத்தவருக்கென ஒரு தனிப்பட்ட தேர்தற் தொகுதியைத் தொகுதி நிர்ணயச் சபை தமக்கு உசிதமெனக் கண்டால் அமைக்கலாமென்றும் சோல்பரி விசாரணைக் குழு அதிகாரம் வழங்கிற்று. இவ்விடயத்தில் தொகுதி நிர்ணயக்குழு அத்தொகுதியில் சனத்தொகை சம்பந்தமான ஒற்றுமையைக் கடுமையாகப் பார்க்க வேண்டிய அவசியமில்லை யெனவும் விதிக்கப்பட்டது. குறித்த சமூகத்தவரின் பிரதிநிதி பாராளுமன்றத்தில் இடம் பெறுவதற்கு இயலுமானவரை வசதியளிப்பதே முக்கிய நோக்கமாயிருக்க வேண்டும்.

பொருத்தமான இடங்களில் பல அங்கத்தவர் தொகுதிகளை வகுக்கலாமெனவும் சோல்பரி விசாரணைக்குழு சிபாரிசு செய்தது. இதன் பயனுகச் சிறுபான்மைச் சமூகத்தவர் தமது வாக்குகளைத் தங்கள் சொந்தப் பிரதிநிதிக்கு வழங்கி அவரைப் பாராளுமன்றத்துக்கு அனுப்பக்கூடியதாயிருக்கும்.

பாராளுமன்றத்துக்கு நியமன அங்கத்தவரை நியமிக்கும் விடயத்தில் மகாதேசாதிபதி தமது உசிதப்படி ஆறுபேரை நியமிக்கலாம். இதற்குப் பிரதம மந்திரியின் ஆலோசனையையோ வேறெவரின் ஆலோசனையையோ அவர் கேட்கவேண்டிய அவசியமில்லை.

### பிரதிநிதிகள் சபை

சிறுபான்மையினரின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதற்காக 30 அங்கத்தவரைக் கொண்ட ஒரு மேல் சபையும் ஏற்படுத்தப்பட்டது. இதனை இரண்டாவது சபையெனவும் கூறுவர். இதில் அங்கம் வகிக்கும் 30 பேரில் 15 பேர் முதற்சபையான பிரதிநிதிகள் சபை (அதாவது பாராளுமன்ற) அங்கத்த

வராற் தெரிந்தெடுக்கப்படுவர். தனித்த மாற்ற வாக்குரிமை யின்படி (Single Transferrable Vote) விகிதாசாரப் பிரதிநிதித் துவ முறைப் பிரகாரம் இத் தேர்தல் நடைபெறும். மற்றப் பதி னைந்து அங்கத்தவரை மகாதேசாதிபதி தமது உசிதப்படி நியமிப் பார். சிறுபான்மையினரின் நலவுரிமைகட்கு மேலும் சில வகை யான பிரதிநிதித்துவத்தை மேற்சபை உதவும். மூதற்சபை கொண்டுவரும் தீர்மானங்களை மேற்சபை ஆராய்ந்து ஒரு வகை யான மிதமான நிலைமையை உண்டாக்கும். பண விடய மான மசோதாக்களை மேற்சபை கொண்டுவர முடியாது. கீழ்ச்சபையில் நிறைவேறிய பண மசோதாக்களை மேற்சபை முப்பது நாட்களுக்கு மேல் தாமதஞ் செய்யவும் முடியாது. சாதா ரணமான சட்ட நிருபண விடயங்களிற் கீழ்ச்சபை நிறைவேற்றி யனுப்பிய பிரேரணையை மேற்சபை இரண்டு முறையும் நிராகரிக்கு மானால் இரண்டாவது முறை நிராகரிக்கப்பட்டதும் அப்பிரேரணை இரு சபையினாலும் நிறைவேற்றப்பட்டதாக எடுத்துக்கொள்ளப் படும். மேற் சபையிலிருந்து நீதிமந்திரியும் மற்றொரு மந்திரியும் நியமிக்கப்பட வேண்டுமென்றும், இரண்டு பாராளுமன்றக் காரிய தரிசிகளும் நியமிக்கப்பட வேண்டுமென்றும், அரசியற்றிட்டத்தில் விதிக்கப்பட்டது.

## அரசாங்க சேவை

அரசாங்க சேவைக்கும் நீதிபரிபாலன சேவைக்கும் ஊழி யரைப் பட்சபாதமின்றி நியமிப்பதற்காக (அ) அரசாங்க சேவைக்குழு எனவும் (ஆ) நீதிபரிபாலன சேவைக்குழு வெனவும் இரு தாபனங்கள் நிறுவப்பட்டன. இவற்றில் அரசாங்க சேவைக்குழு மூன்று அங்கத்தவரையுடையது. அவ் அங்கத் வர்கள் மகா தேசாதிபதியின் விருப்பப்படி நியமிக்கப்படுவர். அரசாங்க சேவைக்கு ஊழியரை நியமித்தல், பதவி உயர்த்துதல், இடம் மாற்றுதல், வேலை நீக்கஞ் செய்தல், ஒழுங்கை நிலை நாட்டுதல் போன்ற விடயங்களெல்லாம் அக்குழு வின் மேற்பார்வையிலடங்கும். நீதி பரிபாலன சேவைக்குழுவும் தேசாதிபதியினால் நியமிக்கப்பட்ட மூன்று அங்கத்தவரைக் கொண்டதாயிருக்கும். இவர்களில் தலைவராயிருப்பவர் பிரதம நீதியரசர். மற்றிருவரும் நீதிபதிகளாயிருப்பர். இவர்களில் ஒருவர் ஓய்வு பெற்ற நீதிபதியாயிருக்கலாம். இக்குழு உயர்தர நீதிமன்ற நீதிபதிகளைத் தவிர்ந்த மற்றைய நீதிபதிகளின் நிய மனம், இடமாற்றம், உத்தியோக உயர்வு, வேலை நீக்கம், ஒழுங்கு என்பவற்றைப் பற்றி மகாதேசாதிபதிக்கு ஆலோசனை கூறும்.

### மகா தேசாதிபதி

ஆட்சி செய்யும் அரசாங்கம் சிறுபான்மையினருக்குப் பாதகமான சட்டங்களை நிறைவேற்றினுல் அதில் தலையிட மகா தேசாதிபதிக்கு உரிமையுண்டு. மேலும் அவர்களுடைய உரிமைகள் சம்பந்தமாய் மன்னர் பிரானின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு மகாதேசாதிபதி ஒதுக்கி வைக்க வேண்டிய மசோதாக்கள் பின்வருமாறு :-

(1) ஒரு சாதியாருடைய அல்லது சமயத்தாருடைய கடுமையான எதிர்ப்பைப் பெற்றதும் அச்சாதியார்க்கோ சமயத்தவர்க்கோ கொடுமையையும் அநீதியையுமிழைக்குமெனத் தேசாதிபதியாற் கருதப்பட்டதுமான ஒரு மசோதா.

(அ) ஒரு சமூகத்தவருக்கோ சமயத்தவருக்கோ சில தடைகளையும், வசதியீனங்களையும் உண்டாக்கி மற்றெச் சமூகத்தவருக்கும் அதே தடைகளையும் வசதியீனங்களையு முண்டாக்காத ஒரு சட்டத்தை இலங்கைப் பாராளுமன்றம் நிறைவேற்றக்கூடாது. அவ்வாறே ஒரு சமூகத்தையோ சமயத்தையோ சேர்ந்த ஒருவருக்கு, மற்றச் சமூகங்களையோ சமயங்களையோ சேர்ந்தவர்களுக்குக் கொடுக்காத சலுகைகளையும் நலவுரிமைகளையும், கொடுக்கும் முறையிற் சட்டமியற்றும் மசோதா.

(ஆ) ஒரு சமயத்தை அனுட்டிக்கும் விடயத்தில் தடையோ, கட்டுப்பாடோ உண்டாக்கும் எவ்வித சட்டத்தையும் பாராளுமன்றம் இயற்றக்கூடாது. எந்தச் சமயத் தாபனத்தின் அமைப்பையும் அந்தத் தாபனத்தின் அதிகாரிகள் கேட்டுக் கொண்டாலன்றி மற்றும்படி மாற்றக் கூடிய வகையில் சட்டமியற்றும் மசோதா.

(2) இவ்விடயங்களைப்பற்றி அரசியற்றிட்டத்தின் விவகாரச் சட்டத்தில் விதிக்கப்பட்டிருக்கிறது.

(3) இலங்கையில் அந்நியர் குடியேறுவதைத் தடுக்கவோ கட்டுப்படுத்தவோ நிறைவேற்றப்படும் மசோதாக்களை மகா தேசாதிபதி ஒதுக்கி வைக்க வேண்டிய அவசியமில்லை. ஆனுல் அம்மசோதா சட்டசபையில் நிறைவேற்றுங் காலத்தில் இலங்கையில் வசித்தவர்கள் வெளியூர் சென்று திரும்பி வந்தால் அவர்கள் அவ்வாறு இலங்கைக்கு வரும் உரிமையை மறுப்பது நியாயமற்றதெனவும் நீதியற்றதெனவும் மகாதேசாதிபதி கருதினுல் அவ்வாறு ஒதுக்கி வைக்கலாம்.

விசேடமாகச் சிறுபான்மையினரின் நலவுரிமைகள் சம்பந்தமான மேலே கூறிய மசோதாக்களைத் தவிர, கீழ்க்காணும் வேறு வகையான மசோதாக்களும் மன்னர் பிரானின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கென ஒதுக்கிவைக்கப்பட வேண்டுமென விதிக்கப் பட்டிருக்கிறது.

(அ) (1) பாதுகாப்புச் சம்பந்தமான மசோதாக்கள். (2) தேசத்து நாணயம் சம்பந்தமான அல்லது வங்கிச் சீட்டுப் பிரகடனஞ் செய்வது சம்பந்தமான மசோதாக்கள். (3) மன்னர் பிரானின் அதிகாரத்துக்கு மாமுன அல்லது இலங்கையில் வசியாத பிரித்தானிய பிரசைகளின் உரிமை, சொத்து என்பனவற்றுக்குப் பாதகமான அல்லது பிரித்தானிய பொதுநலக் குடியேற்ற நாடுகளின் வியாபாரம், போக்குவரத்து, கப்பற் போக்குவரத்து என்பனவற்றுக்கு மாமுன மசோதாக்கள்.

(ஆ) அரசியற் திட்டத்திற் கண்ட சட்டங்களை நீக்கக் கூடிய அல்லது திருத்தக்கூடிய மசோதா; அத்திட்டத்துக்கு எவ்வகையிலேனும் மாமுன அல்லது பொருத்தமற்ற மசோதா. இவ்விடயத்தில் குடியேற்ற நாட்டு மந்திரி மகா தேசாதிபதிக்கு அதிகாரமளித்திருந்தால் அது செல்லுபடியாகும்.

(இ) மகா தேசாதிபதி விதித்த சட்டங்களுக்கு மாமுன அல்லது பொருத்தமற்ற மசோதா.

(ஈ) வெளிநாட்டு விவகாரம் பற்றிய மசோதா.

(1) மன்னர் பிரானுல் அனுமதிக்கப்பட்ட பிரித்தானிய பொதுநலக் குடியேற்ற நாட்டுடன் செய்யப்பட்டதுமான வியாபார ஒப்பந்தங்கள் சம்பந்தமான மசோதாக்கள்.

(2) இலங்கையில் குடியேறுவது சம்பந்தமாய்த் தடையோ, கட்டுப்பாடோ செய்யும் மசோதா.

(3) வாக்குரிமை சம்பந்தமான மசோதா.

(4) குறித்த சில இறக்குமதிப் பொருள்கள் மீது தடையோ, கட்டுப்பாடோ விதிக்கும் மசோதா. அவைமீது இறக்குமதி வரி விதிக்கும் மசோதா.

வெளிநாட்டு விவகாரம், பாதுகாப்பு என்பன பற்றிச் சட்டமியற்ற மகாதேசாதிபதிக்கு உரிமையுண்டு. இச்சட்டங்கள் மகாதேசாதிபதியின் சட்டங்களென வழங்கப்படும். பாராளுமன்றத்தைக் கூட்டுதல், தற்காலிகமாக ஒத்தி வைத்தல், அதனைக் கலைத்தல். மந்திரிகளை நியமித்தல், வேலையிலிருந்து நீக்குதல் ஆகியவற்றில் மகா தேசாதிபதி பிரித்தானிய பாராளுமன்றச் சம்பிரதாயங்களைப் பின்பற்ற வேண்டும். அதாவது சாதாரணமாக எல்லா விடயங்களிலும் அவர் பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி நடக்கவேண்டு மென்பதே கருத்தாகும்.

நாட்டுக்கு வெளியே செல்லுபடியாகும் விடயங்கள் பற்றி இலங்கைப் பாராளுமன்றம் சட்டம் செய்யும் உரிமையை டொனமூர் விசாரணைக் குழு எந்த அளவிற் கட்டுப்படுத்தியதோ அவ்வாறே சோல்பரிக் குழுவினரும் கட்டுப்படுத்தத் தீர்மானித்தனர்.

## மந்திரிசபை

நிர்வாகசபை ஆட்சி முறையையும், மூன்று அரசாங்க அதிகாரிகள் பதவியையும் சோல்பரிக் குழு நீக்கியது அவற்றுக்குப் பதிலாக ஒரு மந்திரி சபையிருக்க வேண்டுமெனச் சிபாரிசு செய்தது. பிரதம மந்திரியை மகா தேசாதிபதியே நியமிக்க வேண்டும், பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம் ஆகிய விடயங்கள் அவர் கையில் விடப்படவேண்டும். பிரதமரின் சிபாரிசின் பேரில் மற்ற மந்திரிகளை மகா தேசாதிபதி நியமிக்க வேண்டும். இரண்டு மந்திரிகளுக்குக் குறையாமலும், இரண்டு பாராளுமன்றக் காரியதரிசிகளுக்கு மேற்படாமலும் மேல்சபையிலிருந்து நியமிக்கவேண்டும்.

## சோல்பரி அறிக்கையும் அதன் பின்னரும்

1945-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் சோல்பரி அறிக்கை வெளியிடப்பட்டது, அரசாங்க சபையின் தலைவராயிருந்த திரு. டி. எஸ். சேனனாயகாவை பிரித்தானிய அதிகாரிகள் லண்டனுக்கு அழைத்தனர். இலங்கை மந்திரி சபையின் சார்பாக ஒரு அரசியற்றிட்டத்தை அமைக்குமாறு அவர் வேண்டப்பட்டார். 1943-ல் பிரித்தானிய அரசாங்கம் செய்த அரசியற் பிரகடனத்தை அவர் புறக்கணித்துவிட்டு இலங்கைக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்துக் கொடுக்குமாறுகேட்டார். பாதுகாப்பு, வெளிநாட்டுவிவகாரம் பற்றிப் பிரித்தானிய குடியேற்ற நாட்டதிகாரிகளுக்கிருந்த பயத்தை ஒழிப்பதற்கு ஒருஉடன்படிக்கை செய்துகொள்ளுவதாகவும்

அவர் உடன்பட்டார். இலங்கைக்குக் குடியேற்றநாட்டந்தஸ்து வழங்குவதற்கு இன்னும் பக்குவமேற்படவில்லையெனக் குடியேற்ற நாட்டு மந்திரி காரியாலய அதிகாரிகள் கருதினர். இந்தியாவுக்குச் சுதந்திரமளிக்கும் விடயம் இன்னும் தீர்க்கப்படாதபடியால் அவர்கள் அவ்வாறு எண்ணியிருக்கக்கூடும். இக்கருத்தைக் கொண்டதொரு வெள்ளையறிக்கை 1945-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வெளியிடப்பட்டது. அதில் இலங்கை மக்கள் சோல்பரித் திட்டத்தை ஏற்று நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்றும் அதை நிர்வகிக்கும் முறையைப் பார்த்து வெகு விரைவில் இலங்கைக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்கப்படுமெனவும் கூறப்பட்டது. இவ்வெள்ளையறிக்கையில் மகா தேசாதிபதி செய்யும் சட்டங்களைப்பற்றிச் சோல்பரித் திட்டம் செய்த சிபாரிசுகள் சில மாற்றப்பட்டன. இவ்வறிக்கை அரசாங்க சபையில் விவாதிக்கப்பட்டபொழுது 51 பேர் சாதகமாகவும் 3 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர்.

1947-ல் இந்தியா சுதந்திரமடையும் நிலையிலிருந்தது. எனவே இலங்கைக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்து வழங்கவேண்டுமெனத் திரு. டி. எஸ். சேனநாயகா வாதாடினார். இத்தருணத்தில் பிரித்தானிய அதிகாரிகளும் அதற்குச் சாதகமாயிருந்தனர். புதிய அரசியற்றிட்டப் பிரகாரம் புதிய அரசாங்கம் ஆட்சி நடத்தத் துவங்கியதும் இலங்கைக்குக் குடியேற்ற நாட்டந்தஸ்துக் கொடுக்கும் விடயமாகப் பிரித்தானிய அரசாங்கம் நடவடிக்கைகளெடுக்குமென 1947-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் குடியேற்ற நாட்டு மந்திரி ஒரு அறிக்கை விடுத்தார்.

1947-ம் ஆண்டின் பிற்பகுதியிற் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியே நாட்டிலுள்ள அரசியற் கட்சிகளுட் பெரிய கட்சியாயிருந்தது. அதன் தலைவர் டி. எஸ். சேனநாயகாவாக இருந்தபடியால் அவரே பிரதம மந்திரியானார். உடனே அவர் பிரித்தானிய அரசாங்கத்துடன் நாட்டின் பூரண சுதந்திரத்துக்கான நடவடிக்கையெடுக்கத் தலைப்பட்டார். பாதுகாப்பு வெளிநாட்டு விவகாரம், அரசாங்க ஊழியர் என்னும் விடயங்களைப் பற்றிய உடன்படிக்கைகள் 1947-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ந் தேதி கையொப்பமிடப்பட்டன. இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாட்டு நிலையிலிருந்து பூரண சுதந்திர நிலைக்கு மாறிற்று.

ஐந்து முக்கியமான சாசனங்கள் மூலம் இம்மாற்றம் ஏற்பட்டது. அவை 1947-ம் ஆண்டின் இலங்கைச் சுதந்திரச்

சட்டம். 1947-ம் ஆண்டின் இலங்கைச் சுதந்திர விவகாரச் சட்டம். பாதுகாப்பு உடன்படிக்கை. வெளிநாட்டு விவகார உடன்படிக்கை. அரசாங்க ஊழியர் உடன்படிக்கை.

1931-ம் ஆண்டு உவெஸ்ற்மினிஸ்டர் சட்டத்தின் பிரகாரம் மற்றைய பிரித்தானிய குடியேற்ற நாடுகளுக்கு என்ன அந்தஸ்து வழங்கப்பட்டதோ, 1947-ம் ஆண்டின் இந்தியச் சுதந்திரச் சட்டத்தின் 6 வது பிரிவின்படி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் என்ன அரசியல் அந்தஸ்து வழங்கப்பட்டதோ அதே அந்தஸ்து 1947-ம் ஆண்டின் இலங்கைச் சுதந்திரச் சட்டப்படி இலங்கைக்கும் வழங்கப்பட்டது. இலங்கையின் ஆட்சிக்குப் பிரித்தானிய அரசாங்கம் ஏற்றுவந்த பொறுப்பு நீக்கப்பட்டது. அன்றியும், இராணுவம், குடிசன உரிமை வழங்குதல், விவாக நீக்கம், கப்பற் போக்குவரத்து, புத்தகப் பதிவுரிமை முதலியன சம்பந்தமாக பிரித்தானியாவில் நிலவிய சட்டம் திருத்தப்பட்டது. இதன் பயனாக இலங்கைக்கும் மற்றக் குடியேற்ற நாடுகளைப் போன்ற அந்தஸ்து வழங்கப்பட்டது. மேலும், பொதுநல அரசுக் குட்பட்ட தேச சமுதாயத்திலிருந்து விரும்பிய பொழுது விலகிக் கொள்ளவும் இலங்கைக்கு உரிமையளிக்கப்பட்டது.

பொதுநல அரசுக்குட்பட்ட தேசங்களில் நிலவும் சுதந்திரத்துக்கு முரணுயுள்ள சில அமிசங்களைச் சோல்பரி அரசியற்றிட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டதும் நடைமுறையிலிருந்ததுமான இலங்கை அரசியற் திட்டத்திலிருந்து 1947-ம் ஆண்டின் இலங்கைச் சுதந்திர விவகாரச் சட்டம் நீக்கிற்று. இதன் பயனுகத் தேசாதிபதிக்குப் பதிலாக மகாதேசாதிபதி நியமிக்கப்பட்டார். பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதிநிதியாகவும் மன்னர் பிரானின் பிரதிநிதியாகவும் அவர் இருந்து வந்த நிலைமை மாறி, மன்னர் பிரானின் பிரதிநிதியாக மாத்திரமே கருதப்பட்டார். அதாவது, அரசியற் சட்டதிட்டங்களுக்குட்பட்ட ஒரு அரசன் என்ற அந்தஸ்து உண்டாயிற்று. குடியேற்ற நாட்டு மந்திரியின் பிரதிநிதியென்ற முறையில் தேசாதிபதிக்கிருந்த கடமைகளெல்லாம் நீக்கப்பட்டன ; பிரித்தானிய மன்னருக்குப் பிரித்தானிய அரசியல் சம்பிரதாயத்தில் உசிதமென எது தோன்றுகிறதோ அதைச் செய்வதற்கு என்ன அதிகாரங்கள் வழங்கப்பட்டனவோ அதே அதிகாரங்களே மகா தேசாதிபதிக்கும் வழங்கப்பட்டன. சோல்பரி விசாரணைக் குழுவினர் சிறுபான்மைக் கட்சியினரின் பாதுகாப்புக்காக எத்தகைய அதிகாரங்களைத் தேசாதிபதிக்கு வழங்கினரோ அவ்வதிகாரங்களையெல்லாம் இனி மகாதேசாதிபதி 1947-ம் ஆண்டின் இலங்கைச் சுதந்திர விவகாரச் சட்டத்

தின் 4-வது பிரிவின்படி பிரதம மந்திரியின் ஆலோசனையை அனுசரித்துப் பிரயோகிக்கலாம். தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயக் குழுவின் அங்கத்தவர்களை நியமித்தல், பாராளுமன்றத்துக்கு அங்கத்தவரை நியமித்தல். மேல் சபைக்கு அங்கத்தவரை நியமித்தல், அரசாங்க சேவைக் குழுவுக்கும் நீதிபரிபாலன சேவைக் குழுவுக்கும் அங்கத்தினரை நியமித்தல் ஆகிய விடயங்களிலெல்லாம் முதல் மந்திரியின் ஆலோசனைக்கேற்பவே மகா தேசாதிபதி நடந்து கொள்ளுவார். மன்னர் பிரானின் அங்கீகாரத்துக்காக மசோதாக்களை ஒதுக்கி வைக்கும் அதிகாரம் நீக்கப்பட்டது. அதற்குப் பதிலாக இலங்கையின் சமாதானம், ஒழுங்கு, நல்லாட்சி என்பவற்றை உத்தேசித்து எவ்வித சட்டங்களையுமியற்ற இலங்கைப் பாராளுமன்றத்துக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இதன் கருத்தென்னவெனில் பாராளுமன்றம் தான் விரும்பிய எந்த விடயத்தைப் பற்றியும் சட்டமியற்றலாமென்பதேயாகும். ஆனால். விவகாரச் சட்டத்தில் 29-ம் பிரிவின் 2-ம் அங்கத்தில் ஒரு முக்கியமான தடை ஏற்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் இலங்கைப் பாராளுமன்றம் பின்வரும் விடயங்களைக் குறித்து சட்ட மியற்ற முடியாது :-

(அ) எவர் எந்தச் சமயத்தை அனுட்டிப்பதையும் கட்டுப்படுத்தல், தடுத்தல்.

(ஆ) ஒரு சமூகத்தவர் அல்லது சமயத்தவருக்கு இல்லாத வசதியீனங்களையோ கட்டுப்பாடுகளையோ மற்றொரு சமூகத்தவருக்கோ சமயத்தவருக்கோ வழங்க முடியாது.

(இ) ஒரு சமூகத்தவருக்கோ சமயத்தவருக்கோ வழங்கப்படாத சலுகைகளையோ நலவுரிமைகளையோ மற்றொரு சமூகத்தவருக்கோ சமயத்தவருக்கோ வழங்க முடியாது.

(ஈ) ஒரு சமயத் தாபனத்தின் அமைப்பை அத்தாபன அதிகாரிகளின் சம்மதமின்றி மாற்ற முடியாது.

ஒரு சமயத் தாபனத்தைச் சட்டபூர்வமாகச் சேர்த்துக்கொண்டால் அதன் அமைப்பில் அத்தாபன அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரிலன்றி எவ்வித மாற்றமும் செய்தலாகாது. 29-ம் பிரிவின் 2-வது அங்கம் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரிமைப் பாதுகாப்புச் சாசனமென்றே கூறலாம். ஆனால், இந்த விதியையும் 1947 ம் ஆண்டின் சுதந்திர விவகாரச் சட்டத்திலுள்ள வேறெந்த விதிகளையும் நீக்கிவிடுவதற்கோ திருத்துவதற்கோ பாராளுமன்றத்திற்கு உரிமையுண்டு.

அப்படிச் செய்வதானல் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முழுத் தொகையினரில் மூன்றிலிரு பங்கினரின் சம்மதத்தைப் பெறுதல் வேண்டும். பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம், அரசியற் சீர்திருத்தம் என்ற இவ்விடயங்களில் சட்டம் செய்வதற்கு பிரித்தானிய அரசாங்கத்திற்கிருந்துவந்த அதிகாரம் முற்றுயொழிக்கப்பட்டது. இலங்கையின் சம்மதத்துடன் அதன் வேண்டுகோளுக்கிணங்கிச் செய்யப்படாத எவ்வவையான ஏகாதிபத்தியச் சட்டங்களும் இலங்கையிற் செல்லுபடியாகா.

இலங்கைக்கு அவ்வப்போது தேவையான இராணுவ உதவிகளைப் பிரித்தானிய அரசாங்கம் உதவுமெனப் பாதுகாப்பு உடன்படிக்கையிற் கூறப்பட்டிருக்கிறது. இலங்கையும் தனது நலன்களை உத்தேசித்துப் பிரித்தானிக்கு உதவிசெய்யும். இலங்கையைப் பாதுகாக்கவும், முக்கியமான போக்குவரத்துக்களைப் பாதுகாக்கவும் தேவைப்படும் இலங்கை அரண்களைப் பிரித்தானிய கடற்படைக்கும் இராணுவப் படைக்கும் இலங்கை உதவும்.

வெளிநாட்டு விவகார உடன்படிக்கையானது இலங்கைக்குச் சர்வதேச அந்தஸ்தை உதவிற்று. ஐக்கிய நாட்டுச் சங்கத்தில் இலங்கை அங்கத்துவம் கோரி விண்ணப்பஞ் செய்ய அது உதவிற்று. அந்நிய நாடுகளில் தானிகர்களை ஏற்படுத்த அதிகாரம் வழங்கிற்று. பிரித்தானிய தானிகர்களின் உதவியை இலங்கை தேவையான சமயங்களிற் பயன்படுத்தவும் வசதியளித்தது. பிரித்தானியின் தலையீடின்றி இலங்கை தான் விரும்பிய தேசங்களுடன் உடன்படிக்கைகளோ ஒப்பந்தங்களோ செய்து கொள்ளலாம். ஒத்துழைப்பு, ஆலோசனை என்பன சம்பந்தமாக ஏகாதிபத்திய மகாநாடுகளிற் செய்து கொண்ட விதிகளுக்கமைய நடந்துகொள்ளுவதாக இலங்கை அரசாங்கம் ஒத்துக்கொண்டது. வெளிநாட்டுத் தொடர்புகள் சம்பந்தமாகப் பிரித்தானி கருதியிருக்கும் நடவடிக்கைகளைப்பற்றி இலங்கைக்கு விபரமாக அறிவிக்கும் அவை சம்பந்தமாக இலங்கை நேரடியாகவோ, இலங்கைத் தானிகர் மூலமாகவோ தனது கருத்தைத் தெரிவிக்கலாம். அவ்வாறே இலங்கையும் அந்நிய நாடுகளோடு தான் நிகழ்த்தும் நடவடிக்கைகளைப் பிரித்தானிக்கு அறிவிப்பதுடன் அதன்கருத்துக்களை நேரடியாகவோ தானிகர் மூலமாகவோ அறிந்து கொள்ளும்.

அரசாங்க ஊழியர் உடன்படிக்கையிற் சிலவகையான அரசாங்க ஊழியரின் பாதுகாப்புக்கு நிபந்தனைகள் கூறப்பட்டன. குடியேற்ற நாட்டு மந்திரியால் நியமிக்கப்பட்ட அல்லது, முடிக்குரிய காரியத்தரோடு உடன்படிக்கை செய்துகொண்ட

ஊழியரின் நலன்கள் பாதுகாக்கப்படும். புதிய அரசியற் திட்டத்தின் கீழ் அவர்கள் குறித்த கால எல்லைக்குள் நட்ட ஈட்டோடு தமது உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறலாம். அல்லது முடிக்குரிய குடியேற்ற நாடுகளில் அவர்கள் வேறு உத்தியோகங்களைப் பெறலாம். இனிமேல் அவர்கள் குடியேற்ற நாட்டுக் காரியாலயத்தின் கீழ் அடங்கியவராகார்.

---

## எட்டாம் அத்தியாயம்

# பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள்

### *வேற்றுமைக்கிடையில் ஒற்றுமை :*

பிரித்தானிய குடியேற்ற நாட்டுச் சாம்ராச்சியத்திலுள்ள நாடுகள் ஒவ்வொன்றுகப் பிரித்தானிய தொடர்பைக் கைவிட்டு விலகாமல் தற்காலிகமாகவாவது தடுப்பதற்காக ஏற்பட்ட ஒரு அரசியல் ஒழுங்கே பிரித்தானிய பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் கூட்டமாகும். பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளில் வசிக்கும் மக்கள் பிரித்தானிய அரசர்க்கு அரச விசுவாசமுடையவர்களாயிருக்கிறுர்கள். இதற்குப் பல காரணங்களுண்டு. தாய் நாடாகிய பிரித்தானியாவுடன் இந்நாடுகளுக்குள்ள இரத்தத் தொடர்பு; ஆங்கிலமொழி பேசும் சாதியாருக்குப் பொதுவான கருத்துகளும் குறிக்கோள்களும் பிரித்தானிய பாராளுமன்ற ஆட்சி முறையில் அவர்களுக்கிருக்கும் நம்பிக்கை என்பன போன்ற பல விடயங்களே இதற்குக் காரணமாகும். பிரித்தானியப் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனம், ஐக்கிய அமெரிக்க அரசியல் முறை, சோவியத்து உருசிய அரசியல் முறை என்பன, பலம் பொருந்திய வல்லரசுகளின் அரசியற் தத்துவங்கள், கொள்கைகளில் இயங்குகின்றனவேயன்றி, இராணுவ பலத்திலோ, ஆட்சியாளரின் பலத்திலோ தங்கியிருக்கவில்லையென நம்பிக் கொள்ளுவது முடியாத காரியமாகும். சில சில சமயங்களிற்ருன் இராணுவ பலம் இவ்வாட்சிக்குத் தேவைப்படுகிறதென்பதும் தெரிந்து கொள்ள வேண்டியதே. கொள்கைகளும் குறிக்கோள்களும் உருக்கினுலான சங்கிலியிலும் வலிமையுடையன. அக் கருத்துப்பலம் இப்பெரிய வல்லரசுகளின் ஆட்சியை ஒற்றுமைப் படுத்தி வைத்திருக்கின்றது. இலெனின், இஸ்டாலின் என்பவர்கள் விளக்கிய மார்க்சுக் கொள்கைகளில் உள்ள அதிராத நம்பிக்கையே சோவியத்து இராச்சியங்களின் மக்களை ஒற்றுமைப்படுத்தி வைத்திருக்கிறது. தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தை நிலை நிறுத்தக்கூடியவை முதலாளித்துவச் சனநாயகமும் அமெரிக்க அரசியற்ருபனங்களுந்தான் என ஐக்கிய அமெரிக்க ஆட்சியாளர் நம்புகின்றனர். பிரித்தானிய பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் ஒற்றுமை, திட்டமான கருத்து வடிவமைதியையோ முன்கூட்டியே கருதப்பட்ட குறிக்கோளையோ நம்பிக்கைகளையோ

அடிப்படையாகக் கொள்ளவில்லை. இன்றேல் பொதுவான சாதி சமயப் பண்பாட்டு ஒற்றுமையோ கிடையாது. ஆனால் விரிந்து பரந்து கிடக்கும் இந் நாடுகளின் ஒற்றுமைக்குக் காரணமாயிருப்பவை கீழ்க் காணும் சில அமிசங்களாகும்.

(1) பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளெல்லாம் மன்னரை ஒற்றுமையின் சின்னமாக அங்கீகரிக்கின்றன.

(2) பாராளுமன்ற ஆட்சி முறையும் தாபனங்களுமிருப்பதாலும், பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளிடையே கலந்தாலோசிப்பதற்கு ஒழுங்குகளேற்படுத்துவதாலும் உண்டாகும் ஒருமைப்பாடு, கலந்தாலோசித்து ஆட்சிநடத்துதலே சாலச் சிறந்ததென்ற கொள்கையில் உள்ள அதிராத நம்பிக்கைதான் இந்த ஒழுங்குகளின் அடிப்படையாகும்.

(3) சட்ட முறைப்படி அமைக்கப்படும் எதிர்க் கட்சிகளுக்குச் சுதந்திர மளித்தல்.

(4) பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சட்ட அமைப்பில் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் பிரித்தானிய நீதி பரிபாலனம் போன்ற பிரித்தானிய சம்பிரதாயங்களின் மனங் கவரும்சக்தி, பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் ஒற்றுமையை நிலை நிறுத்துவதற்கேதுவான வேறுபல சிறு அமிசங்களுமுண்டு. அவற்றைப்பற்றி மேலே ஆராய்வாம்.

## ஏகாதிபத்தியமென்றால் என்ன ?

பிரித்தானிய பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்தைப் பற்றி ஆராயுமுன் 'ஏகாதிபத்தியம்' என்ற சொல்லின் பொருளை அறிய வேண்டியதவசியம். இச் சொல் காலத்துக்குக் காலம், தேசத்துக்குத் தேசம் பொருள் மாற்றமடைந்திருக்கிறது. அரசியல் வாதிகளிடையிலும் இதற்கு ஏகோபித்த கருத்துக் கிடையாது. ஒரு அரசியற் கொள்கையுடையோர் ஒரு பொருளையும் மற்றொரு அரசியற் கொள்கையுடையோர் வேறொரு பொருளையும் கொண்டிருப்பதைக் காணலாம்.

## சரித்திர வரலாறு :

ஆதியில் ஏக சக்கரவாத்தி ஒருவரின் ஆட்சியின் கீழ் இருந்த விரிந்த சாம்ராச்சியத்துக்கே ஏகாதிபத்தியம் என்ற பெயர் வழங்கப்பட்டது. சக்கரவர்த்தி ஆளும்நாட்டுக்கு அடுத்ததும், பெரிய

கடலினுற் பிரிக்கப்படாததுமான இராச்சியங்களே ஏகாதிபத்தியத்தின் அங்கங்களாக இருந்து வந்தன. கிறீஸ், உரோம் என்ற தேசங்கள் தமது ஏகாதிபத்தியங்களை அமைத்த காலத்தில் ஏகாதிபத்தியமானது ஐரோப்பிய கண்டத்தை மாத்திரமே கருத்திற் கொண்டு இத்தகைய பொருளை அதற்கு அளித்தது.

ஆனுல் நவயுகத்தில் ஏகாதிபத்தியத்துக்கு வேறு பொருள் கொள்ளப்பட்டது. அதாவது கடல் கடந்த இராச்சியங்களைக் கொண்டும் ஏகாதிபத்தியம் அமைக்கலாமென்ற கொள்கை உண்டாயிற்று. புதுத் தேசங்களைக் கண்டு பிடிப்பதற்குக் கடல் கடந்து செய்த யாத்திரைகளின் பயனுகவே இந்தக் கருத்துண்டானது. கி. பி. 1500–ம் ஆண்டு வரையில் உண்டானபடியாற்றுன் இது நவயுகக் கருத்தெனக் கொண்டாடப்பட்டது. பிரித்தானிய சாம்ராச்சியம்; நவயுக சாம்ராச்சியம்; அது கடல் கடந்து விரிந்த சாம்ராச்சியமாகும்.

## இத்தாலியர் கொண்டுள்ள கருத்து :

ஏகாதிபத்தியம் என்ற சொல் தேசத்துக்குத் தேசம் வேறு பொருளைக் கொடுத்ததெனக்கூறினேம். இத்தாலியில் ஏகாதிபத்தியம் என்ற சொல் ஒகஸ்டஸ் என்பவருடைய உரோமன் ஏகாதிபத்தியத்தைஅவர்களுக்கு நினைப்பூட்டும். முசோலினியின் பாஸிஸ்டுக் கட்சியினர் அந்தப் பழைய ஏகாதிபத்தியத்தை மறுபடியும் நிலைநாட்ட வேண்டுமென விரும்பினர். மத்தியதரைக் கடற் பிரதேசத்தில் ஏகாதிபத்தியம் ஒன்றைத் தாபிக்க இத்தாலி கனவு கண்டது. இதன் பயனுகக் கொடுஞ் சமர் புரிந்து அபிசீனியாவையும், அல்பேனியாவையும் அடிமைப்படுத்திற்று. பிரான்சுக்குச் சொந்தமாயிருந்த தூனீசியா, கோர்சிக்கா, நீஸ் என்ற பிரதேசங்களை இத்தாலி பிரான்சிடமிருந்து பெறமுயன்றது. ஆனுல் அவர்களுடைய கனவு பலிக்கவில்லை. பாஸிஸ்டுக் கட்சியினர் தோல்வியடைந்ததும் இத்தாலி 1911-ம் ஆண்டில் துருக்கியிடமிருந்து பெற்ற லிபியாவையும், முதலாவது மகாயுத்தத்தின் விளைவாக உண்டான வேர்சேல்ஸ் உடன்படிக்கையின் பயனுகப் பெற்ற சோமாலிலந்தையும் இழந்தது.

## பிரெஞ்சு தேசத்தவர் கருத்து :

பிரான்சில் ஏகாதிபத்தியமென்றுல் நெப்போலியனுடைய ஏகாதிபத்திய ஞாபகமே பிரெஞ்சுக்காரருக்கு மனதில் உதிக்கும். ஏகாதிபத்தியத்தினுல் சுரண்டி வாழலாம் என்ற எண்ணம்,

பிரெஞ்சு மக்கள் கருத்திலிருந்தது, அன்றியும் தமது பண்பாடு. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கொள்கைகளை மற்ற நாடுகளிலும் பரப்பலாமென்றும் அவர்கள் எண்ணினர். இன்று பிரான்சுக்கு வட ஆபிரிக்காவிலும் ஆசியாவிற் புதுச்சேரியிலும், இந்துசீனத்திலும், தென்னமெரிக்காவில் பிரெஞ்சு கயாஞவிலும் குடியேற்றங்களுண்டு. இந்துசீனத்திலும், தூனீசியாவிலும் மொரொக்கோவிலும் பிரெஞ்சுக்காரர் யுத்தத்திலீடுபட்டிருக்கிறார்கள். குடியேற்ற நாடுகளையுடைய மற்றைய ஏகாதிபத்தியங்களைப் போலவே பிரான்சும் தனது குடியேற்ற நாடுகளின் செல்வத்தைச் சுரண்டலாமென்று நம்பியிருக்கிறது. இதனாற்றான் வட ஆபிரிக்க மக்களுக்கும் இந்து சீன மக்களுக்கும் சுதந்திரமளிக்கப் பிரான்ஸ் விரும்புவதில்லை.

## ஜெர்மனி தேசத்தவர் கருத்து :

மற்ற ஐரோப்பிய தேசங்களெல்லாம் கடல் கடந்த இராச்சியங்களை அமைத்துவரத் தான் மாத்திரம் சும்மா இருக்கக் கூடாதென நினைத்த ஜெர்மனி இரண்டாவது கெய்சரின் கீழ் பிரான்சுக்கெதிராக யுத்தந் துவங்கிற்று. இந்த மகாயுத்தத்தில் தோல்வியடைந்தபடியால் ஜேர்மனிக்கிருந்த சில குடியேற்ற நாடுகளையும் இழந்து விட்டது. தங்கனிக்காவும், ஜேர்மனியின் தென்மேற்கு ஆபிரிக்காவும் பிரித்தானிய கூட்டுப்பொறுப்பிலும் தென்னாபிரிக்காவின் கூட்டுப் பொறுப்பிலும் விடப்பட்டன, பசிபிக் மகா சமுத்திரத்திலிருந்த சில ஜெர்மன் தீவுகள் அவுஸ்திரேலியாவுக்கு வழங்கப்பட்டன. ஆனால் ஹிட்லரின் தலைமையில் ஜெர்மனியர் மறுபடியும் தமது கௌரவத்தைக் காப்பாற்ற முனைந்தனர். தேச வெறியை நாட்டில் உண்டாக்கினர். வஞ்சந் தீர்ப்பதற்காகக் கொடிய யுத்தத்தீயை ஐரோப்பாவெங்கும் மூட்டினர். விரைவில் ஐரோப்பாவின் பகுதியிற்பலவற்றை அடிப்படுத்தினர். நாஸிகளுக்கு ஏகாதிபத்தியம் என்றால் தமது சாதியே உலகில் தலைசிறந்த சாதிஎன்பதை நிரூபிப்பதாகும். நாளுக்குநாள் பெருகிவரும் ஜேர்மன் மக்கள் குடியேறுவதற்குப் புதிய நாடுகளைக் கைப்பற்றுவதாகும். ஹிட்லரின் தலைமையில் நாஸிகள் பல துறையில் முன்னேற்றமடைந்தனர். அவுஸ்திரியாவை வெற்றிகொண்டனர். யுத்தமின்றியே செக்கோஸ்லாவைக்கியாவைத் தம்மடிப்படுத்தினர். ஆனால் இவ்வளவில் நாஸிகள் திருப்திப்படவில்லை. உலகம் முழுவதையும் வெற்றி பெற வேண்டுமென விரும்பி இரண்டாவது மகாயுத்தத்தை ஆரம்பித்தனர். ஈற்றில் மறுபடியுந்தோல்வியடைந்தனர்.

## மற்றத் தேசங்களின் கருத்து :

பிற்போக்கான தேசங்களையும், பலமற்ற நாடுகளையும் சுரண்டுவதே ஏகாதிபத்தியக் கொள்கையுடைய நாடுகளின் நோக்கமாகும். பெல்சியம், ஒல்லாந்து, போர்த்துக்கல், ஸ்பெயின், யப்பான் போன்ற ஏகாதிபத்திய ஆசையுள்ள நாடுகள் இவ்வாறே நடந்துகொண்டன. அடிமைப்படுத்திய தேசத்து மக்களின் சுபீட்சத்தைப்பற்றி அவர்களுக்கு எவ்வித அக்கறையும் கிடையாது. யப்பான் போன்ற தேசங்கள் மற்ற நாடுகளை அடிமைப்படுத்துவதற்காகக் கொடிய யுத்தங்களில் ஈடுபட்டன. இரண்டாவது மகா யுத்தத்தில் யப்பான் தலையிட்டுத் தோல்வியடைந்தது. கிழக்கிந்தியத் தீவுகளில் தனக்கிருந்த ஆதிக்கத்தைக் கைவிடாமற் காப்பதற்கு டச்சு அரசாங்கம் முயன்ற போதிலும் சுதேச மக்களின் தேசீய இயக்கத்தினுலும், அதன் பயனுக உண்டாகிய எதிர்ப்பினுலும் அதைக் கைவிட நேர்ந்தது. ஒருகாலத்தில் பெரிய ஏகாதிபத்தியத்தை நிர்வகித்து வந்த போர்த்துக்கல் அரசாங்கம தனது சாம்ராச்சிய நாடுகளைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து இப்பொழுது எஞ்சியுள்ள சில பகுதிகளைக் கைவிடாமற் பாதுகாக்க முயன்று வருகிறது. பெல்சியத்துக்கு ஆபிரிக்காவிலுள்ள கொங்கோப் பிரதேசத்தில் விரிந்த பெரிய குடியேற்ற நாடொன்று உண்டு. அங்கிருந்து பெல்சியம் தனக்குத் தேவையான மூலப் பொருள்களைப் பெறுவதுடன் தான் உற்பத்தி செய்யும் கைத்தொழிற் பொருள்களை அங்கு விற்பனை செய்யக்கூடியதாயுமிருக்கிறது.

## பிரித்தானியா :

ஆங்கிலேயருக்கு ஏகாதியத்திய மென்ருல் இரண்டு விடயங்கள் கருத்தில் வரும். முதலாவதாக வியாபாரம்; மற்றது குடியேற்றம். நெப்போலியன் காலத்திலும் அதற்கு முன்னரும் இருந்தது போலவே இன்றும் ஆங்கிலேயர் வியாபாரிகளாகவே இருக்கிருர்கள். கைத்தொழிற் புரட்சி முதன் முதல் இங்கிலாந்திலேதான் பலனளித்தது. கைத்தொழிற்றுறையில் இங்கிலாந்து நெடுங்காலமாக முதன்மை பெற்று வந்தது. கைத்தொழிலுக்கு மூலப் பொருள்கள் அவசியம். அவற்றைக் குடியேற்ற நாடுகளிலிருந்தே பெறலாம் ஆங்கிலேயர் கடல் கடந்து சென்று புதிய தேசங்களைக் கண்டுபிடித்ததோடு யுத்தம் புரிந்தும் வேறு நாடுகளை அடிப்படுத்தினர். இவ்வாறு கிடைத்த நாடுகளில் மூலப் பொருள்களைப் பெற்றனர். தாம் உற்பத் செய்த கைத்தொழிற் பொருள்களையும் விலைப்படுத்தினர். அவற்ருேடு நில்லா

மல் அவர்கள் அத்தேசங்களில் நீதி, சுதந்திரம் என்பவற்றைப் பற்றித் தாம் கொண்ட கொள்கைகளைப் பரப்பியதோடு அரசியலாட்சி முறைகளையும் பாராளுமன்ற சனநாயக அரசியல் முறையையும் தாபித்தனர். இவற்றின் பயனாக, அத்தேசங்களிடையே நல்லெண்ணம் உண்டாயிற்று. அத்துடன் பிரித்தானியக் குடியரசுக்குட்பட்ட சம்மேளனத்தை நிறுவவும் வாய்ப்பு ஏற்பட்டது.

எங்கெங்கே தேசசுவாத்தியம் வசதியாகவிருந்ததோ அங்கங்கெல்லாம் ஆங்கிலேயர் போய்க் குடியேறினர். இங்கிலாந்திலேற்பட்ட சமயப் பிணக்குக் காரணமாகச் சிலர் அமெரிக்காவுக்குப் போய்க் குடியேறினர். வேறு சிலர் புதிய நாடுகளைக் கண்டு பிடிக்கவும் புதிய அனுபவங்களைப் பெறவும் செல்வத்தை விருத்தி செய்யவும் ஆசைகொண்டு அவுஸ்திரேலியா, நியுசீலந்து, தென்னாபிரிக்கா ஆகிய தேசங்களுக்குச் சென்று குடியேறினர். நாளடைவில் இக்குடியேற்றங்கள் ''வெள்ளையர் குடியேற்ற நாடுகள்'' ஆயின.

## பல்வேறு அரசியற் கருத்துக்கள்

### (அ) பழமை பேணுங் கட்சி:

ஏகாதிபத்தியக் கருத்தானது காலத்துக்குக் காலம் யுகத்துக்கு யுகம் மாற்றமடைந்து வந்திருக்கிறது. டிஸ்ரெயிலி போன்ற பழமை பேணும் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு காலத்தில் ஏகாதிபத்தியத்தைப் பற்றிக் கூறும்பொழுது, ''வாழாவெட்டிகளான குடியேற்ற நாடுகள் கழுத்திற் கட்டிய பாருங்கல் போல் இன்னல் விளைக்கின்றன'' என்று குறிப்பிட்டார். ஆனால் இன்று சேர் உவின்ஸ்டன் சேர்ச்சில் தலைமையில் பழமை பேணுவோர் அதைப்பற்றி வேறுவிதமாகக் கருதுகிறார்கள். கைத்தொழிற் பொருட்கள் உற்பத்தி செய்வதற்கு மூலப்பொருள்களை உதவும் நாடுகளாக ஏகாதிபத்திய நாடுகள் விளங்குகின்றன என்பதே அவர்கள் இன்று கொண்டிருக்கும் அபிப்பிராயமாகும். பெரிய தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் விற்பனையாவதற்கு அவை நல்ல சந்தைகளாக அமைகின்றன. இங்கிலாந்தின் பெருமையை ஏகாதிபத்தியம் எடுத்துக் காட்டுகிறது. தேச ஒற்றுமைக்கும், ஏகாதிபத்திய நாடுகளின் ஒருமைப்பாட்டுக்கும் அது அறிகுறியாயிருக்கிறது. அதனால் தான், சேர்ச்சில் ஒருமுறை ''பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைக் குலைப்பதற்கு நான் முதன் மந்திரியாக இருக்க விரும்பவில்லை'' யென்று கூறினார். என்ன பாடுபட்டும் ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்க வேண்டும். அவசியம் தேவைப்பட்டா லாழிய குடியேற்ற நாடுகளுக்குச்

சுய ஆட்சி வழங்கக்கூடாது ; குடியேற்ற நாட்டு மக்களின் தேசீய அபிலாஷைகளைத் தடை செய்வதற்கு ஒல்லும்வகையால் முயற்சி செய்ய வேண்டும். பிரித்தானிய நலவுரிமைகள் பாதிக்கப்படாத வகையில் அந்நாடுகளுக்குச் சலுகைகள் காட்டலாமென்பதே பழைமை பேணுங் கட்சியினரின் கருத்தாகும்.

## (ஆ) தாராளக்கட்சி :

தாராளக் கட்சியின் கொள்கை இவ்வளவு தீவிரமானதன்று. நல்லாட்சி சுயாட்சிக்குச் சமமானதன்று, என்ற கொள்கையை ஜோன் ஸ்ருவர்ட் மில் போன்ற தாராளக் கட்சியினர் எப்பொழுதும் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். ஏனெனில், நல்லாட்சி சொந்த அரசியல் ஆட்சியின் சிறந்த தன்மையைப் பெற மாட்டாது. சுதேசிகள் அரசியலில் பிழை செய்து அனுபவம் பெற்றுத் திருந்த வேண்டும். மற்றவர்களுடைய போதனையிலும் பார்க்கத் தன்னுடைய சொந்த அனுபவத்தினால் தான் ஒருவனுக்கு அதிக பயனுண்டாகும். சுயாட்சி நடத்துவதற்கு விருப்பமும் திறமையும் காட்டும் சுதேச மக்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டுமென்பதே தாராளக் கட்சியினரின் கருத்து. தேசங்கள் சுதந்திரமாக வாழவேண்டும். வியாபாரத்தில் சுதந்திர மிருக்க வேண்டும். எங்கே நல்ல விலை கிடைக்குமோ அங்கே மூலப் பொருள்களை விற்றுப் பொருள்கள் மலிவாகக் கிடைக்கக் கூடிய தேசங்களிலிருந்து அவற்றை வாங்குவதற்குக் குடியேற்ற நாடுகளுக்கு சுதந்திரமிருக்க வேண்டுமென்று அவர்கள் வாதாடினர். வியாபாரச் சுதந்திரம், தடையில்லாத கொள்வனவு. விற்பனவு என்றெல்லாம் அவர்கள் கூறிக்கொள்வதன் பொருள் இதுவே. இப்படிச் சொன்னாலும் பிரித்தானிய நல உரிமைகளுக்குப் பாதகம் உண்டாகும் பொழுதெல்லாம் அவர்கள் முட்டுக்கட்டை போடுவார்கள், பிரித்தானிய நல உரிமைகளுக்குப் பங்கம் வராத வகையில் அவர்கள் அடிமை நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கத் தயாராயிருந்தனர். தன் தேசத்தவரின் வாழ்க்கைத்தரம் குறைந்த காலங்களில் குடியேற்ற நாட்டு மக்களின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவதற்கு அவர்கள் ஏதோ ஒருவிதமாகக் காரணங் காட்டி விடுவர்.

## (இ) சமூகவாதக் கட்சி :

ஏகாதிபத்தியத்தைப் பற்றிச் சமூக வாதிகள் கொண்ட கருத்து முற்றிலும் வேறு பட்டதாகும். பழைமை பேணுங் கட்சியினரும் தாராளக்கட்சியினரும் ஓரளவுக்குக் கருத்தொற்

றுமையுடைய கட்சியினராகக் காணலாம். ஏகாதிபத்தியம் அடிமை நாடுகளைச் சுரண்டுவதற்காக ஏற்பட்ட ஒரு சாதனம். முதலாளி வர்க்கத்தைச் சேர்ந்த பழைமைபேணும் கட்சியினரும் அவருடைய சகாக்களும் அடிமை நாடுகளிலுள்ள மக்களைச் சுரண்டி அதன் பயனாகத் தமது அதிகாரத்தை நிலைநாட்டப் பார்க்கிறார்கள். அடிமைநாடுகளைப் பொருளாதாரத்திலும் அடிமைப்படுத்தி வைத்திருந்தால்தான் தங்கள் தேசத்துத் தொழிலாளரைக் கையிற் போட்டுக் கொள்ளலாம் என்பதே அவர்களுடைய கொள்கை. இதனால் அவர்கள் குடியேற்ற நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியையோ தொழில் முன்னேற்றத்தையோ அத்தியாவசியமெனக் கண்டாலன்றி விருத்தி செய்ய முற்பட மாட்டார்கள். குடியேற்ற நாடுகள் தங்களுக்குத் தேவையான பொருள்களைத் தாங்களே உற்பத்தி செய்யப் பழகிக்கொண்டால் பிரித்தானியப் பொருள்களை விற்பனை செய்வதற்குச் சந்தைகள் கிடையா. இதனால் தொழில் மந்தம் உண்டாகும். வேலையில்லாத் திண்டாட்டம் தலைகாட்டும். உணவுக் கஷ்டம் உண்டாகும். பிரித்தானிய விவசாயிகள் தமக்குத் தேவையான உபகரணங்களை வாங்கவோ தமது தொழிலாளருக்குக் கூலி கொடுக்கவோ பணமில்லாது இன்னற் படுவர். நாட்டிலே வறுமையுண்டாகும். பழைமை பேணும் கட்சியினருக்கு அது பெரிய ஆபத்தை உண்டாக்கும். இக்காரணங்களைக் கொண்டு அவர்களும் பணம் படைத்த முதலாளிகளும் ஏகாதிபத்தியத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று கூச்சலிடுகிறார்கள். குடியேற்ற நாடுகளை மூலப்பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளாகவும் பிரித்தானிய கைத்தொழிற் பொருள்களை விற்பனை செய்யும் சந்தைகளாகவும் வைத்துக் கொள்வது அவசியமென்று அவர்கள் கூறுவதாகச் சமூகவாதிகள் கருதுகின்றனர். தாய் நாட்டில் முதலாளிச் சார்புடைய இக்கட்சியினர் தமது அரசியல், பொருளாதார அதிகாரத்தை நிலைநிறுத்துவதோடு இந்தச் சுரண்டல் விவகாரம் நிற்கவில்லை. இது தேசங்களிடையே கழுத்தறுக்கும் வியாபாரப் போட்டியை உண்டாக்குவதோடு யுத்தத்தையும் மூட்டுகிறது. ஒவ்வொரு தேசமும் தனது உற்பத்திப் பொருள்களை விற்பனை செயவதற்கு வசதியான குடியேற்ற நாடுகளை வேட்டையாடுவதில் முனைகின்றன. இவைதான் யுத்தங்களுக்கு மூலகாரணம். எனவே, சமூக வாதிகள் குடியேற்ற நாட்டு மக்களைப் பொருளாதார முறையிற் சுரண்டுவதை எதிர்க்கின்றனர். தம்மைத் தாமே ஆட்சி செய்வதற்கு விருப்பமும் திறமையும் காட்டும் குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்க வேண்டும். பிரித்தானியாவுக்கும்

அதன் குடியேற்ற நாடுகளுக்கு மிடையில் பரஸ்பர நல்லெண்ண மும் நட்பும் உண்டாக வேண்டுமானுல் இவ்வாறு சுதந்திரம் வழங்க வேண்டியதவசியமென சமூகவாதிகள் கூறுகின்ருர்கள்.

## ஏகாதிபத்திய அரசிலிருந்து பொதுநல அரசுக்கு மாற்றம்:

"ஏகாதிபத்தியம்" என்ற சொல் வெவ்வேறு தேசத்தில் வெவ் வேறு கருத்துக்களை எவ்வாறு கொண்டிருக்கிற தென்பதையும், காலத்துக்குக் காலம் அதன் பொருள் எவ்வாறு மாற்ற மடைந்த தென்பதையும் வெவ்வேறு அரசியற் கொள்கையுடையவர்கள் அதற்கு எவ்வாறு வெவ்வேறு வியாக்கியானம் செய்தனரென் பதையும் இதுவரை கண்டோம். பிரித்தானிய மக்கள் சரித்திர சம்பவங்களின் தாற்பரியங்களை நன்குணர்ந்திருந்தார்கள். வேறு வேறு சாதிகளும், சமயங்களும், பண்பாடுகளுமுள்ள வெவ்வேறு தேசங்களைத் தன்னகத்துக் கொண்ட ஒரு சாம்ராச்சியத்தை இராணுவ பலத்தினுலும் அரசியலதிகாரத்தினுலும் ஒன்று கூட்டி வைத்திருக்க முடியாதென்பதை அவர்கள் விரைவில் உணர்ந்து கொண்டனர். சுதந்திர தாகத்தை அடக்கப் பார்ப்பது தங்க ளுக்கே ஆபத்தை யுண்டாக்குமென்பதை அனுபவவாயிலாக அறிந் தனர். சரியான தருணத்தில் சலுகைகளை அளித்து அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிலுள்ள மக்களைத் திருப்திப்படுத்தாத கார ணத்தாலும் குறுகிய நோக்கமுள்ள அடக்குமுறைக் கொள்கையை அனுசரித்ததாலும் அத்தேசங்களை அவர்கள் இழந்தனர். இந்த அனுபவத்தின் பின்னர் குடியேற்ற நாட்டு மக்கள் எப்பொழுது மாற்றம் வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார்களோ அப்பொழுதே அவர்களுக்குத் தாராளமாகச் சலுகைகளை வழங்கி அவர்களைத் திருப்திப்படுத்திவந்தனர். இராணுவ பலத்தையும் அதிகாரத்தை யும் பயன்படுத்திக் குடியேற்ற நாட்டு மக்களின் அபிலாஷைகளை நசுக்கி விடாமல் சிநேக பாவத்தினுலும் தாராளமான மனப் பான்மையினுலும் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக் கிணங்கி நடந்தனர். இதன் பயனுக அந்நாடுகள் பிரித்தானியா வுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தன. இக்கொள்கையைப் பிரித் தானியர் தமது சொந்த மக்கள் குடியேறிய நாடுகளில் முதலில் அனுசரித்து வந்தார்கள். எனவே, கனடா, அவுஸ்திரேலியா, தென்னுபிரிக்கா, நியுசீலந்து ஆகிய தேசங்களுக்குச் சுய ஆட்சி வழங்கப்பட்டது. இத்தேசங்கள் தாய் நாடாகிய பிரித்தானியாவை விட்டு, எப்பொழுதாவது விலகக்கூடு மென்ற பயம் பிரித்தானிய மக்களுக்கு இருக்கவில்லை. இந்தத் தொடர்பும் பிரித்தானிய மன்னரிடத்துள்ள பக்தியும் இந்நாடு களைத் தாய்நாட்டுடன் எப்பொழுதும் இணைத்து வைத்திருக்கு

மென பிரித்தானிய அரசியல் விற்பன்னர் கருதினர். எனவே, சுய இராச்சியப் பாதையில் சுதந்திரமாக அவர்கள் அரசியலில் முன்னேற்ற மடையப் பிரித்தானியா அவர்களுக்குப் போதிய வசதியளித்தது.

## வெள்ளை மக்களின் குடியேற்ற நாடுகள் :

பிரித்தானிய பொதுநல அரசுக்குட்பட்ட தேசங்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். முதலாவது வெள்ளை மக்கள் குடியேறிய கனடா, தென்னுபிரிக்கா, நியூசீலந்து ஆகிய தேசங்களை எடுத்துக் கொள்வோம். இவை ஐரோப்பிய மக்களின் குடியேற்றங்களாகும். தாய் நாடாகிய பிரித்தானியா இத்தேசங்களுக்குப் படிப்படியாகச் சுய ஆட்சியை வழங்கிற்று அமெரிக்காவில் குடியேறிய ஆங்கிலேயரின் நியாயமான உரிமைகளை மறுத்ததன் பயனுக இங்கிலாந்து தனது சாம்ராச்சிய நாடுகளிலொன்றை இழந்தது. அமெரிக்கக் குடியேற்றங்கள் விடயத்தில், ஒவ்வொரு நாடும் தனது சொந்தப் பிரதிநிதிகள் சபையை ஏற்படுத்திச் சுயாட்சி நடத்த அனுமதித்தது. நிர்வாக விடயத்தில் மாத்திரம் பிரித்தானிய அரசாங்கத்துக்குப் பொறுப்புள்ள பிரித்தானிய தேசாதிபதிகள் கையில் இராச்சியப் பரிபாலனப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆனுல், இம்முறை தோல்வியடைந்தது. பிரித்தானிய அரசாங்கம் இக்குடியேற்றங்களின் பிரதிநிதிகளுடைய சம்மத மில்லாமல் வரி விதிக்கத் துவங்கியதும் நாட்டிற் குழப்பமுண்டானது எனவே 1783-ம் ஆண்டில் வட அமெரிக்கக் குடியேற்றங்கள் பிரித்தானியாவை விட்டுப் பிரிந்து தனியாட்சி நடத்தும் நாடுகளாக விளங்கின. பிரித்தானியாவின் முதல் ஏகாதிபத்தியம் இவ்வாறு முடிவுற்றது. தாய் நாட்டுக்கும் அதை அண்டியுள்ள வெள்ளை மக்களின் குடியேற்றங்களுக்குமிடையே பரஸ்பர நட்பும் சிநேக பாவமுமிருக்க வேண்டும். அக்குடியேற்றங்களை அடிமை நாடுகளாகக் கருதி அடக்கி யாளத் தொடங்கினுல் குழப்பமுண்டாகும். அது குறுகிய நோக்கமுடைய அரசியற் கொள்கையாகுமென்பதை ஆங்கிலேயர் விரைவில் அறிந்து கொண்டனர்.

குடியேற்ற நாடுகளின் அரசியல் வளர்ச்சியின் இரண்டாவது கட்டம் 1837-ம் ஆண்டிலே விக்ரோறியா மகாராணியாரின் ஆட்சிக் காலத்திலே தொடங்கிப் பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம் நிறைவேற்றப்பட்ட 1867-ம் ஆண்டுவரை நிகழ்ந்ததெனலாம். குடியேற்ற நாடுகளில் பிரதிநிதித்துவச் சபைகள் இருந்தமை போலவே நிர்வாக விடயத்திலும் சுதேச மக்கள் பங்கு பற்ற வேண்டுமெனப் பிரித்தானிய இராச தந்திரிகள்

உணர்ந்தனர். இதனுல் தேசாதிபதிகளை இங்கிலாந்திலிருந்து பிரித்தானிய அரசாங்கம் குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பிற்று. உள்நாட்டு நிர்வாக விடயத்தில் குடியேற்றநாடுகளுக்குப் பூரண சுதந்திரமளிக்கப்பட்டது ஆனுல், தேசாதிபதிகள் கடைசித் தருவாயில் மாத்திரம் ஓரளவுக்குக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர். இவ்வளர்ச்சியில் 1848-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட டெர்ஹாம், அறிக்கை ஒரு முக்கியமான சாசனமாகும். கனடாவில் அரசியல் விடயங்களை விசாரணை செய்யுமாறு அனுப்பப்பட்ட டெர்ஹாம், கனடாவுக்கு ஒரு பாராளுமன்றம் இருக்கவேண்டுமென்றும் அதற்குப் பொறுப்புள்ள மந்திரிகள் மூலம் கனடா தனது ஆட்சியை நடத்தலாமென்றும் வெளி விவகாரம், இராணுவம், வெளிநாட்டு வியாபாரம் முதலிய விடயங்களில் மாத்திரம் கட்டுப்பாடு இருக்கலாமென்றும், இம்மூன்று விடயங்களிலும் பிரித்தானியா கனடாவை மேற்பார்வைசெய்யலாமென்றும் அறிக்கை வெளியானது. ஆனுல், காலகதியில் கனடா இவ்விடயங்களிலும் சுதந்திரம் அடைந்தது. எனவே, 1931-ம் ஆண்டில் உவெஸ்ற் மினிஸ்டர் சாசனப்படி கனடாவைச் சுதந்திரதேசமாகப் பிரித்தானிய அரசாங்கம் பிரகடனஞ் செய்தது. மற்றக் குடியேற்ற நாடுகளும் விரைவில் கனடாவைப் பின்பற்றின.

மூன்ருவது கட்டம் 1867-ம் ஆண்டில் ஆரம்பமாகி 1909-ம் ஆண்டில் முடிவடைந்தது. இக்காலப்பகுதியில் கனடா, அவுஸ்திரேலியா, தென்னுபிரிக்கா ஆகிய தேசங்கள் சமஷ்டி ஆட்சிக்குட்பட்டன. 1867-ம் ஆண்டு பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டப்படி கனடா ஒரு சமஷ்டி அரசாங்கமாயிற்று. 1900-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டப்படி அவுஸ்திரேலியாவும் பொதுநல அரசு என்ற நாமத்தோடு ஒரு சமஷ்டி அரசாங்கமாக்கப்பட்டது. 1909-ம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டப்படி தென்னுபிரிக்காவிலுள்ள நான்கு குடியேற்றங்களும் ஒரு சமஷ்டியிற் சேர்ந்து தென்னுபிரிக்க ஐக்கிய தேசமெனப் பெயர் கொண்டது.

நான்காவது கட்டம் 1917-ம் ஆண்டு ஆரம்பமாயிற்று. இக்கட்டத்திற் புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்பட்டன. இந்நான்கு குடியேற்ற நாடுகளும் பூரண சுதந்திரம் பெற்ற தனி நாடுகளாகச் சர்வதேச மகாநாடுகளினுல் கருதப்பட்டன. சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகித்தன. வேர்சேல்ஸ் உடன்படிக்கையில் தனிப்பட்ட தேசங்களாக ஒப்பமிட்டன. அந்நிய தேசங்களுக்குத் தங்கள் சொந்தத் தானீகர்களை நியமித்தன. அத்தேசங்களிலிருந்து வரும் இராச தந்திரிகளைத் தங்கள் நாட்டில் அனுமதித்தன.

அந்நிய நாடுகளுடன் தனிப்பட்ட உடன்படிக்கைகள் செய்து கொண்டன. 1926-ம் ஆண்டில் இவ்வகையில் கனடா ஐக்கிய அமெரிக்காவுடன் செய்து கொண்ட ஹலிபட் உடன்படிக்கையை உதாரணமாகக் காட்டலாம். இம் முக்கியமான அரசியல் மாற்றங்களுக்கெல்லாம் பல்பர் என்பவர் 1927-ம் ஆண்டில் செய்த பிரகடனம் இடமளிக்கிறது அது பின்வருமாறு :-

இக்குடியேற்ற நாடுகள் ஏகாதிபத்தியத்திற் குட்பட்ட சுதந்திர நாடுகளாகும். எல்லா வகையிலும் அவை ஒன்றுக்கொன்று சமமான அந்தஸ்துடையவை. உள்நாட்டு விடயங்களிலோ வெளிநாட்டு விடயங்களிலோ எந்த அமிசத்திலும் அவை ஒன்றுக்கொன்று குறைந்தவையல்ல. ஆனால் ஒரே குடையின் கீழ் அடங்கியவை. ஒரே மன்னருக்கு விசுவாசமுடையவை. பிரித்தானியப் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்தில் சுதந்திரமான தொடர்புள்ள அங்கத்துவம் வகிப்பவையாகும்.

1867-ம் ஆண்டு தொடக்கம் 1930-ம் ஆண்டுவரை குடியேற்ற நாடுகள் எவற்றை யெல்லாம் சாதித்தனவோ அவற்றிற்குச் சட்டமுறையில் அங்கீகாரம் அளிக்க உண்டான சாசனமே 1931-ம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட, உவெஸ்ற்மினிஸ்டர் சாசனமாகும். உள்நாட்டு நிர்வாகம் வெளிநாட்டு விவகாரம் என்பவற்றிலெல்லாம் குடியேற்ற நாடுகளுக்குப் பூரண சுதந்திரமிருப்பதைப் பிரித்தானிய பாராளுமன்றம் அங்கீகரித்தது. பிரித்தானியாவுக்கும் தமக்குமிடையேயுள்ள தொடர்புக் கறிகுறியாக பிரித்தானிய சக்கரவர்த்தியைக் குடியேற்ற நாடுகள் ஏற்றுக்கொண்டன. வெளிநாட்டு விவகாரம் சம்பந்தமான கருமங்களில் அவை தாம் ஆலோசனை செய்து ஒற்றுமையாகக் கருமங்களை நடத்தும். பிரித்தானிய சட்டங்களுக்கு முரண்பட்டவையாக விருந்தபோதிலும் தமக்கு நன்மை பயக்கக்கூடிய சட்டங்களை இயற்றிக் கொள்ளவும் உவெஸ்ற் மினிஸ்டர் சாசனம் அதிகாரம் அளித்தது குடியேற்ற நாடுகள் சம்பந்தமாகப் பிரித்தானியா நிறைவேற்றியுள்ள சட்டங்களை நீக்கிவிடவும் அவைக்கு உரிமை யளிக்கப்பட்டது. மேலும், குடியேற்ற நாடுகள் தத்தம் தேசங்களைச் சுற்றியுள்ள கடல்களில் கப்பற் போக்குவரத்து நடத்தவோ வேறு நடவடிக்கைகள் எடுக்கவோ தனிப்பட்ட முறையில் சட்டமியற்றவும் அதிகாரம் வழங்கப்பட்டது. பிரசா உரிமை சம்பந்தமாகவும் குடியேற்றம் சம்பந்தமாகவும் சட்டமியற்றவும் அவற்றிற்கு உரிமையுண்டு. ''பிரிவிக் கவுன்சில்'' என்ற பிரித்தானிய நீதி மாமன்றத்துக்கு முறையீடு செய்யும் முறையை

ஒழிக்கவும் அவற்றிற்கு உரிமையுண்டு. மேலும், அந்நிய நாடுகளில் இராச தந்திரிகளை நியமிக்கவும் தமக்குச் சொந்தமான அரச முத்திரைகளையும் விருதுகளையும் அமைக்கவும், தமது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களை அமுல் நடத்த தமது மகாதேசாதிபதிக்கு அதிகாரம் வழங்கவும், தாம் தெரிந்தெடுத்த ஒருவரை மகாதேசாதிபதியாக நியமிக்குமாறு மன்னர்பிரானை வேண்டிக்கொள்ளவும், யுத்தப் பிரகடனஞ் செல்யவும், சமாதான உடன்படிக்கைகள் செய்துகொள்ளவும், விரும்பினால் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்திலிருந்து விலகிக்கொள்ளவும் அவற்றிற்கு உரித்துண்டு. எனவே குடியேற்ற நாடுகள் பூரண சுதந்திரமுடையன பிரித்தானியாவின் தலையீடெதுவுமின்றித் தாம் நினைத்தபடி கருமங்களைச் செய்ய அவை எல்லா அதிகாரமுமுடையனவென்பது இதுவரை கூறியவற்றால் தெற்றெனப் புலப்படும்.

## ஆசியக் குடியேற்ற நாடுகள் :

பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்தில் ஆசிய நாடுகள் வகிக்கும் தானம் ஒரு தனிப் பிரிவைச் சேர்ந்ததாகும். அதற்கொரு காரணம் அவை முற்றும் வேறான இன மக்களைக்கொண்டமை. மேலும் அவற்றின் சனத்தொகை வெள்ளைக் குடியேற்ற நாடுகளிலும் பார்க்க மிக அதிகமானதாகும். அன்றியும், அக் குடியேற்ற நாடுகளைப்போல ஆசியக் குடியேற்றநாடுகள் சிறிது சிறிதாக முன்னேறிப் பூரண சுதந்திரத்தை அடையவில்லை. உதாரணமாக இந்தியா, பாகிஸ்தான், பர்மா ஆகியநாடுகள் போராடியே தமதுசுதந்திரத்தைப்பெற்றன. இலங்கை அதற்கொரு புறநடையாகும். பர்மாஇச்சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கவில்லை. பிரித்தானியா இத்நாடுகளை அடிமை நாடுகளாக நடத்தியதோடு தனது தொழிற்சாலைகளுக்கும் கைத்தொழில் நிலையங்களுக்கும் மலிவான மூலப்பொருள்களை வழங்கும் தேசங்களாகவும் தான் உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பனைசெய்வதற்குச் சந்தைகளாகவும் கருதிவந்தது. இதனால் இந்நாடுகளுக்கு அரசியற் சலுகைகளைக் கொடுப்பதில் பிரித்தானியா தயங்கிற்று. அது தானாக விரும்பி இந்நாடுகளுக்குச் சுதந்திரமளிக்கவில்லை. சர்வதேச நிர்ப்பந்தத்தின் பயனாகவும் இந்நாடுகளின் தேசீய அபிலாஷைகளை மேலும் அடக்கி வைத்திருக்க முடியாதென்ற எண்ணத்தினாலும் அப்படி அடக்குவதானால் இராணுவ பலத்தைக் கொண்டே அடக்கிவைத்திருக்க வேண்டுமென்ற சங்கடத்தாலும் இந் நாடுகளுக்குச் சுதந்திரத்தையளித்தது. அடிமை நாடுகளாகவிருந்த இத்தேசங்கள் திடீரென்று மற்றக் குடியேற்ற நாடு

களின் அந்தஸ்தைப் பெற்றன இம் மாற்றம் வெள்ளைக் குடியேற்ற நாடுகளைப் போலச் சிறிது சிறிதாக உண்டாகாமல் திடீரென்று உண்டாகியது. இதற்குக் காரணம் பிரித்தானிய அரசாங்கத்தின் தாராள மனப்பான்மையன்று. அதிகாரத்தைக் கைவிடும் வண்ணம் உலக சம்பவங்கள் அதனை நிர்ப்பந்தப்படுத்தின. எனவே, இலங்கையைத் தவிர, மற்றைய ஆசிய நாடுகள் பொதுநல அரசுக்குட்பட்டிருக்க ஆசைப்படுவதாகக் காணப்படவில்லை. இந்தியா குடியரசாகி, தனது சொந்த நலனைப் பெரிதும் உத்தேசித்து பொதுநல அரசியல் அங்கம் வகித்து வருகின்றது. பாகிஸ்தானும் குடியரசை அமைக்க உத்தேசிக்கின்றது. பர்மா சுதந்திரம் பெற்றவுடன் பிரித்தானியாவுடன் உள்ள தொடர்புகள் யாவையும் துண்டித்துக்கொண்டது. இலங்கை மட்டுமே பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ள விரும்புகின்றது. ஆனால், இவ்விருப்பத்திற்குக் காரணம் சுயநலமேயன்றி வெள்ளைக்குடியேற்றநாடுகளுக்குப் பிரித்தானியாவுடன் உள்ளது போன்ற உறவின் காரணமாகவோ பற்றுக் காரணமாகவோ உணர்ச்சி காரணமாகவோ அன்று.

ஆசியக் குடியேற்ற நாடுகள் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்தில் அங்கம் வகிப்பதால் புதிய பல பிரச்சினைகள் கிளம்பியிருக்கின்றன. அவற்றின் அரசியல் நோக்கு வெள்ளைக் குடியேற்ற நாடுகளின் நோக்கிலும் வித்தியாசமானது. உதாரணமாக தென்னாபிரிக்காவில் மலான் அனுட்டித்து வந்த இனக்கொள்கைகளை ஆசியக் குடியேற்ற நாடுகள் கண்டித்திருக்கின்றன, வெளிநாட்டு விவகார விடயத்தில் சீனாவைப் பொறுத்தவரையில் இந்திய சம்பவங்களோடு நெருங்கிய தொடர்புள்ளதும் சிநேக பாவமுமான கொள்கையை அனுட்டிக்க வேண்டுமென விரும்புகிறது. மேலும், சோவியத் கட்சியைச் சேர்ந்த நாடுகளும் மேற்றிசை வல்லரசுகளும் யுத்தத்திலீடுபட்டால், தான் நடுநிலைமை வகிக்குமென்றும் கூறிவந்திருக்கிறது. இலங்கையும் அவ்வாறே சீனாவோடு சிநேக பாவமான கொள்கையை அனுட்டித்து வருவதோடு வியாபார உடன்படிக்கை யொன்றையும் செய்து கொண்டது. இதைப்பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் வரவேற்றுமிருக்கின்றன. காஷ்மீரம் விடயத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் அபிப்பிராய பேதமுண்டு. இலங்கையிலுள்ள இந்தியருக்குப் பிரசா உரிமை வழங்கும் விடயத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கருத்து வேற்றுமையுண்டு. கனடா, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியுசீலந்து போன்ற வெள்ளைக் குடியேற்ற நாடுகள் பொதுநல அரசுக்குட்பட்ட சம்மேளனத்தில் அங்கத்துவம் வகித்த காலத்தில் முக்கியமான சர்வ

தேசப் பிரச்சனைகள் பற்றி எழும் கருத்து வேற்றுமைகளைக் கூடிய அளவுக்குக் குறைத்து, சில விடயங்களில் ஏகோபித்த அபிப்பிராயத்தைக் கூடத் தெரிவித்தன. ஆனால் ஆசிய தேசங்கள் இச் சம்மேளனத்திற் சேர்ந்ததும் இத்தகைய அபிப்பிராய ஒற்றுமை குறைவதாயிற்று. பல விடயங்களில் இப்பொழுது அபிப்பிராய வேற்றுமைகளுண்டு. கலந்து பேசுவதனாலும் அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொள்ளுவதனாலும் இவ் வேற்றுமைகளைக் குறைப்பதற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால், ஒற்றுமையுண்டாவதற்கு இன்னும் அதிக இடமுண்டு. முன்னிருந்த ஒருமைப்பாடு இப்பொழுது இல்லையென்று கூறவேண்டும்.

## குடியேற்ற இராச்சியங்களின் ஏகாதிபத்தியம் :

பிரித்தானிய பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்தில் பிரித்தானிய குடியேற்ற இராச்சியங்கள், மூன்றாவது பகுதியாகும். அரசியல் துறையில் இவை முன்னேற்றமடையவில்லை. கெனியா, மலாயா போன்ற நாடுகளில் பிரித்தானிய ஆட்சிக்கெதிரான கிளர்ச்சிகள் உண்டாகி வருகின்றன. இவை இராணுவ பலத்தால் அடக்கப்படுகின்றன. நைஜீரியா, மேற்கிந்தியத் தீவுகள், பிரித்தானிய கயனா, மோல்டா ஆகிய தேசங்களில் பலம்பொருந்திய தேசீயக் கிளர்ச்சிகள் உண்டாகியிருக்கின்றன. பிரித்தானிய அரசாங்கம் இத்தேசங்களில் ஓரளவுக்குப் பொறுப்பு வாய்ந்த ஆட்சி முறையைச் சுதேசிகளுக்கு வழங்கியிருக்கிறது.

### (அ) முடிக்குரிய குடியேற்றங்கள் :

குடியேற்ற ஏகாதிபத்தியத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று, முடிக்குரிய குடியேற்றங்கள். இவை போரில் வெற்றி கொள்ளப்பட்டனவாகவும், வேறு தேசங்களினால் வழங்கப்பட்டனவாகவும், குடியேறிச் சுவீகரிக்கப்பட்டனவாகவுமிருக்கும். இவற்றில் இலங்கையும் மோல்டாவும் முடிக்குரிய குடியேற்றங்களாகும். இலங்கை இன்று பூரண சுதந்திரமடைந்திருக்கிறது. மோல்டா விரைவில் அந்நிலையையடையும் பக்குவமெய்தியிருக்கிறது.

### (ஆ) பாதுகாப்பு நாடுகள் :

இவற்றைவிடப் பாதுகாப்பு நாடுகளென ஒரு பிரிவுண்டு. மலாயா தீபகற்பத்திலுள்ள சில சுதேச சமஸ்தானங்களும் மத்திய ஆபிரிக்காவிலுள்ள சில சாதியினரும் பிரித்தானியாவின்

பாதுகாப்பில் இருக்கின்றன. இந்நாடுகளில் சுதேச அரசர்களா யுள்ளவர் ஆட்சி நடத்துவர். வெளிநாட்டு விவகாரங்கள் பிரித் தானிய அரசாங்கத்தின் மேற்பார்வையிலிருக்கும். உள்நாட்டு நிர்வாகம் அவ்வத்தேசத்துத் தலைநகரில் வசிக்கும் ஒரு பிரித் தானிய அதிகாரியின் மேற் பார்வையிலிருக்கும். எனவே, இவை உண்மையில் பிரித்தானியாவின் குடியேற்றங்களேயாகும். முடிக் குரிய குடியேற்றங்களில் பிரித்தானிய அதிகாரிகள் நேரே ஆட்சி நடத்துவர். பாதுகாப்பு நாடுகளில் அவ்வந்நாட்டு அரசர்கள் மூலம் ஆட்சி நடைபெறும். பிரித்தானிய அதிகாரிகளின் ஆலோ சனையை அவர்கள் எப்பொழுதும் சிரமேற் கொண்டொழுக வேண்டும். இல்லையேல் பதவிக்கு ஆபத்தேற்படுவது திண்ணம்.

## தர்மகர்த்தா நாடுகள் :

தர்ம கர்த்தா பரிபாலனத்தில் கைவிடப்பட்ட நாடுகள் சில வுண்டு. இவை ஒரு காலத்தில் கட்டளைக் குட்பட்ட பிரதேசங் களென வழங்கப்பட்டன. 1914-ம் ஆண்டு தொடக்கம் 1918-ம் ஆண்டு வரை நடைபெற்ற முதலாவது உலக மகா யுத்தத்தின் பின் சர்வதேசச் சங்கம் அந்த யுத்தத்தில் வெற்றி பெற்ற நாடு களைத் தர்ம கர்த்தாக்களாக நியமித்து அவற்றின் பரிபாலனத்தின் கீழ்ச் சில தேசங்களை ஒப்படைத்தன. ஈராக், திரான்ஸ்யோடான், தங்கனைக்கா என்பன பிரித்தானியாவின் பரிபாலனத்தின் கீழ் விடப்பட்ட தேசங்களாகும். பிரித்தானியா இந்நாடுகளை அந்நிய நாடுகளால் வரக்கூடிய ஆபத்திலிருந்து பாதுகாக்க வேண்டியிருந்தது. மேலும், இவற்றின் வெளிநாட்டு விவகாரங்களைக் கவனிக்கவும் வேண்டியிருந்தது. உள்நாட்டு நிர் வாகத்திலும் உதவி புரிந்து அவற்றைச் சுயாட்சிப் பாதையில் நடத்த வேண்டியதாயிற்று. ஈராக்கும் திரான்ஸ்யோடானும் சுதந்திர ஆட்சி நடத்தத் தகுதியுடையன வென்று கொஞ்சக் காலத்தில் பிரித்தானியா உணர்ந்து தர்ம கர்த்தா பரிபாலனத் திலிருந்து அவற்றை நீக்கிவிடவேண்டுமெனச் சர்வதேசச் சங்கத் திற்குச் சிபார்சு செய்தது.

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்த பின்னர் அச்சு வல்லரசுகளிடம் ஒப்படைக்கப்பட்ட நாடுகள் தர்மகர்த்தா நாடுகளென வழங்கப்பட்டன. அவை ஐக்கிய நாட்டுச் சங்கத்தின் பாதுகாப்பிலிருக்கின்றன. பிரித்தானியா, ஐக்கியநாட்டுச் சங்கத்தின் காரியாதிகாரியாக இருந்து வருகிறது. மேற்கூறிய தேசங்கள் தர்மச் சொத்தாகக் கருதப் படுகின்றன. பிரித்தானிய அரசாங்கம் அந்நாட்டு மக்களைச் சுயஆட்சி முறை

யில் பழக்குவதுடன் ஒரு காலத்தில் அவை சுதந்திரமடையவும் தகுதி பெறக்கூடிய வகையில் பயிற்றவும் வேண்டியதாயிற்று. மேலும், அந்நாடுகளில் நடந்த முன்னேற்றத்தைப்பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்க ஐக்கிய நாட்டுத் தர்ம கர்த்தாச் சபைக்கு அதிகாரமுண்டு. அத்துடன் அந்நாடுகளிலுள்ள நிலைமையை ஆராய்ந்தறிய விசாரணைச்சபைகளை அனுப்பவும் உரிமையுண்டு. ஒரு தேசம் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட நாடுகளை நல்ல முறையில் பரிபாலிக்காவிட்டால் அத்தேசத்திற்குப் பதிலாக வேறொரு தேசம் நியமிக்கப்படலாம். இப்பொழுதுள்ள தர்ம கர்த்தா நாடுகளில் பெரும்பாலானவை பிற்போக்கான நிலைமையிலிருக்கிறபடியால் தர்மகர்த்தாக்களாகவிருக்கும் தேசங்கள் அவற்றைச் சுரண்டுவதற்கு வசதிகளுண்டு.

குடியேற்ற நாடுகளின் அரசியல் அந்தஸ்து அவ்வந் நாட்டுக்கேற்றவாறு வித்தியாசப்படும். தெற்கு உரோடீஷியா, மேற்கிந்தியத் தீவுகள் என்பன போன்ற குடியேற்ற நாடுகளில் ஓரளவுக்குப் பொறுப்புள்ள சுய ஆட்சியுண்டு. தேர்தல் மூலம் நிறுவப்பட்ட பாராளுமன்றமும் அதற்குப் பொறுப்பு வாய்ந்த மந்திரிசபை ஆட்சியும் அத்தேசங்களிலுண்டு. தேசாதிபதி அரசியல் நிர்வாகத்தை மேற்பார்வை செய்வார். மந்திரிசபை தனது அதிகாரத்தை வீண்பிரயோகம் செய்கிறதென அல்லது பொறுப்பற்ற முறையில் நடக்கிறதெனத் தெரிந்தால் தேசாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்துவார். இத்தகைய நாடுகளின் அரசியல் அந்தஸ்து பூரண சுதந்திரம் பெற்ற குடியேற்ற நாட்டின் அந்தஸ்துமன்று. அரசுக்குரிய குடியேற்ற நாடுகளின் சுதந்திரமற்ற அந்தஸ்துமன்று. இவை இரண்டுக்குமிடைப்பட்ட ஓரந்தஸ்தாகும். இவற்றின் அரசியல் அந்தஸ்தைப் பின்வரும் விடயங்களைக் கொண்டு தீர்மானிக்கலாம் :—

(அ) பாராளுமன்றத்து அங்கத்துவம் எவ்வளவு தூரம் தேர்தலில் தங்கியிருக்கிறது. எவ்வளவு தூரம் நியமனத்தில் தங்கியிருக்கிறது.

(ஆ) பாராளுமன்றங்களுக்குள்ள அதிகாரங்கள்.

(இ) தேசாதிபதிக்கிருக்கும் அதிகாரங்களும் அந்தஸ்தும்.

இதிற் கவனிக்க வேண்டிய ஒரு முக்கியமான விடயம் என்னவெனில் பாராளுமன்றத்துக்கிருக்கும் அதிகாரங்களிலும் பார்க்க அதிகமான அதிகாரம் தேசாதிபதிக்கு இருப்பதேயாகும்.

இவற்றைவிட எஞ்சியுள்ள அரசுக்குரிய குடியேற்ற நாடுகளில் பொறுப்பாட்சி கொஞ்சமும் கிடையாது. அங்கே தேசாதிபதி ஓர் ஆலோசனைச் சபையின் உதவியோடு அரசியல் நிர்வாகம் முழுவதையும் நடத்துவார். தேசாதிபதி குடியேற்ற நாட்டு மந்திரிக்கும் பொறுப்புடையவராவார். அவர் தமது ஆலோசனைச் சபையின் ஆலோசனையை எப்பொழுதும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் கிடையாது. ஆனால், அவ்வாறு ஏற்றுக் கொள்ளாத தருணங்களில் அதற்குரிய காரணங்களைக் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு விளக்கவேண்டியது அவசியமாகும்.

## கருத்துக்களும் இலட்சியங்களும் :

இதுவரை கூறியவற்றால் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் இரண்டுவகைப்படுமென்பது தெளிவாகும், ஒன்று, ஒருகாலத்தில் குடியேற்ற நாடுகளெனப் பெயர்பெற்று இப்பொழுது பூரண சுதந்திரம் பெற்றிருக்கும் நாடுகள். இவை அங்கத்துவ நாடுகள் என்றழைக்கப்படும். இரண்டாவது, சுய ஆட்சியில் பல படிகளிலிருக்கும் குடியேற்றப் பிரதேசங்கள். இவை பிரித்தானியாவில் உற்பத்தியாகும் பொருள்கள் விற்பனையாவதற்கேற்ற சந்தைகளாகும். மேலும், பிரித்தானியாவிலுள்ள கைத்தொழில் நிலையங்களுக்குத் தேவைப்படும் மூலப் பொருள்களை மலிவாகக் கொடுக்கக் கூடியனவுமாயிருக்கின்றன. இக் குடியேற்றப் பிரதேசங்களின் இலட்சியம் பூரண அரசியற் சுதந்திரம் பெறுவதேயாகும். இவை பூரண சுதந்திரம் பெறுவது பிரித்தானியாவிலுள்ள குடியேற்றநாட்டுமந்திரியின் காரியாலயஅதிகாரிகளின் நல்லெண்ணத்தையும் விவேகத்தையும் பொறுத்ததாகும். ஆனால் உலக அரசியலில் மாற்றம் ஏற்பட்டாலன்றி, அவர்கள் தமது அதிகாரத்தை இலேசில் கைநழுவ விடமாட்டார்கள். ஆனால், சுதந்திர விருப்பமுள்ள மக்களையுடைய குடியேற்ற நாடுகள், பூரண சுயாட்சி பெறுவதற்குத் தாம் எப்பொழுதும் உதவி புரிய ஆயத்தமாயிருப்பதாகப் பிரித்தானிய அரசியல் தலைவர்கள் அடிக்கடி கூறியிருக்கிறார்கள். எனவே, குடியேற்ற நாடுகளும் ஒரு காலத்தில் தாங்கள் பூரண சுதந்திரமடைய முடியுமென எதிர்பார்க்க இடமுண்டு. அவ்வாறு பூரண சுதந்திரமடைந்த பின்னர் பிரித்தானிய பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்தில் அங்கம் வகிப்பதா அல்லது அயர்லாந்து, பர்மா ஆகிய தேசங்களைப்போல, பொதுநல அரசுக்குட்பட்டநாடுகளின் சம்மேளனத்திற் சேராமல் தனித்து நிற்பதா என்பதை அவை நிச்சயித்துக்கொள்ளலாம்.

ஒன்றுக்கொன்று எதிரான இலட்சியங்களையுடைய அரசுகளும் மாறுபட்டுச் சண்டை போடுந் தேசங்களும் உள்ள இவ்வுலகத்தில் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் ஒற்றுமையாக இருப்பதற்குச் சில முக்கிய காரணங்களுண்டு. அவையாவன : இனத் தொடர்பு, அதனாலுண்டாகும் உறவு, சில கருத்துக்கள் இலட்சியங்கள் என்பவற்றிலுள்ள பற்று, பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்தைச் சேர்ந்த தேசங்களுக்கெல்லாம் பொதுவாயுள்ள தாபனங்களினால் உண்டாகும் ஒற்றுமைக்கேதுவான சக்தி, அங்கத்துவம் வகிப்பதனால் பொருளாதாரத்துறையிலும் அரசியற்றுறையிலும் ஏற்படக்கூடிய நன்மை. வெள்ளைக்குடியேற்ற நாடுகள் இச்சம்மேளனத்தில் ஒன்று சேர்ந்ததற்கு முக்கிய காரணம், இன ஒற்றுமையும் எல்லாருக்கும் பொதுவான ஒரு அரசனுமாகும். வெள்ளைக் குடியேற்ற நாடுகளில் பிரித்தானியர் குடியேறினர். இவர்கள் தங்கள் தேசத்தில் நிலவிவந்த சில அரசியற் கருத்துக்களைத் தாம் குடியேறிய நாடுகளில் கைக்கொண்டார்கள். சட்டத்துக்கமைந்த வாழ்க்கையும் பிரதிநிதித்துவ அரசாங்கமும் இக் கருத்துக்களில் முக்கியமானவை, சட்டம் எல்லாருக்கும் பொதுவானது. எனவே, அதை அனுசரிக்கும் தனிப்பட்டவர்கள் சுதந்திரமுடையவர்களாயிருக்கவேண்டும். அதனால் அத்தேசம் சுதந்திரமுடையதாயிருக்கும். அடிமை நாடுகள் தமது சுதந்திரத்துக்காகக் கிளர்ச்சி செய்வது அவற்றின் பிறப்புரிமையாகும். பிரதிநிதித்துவ ஆட்சி முறை மேலானதென்ற கருத்து குடியேற்ற நாட்டு மக்களிடத்துச் சுயாட்சியில் விருப்பத்தை யுண்டாக்கியதோடு பாராளுமன்ற ஆட்சி முறையைத் தங்கள் தேசங்களில் நிறுவ வேண்டுமென்னும் உணர்ச்சியையும் பிறப்பித்தது. அமெரிக்க புரட்சியின் பயனாக பிரித்தானிய அரசாங்கம் சில படிப்பினைகளை அறிந்துகொண்டது. ஒரு நாட்டு மக்கள் சுதந்திரமடைய விரும்பினால் அதை நசுக்குவது பயனற்றதாகுமென்ற உண்மையை அறிந்த பிரித்தானிய அரசாங்கம் வெள்ளைக் குடியேற்ற நாடுகள் விஷயத்தில் அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் பின் நிற்கவில்லை. மேலும், இக்குடியேற்ற நாடுகள் சுதந்திரமடைந்தவுடன் தாய் நாட்டோடிருந்த தொடர்பை முற்றாக நீக்கிவிட விரும்பவில்லை.

இக் கருத்துக்களும் கொள்கைகளுமே ஆசியாவிலுள்ள குடியேற்ற நாடுகளையும் சுதந்திரக் கிளர்ச்சியிலீடுபடுத்தின. ஆனால் இந்நாடுகளின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதில் பிரித்தானிய அரசாங்கம் உற்சாகம் காட்டவில்லை. இக்காரணத்தினால்தான் பர்மா பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்க மறுத்துவிட்டது. இந்தியா குடியரசாகப்

பிரிந்து கொண்டதும் இதனுற்ருன். பாகிஸ்தானும் அதே அந்தஸ்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ததன் காரணமும் இதுவே. ஆசியாவைச் சேர்ந்த குடியேற்ற நாடுகளுக்குப் பிரித்தானியாவோடு இனத் தொடர்பு கிடையாது. அதனுல் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளோடு சேர்ந்திருக்க வேண்டுமென்ற உணர்ச்சி ஏற்படவில்லை. ஆனுல், இந்நாடுகள் இச்சம்மேளனத்தில் அங்கம் வகிப்பதால் தங்களுக்கு அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் நன்மை கிடைக்கக்கூடுமென எண்ணியதும் பிரித்தானிய அரசியல் ஆட்சி முறையில் அவர்களுக்கு இருந்த நம்பிக்கையுமே இவ்வொற்றுமையை உண்டாக்கியதெனலாம். பாகிஸ்தான், இந்தியா, இலங்கை ஆகிய நாடுகள் பிரித்தானிய பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்திற் சேர்ந்ததால் பல நன்மைகளைப் பெற்றன வென்பதைக் கடந்த சில வருடங்களாக நடைபெற்ற சம்பவங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம். மேலும் இந்நாடுகளுக்குப் பிரித்தானியா தொழில்நுட்ப உதவியளிப்பதோடு இந்நாடுகளுக்குப் பிரித்தானியாவிலுள்ள சொத்துக்களின் பெறுமதியைத் தனது சொந்த நாணயத்திலும் மதிப்புக் குறையாமல் வைத்திருக்கிறது.

அரசியல் நிலைமை சர்வதேச அரசியல் நிலைமையைப்பொறுத்தது. ஐக்கிய நாடுகளின் சபை வல்லரசுகளின் ஆதிக்க அரசியல் சூழ்ச்சிக்கு நிலைக்களமாயிருக்கிறது. சிறிய நாடுகள் பெரிய நாடுகளால் ஆக்கிரமிக்கப்பட்டதால் ஐ. நா. சபை ஏற்ற பாதுகாப்பைச் சிறிய நாடுகளுக்கு உதவுமென்று சொல்வதற்கில்லை. இலங்கையின் பாதுகாப்பு, வெளிநாட்டு விவகாரம் சப்பந்தமாக அது பிரித்தானியாவுடன் செய்துகொண்ட உடன்படிக்கைகள் அதற்கு நன்மை பயப்பனவாகும். அந்நிய நாடுகளில் இலங்கைக்குள்ள நலவுரிமைகளைப் பிரித்தானிய அரசாங்கம் தனது தானீகர் மூலம் கவனித்து வரும். இல்லையேல் இலங்கை தானுகவே எல்லா அந்நிய நாடுகளிலும் தனது தானீகர்களை நியமிப்பதானுல் முடியாத காரியமாகும்.

பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் தம்முட் கலந்து ஆலோசனை செய்வதன்மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கின்றன. அத்துடன் நிர்ப்பந்தமில்லாத கூட்டுறவின் பயனுகவே கருமங்கள் நடைபெறுகின்றன. அங்கம் பெறும் நாடுகள் எல்லா விடயங்களிலும் சம உரிமை உடையன. வெளிநாட்டுக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை, இராணுவப் பாதுகாப்பு என்பன சம்பந்தமாக அங்கம் வகிக்கும் நாடுகள் ஒரே அபிப்பிராயத்தைக் கொண்டிருக்கவேண்டுமென்ற நிபந்தனையுங் கிடையாது. ஒரு விடயத்தைப்பற்றி முடி

வாகத் தீர்மானிக்கு முன்னர் அங்கம் வகிக்கும் நாடுகள் பூரணமாகக் கலந்து ஆலோசிக்கும். ஆலோசனைகள் மிகக் கவனமாகவும் பயன் தரக் கூடியதாகவுமிருக்கும். சம அந்தஸ்துடைய நாடுகளிடையே நிர்ப்பந்தமில்லாத கூட்டு முயற்சி எதிர்பார்க்கப்படும். சனநாயக இலட்சியத்தை அடிப்படையாகக்கொண்ட வல்லரசுகளின் இச் சம்மேளனம் ஒப்புயர்வற்றதாகும். குறித்த ஒரு வழியிற்றான் எல்லா நாடுகளும் நடந்துகொள்ள வேண்டுமென்ற நிபந்தனை சிறிதும் கிடையாது. பிரான்சிஸ் வில்லியம்ஸ் என்பவர் குறிப்பிட்டதுபோலப் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் மகாநாடு கூடும்பொழுது பழைய நண்பர்களைப்போல ஒன்றுகூடி விடயங்களை அந்நியோன்னியமாகக் கலந்தாலோசிப்பார்கள். அவ்வாறு செய்த பின்னர் தம் நாடு திரும்பியதும் மற்றத் தேசங்களுக்குப் பாதகமான கொள்கைகளைக்கூட நடைமுறைக்குக் கொண்டு வருவார்கள். இன உறவு காரணமாகவோ, பொருளாதார அரசியல் அபிவிருத்தியை முன்னிட்டோ அங்கம் வகிக்கும் நாடுகள் ஒன்று சேர்ந்தபோதிலும், அவர்கள் தம்மெண்ணப்படி நடந்துகொள்ளப்போதிய உரிமையுண்டு. எந்த நாடாவது ஒரு மத்திய அதிகாரபீடத்தின் விருப்பப்படி நடக்க வேண்டிய நிர்ப்பந்தங் கிடையாது.

## ஒன்பதாம் அத்தியாயம்

# குடியேற்ற நாட்டந்தஸ்து என்பதன் பொருள்

குடியேற்ற நாட்டந்தஸ்து என்பது சக்தி வாய்ந்த ஒரு அம்சத்தைக் குறிப்பதாகும். 1926-ம் ஆண்டில் பல்பூர் என்பவர் அதற்கு ஒரு விளக்கம் கொடுத்தார். அதுவே உலகெங்கும் கொண்டாடப்பட்ட விளக்கமாகும். பின்னர் 1931-ம் ஆண்டில் உவெஸ்றமினிஸ்றர் சாசனத்தில் அதற்குச் சட்டபூர்வமான விளக்கங் கொடுக்கப்பட்டது. பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளில் தேசத்துக்குத்தேசம் குடியேற்ற நாட்டந்தஸ்தைப்பற்றி வித்தியாசமுண்டு. ஒவ்வொரு நாட்டிலும் அதன் பூரண சுதந்திரம் பற்றிப் பெயரளவிற் கட்டுப்பாடுண்டு. இருந்தும் ஒரு பொது அந்தஸ்தை நாம் கருத்திற்கொள்ள இடமுண்டு. சட்டப்படி இன்றும் சில கட்டுப்பாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் இவை ஏட்டுச்சுரைக்காய் போலப் பயனற்றவை. உண்மையான அரசியல் நடைமுறையில் செல்லுபடியாகாதவை.

உள்நாட்டு விவகாரங்களில் பூரண சுதந்திரமுள்ள ஓராட்சி, குடியேற்ற நாட்டந்தஸ்துள்ள ஓராட்சியெனலாம். வெளிநாட்டு விவகாரங்களிலும் மற்றத் தேசங்களோடு சம அந்தஸ்தும் பூரண சுதந்திரமும் குடியேற்ற நாட்டந்தஸ்துள்ள நாடுகளுக்குண்டு. இவற்றோடு பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்துக்கு மன்னர்பிரானே தலைவராகக் கருதப்படுவார். இதைக்குடியேற்ற நாட்டந்தஸ்துடைய அரசுகள் ஒப்புக்கொள்ளும். அத்துடன், மற்ற அங்கத்துவ நாடுகளோடும் சுதந்திரமாகத் தொடர்பு வைத்துககொள்ளுவதற்கு அவற்றிற்குரிமையுண்டு.

### உள்நாட்டு விவகாரங்கள் :

உள்நாட்டு விவகாரங்களில் பூரணமான சுயாட்சி யென்றால் என்ன ? ஒரு தேசத்துப் பாராளுமன்றம் தான் நினைத்தபடி சட்டஞ் செய்யவும் வேறு அரசு எவ்வித சட்டத்தையும் அதன்மீது, புகுத்தாதிருக்கவும், தான்செய்த சட்டங்களைத்தானே விருப்பப்படி நீக்கிக்கொள்ளவும் உரிமைபெற்றிருப்பதே பூரண சுயாட்சியாகும். அதாவது, எந்தப் பிரசைகளைக் குறித்து ஒரு குடியேற்ற நாடு சட்டஞ் செய்கிறதோ அப்பிரசைகள் எல்லோரும் அச்சட்

டத்தினால் கட்டுப்பட்டவர்களாவார்கள். குடியேற்ற நாடுகள் இவ்வாறு சட்டமியற்றுவதற்கு உரிமையுண்டென்பது உவெஸ்ற் மினிஸ்றர் சாசனத்தில் காட்டப்பட்டிருக்கிறது. பிரித்தானிய பாராளுமன்றத்தினால் செய்யப்பட்ட சட்டங்களுக்கு மாறானவை யென்ற காரணத்தினால் குடியேற்ற நாட்டுப் பாராளுமன்றம் செய்த சட்டங்களெவையும் செல்லுபடி யாகாதவையெனக் கூறமுடியாது. இக்கருத்து உவெஸ்ற் மினிஸ்றர் சாசனத்தின் 2-வது பிரிவிற் காணப்படுகிறது, பிரித்தானிய பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டமெதுவேனும் குடியேற்ற நாட்டுப் பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டங்களுக்கு முரணாக இருக்குமானால் அம்முரணான சட்டத்தைக் குடியேற்ற நாட்டுப் பாராளுமன்றம் நிராகரித்து விடலாம். இந்த விதியைக்கொண்டு தான் அயர்லாந்து, தென்னாபிரிக்கா, கனடா ஆகிய குடியேற்ற நாடுகள் சில நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றன.

மற்றொரு சிக்கலான பிரச்சினையுமுண்டு. அதாவது உவெஸ்ற் மினிஸ்றர் சாசனத்துக்கு முரணான சட்டத்தை இயற்றவோ உள்ளதொரு சட்டத்தை நீக்கவோ திருத்தவோ குடியேற்ற நாட்டுக்கு அதிகாரமுண்டா என்பதே. இந்த அதிகாரமில்லாவிட்டால் குடியேற்ற நாடு சுதந்திரமுடையதென்று கூறுவது பொருளற்றதாகும். அரசியற் சட்டங்களிற் கைதேர்ந்த நிபுணரான பேராசிரியர் பெரடேல் கீத் என்பவர் அத்தகைய அதிகாரம் குடியேற்ற நாடுகளுக்குக் கிடையாதெனக் கூறுகிறார். அவுஸ்திரேலியா, கனடா ஆகிய நாடுகளின் சமஷ்டி அரசியலமைப்பில் உள்ள பாதுகாப்புகள் அத்தகைய அதிகாரத்தினால் பாதிக்கப்படுகின்றனவென்றும், அவ்விரு நாடுகளின் மாகாணங்களது அரசியலமைப்பிலுள்ள பாதுகாப்புகளும் அர்த்தமற்றனவாகிவிடுமென்றும் அவர் எடுத்துக் காட்டுகிறார். பிரித்தானிய பாராளுமன்றத்திலியற்றப்பட்ட சட்டங்களுக்கு முரணான சட்டங்களைக் குடியேற்ற நாடுகளியற்றலாமென 1947-ம் ஆண்டின் இந்திய சுதந்திரச் சட்டம் கூறுகிறது. இலங்கையுமவ்வாறு சட்டமியற்ற உரிமையுண்டென சேர் ஐவர் ஜென்னிங்ஸ் கூறுகிறார். உவெஸ்ற் மினிஸ்றர் சாசனத்துக்கு முரணான சட்டங்களை ஏனைய பழைய குடியேற்ற நாடுகளுமியற்ற உரிமையுண்டு. குடியேற்ற நாட்டுப் பாராளுமன்றங்கள் உவெஸ்ற் மினிஸ்றர் சாசனத்துக்கு மாறாகச் சட்டமியற்றலாம். அச்சட்டங்களைக் குடியேற்ற நாடுகளிலுள்ள நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ளும். இது அரசியலில் நடைமுறையிலுள்ள விடயமாகும். இது முடியாவிட்டால் குடியேற்ற நாட்டின் வேண்டுகோளுக்கு இணங்கிப் பிரித்தானியாவே உவெஸ்ற் மினிஸ்றர் சாசனத்தை ஒழித்தும் விடலாம்.

ஒரு நாடு தனது அரசியற் சட்டத்தை மாற்ற உரிமை யுடையதா என்ற கேள்வி உண்டாகிறது. கனடாவைப் பொறுத்த மட்டில் இப்பிரச்சினை உவெஸ்ட் மினிஸ்டர் சாசனத்தைத் திருத் தும் பிரச்சினையுடன் தொடர்பு பெற்றிருக்கிறது. அந்தச் சாச னத்தின் ஏழாவது பிரிவில் அரசியலைத் திருத்தும் உரிமை கன டாவுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு கட்டுப்பாடன்று. கனடாவின் சமஷ்டி அரசாங்கத்துக்கும் மாகாண அரசாங்கங் களுக்குமிடையில் ஒருவித சமரசம் உண்டானதும் அரசியலைத் திருத்தலாம். இவ்வாறே மற்றைய குடியேற்ற நாடுகட்கும் உரிமையுண்டு.

உள்நாட்டு விவகாரங்களில் பூரண சுதந்திரமிருக்கும் வரை வெளிநாட்டு விவகாரங்களிலும் சுதந்திரமுண்டென்பது தெளிவா கிறது. அதாவது ஒரு தேசம் தனது விருப்பப்படி வெளி நாடு களுடன் நடந்து கொள்ளலாமென்னும் உரிமையும் உண்டாகி றது. உவெஸ்ட் மினிஸ்டர் சாசனத்தின் மூன்ருவது பிரிவுப்படி இந்த உரிமை குடியேற்ற நாடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது 1934-ல் கனடா இந்த உரிமையைப் பயன்படுத்திற்று. அதா வது அதன் கப்பற் போக்குவரத்து விடயத்தில் அது தன் உரி மையைப் பயன்படுத்திற்று. பின்னர் தனது விமானப்படை விட யத்திலும் கடற்படை விடயத்திலும், 1940-ம் ஆண்டிலும், 1944-ம் ஆண்டிலும் தனது உரிமையைப் பயன்படுத்திற்று. இதன் பயனுகக் குடியேற்ற நாடுகள் தமது கப்பற் போக்குவரத் துப் பற்றியும், தமது கடல் எல்லை பற்றியும் தமது உரிமையைப் பயன்படுத்த அதிகாரமளிக்கப்பட்டதெனலாம்.

உள்நாட்டு விடயங்கள் சிலவற்றில் பிரித்தானிய அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தக் கூடியதாயிருந்தது. இத ஞல் குடியேற்ற நாடுகளின் சுதந்திரம் பாதிக்கப்படலாமெனச் சிலர் கருதினர் ஆனுல் அஃது அப்படியன்று. இத்தகைய ஒரு ஒழுங்கைக் குடியேற்ற நாடுகள் தாமாகவே ஏற்படுத்தினவன்றிப் பிரித்தானியா அதை விரும்பி ஏற்படுத்திக்கொள்ளவில்லை. இவ்வுரிமைகளைக் குடியேற்ற நாடுகள் தாம் நினைத்த நேரம் எடுத் துக் கொள்ளலாம். அல்லது பிரித்தானியாவுக்கு அறிவித்து நீக் கிக் கொள்ளலாம். இவ்வுரிமைகள் பின்வருமாறு :—

(அ) குடியேற்ற நாடுகளின் மகா தேசாதிபதிக்கிருக்கும் அதிகாரங்கள் : இவை குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தை எவ் வகையிலும் பாதிக்க மாட்டா. ஏனெனில் இவற்றை அவ்வக்

குடியேற்ற நாட்டரசாங்கமே நீக்கிவிட அதிகாரமுடையதாகும். மேலும் குடியேற்ற நாடுகள் இவ்வதிகாரங்களைச் சுலபமாக நீக்கிக்கொள்ளலாம். 1934-ல் தென்னுபிரிக்கா இவ்வதிகாரங்களைச் சட்டஞ் செய்து நீக்கிவிட்டது. இச்சட்டம் "ஐக்கியச் சட்டத்தின் அந்தஸ்து" எனப் பெயர் பெற்றது. 1937-ம் ஆண்டில் அயர்லாந்தும் இவ்வாறே இவ்வதிகாரங்களை நீக்கிற்று. இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய குடியேற்ற நாடுகளும் தத்தம் சுதந்திரச் சட்டங்கள் மூலம் இவ்வதிகாரங்களை நீக்கிவிட்டன.

(ஆ) குடியேற்ற நாடுகள் இயற்றிய சட்டங்களை நிராகரிக்கும் உரிமை: இவ்வுரிமை நெடுங்காலம் பயன்படுத்தப்படவில்லை. அதனுல் அது செயலற்றதாகிவிட்டது. 1873 துவக்கம் கனடாவும் 1867-ம் ஆண்டு துவக்கம் நியூஸிலந்தும் இவ்வுரிமையை நிராகரித்துவிட்டன. அவுஸ்திரேலிய பாராளுமன்றத்திலோ, தென்னுபிரிக்காப் பாராளுமன்றத்திலோ நிறைவேற்றப்பட்ட சட்டங்களைப் பிரித்தானியா இதுவரை நிராகரித்தது கிடையாது. இந்தியா, பாகிஸ்தான் அயர்லாந்து ஆகிய தேசங்கள் தமது அரசியற் சட்டங்களிலேயே இந்த உரிமைகளை நிராகரித்துவிட்டன.

(இ) குடியேற்ற நாடுகளின் வேண்டுகோட்படி பிரித்தானிய பாராளுமன்றம் அக்குடியேற்ற நாடுகள் சார்பில் சட்டமியற்றலாமென்பது ஒரு உரிமையாயிருந்தது. இவ்வுரிமைமிக அருமையாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. உதாரணமாக எட்டாவது எற்வேட் அரசரை முடி துறக்கச்செய்ய வேண்டுமெனக் கனடா விரும்பியபோது பிரித்தானிய பாராளுமன்றம் அவ்வாறு செய்தது, இவ்வுரிமையானது குடியேற்ற நாடுகளின் பூரண சுதந்திரத்துக்குப் பாதகமானதே. இவ்வுரிமையை இந்தியா, பாகிஸ்தான், தென்னுபிரிக்கா, அயர்லாந்துபோன்ற தேசங்கள் நிராகரித்துவிட்டன. மேலும் இவ்வுரிமையை விரும்பியபோது குடியேற்ற நாடுகள் நிராகரித்துவிட உரிமை பெற்றிருக்கின்றனவாதலால், இது குடியேற்ற நாடுகளின் பூரண சுதந்திரத்துக்கு எவ்வித குறைவையும் ஏற்படுத்தமாட்டாது.

(ஈ) உவெஸ்ற்மினிஸ்டர் சாசனத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளவும், அது பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளுக்கு அளித்த அதிகாரங்களை நீக்கிவிடவும் பிரித்தானியாவுக்கு உரிமையுண்டென்று கீத், ஹாங்கி, போன்ற அரசியற் சட்டப் பேரறிஞர்கள் கருதுகின்றனர். ஆனுல் இது நடக்கக்கூடிய காரியமன்று. ஒரு தேசத்துக்குச் சுதந்திரமளித்தபின், அதை மாற்ற முடியாது. அப்படி மாற்றுவதானுல் சண்டை செய்தே முடிவுகாண வேண்டி

வரும். ஆனல் வெறுஞ் சட்டப்படி ஆராய்ந்தால் பிரித்தானியா வுக்கு அந்த உரிமையுண்டு. எனவே அந்த வகையில் குடியேற்ற நாட்டந்தஸ்து, பூரண சுதந்திரமுடையதெனக் கூறமுடியாது.

(உ) குடியேற்ற நாட்டின் தலைவர் பிரித்தானிய அரசரால் நியமிக்கப்பட்டவராவார். அந்த வகையில் குடியேற்ற நாட்டின் பூரண சுதந்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதெனலாம். ஆனல் பிரித்தானிய அரசர் அவ்வாறு தலைவரை நியமிப்பதும் குடியேற்ற நாட்டு அரசின் ஆலோசனைப்படியேயாகும். ஒரு குடியேற்ற நாடு தனது தலைவரை நியமிக்கவும் அவரைத் தலைமைப் பதவியினின்று நீக்கவும் உரிமையுடையதென்பதை அயர்லாந்து உலகுக்கு அறிவித்தது. 1932-ம் ஆண்டில் அது தனது தலைவரைப் பதவியிலிருந்து நீக்கிற்று.

(ஊ) குடியேற்ற நாட்டுப் பிரசை அந்த நாட்டின் உயர்தர நீதிமன்றத்தில் தனக்கு நீதி கிடைக்காவிட்டால் பிரித்தானியாவிலுள்ள அரச மாநீதிமன்றத்துக்கு (பிரிவி கவுன்சில்) விண்ணப்பஞ் செய்யலாம். இவ்விடயத்திலும் அரச மாநீதிமன்றத்து நீதியரசர்களோடு குடியேற்ற நாட்டு நீதியரசரொருவர் சேர்ந்தே அந்த விண்ணப்பத்தை விளங்குவார்கள். அன்றியும் அரச மாநீதிமன்றத்துக்கு விண்ணப்பஞ் செய்யக்கூடாதென்று சட்டஞ் செய்யக் குடியேற்ற நாட்டுக்கு அதிகாரமுண்டு. இவ்வாறு தென்னபிரிக்கா, இந்தியா, அயர்லாந்து ஆகிய தேசங்கள் சட்டமியற்றிவிட்டன எனவே அது குடியேற்ற நாடுகளின் அந்தஸ்தைக் குறைக்கமாட்டாது.

(எ) பிரித்தானிய அரசர் தாம் நினைத்தபடி மன்னிப்புக் கொடுக்கவோ, பட்டங்கள் வழங்கவோ உரிமையுடையவராயிருக்கிறர். ஆனல், இந்த உரிமையையும் குடியேற்ற நாடு நீக்கிக் கொள்ளலாம். அல்லது அவவுரிமையைப் பயன்படுத்தாமல் விட்டுவிடலாம். தென்னபிரிக்காவும், அயர்லாந்தும் இவ்வுரிமையைப் பயன்படித்தாது விட்டுவிட்டன. எனவே இதுவும் குடியேற்ற நாட்டின் பூரண சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவில்லை.

(ஏ) குடியேற்ற நாடுகளுக்குப் பிரித்தானிய அரசரே சக்கரவர்த்தியாயிருக்கிறர். இதனல் குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்துக்குக் குறைவுண்டெனக் கூறினல் அதையும் குடியேற்றநாடு நீக்கிவிட உரிமையுண்டு. சட்டஞ் செய்து அவ்வுரிமையை நீக்கிவிடலாம். இந்தியா, அயர்லாந்து ஆகிய தேசங்களவ்வாறே செய்திருக்கின்றன. எனவே ஒரு குடியேற்ற நாடு தனது சொந்தத் தலை

வரை ஏற்படுத்தலாம். பிரசைகள் சம்பந்தமாகத் தனது சொந்தச் சட்டங்களைச் செய்து கொள்ளலாம். இலங்கையும் தனது சொந்தப் பிரசா உரிமைச் சட்டங்களைச் செய்திருக்கிறது.

## வெளிநாட்டு விவகாரங்கள் :

வெளிநாட்டு விவகாரங்களிற் சட்டப் பிரமசணங்கள் வலியுடையன. மற்றத் தேசங்கள் சட்டப் பிரமாணங்களையே ஏற்றுக் கொள்ளும். இந்த விடயத்தில் குடியேற்ற நாடுகள் இரண்டு கோணங்களிலிருந்து மதிப்பிடப்படுகின்றன.

(அ) பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் (ஆ) உலகத்துத் தேசங்களில் ஒன்று.

உலகத்துத் தேசங்களில் ஒன்று எனக்கருதுவதானல் (1) அந்நிய நாட்டுத் தானீகர்களை ஏற்கவும் அந்நாடுகளுக்குத் தானீகரை நியமிக்கவும் உரிமையிருக்க வேண்டும். (2) தானுகவே உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளவேண்டும். (3) புதிதாக உண்டான ஒரு தேசத்தை அங்கீகரிக்க வேண்டும். (4) போர் உண்டானுல் நடுநிலைமை வகிக்கும் உரிமை இருக்கவேண்டும். (5) தான் நினைத்தபடி போர்தொடங்கவும் சமாதானஞ் செய்யவும் உரிமையுடையதாயிருக்க வேண்டும். (6) தன் விருப்பப்படி பிரதேசவாரியான தேச சம்மேளனங்களிற் சேர உரிமையிருக்க வேண்டும். (7) விரும்பினுல் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சங்கத்திலிருந்து நீங்க உரிமையிருக்க வேண்டும். பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் உரிமைகளை ஆராயுமிடத்து அவை யெல்லாம் மேலே காட்டிய உரிமைகளை அனுபவிக்கின்றனவென்பது புலனுகும்.

உவெஸ்ற் மினிஸ்றர் சாசனம் உண்டாவதற்கு முன்னரே குடியேற்ற நாடுகள் அந்நிய நாடுகட்குத் தானீகரை நியமிக்கவும், அந்நிய நாட்டுத் தானீகரை அனுமதிக்கவும் உரிமையுடையனவாயிருந்தன. கனடா 1926-ல் ஐக்கிய அமெரிக்காவுக்கு ஒரு தானீகரை நியமித்தது. 1928-ல் பிரான்சுக்கு ஒரு தானீகரை நியமித்தது.

பிரித்தானிய அரசாங்கத்தின் அனுமதியைப் பெருமலே குடியேற்ற நாடுகள் தேசங்களோடு உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம். இவ்வாறே 1923-ல் கனடா ஐக்கிய அமெரிக்காவுடன் ஹலிபட் மீன்பிடி உடன்படிக்கையைச் செய்தது. 1937-ல்

தென்னாபிரிக்காவும் இவ்வாறே ஜெர்மனியுடன் ஒரு உடன்படிக்கையைச் செய்தது. இவ்வாறு செய்யும் உடன்படிக்கைகளைப் பொதுநல அரசுக்குட்பட்ட மற்ற நாடுகளுக்கும் அறிவிக்க வேண்டியது கடமையாயிருந்தபோதிலும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இது நிறைவேற்றப்படவில்லை.

புதிய தேசங்களை அங்கீகரிக்கும் உரிமை குடியேற்ற நாடுகட்கு உண்டு. 1937-ல் ஸ்பெயினில் நிலவிய ஜெனரல் பிராங்கோவின் அரசாங்கத்தை அயர்லாந்து அங்கீகரித்தது, 1940-ல் பிரான்ஸில் நிலவிய விச்சி அரசாங்கத்தைக் கனடா அங்கீகரித்தது. 1947-ல் இந்தோனேசியாவில் உருவான குடியாட்சியை இந்தியா அங்கீகரித்தது.

உலகில் தேசங்களிடையே போர் மூண்டால் குடியேற்ற நாடுகள் தாம் விரும்பியவாறு நடுநிலைமை வகிக்கலாம். பிரித்தானியா போரில் ஈடுபட்டால் அதன் பக்கத்தில் சேர்ந்து குடியேற்ற நாடுகளும் சண்டை பிடிக்க வேண்டுமென்ற நியதி கிடையாது. இரண்டாவது மகா யுத்தத்தில் அயர்லாந்து நடுநிலைமை வகித்தது. தென்னாபிரிக்கா மிகச் சிறிய பெரும்பான்மை வாக்கினால் யுத்தத்தில் சேர நிச்சயித்தது. கனடா, பிரித்தானியா யுத்தத்திற் சேர்ந்த் ஏழாவது நாளே ஜெர்மனிக்கெதிராக யுத்தப் பிரகடனஞ் செய்தது.

யுத்தப் பிரகடனஞ் செய்வதும், தனிப்பட்ட முறையில் சமாதன உடன்படிக்கை செய்வதுமே பூரண சுதந்திரமுள்ள ஒரு நாட்டின் மிக முக்கியமான உரிமைகளாகும். இவ்வுரிமைகள் குடியேற்ற நாடுகளுக்கு உண்டு. அந்த அளவில் அவை பூரண சுதந்திரமுடையன. பிரித்தானியா ஜெர்மனியுடன் யுத்தப் பிரகடனஞ் செய்து ஏழு நாட்களுக்குள் அதாவது செப்டம்பர் மாதம் 10-ந் தேதி கனடா தன்னிட்டப்படி ஜெர்மனியுடன் யுத்தப் பிரகடனஞ் செய்தது. தூரகிழக்கிலுள்ள சில நாடுகளுடன் பிரித்தானியா சமாதானமாயிருந்த காலத்திலும் அவுஸ்திரேலியா யுத்த நிலைமையிலிருந்தது.

1914–1918-ம் ஆண்டு மகாயுத்தத்தில் சமாதானம் ஏற்பட்ட பொழுது குடியேற்ற நாடுகள் தனித்தனி சமாதான உடன்படிக்கையிற் கையொப்பமிட்டன. இதைப் பிரித்தானியா அங்கீகரித்ததிலிருந்து குடியேற்ற நாடுகள் தனித்தனி உடன்படிக்கை செய்ய உரிமையுடையன வென்ற கொள்கை.பெயரளவில் உறுதிப்படுத்தப்பட்டது. இரண்டாவது மகா யுத்தத்தின் பின்னர் பிரித்

தானியா தாய்லந்துடன் ஒரு சமாதான உடன்படிக்கைசெய்து கொண்டனர். அவ்வாறே அவுஸ்திரேலியாவும் தனிஉடன்படிக்கை செய்துகொண்டது. இதிலிருந்து குடியேற்ற நாடுகள் தனி உடன் படிக்கை செய்ய உரிமையுடையனவென்பது சந்தேகமின்றித் தெளிவாகிறது.

பிரதேசவாரியாகத் தேசங்கள் தம்முள் ஒன்றுகூடும்பொழுது அக்கூட்டங்களிற் சேர்வதற்குக் குடியேற்றநாடுகளுக்கும் உரிமை யுண்டு. அகில அமெரிக்க ஐக்கிய சம்மேளனத்தில் கனடா சேர்ந் திருக்கிறது. பசிபிக் கூட்டுறவில் அவுஸ்திரேலியாவும், நியூஸிலந் தும் ஐக்கிய அமெரிக்காவுடன் சேர்ந்திருக்கின்றன. பொதுநல அர சுக்குட்பட்ட நாடுகள் எல்லாம் எல்லா விடயங்களிலும் ஒன்று சேரவேண்டுமென்ற நியதி கிடையாது. பிரித்தானியா தனது செலவாணியின் மதிப்பைக் குறைத்தவுடன் பொதுநல அரசைச் சேர்ந்த ஏனைய நாடுகளும் அவ்வாறு செய்தன. ஆனல் பாகிஸ் தான் அவ்வாறு செய்யமறுத்துவிட்டது.

இப்பெரிய அதிகாரங்கள் குடியேற்ற நாடுகட்கு இருப்பதால் அவை பூரண சுதந்திரமுடைய நாடுகளாக மதிக்கப்படுகின்றன. உலகத்து வல்லரசுகளெல்லாம் அவ்வாறே அவற்றை மதிக்கின் றன. ஐக்கிய நாடுகளின் சங்கத்தின் இரண்டாவது சட்டம் அதன் அங்கத்தவர்கள் பூரண சுதந்திரமும் சம அந்தஃஸ்துமுடைய வர்களெனக் கூறுகிறது. இதிலிருந்து அச்சங்கத்தின் அங்கத்தவர் பூரண சுதந்திரமுடையவரென்பது தெளிவாகிறது,

பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சங்கத்திலிருந்து ஒரு குடியேற்றநாடு சட்டப்படி விலகிக்கொள்ள முடியாது. பிரித்தா னிய அரசரை அக்குடியேற்ற நாட்டின் தலைமைப் பதவியிலிருந்து சட்டபூர்வமாக விலக்கிக்கொள்ளவும் அதனல் முடியாது. எனவே அத்தகைய குடியேற்ற நாட்டுக்குப் பூரண சுதந்திரம் கிடையா தெனச் சிலர் வாதாடுகிறுர்கள். சட்டபூர்வமாக இக்கொள்கை சரி யாயிருக்கலாம். ஆனல் நடைமுறையில் இவை செல்லுபடியாகா. எந்தக் குடியேற்ற நாடும் பொதுநல அரசுச் சம்மேளனத்திலிருந்து விலகிக்கொள்ளலாம். பிரித்தானிய அரசரைத் தன்னுட்டின் தலை மைப் பதவியிலிருந்து விலக்கிவிடலாம். அயர்லாந்து பத்து நிமி டத்தில் பிரித்தானிய அரசருடன் உள்ள தொடர்யை நீக்கிக் கொண்டது. பிரித்தானியாவுடனுள்ள தொடர்பைப் பர்மா எவ் வித கஷ்டமுமின்றி நீக்கிக்கொண்டது.

## குடியேற்றநாட்டந்தஸ்தினுலுண்டாகும் நன்மைகள்

பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளுடன் சேர்ந்திருப்பதால் பல நன்மைகளுண்டு. இலண்டனிலுள்ள குடியேற்ற நாட்டுத் தகவற் காரியாலயத்தின் மூலமாகப் பொதுநலஅரசுக்குட்பட்ட நாடுகளுக்குத் தேவையான தகவல்களை அதிக செலவின்றி அனுப்பிக் கொள்ளலாம். மேலும் பிரித்தானிய வெளிநாட்டுக் காரியாலயத்தின் மூலம் வெளிநாட்டு விவகாரங்களைப்பற்றிய ஆலோசனைகளைப் பெறலாம். வெளிநாட்டுவர்த்தகவிடயமாகவும் அவ்வாறே தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். குடியேற்ற நாடுகள் தங்கள் தானீகர்களில்லாத அந்நிய தேசங்களில் பிரித்தானிய தானீகர் மூலம் தமது கருமங்களைச் செய்வித்துக்கொள்ளலாம்.

பொதுநல அரசுக்குட்பட்ட குடியேற்ற நாடுகட்குப் பிரித்தானிய அரசரே தலைவராயிருப்பதனுல் ஒரு ஐக்கியமும், ஒருமைப்பாடும், நட்பும், விசுவாசமும் உண்டாகிறது. பரஸ்பர நல்லெண்ணமும் ஒற்றுமையும் வளர்கிறது. அதனுல் குடியேற்ற நாடுகள் ஒரு குடும்பத்தவரென்ற மனேபாவமுண்டாகிறது. அறிவுத்துறையிலும், பொருட்துறையிலும், தொழிற்துறையிலும் தமதுவளத்தையெல்லாம் ஒன்றுபடுத்தி எல்லாருக்கும் உதவி செய்யும் தன்மை உண்டாகிறது. பொருளாதாரத்துறையில் வளம்மிக்க நாட்டவர் வளம் குறைந்த நாட்டவர்க்கு உதவி புரிவதை நாம் காண்கிரேம். சொழும்புத் திட்டம் இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். அறிவியற்துறையிலும், கலைத்துறையிலும் கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. அதனுல் ஒருவரைஒருவர் நன்குஅறியவேண்டுமென்றும், பரஸ்பர நட்பை வளர்க்க வேண்டுமென்றும் ஆசை உண்டாகிறது, இதன் பயனுக ஒரு நாட்டிலுள்ள சிறந்த அறிஞர்கள் மற்றநாடுகளுக்குச்சென்று அறிவுரை நிகழ்த்திவருகின்றனர். பிரசைகளுக்கு உபகாரப்பணம் உதவிப் பல்கலைக் கழகங்களுக்கு அவர்கள் அனுப்பப்படுகின்றனர். பிரித்தானியக் கழகம் என்ற சங்கம் குடியேற்ற நாடுகளிடையே நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கு ஏறபட்ட ஒரு தாபனமாகும். அரசியற்துறையில் ஒரு குடியேற்றநாடு அந்நிய நாட்டுடன் விவகாரம் நடத்திஞல் அதைப் பற்றி மற்றக் குடியேற்ற நாடுகளும் அறிவிக்கும். இது ஒரு சம்பிரதாயமாகும். ஆனுல் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இந்தச் சம்பிரதாயம் அனுசரிக்கப்படுவதில்லை. அரசியற்துறையில் முக்கியமான விடயங்கள் ஆலோசிக்கப்பட்டால், ஏகமனதான முடிவை இக்குடியேற்ற நாடுகள் பெறுவதற்கு முயற்சி செய்யும், அபிப்பிராய பேதங்களிருந்தால் அவற்றைக்குறைத்துக்கொள்ளவும் பார்க்கும். இதற்காக இக்குடியேற்ற நாடுகள் மகாநாடு கூடுவது வழக்கம்.

பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் சம்மேளனத்திற் சேர்வதால் குடியேற்ற நாடுகளின் பலம் அதிகரிக்கும். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த எந்த விடயத்திலும் அங்கத்துவ நாடுகளுக்கு மற்ற நாடுகளின் ஆதரவு கிடைக்கும். அந்நிய நாடு ஒன்று இந்தச் சம்மேளனத்திற் சேர்ந்த நாடுகளுடன் முண்டிக்கொள்ளும் பொழுது மற்ற அங்கத்தவ நாடுகளும் ஆதரவளிக்குமென்பதைக் கருத்தில் கொள்ளும். ஐக்கிய நாடுகளின் சங்கத்தில் இலங்கை அங்கத்துவம் கோரியபொழுது பொதுநல அரசுக்குட்பட்ட தேசங்களெல்லாம் அதற்கு ஆதரவளித்தன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இராணுவப் பாதுகாப்பு விடயத்திலும் இவ்வாறு அங்கத்துவம் வகிப்பதனுல் பரஸ்பர உதவியும் ஒற்றுமையும் ஏற்படுகிறது. இராணுவப் பயிற்சி விடயத்திலும், கருத்துப் பரிமாறும் விடயத்திலும், இராணுவ அதிகாரிகளை மாற்றிக் கொள்ளும் விடயத்திலும் பரஸ்பர உதவியும் ஒத்துழைப்புமுண்டாகும். குடியேற்ற நாடுகளின் இராணுவப் பாதுகாப்புக்கு ஏற்றமுறையில் பல தேசத்து இராணுவ அதிகாரிகளோடும் அடிக்கடி தொடர்பு வைத்துக்கொள்ளலாம். மேலும் இந்நாடுகளின் பொதுப்படையான பாதுகாப்புக்காக ஏகாதிபத்திய இராணுவப் பாதுகாப்புக் குழு என ஒரு சபையும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதனுல் கூட்டாக நடவடிக்கை எடுக்கமுடியும், யுத்த காலத்திலும், நெருக்கடியான காலங்களிலும் அங்கத்துவ நாடுகள் ஒன்றுக்கொன்று உதவிபுரியும். இலங்கை போன்ற சிறியநாடுகள் பிரித்தானிய பொதுநல அரசுகளுடன் சேர்வதால் பெரிதும் நன்மை பெறுமென்பதில் ஐயமில்லை.

நன்மையும் தீமையும் ஒவ்வொரு அங்கத்துவ நாட்டின் மனோபாவத்தைப் பொறுத்தது. பொதுநல அரசுகளின் மூலமந்திரம் இட்டபூர்வமாக ஒத்துழைப்பதே. இதில் எவ்வித நிர்ப்பந்தமும் கிடையாது. ஒவ்வொரு நாடும் விருப்பப்படி சேர்ந்து உழைக்கலாம். குறித்த ஒரு கொள்கையையே எல்லாரும் பின்பற்றவேண்டுமென்ற கட்டாயம் கிடையாது. வேறு சர்வதேசத் தாபனங்கள் இதிலும்பார்க்கக் கூடிய நன்மைகளைக் கொடுக்கின்றனவாவென்பதைக்கொண்டே இந்த அமைப்பின் நன்மையைக் கணிக்கலாம். இன்றுள்ள உலக நிலையில் பிரித்தானியப் பொதுநல அரசில் அங்கத்துவம் வகிப்பதாற் பல நன்மைகளுண்டெனக் கூறலாம். இதனுற்றுன் இந்தியா, தென்னுபிரிக்கா போன்ற நாடுகள் இந்தத் தாபனத்தைவிட்டு வெளியேற விரும்பவில்லை. சமாதானம் நிலவும் உலக நிலையில் இந்தத் தாபனம் அவ்வளவு கவர்ச்சியுடைய

தாயில்லாது போகலாம். ஆனுல் இன்றைய ஆபத்தான உலக நிலைமையில் இத்தாபனம் விசேடமாக இலங்கையைப்போன்ற சிறு நாடுகளுக்குப் பெரிதும் பயனுடையதாயிருக்கிறது.

பாராளுமன்றச் சனநாயக ஆட்சி விருத்தியடைவதற்கு முதலாளித்துவமே சிறந்த அமைப்பென இத்தாபனத்தின் அரசாங்கங்கள் கருதுகின்றனவென்ற அடிப்படையைக்கொண்டே இக்கருத்துக் கொள்ளப்படுகிறது.

---

## பத்தாம் அத்தியாயம்

# பொதுநல அரசுகள் தம்முட் கலந்தாலோசிப்பதற்கான தாபனம்.

### ஒற்றுமையான முடிவுகளை யடைவதற்கு ஏற்ற முறைகள்.

### தனிப்பட்ட மத்திய அதிகாரமின்மை :

பிரித்தானியப் பொதுநல அரசுக்குட்பட்ட சாம்ராச்சியமானது தனிப்பட்ட பல்வேறு சுதந்திர நாடுகளின் கூட்டமென மேலே கூறியுள்ளோம். எனவே, இந்நாடுகளின் கருமங்களை வழிப்படுத்தவும் அவற்றின் நன்மைக்கான சட்டங்களைச் செய்யவும் ஒரு தனிப்பட்ட மத்திய அதிகாரக் குழு கிடையாது. தம்முள் நிலவும் அபிப்பிராய வேற்றுமைகளைத் தீர்ப்பதற்கும் ஏகமனதான முடிவுக்கு வருவதற்கும் வேறு சில முறைகளைக் கையாளுகின்றன. கொலனி ஆட்சியில் வைட்ஹோல் என்ற பிரித்தானிய அரசாங்கக் காரியாலயத்திலிருந்து கட்டளைகள் பிறப்பிக்கப்படும். ஆனால் இதற்கு அத்தகைய வெளியதிகாரம் கிடையாது. பல்வேறு அங்கத்துவ நாடுகளையும் கலந்து ஆலோசிப்பதில் அதிக கவனஞ் செலுத்தப்படுகிறது. பொதுநல அரசுகள் எப்பொழுதும் ஏகோபித்த அபிப்பிராயம் தெரிவித்தது கிடையாது. ஐக்கிய நாட்டுச் சங்கத்திலும் அதைப் போன்ற வேறு சர்வதேசத் தாபனங்களிலும் அவை பல தடவை, பல சந்தர்ப்பங்களில் எதிர்க்கட்சியில் நின்று பேசியும் வாக்களித்துமிருந்தமை யுண்டு. ஆனால் ஒற்றுமையும் ஏகோபித்த முடிவும் ஏற்பட்ட பொழுதெல்லாம் அங்கத்துவ நாடுகள் தம்முட் கலந்து தாராளமாக விடயங்களை ஆராய்ந்தே முடிபுக்கு வந்தனவெனலாம். ஒரு விடயத்தைப்பற்றி முடிபு செய்வதானால் பெரும்பான்மை வாக்கினால் அது செய்யப்படுவதில்லை. வெளியிலிருந்து உண்டாக்கப்படும் நிர்ப்பந்தத்தினாலும் அது ஏற்படுவதில்லை. ஒவ்வொரு அங்கத்தவ நாடும் தான் நினைத்தபடி நடந்துகொள்ள உரிமையுண்டு. ஆனால் எவ்வாறு நடக்க வேண்டுமென்ற

முடிவு பெரும்பாலும் அந்நாடு மற்ற அங்கத்துவ நாடுகளுடன் நடத்திய ஆலோசனையைப் பொறுத்ததேயாகும். ஒவ்வொரு தேசமும் தான் சுதந்திரமுடைய நாடென்பதையும் தான் நினைத்தவாறு நடக்கலாமென்பதையுமுணர்ந்திருந்தாலும், பொதுநல அரசுச் சம்மேளனத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்ற உணர்ச்சியுடையோராயுமியிருக்கின்றன. எனவே ஒரு முடிவு செய்யும் பொழுது அவசரப்பட்டும், தீர ஆலோசிக்காமலும் செய்யப்படமாட்டாது. பொதுநல அரசுக்குச் சேர்ந்த நாடுகளின் பொதுவான நலவுரிமைகளைக் கருத்திற்கொண்டே ஒவ்வொரு அங்கத்துவ நாடும் தனது தேசீயக் கொள்கைகளைத் தீர்மானிக்கிறது. அபிப்பிராய பேதம் உண்டான சந்தர்ப்பங்களிலும் பொதுநல அரசின் நலவுரிமைகட்குப் பாதகமில்லாத வகையிலேயே கருமங்களை அது செய்யும்.

குடியேற்ற நாடுகளுக்கும் பிரித்தானியாவுக்கும் உள்ள தொடர்பு அந்நிய நாடுகளுடனுள்ள தொடர்பிலும் வேறுபட்டதாகும். பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளிடையே உள்ள தொடர்பு சர்வதேச அந்தஸ்தைப் பெறுவதில்லை. அங்கத்துவ நாடுகளுக்கும் அந்நிய நாடுகளுக்குமிடையிலுள்ள கடிதப் போக்குவரத்து சம்பிரதாய முறையிலிருக்கும். ஆனல் அங்கத்துவ நாடுகளிடையேயுள்ள கடிதப் போக்குவரத்து அத்தகையதன்று. சோவியத் ஐக்கிய நாடு பல குடியரசுகளின் தொகுதியாகும். அவையெல்லாம் மார்க்சுக் கொள்கையில் ஏகோபித்த நம்பிக்கையுடையன. அதுபோலவே பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளும் தனிப்பட்டதும் எல்லாவற்றையும் அடக்கியதுமான ஒரு அரசியல் முறையில் அடங்கியிருக்கின்றன. ஆனல் பிரித்தானிய பொதுநல அரசுக்குட்பட்ட தேசங்கள் ஒவ்வொன்றும் பூரண சுதந்திரமுடையன. இவை பல பகுதிகள் சேர்ந்த ஒரு சமஷ்டியெனவோ, ஐக்கியமான அரசியற் கூட்டுறவு எனவோ கருதக்கூடாது. ஐக்கிய அமெரிக்கா, அல்லது சோவியத் குடியரசு நாடுகளைப்போல பிரித்தானிய பொதுநல அரசுக்குட்பட்ட தேசங்கள் ஏகமனதான அபிப்பிராயத்தைக் கூறமுடியாதிருப்பதற்கு இதுவே காரணமாகும். எனவே இப்பொதுநல அரசுக்குட்பட்ட தேசங்களின் கருமங்களைக் கொண்டு நடத்தத் தனிப்பட்டதொரு மத்திய அதிகார சபையில்லாதபடியால், அங்கத்துவ நாடுகளைக் கலந்து ஆலோசித்து, முடிவு காண வேண்டியதவசியம். இவ்வாறு செய்வதற்கான சாதனங்கள் மூன்று வகைப்படும்.

**(அ) உத்தியோகச் சார்பான வழிகள் :**

மந்திரிகள் மூலம் தொடர்பு. முதலில் உத்தியோக பூர்வமான வழிகளுண்டு. பொதுநல அரசைச் சேர்ந்த மந்திரிமார்களிடையே அவ்வப்போது உண்டாகும் தொடர்பும் இதிலடங்கும். இவ்வகையான தொடர்பை மந்திரிகளின் மகாநாடுகள் மூலமும், தெலிபோன் மூலமும், தந்தி மூலமும் தபால் மூலமும் ஏற்படுத்திக் கொள்ளலாம். உயர்ந்த இடத் தொடர்பைவிடச் சாதாரண ஊழியர்கள் மூலம் உண்டாகும் தொடர்பையும் மேலே கூறிய தந்தி, தபால் போன்ற சாதனங்களின் வழியாக ஏற்படுத்திக் கொள்ளலாம். பொதுநல அரசு நாடுகளின் மகாநாடுகள் 1887-ல் விக்டோரியா மகாராணியாரின் வைரவிழாவின் போதும், பின்னர் 1894, 1897, 1907, 1909. 1910 ஆகிய ஆண்டுகளிலும் நடைபெற்றன. 1887-ம் ஆண்டில் நிகழ்ந்த மகாநாட்டில் இராணுவப் பாதுகாப்புப்பற்றியும் ஏகாதிபத்தியப் போக்குவரத்துப் பற்றியும் விவாதிக்கப்பட்டன. 1894-ல் கனடா அரசாங்கத்தில் ஒட்டாவாவிற் கூடிய மகாநாட்டில் பிரித்தானியாவுக்கும், சுதந்திரமடைந்த குடியேற்ற நாடுகளுக்கும் சுதந்திரமடையாத குடியேற்ற நாடுகளுக்குமிடையில் வியாபாரம், போக்கு வரத்து என்பன பற்றி விவாதிக்கப்பட்டது, 1907-ம் ஆண்டில் நடைபெற்ற மகாநாட்டில் பிரித்தானிய முதல்வர் முதல் மந்திரி என்றமுறையில் மகாநாட்டுக்குத் தலைமைவகிக்க வேண்டுமென்றும், குடியேற்றநாட்டு முதல் மந்திரிகள் உத்தியோகக் காரணத்தால் மகாநாட்டின் அங்கத்தவராக வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. (1) பொது நன்மைக்கேதுவான பிரச்சினைகள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும், (2) இம் மகாநாடுகளில் முடிவு செய்யப்பட்ட தீர்மானங்களைப் பிரதம மந்திரிகள் தத்தம் நாடுகளில் அமுல்நடத்த வேண்டுமென்றும் (3) பெரும்பான்மையான வாக்குகளைக்கொண்டு எவ்விதமுடிவுஞ் செய்யக்கூடாதென்றும், அவ்வாறு செய்வதால் சிறுபான்மையினர் பெரும்பான்மை வாக்குக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிவருமென்றும் முடிவு செய்யப்பட்டது. ஏகமனதான முடிவு செய்யப்படாத பட்சத்தில், அங்கத்தவர்கள் தத்தம்சொந்த அபிப்பிராயத்தைக்கைவிட வேண்டியதில்லையென்றும், முடிவு செய்யப்பட்டது. அங்கத்தவர்கள் முதலில் தத்தம் நாடுகளின் பிரதிநிதிகளாகவும், பின்னர் பொதுநல அரசின் பிரதிநிதிகளாகவும் மகாநாட்டில் தானம் வகிப்பதால், அபிப்பிராய வேற்றுமைகளுண்டாகும் பொழுது இவ்விரு தன்மையான பிரதிநிதித்துவத்தினுல் உண்டாகும் நலவுரிமைகளையும் சமரசப்படுத்த முயல வேண்டுமென்றும் எடுத்துக் காட்டப்பட்டது. முதலாவது மகாயுத்தத்தின்போது 1917-ம் ஆண்டு

துவக்கம் 1918-ம் ஆண்டுவரை அநேக குடியேற்ற நாட்டு மந்திரிகளும் முதல் மந்திரிகளும் இலண்டனுக்குச் சென்றார்கள். 1917-ம் ஆண்டில் ஏகாதிபத்திய யுத்த மகாநாடொன்று இலண்டனில் நடைபெற்றது. யுத்தத்தை நல்லமுறையில் நடத்துவதற்கான வழிவகைகளை ஆலோசிக்கவும், குடியேற்ற நாடுகளின் ஒத்துழைப்பைத் தேடவுமே இம்மகாநாடு கூட்டப்பட்டது. அத்துடன் குடியேற்ற நாட்டுப் பிரதம மந்திரிகளும் ஏனைய மந்திரிகளும், பிரித்தானிய யுத்த மந்திரிசபையின் கூட்டங்களுக்குச் சமுகமளித்தனர். 1917-ம் ஆண்டு துவக்கம் பீல்டுமாஷல் சுமட்சு என்ற தென்னுபிரிக்க அரசியல் மேதை அந்த யுத்த மந்திரி சபையின் அங்கத்தவரில் ஒருவராக நியமிக்கப்பட்டார். இரண்டு உலக மகா யுத்தங்கள் நிகழ்ந்த காலங்களுக்கிடையில் இம் மகாநாடுகள் ஒழுங்காக நடைபெற்றன. 1926-ல் நடைபெற்ற மகாநாட்டில் பால்பூர் பிரகடனம் அறிவிக்கப்பட்டது. 1930-ம் ஆண்டின் மகாநாட்டில் உவெஸ்ட் மினிஸ்டர் சாசனம் தயார் செய்யப்பட்டது. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது குடியேற்ற நாடுகளின் முதல் மந்திரிகளும் ஏனைய மந்திரிகளும் இலண்டனுக்கு அவ்வப்போது விஜயஞ் செய்து யுத்தமந்திரி சபைக் கூட்டங்களிற் பங்குபற்றினர். மகா யுத்தம் முடிந்த பின்னரும் பல முக்கியமான பொதுநல அரசுகளின் மகா நாடுகள் நடைபெற்றன. இம் மகா நாடுகளில் அவ்வத் தேசத்து முதல் மந்திரிகள் பங்குபற்றினர். வேறு சந்தர்ப்பங்களில் அவ்வத் தேசத்து அந்நிய நாட்டு மந்திரிகளும் பின்னர் நிதி மந்திரிகளும் ஒன்றுகூடி ஆலோசனை நடத்தினர். பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் பூரண சுதந்திரமும் சுயாட்சியும் உடையன. அவை தமக்குப் பொதுவான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தம்முட் கலந்து ஆலோசனைகள் நடத்தும்; பிணக்குக் கேதுவான பிரச்சினைகளைக் கலந்தாலோசித்துச் சிநேக முறையில் தீர்த்துக் கொள்வதே சரியென்றும், நிர்ப்பந்தத்தினுலோ யுத்தத்தினுலோ ஒன்றையும் தீர்த்துக்கொள்ள முடியாதென்றும் அதிராத நம்பிக்கை கொண்டிருக்கின்றனவென்று இம்மகாநாடுகள் மூலம் புலனுகின்றன.

## (ஆ) அரசாங்க இலாக்காக்கள் மூலம் தொடர்பு:

பிரித்தானியாவிலுள்ள அரசாங்க இலாக்காக்களும். குடியேற்ற நாடுகளிலுள்ள அரசாங்கங்களும் தம்முட் தொடர்பு ஏற்படுத்துவதன்மூலம். அவ்வத்தேசங்களிடையே பரஸ்பரஉறவை ஏற்படுத்திக் கொள்ளலாம். இது மற்றெரு முறையாகும். இத்தகைய தொடர்பைவளர்க்கும் விடயத்தில் பொதுநல அரசுகளின்

தொடர்புக் கந்தோர் முக்கிய இடம் வகிக்கின்றது. பிரித்தானியாவுக்கும் ஏனைய குடியேற்ற நாடுகளுக்குமுள்ள தொடர்பு சர்வதேச அந்தஸ்தை உடையதன்றென முன்னரே கூறினேம். குடியேற்ற நாடுகள் தம்முட் தொடர்பு உண்டாக்குவதற்குப் பயன்படுத்தும் முறைகள், அந்நிய தேசங்களுடன் தொடர்புண்டாக்கப் பயன்படுத்தும் முறைகளிலும்பார்க்க வித்தியாசமானவை. 1947-ம் ஆண்டுவரை குடியேற்ற நாடுகளுடன் தொடர்பு உண்டாக்கும் விடயம் குடியேற்ற நாட்டுக் காரியாலயத்தின் மூலமே நடைபெற்றுவந்தது. இந்தியா சம்பந்தப்பட்ட விடயங்கள் இந்திய காரியாலயத்தின் மூலம் நடத்தப்பட்டன. 1947-ம் ஆண்டின் பின்னர் இவையெல்லாவற்றையும் கவனிப்பதற்குக் குடியேற்ற நாட்டுத் தொடர்பு மந்திரியென ஒரு மந்திரியைப் பிரித்தானியா நியமித்தது. பொதுநல அரசுத் தொடர்புக் காரியாலயத்தைச் சேர்ந்த அந்நிய நாட்டுக் காரியாலயப் பகுதி அவ்வக் குடியேற்ற நாடுகளின் அந்நிய நாட்டுக் காரியாலயங்களுக்கு பிரித்தானிய அந்நிய நாட்டுக் காரியாலயத்தின் இரகசிய அறிக்கைகளை அனுப்பும். அந்நிய நாடுகளிலுள்ள பிரித்தானிய தானிகர்கள் அனுப்பும் அறிக்கைகளையும் அவ்வாறே விநியோகஞ்செய்யும். இவ்வறிக்கைகள் மூலம் குடியேற்ற நாடுகள், பிரித்தானிய அந்நிய நாட்டுக் கொள்கைகளை அறிந்துகொள்ளவும், தம்முடைய தானிகர் இல்லாத நாடுகளின் நிலைமையைப் பற்றி அறிந்துகொள்ளவும் முடியும். பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளும், அந்நிய நாடுகளில் உள்ள தமது தானிகர் மூலம் தொகுத்த தகவல்களை, பிரித்தானிய பொதுநல அரசுத் தொடர்புக் காரியாலயத்துக்கும், ஏனைய பொதுநல அரசுகளுக்கும் பரிமாறிக்கொள்ளத் துவங்கியிருக்கின்றன. இரண்டாவது மகா யுத்தத்தின்போது பிரித்தானிய அரசாங்க இலாக்காக்களுக்கும் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளில் அரசாங்கங்களுக்குமுள்ள தொடர்பு சர்வ சாதாரணமாகிவிட்டது. காலச்செலவைத் தடுப்பதற்கும் வேலைகளைத் திறமையாக நடத்துவதற்குமே இத்தொடர்பு விருத்திசெய்யப்பட்டது. சாதாரணமாக இத்தகைய தொடர்புகள் அவ்வத் தேசங்களின் வெளிநாட்டு இலாக்கா மூலமாகவும் பிரிட்டனைப் பொறுத்தவரையில் பொதுநல அரசுத் தொடர்புக் காரியாலயத்தின் மூலமாகவுமே நிகழ்ந்திருக்கும்.

### (இ) தானிகர்கள் :

பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளிடையே தொடர்பையுண்டாக்குவதற்கான மற்றொரு சாதனம் தானிகர்களை நியமிப்பதன் மூலமாகும். பொதுநலஅரசுக்குட்பட்ட தேசங்கள் மற்றப்பொதுநல

அரசுக்குட்பட்ட தேசங்களில் தமது நலவுரிமைகளைப் பாதுகாப்ப தற்காகத் தானீகர்களை ஏற்படுத்துவர். இவர்கள் பொதுநல அர சுக்குட்பட்ட தேசங்களுக்குரிய தனிப்பட்ட இராசதந்திர சேவை யைச் சேர்ந்தவர்களாவர். பிரித்தானிய தானீகர்களைப் பிரித் தானிய வெளிநாட்டுக் காரியாலயம் நியமிப்பதில்லை. அவர்கள் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் தொடர்பு மந்திரியா லேயே நியமிக்கப்படுகின்றனர். இரண்டாவது மகாயுத்தத்தின் போது இந்தத் தானீகர்களும் பொதுநல அரசுக்குட்பட்ட ஏனைய நாடுகளின் தானீகர்களும் தினமும் சந்தித்துப் பேசி வந்தனர். மேலும் இத்தானீகர்கள் தொடர்பு, காரியாலயத்தின் மூல மாகவோ, வெளிநாட்டுக் காரியாலயத்தின் மூலமாகவோ, பிரித் தானிய அரசாங்க இலாக்காக்களுடன் தொடர்பு வையாமல் நேராகவே வைத்துக் கொண்டனர். ஆனல் இவ்வழக் கம் யுத்த காலத்தை முன்னிட்டேற்பட்டது. சமாதான காலத் தில் வரவேற்கப்பட மாட்டாது.

## (2) பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளிடையே ஏற்பட்ட நிபுணர் தாபனங்கள் :

பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளிடையே ஒத்துழைப்பை யுண்டாக்கவும் பரஸ்பரம் கலந்து ஆலோசனை நடத்தவும் ஏற் படுத்தப்பட்ட மற்ருெரு சாதனம் நிபுணர்களைக் கொண்ட சங்கங்களாகும். இவை பலவகைப்படும். பொருளாதாரத்துறை யிற் சில அமையலாம். வேறு சில கலைத்துறையிலும், விஞ்ஞா னத் துறையிலும் அமையலாம். குறித்த ஒரு சந்தர்ப்பத்தைச் சமாளிப்பதற்காகச் சில சங்கங்களேற்படுத்தப்பட்டன. வேறு சில நிரந்தரமான பயனுடையன. சில பிரிட்டனுல் பரிபாலிக் கப்படுகின்றன. வேறு சில எல்லாப் பொதுநல அரசுகளாலும் பரிபாலிக்கப்படுகின்றன. முன்னைய விதமான சங்கத்துக்கு உதா ரணம் பிரித்தானிய கலாசாரத்தைப் பரப்பும் நோக்கத்துடன் ஏற் பட்ட பிரித்தானிய சபை என்னும் சங்கமாகும். மற்றதற்கு உதாரணம் கொழும்புத் திட்டமென்ற சங்கம். இது பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் பொருளாதார விருத்தியை நோக்க மாகக் கொண்டு அமைக்கப்பட்டது. பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் பொருளாதாரக்குழு, பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளின் கப்பற் போக்குவரத்துக் குழு, பிரித்தானிய கொமன் வெல்த் விஞ்ஞானத் தொடர்பு என்பன போன்ற தாபனங்கள் வேறு உதாரணங்களாகும்.

00302



## (3) அரசாங்கப் பற்றற்ற தொடர்புகள் :

அரசாங்கத்தோடு தொடர்பில்லாத தாபனங்கள் மூலமாகவும் சட்டங்கள் மூலமாகவும் தொடர்பையும் ஒத்துழைப்பையுமுண்டாக்கலாம். ஏகாதிபத்தியப் பாராளுமன்றச் சங்கம் இதற்கு ஒரு உதாரணமாகும். இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளிலும் ஏகாதிபத்திய நாடுகளிலுமுள்ள பாராளுமன்றங்களைப் பற்றித் தகவல்களைப் பரிமாறுவதும் ஆங்காங்குள்ள பாராளுமன்றங்களுடன் அடிக்கடி தொடர்புவைத்துக்கொள்வதும், நல்லெண்ணத்தை வளர்ப்பதுமாகும் இதுவரை முப்பத்து மூன்று பாராளுமன்றங்கள் இச்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கின்றன. உத்தியோகப் பற்றற்ற வேறு முக்கியமான சங்கங்கள் பின்வருமாறு :— (1) உரோயல் ஏகாதிபதியச் சங்கம், ஏகாதிபத்தியப் பத்திரிகைச் சங்கம். (2) பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளிலுள்ள சர்வகலாசாலைகள். இவை ஆசிரியர்களைப் பரிமாறிக் கொள்வதுடன், சொற்பொழிவுகட்கும் ஒழுங்கு செய்கின்றன. (3) வியாபாரக் குழுக்கள். இவை வர்த்தகத் தொடர்பை உண்டாக்க முயற்சி செய்கின்றன. (4) பிரசுரச் சபைகள். இவை கலாசாரப் பிரசாரஞ் செய்கின்றன (5) தொழிற்துறைச் சங்கங்கள்.

இங்கு கூறப்பட்ட பல்வேறு தொடர்புகளும் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகளிடையே நல்ல தொடர்பையும் நல்லெண்ணத்தையும் வளர்க்கின்றன. அவ்வத் தேசங்களில் நடைபெறும் விடயங்களை மற்றத் தேசங்களும் அறிந்துகொள்ள வைக்கின்றன. இரகசியமான இராசதந்திரத்தை இந்நாடுகள் கைக்கொள்வதில்லை. ஒரு நாட்டுக் கெதிராக மற்ற நாடுகள் முயற்சி செய்ய எண்ணுவதுமில்லை. தென்னாபிரிக்காவில் மாலானுடைய அரசாங்கம் பின்பற்றும் சாதிக் கொள்கை போன்ற முயற்சிகள் மிக அரிது. ஒன்றுக்கொன்று மாறுபட்ட அரசியற் கொள்கைகளையுடைய வல்லரசுகள் மலிந்த உலகத்தில் பொதுநல அரசுக்குட்பட்ட நாடுகள் இங்கு கூறிய தொடர்புகளினால் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போலக் கருதிக் கருமமாற்றுகின்றன. மேலும் ஒல்லும் வகையால் இந்நாடுகளெல்லாம் ஒன்றுபோலக் கருமங்களைச் செய்கின்றன. வலிந்து நிர்ப்பந்தப்படுத்தி ஒரு கொள்கையைப் பின்பற்றவைக்க வேண்டிய அவசியம் கிடையாது. அபிப்பிராய வேற்றுமைகளிருந்தால் அவற்றைக் குறைப்பதற்கும் முக்கியமான பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் எல்லா அங்கத்துவ நாடுகளும் கூடிய அளவு ஒற்றுமையாகக் கருமம் நடத்தவும் முயற்சி செய்யப்படுகிறது.

விலை ரூபா 3-25